

# TNPSC தேர்வுப் பெட்டகம்

# நடப்பு நிகழ்வுகள் - அக்டோபர் 2021

**www.tnpscthervupettagam.com**





















SHANKAR IAS ACADEMY™
SINCE 2004
The Best IAS Academy in India

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 13
தமிழ்நாடு செய்திகள் ........ 23
போயிங் ஒப்பந்தம் – தமிழ்நாடு சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனம் ........ 23
சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டப் பணிகள் ........ 24
மருத்துவச் சாதன உற்பத்திப் பூங்கா ........ 24
சென்னையின் நீடித்த மற்றும் நிலையான நகர்ப்புறச் சேவைகள் ........ 25
ஸ்டார்மிங் ஆபரேஷன் ........ 25
செம்மொழி விருதுகள் ........ 26
LifeSigns ........ 27
தனிப்பெரும் கருணை தினம் ........ 27
முக அடையாளம் காணும் மென்பொருள் ........ 28
கள்ளிக்காட்டு இதிகாசம் ........ 28
புலம்பெயர் தமிழர் நல வாரியம் ........ 28
கவிஞர் பிறைசூடன் ........ 29
ஆதிச்சநல்லூர் தொல்லியல் ஆய்வு தளம் ........ 29
மாநில அளவிலான திஷா குழு ........ 30
தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கம் ........ 31
கடற்பாசிப் பூங்கா ........ 31
மாநிலங்களைவத் தேர்தல் ........ 31
வருமுன் காப்போம் ........ 32
கோயில் நகைகளைத் தங்கக் கட்டிகளாக மாற்றுதல் ........ 32
T23 புலி ........ 33
பட்டியலிடப்பட்ட சாதியினர்/பழங்குடியினர் ஆணையம் ........ 33
மீன் குறியீடு ........ 34
பாரத்நெட் திட்டம் ........ 34
மக்கள் பள்ளித் திட்டம் ........ 35
உள்கட்டமைப்புத் திட்டங்களை கண்காணிப்பதற்கான தமிழக அரசின் இணைய தளம் ........ 35
சமூக நீதி கண்காணிப்புக் குழு ........ 36
கலைஞர் பொற்கிழி விருது ........ 37
கீழடி அகழாய்வு – ஏழாம் கட்டம் ........ 38
பனை வெல்லம் ........ 38
கூழாங்கல் ........ 39
இலங்கைத் தமிழர் நலனுக்கான ஆலோசனைக் குழு ........ 39
தேசியச் செய்திகள் ........ 40
இந்தியப் பத்திரிக்கைக் கழகம் – தேர்தல் ........ 40
பரசுராம் கண்ட் ........ 40

காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் ..... 41
அமுல் தேன் ..... 41
ஆயுதத் தொழிற்சாலை வாரியம் கலைப்பு ..... 42
நிதி 2.0 திட்டம் ..... 42
AUSINDEX – 4வது மீள் பயிற்சி ..... 42
முக்கியத் துறைமுகங்களில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் 60 சதவிகிதப் பங்கு ..... 43
தளவாட வர்த்தக எளிமையாக்குதலுக்கான தளம் ..... 43
மக்களின் திட்டம் என்ற பிரச்சாரம் – 2021 ..... 44
டிஜி சாக்சாம் திட்டம் ..... 44
சுவச் பாரத் மிஷன் நகர்ப்புறம் 2.0 மற்றும் AMRUT 2.0 ..... 44
மாவட்ட மருத்துவமனைகளின் மதிப்பீட்டு அறிக்கை ..... 45
பால் ரக்சா பெட்டகம் ..... 46
விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் ..... 46
அமேசான் வருங்காலப் பொறியாளர் திட்டம் ..... 47
வேளாண் வேதிப்பொருள் உற்பத்தியாளர் – இந்தியா ..... 47
தூய்மை இந்தியா இயக்கம் ..... 47
ஆயுதப்படைச் சிறப்பு அதிகாரச் சட்டம் ..... 48
GST வீதங்கள் ..... 48
மித்ர சக்தி ..... 49
காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வு ..... 49
காதி தேசியக் கொடி ..... 50
விரிவான பொருளாதாரக் கூட்டிணைவு ஒப்பந்தம் ..... 51
நுண்ணுயிர் குருதி 2 ஆம் வகை டெங்கு ..... 51
புலிப் பேரணிகள் ..... 51
சாச்சா சௌத்ரி ..... 52
ஆளில்லா விமானங்கள் மூலம் தடுப்பூசி விநியோகம் ..... 53
நகர மாநாடு – லக்னோ ..... 53
மகாபாஹு பிரம்புத்திரா நதி பாரம்பரிய மையம் ..... 54
இந்திய அமைதிகாப்புப் படையினருக்குக் கௌரவம் ..... 54
கல்வி நிலை அறிக்கை – இந்தியா ..... 54
ஆபத்துக் காப்பான்களுக்கான திட்டம் ..... 55
தொழில்துறைப் பூங்கா மதிப்பீடுகள் அமைப்பு அறிக்கை ..... 56
தேசிய சாலைப் பாதுகாப்பு வாரியம் ..... 57
PM MITRA பூங்காக்கள் ..... 57
இந்தியாவின் புதிய புலிகள் காப்பகம் ..... 58
ஜிம் கார்பெட் தேசியப் பூங்கா ..... 59
புவிசார் குறியீடுகள் ..... 59
இந்திய விண்வெளிக் கூட்டமைப்பு ..... 60
ஹென்லே கடவுச்சீட்டுக் குறியீடு 2021 ..... 61

எத்தனால் 20 திட்டம் ... 61
புதிய பாம்பன் இரயில்வே பாலம் ... 61
இயற்கை மற்றும் மக்களுக்கான உயர் லட்சியக் கூட்டணி ... 62
பிரதான் மந்திரி கதி சக்தி ... 62
திரிசூல் மற்றும் கருடா ... 63
மலபார் பயிற்சி 2021 ... 63
டிஜிட்டல் வாழ்க்கைத் தரக் குறியீடு ... 64
ரிலையன்ஸ் நியூ எனர்ஜி சோலார் லிமிடெட் ... 65
ஆகாஷா ஏர் ... 65
தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் 28வது நிறுவன தினம் நிகழ்ச்சி ... 66
ஏழு புதிய பாதுகாப்புத் துறை நிறுவனங்கள் ... 66
ஜெய்ப்பூர் சர்வதேச விமான நிலையம் ... 67
சர்வதேச எரிசக்தி முகமை மற்றும் இந்தியா ... 67
மத்திய உயிரியல் பூங்கா ஆணையம் ... 68
பல்முனை தளவாடங்கள் பூங்கா ... 68
ஆற்றல் நிதிக் கழகம் – மகாரத்னா அந்தஸ்து ... 69
தேசியப் பசுமை தீர்ப்பாயம் குறித்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு ... 69
தரம் குறைந்த நிலங்களைப் புணரமைத்தல் ... 70
பாஸ்பேட் மற்றும் பொட்டாசிக் உரங்களுக்கு மானியம் ... 70
யுத் அப்யாஸ் பயிற்சி 2021 ... 70
அடல் சமூகப் புத்தாக்க மையம் ... 71
SC120 – LOX ... 71
எல்லைப் பாதுகாப்பு படை அதிகார வரம்பு ... 71
‘ஒன் ஹெல்த்’ கூட்டமைப்பு ... 72
நெகிழிக் கழிவுகளின் மறுசுழற்சிக்கான இலக்கு ... 72
நிலக்கரி உற்பத்தி ... 73
உலகின் சிறந்த முதலாளிகள் 2021 ... 73
டாக்டர் A.P.J. அப்துல் கலாம் பிரேர்னா ஸ்தல் ... 74
சட்டரீதியிலான கருக்கலைப்பிற்கான உச்சவரம்பு ... 74
பருவநிலை நெகிழ்திறன் தகவல் அமைப்பு மற்றும் திட்டமிடல் கருவி ... 75
சைனிக் பள்ளி சமூகத்துடன் பள்ளிகள் இணைப்பு ... 75
மாஸ்கோ ஒழுங்கமைவுச் சந்திப்பு ... 75
சீந்திலக் கொடி (அமிர்தவல்லி) மூலிகை ... 76
ஒரு சூரியன் ஓர் உலகம் ஒரு கட்டமைப்பு ... 76
மணிப்பூர் மலை ... 77
தேசியப் பாதுகாப்புப் படை – ஸ்தாபன தினம் ... 77
11வது P-8i ரக விமானம் ... 77
இந்திய நாட்டின் புவிசார் ஆற்றல் வரைபடம் ... 78
புதிய குவாட் (நான்கு நாடுகள்) குழுமம் – மேற்கு ஆசியா ... 78

**Gen-next ஜனநாயகக் கட்டமைப்பு ........ 79**
**ஆதார் ஹேக்கத்தான் 2021 ........ 79**
**அல்லியம் நெஜியானம் ........ 79**
**மேம்படுத்தப்பட்ட காற்றுத் தர முன்னெச்சரிக்கை அமைப்பு ........ 80**
**4வது பொதுச் சபை – சர்வதேச சூரியசக்திக் கூட்டிணைவு ........ 80**
**குஷிநகர் சர்வதேச விமான நிலையம் ........ 81**
**உலக உணவுப் பாதுகாப்புக் குறியீடு 2021 ........ 81**
**மைக்ரோசாஃப்ட் செயற்கை நுண்ணறிவுப் புத்தாக்கத் திட்டம் ........ 82**
**கொங்கண் சக்தி ........ 82**
**மரபணு மாற்றப்படாத அரிசி ........ 82**
**நானோ நைட்ரஜன் நீர்ம உரம் ........ 82**
**மின்சாரத்தைப் பயன்படுத்திச் சமையல் ........ 83**
**மத்தியப் பொதுப் பணியாளர் தேர்வாணையம் – உதவி எண் ........ 83**
**UDAN தினம் – அக்டோபர் 21 ........ 83**
**சிறிய நத்தை இனங்கள் ........ 84**
**சர்வதேச நாணய மற்றும் நிதியியல் குழு சந்திப்பு ........ 85**
**சட்டத்தின் ஆட்சிக் குறியீடு 2021 ........ 85**
**NPCI அடையாள வழங்கீட்டு முறை ........ 86**
**ABHYAS ........ 86**
**உள்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு குறித்து இந்தியா – ஐக்கிய ராஜ்ஜியம் பேச்சு வார்த்தை ........ 87**
**வெங்கடராகவன் சுபா ஸ்ரீநிவாசன் – புதிய புத்தகம் ........ 87**
**பண்ணி எருமை – செயற்கைக் கருத்தரிப்பு ........ 88**
**இந்தியாவில் சராசரி ஆயுள்காலம் ........ 88**
**கருடா செயலி ........ 89**
**கண்டன (போராட்டம் நடத்தும்) உரிமை – உச்சநீதிமன்றம் ........ 89**
**ஐ.என்.எஸ். விக்ராந்த் ........ 90**
**பிரதான் மந்திரி ஆத்ம நிர்பார் ஸ்வஸ்த் பாரத் யோஜனா ........ 90**
**UDAN 4.1 ........ 91**
**கடல்சார்ந்த பாய்மரப் படகுப் போட்டி ........ 91**
**IPL – இரண்டு புதிய அணிகள் ........ 92**
**9 மருத்துவக் கல்லூரிகள் – திறப்பு விழா ........ 92**
**இந்தியா மற்றும் கிர்கிஸ்தான் ........ 92**
**புதிய வனவிலங்கு டி.என்.ஏ பரிசோதனைப் பகுப்பாய்வு ஆய்வகம் ........ 93**
**இணையதள ஒழுங்குமுறையில் ரேடியோ தகவல் தொடர்பு ........ 93**
**18வது ASEAN – இந்தியா உச்சி மாநாடு ........ 93**
**16வது கிழக்காசிய உச்சி மாநாடு ........ 94**
**Green Day Ahead Market ........ 94**
**கிரிஷி உடான் 2.0 திட்டம் ........ 95**
**அக்னி-5 ........ 95**

CII ஆசியா சுகாதார உச்சி மாநாடு – 2021 ... 96
ஆளுகைத் திறனில் முன்னணியிலுள்ள மாநிலங்கள் ... 96
சர்தாக் ... 97
தேசியப் பாதுகாப்பு மீதான புனே பேச்சுவாத்தை ... 97
7 உறுப்பினர்கள் கொண்ட பொருளாதார ஆலோசனைக் குழு – மறுசீரமைப்பு ... 98
**சர்வதேசச் செய்திகள் ... 98**
ஜப்பான் நாட்டின் பிரதமர் ... 98
UNESCO உலக□□ புத்தக□□ தலைநகரம் – 2023 ... 99
ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டம் ... 99
லேண்ட்சாட் – 9 ... 100
2030 ஆம் ஆண்டுக்குள் மூளைக்காய்ச்சலை ஒழிப்பதற்கான ஒரு உலகளாவிய செயல்திட்டம் ... 101
UNCTAD டிஜிட்டல் பொருளாதார அறிக்கை 2021 ... 101
நிகோலஸ் சர்கோசி – ஓராண்டு சிறைத் தண்டனை ... 102
பஹ்ரைன் உலகளாவிய கடல் – வான்வழி மையம் ... 102
உணவு முறைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் உச்சி மாநாடு ... 103
செனகல் – மௌரிடேனியன் நீர்வள வடிநிலம் ... 103
மோல்னுபிரவிர் ... 104
கட்சி சின்னங்கள் – தேர்தல் ஆணையம் ... 104
உலகக் கண்காட்சி 2020 – துபாய் ... 105
சிர்கான் ஏவுகணை ... 105
2021 ஆம் ஆண்டிற்கான உலக குழந்தைகளின் நிலை குறித்த அறிக்கை ... 106
பண்டோரா ஆவணங்கள் விவகாரம் ... 106
பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசு 2021 ... 107
ஜெர்மனி தேர்தல் 2021 ... 108
'சுற்றுச்சூழல் அச்சுறுத்தல் அறிக்கை (ETR) 2021: சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்கள், நெகிழ்ச்சி மற்றும் அமைதியைப் புரிந்து கொள்வது' ... 108
ஊரக மேம்பாட்டு அறிக்கை 2021 ... 109
பலூன் பயணம் ... 110
G20 அசாதாரண திறனுடைய தலைவர்கள் உச்சி மாநாடு ... 110
நோயெதிர்ப்புக் குறைபாட்டிற்காக வேண்டி 3வது தவணை ... 111
உலகின் முதலாவது தானியங்கு இரயில் ... 111
அமெரிக்கப் பூர்வீக மக்கள் தினம் ... 112
உலகப் பட்டினிக் குறியீடு ... 112
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை ... 112
ஜாயின்ட் சீ 2021 கடற்படைப் பயிற்சி ... 112
EY குறியீடு ... 113
குன்மிங் பல்லுயிர்ப் பெருக்க நிதி ... 113
ஐரோப்பிய ஒன்றியத்தின் முதல் பசுமைப் பத்திரம் ... 114
மூளைக் காய்ச்சலை ஒழிப்பதற்கான உலகளாவிய செயல்திட்டம் ... 114

Cop 26 .......... 114
மீயொலி வேக ஏவுகணை – சீனா .......... 115
G20 புத்தாக்கக் கூட்டிணைவு .......... 116
உலக காசநோய் அறிக்கை 2021 .......... 116
ஆப்பிரிக்காவின் பனிப்பாறைகள் .......... 116
இந்தியாவின் நிலக்கரிப் பற்றாக்குறையைத் தீர்க்க ரஷ்யா உதவி .......... 117
2021 உற்பத்தி இடையீட்டு (இடைவெளி) அறிக்கை .......... 117
பார்படாஸ் .......... 117
சிறப்பு அறக்கட்டளை நிதி .......... 118
சாகரோவ் பரிசு .......... 118
மீயொலி வேக ஏவுகணை – அமெரிக்கா .......... 119
கம்ப்ரே விஜா எரிமலை .......... 120
ஐக்கிய நாடுகள் உலகளாவிய நிலையானப் போக்குவரத்து மாநாடு .......... 120
உலக அச்சுறுத்தல் மதிப்பீட்டு அறிக்கை 2021 .......... 120
COP15 .......... 121
ஷிஜியன் – 21 .......... 121
புதிய எல்லைச் சட்டம் .......... 122
COP26-IRIS முன்னெடுப்பு .......... 122
“Innovations for you” டிஜி-புத்தகம் .......... 123
“X” பாலினக் குறியீடுடன் கூடிய கடவுச் சீட்டு .......... 123
நாடுகளில் மாறி வரும் வளங்கள் – 2021 .......... 123
நீல ஹைட்ரஜன் .......... 123
மெட்டா .......... 124
பசுமை இல்ல வாயு அறிக்கை .......... 124
சினின்சியோன் பிட்டிரீம் எரிபொருள் கல மின் நிலையம் .......... 124
அதிபர் தேர்தல்களுக்கான சர்வதேசக் கண்காணிப்பு அமைப்பு .......... 125
குறைவான வளர்ச்சியடைந்த நாடுகள் அறிக்கை – 2021 .......... 125
பொருளாதாரச் செய்திகள் .......... 126
Ways and Means Advances (வழிவகைக்கான முன்பணம்) .......... 126
உடனடி சரிபார்ப்பு நடவடிக்கையிலிருந்து IOB நீக்கம் .......... 126
Rupay On-the-Go .......... 127
NAPRE .......... 127
PM POSHAN திட்டம் தொடர்ச்சி .......... 128
ஹருன் இந்தியா பணக்காரர்கள் பட்டியல் – 2021 .......... 128
நிலையான நிதி மீதான நிபுணர் குழு .......... 129
இந்திய நாட்டின் வெளிநாட்டுக் கடன் .......... 129
தேசியச் சொத்து மறு சீரமைப்பு நிறுவனம் .......... 130
உலகளாவிய நிதித் தொழில்நுட்ப விழா 2021 .......... 130
எல்லைகளைக் கடந்த வரி ஆய்வாளர்கள் .......... 131

கோடக் மஹிந்திரா வங்கி ........ 131
உலக முதலீட்டாளர்கள் வாரம் ........ 132
நாணயக் கொள்கை குழுவின் அறிவிப்புகள் ........ 132
இந்தியாவில் இணைய சங்கேதப் பணத் தொழில்துறை ........ 133
இந்தியப் பொருளாதாரம் – உலக வங்கியின் அறிக்கை ........ 133
குறைந்தபட்ச பெருநிறுவன வரி ........ 134
உலகளாவிய பலபரிமாண வறுமை குறியீடு – 2021 ........ 134
ஒன்றிணைந்த சிறு நிதியியல் வங்கி ........ 135
உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் ........ 135
இன்டஸ்இன்ட் வங்கி ........ 136
கோடக் மஹிந்திரா வங்கி – மைக்ரோ ஏ.டி.எம் ........ 136
நேரடி வரி வசூல் - கரூர் வைஸ்யா வங்கி ........ 136
நப்சன்ரக்சான் ........ 136
பான்க்அஸ்யூரன்ஸ் கூட்டிணைவு ........ 137
100 மில்லியன் டாலர் கடன் வசதி ........ 137
ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி – வருடாந்திர சந்திப்பு ........ 137
இணைய சங்கேதப் பண உரிமம் – அறிக்கை ........ 138
எலான் மஸ்க் ........ 138
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 139
கருவிழி மாற்று சிகிச்சைக்கு மாற்றுமுறை ........ 139
மிகக் குறைவான செலவில் ஹைட்ரஜன் உற்பத்தி ........ 139
லூசி மிஷன் – ட்ரோஜன் குறுங்கோளுக்கு அனுப்பப்பட்ட முதல் விண்கலம் ........ 139
செவ்வாய் உலாவி விண்கலம் ........ 140
DART விண்கலம் ........ 141
உலகின் முதல் மலேரியா தடுப்பு மருந்து – மாஸ்குயிரிக்ஸ் ........ 141
ஸ்டார்ஸ்கேப்ஸ் ........ 142
சமவெப்ப அச்சு வடிப்பு தொழில்நுட்பம் ........ 142
புளூட்டோவின் வளிமண்டலம் ........ 142
இந்தியப் பெருங்கடலின் இருதுருவம் – கணிப்பு ........ 143
சூரிய மண்டலத்தின் வெளிப்புறத்திலிருந்து வரும் சமிக்ஞைகள் ........ 144
மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு ........ 144
லயோசெல் இழை ........ 144
சூரியக் கண்காணிப்புச் செயற்கைக்கோள் ........ 145
சென்சோ – 13 ........ 145
லூசி விண்கலம் ........ 145
புரோஸ்டேட் புற்றுநோய் சிகிச்சை ........ 146
புதிய சேவை வழங்கீட்டு (Server) சில்லு ........ 146
பன்றியிலிருந்து மனிதனுக்குப் பொருத்தப்படும் சிறுநீரகம் ........ 146
நாசா DART திட்டம் ........ 147

சுற்றுச்சூழல் செய்திகள் ........ 148
ரக்தமிச்சைஸ் மும்பா ........ 148
ஆகஸ்ட் 2021 – வெப்பமான மாதம் ........ 148
பருவநிலை சேவை நிலை 2021 : நீர்வள அறிக்கை ........ 148
CAF எல்லை சார்ந்த நாடுகளின் சந்திப்பு ........ 149
ஷாஹீன் புயல் ........ 150
உலக பவளப்பாறை கண்காணிப்பு கட்டமைப்பு ........ 150
பருவநிலை நிதி வழங்கல் இலக்கு ........ 151
பயிர் எரிப்பினால் ஏற்படும் உமிழ்வு ........ 152
பருவநிலை மீதான தேசிய நுண்ணறிவு மதிப்பீடு ........ 152
சுகாதாரம் மற்றும் பருவநிலை மாற்றம் மீதான லான்செட் கவுன்ட் டவுன் ........ 152
சவுதி பசுமை முன்னெடுப்பு மன்றம் ........ 153
சுழிய நிகர கார்பன் உமிழ்வு – 2050 ........ 153
ஆசியாவின் பருவநிலை அறிக்கை 2020 ........ 154
உலகப் பருவநிலைத் தொழில்நுட்ப முதலீட்டின் போக்கு ........ 154
மாநிலச் செய்திகள் ........ 155
மருத்துவக் கல்லூரிகள் – இராஜஸ்தான் ........ 155
அலிபாக் வெள்ளை வெங்காயம் ........ 155
இலவங்கப்பட்டை சாகுபடி ........ 155
வாடா கோலம் அரிசி ........ 155
எடையூர் மிளகாய் மற்றும் குட்டியாத்தூர் மாங்காய் ........ 156
கம்பிவட (கயிற்றுவட) சேவைகள் – வாரணாசி ........ 156
ஃபிஷ்வாலே செயலி ........ 156
கவச குண்டல் திட்டம் ........ 157
பதுகம்மா பண்டிகை ........ 157
ஸ்வேச்சா திட்டம் ........ 158
மின்னணு வாக்குப் பதிவு செயல்முறை – தெலங்கானா ........ 158
அதிரப்பள்ளி நீர் மின் திட்டம் ........ 159
நாடு முழுவதும் ஆற்று மீன்கள் வளர்ப்புத் திட்டம் ........ 159
கம்பிவடப் போக்குவரத்துச் சேவைகள் – வாரணாசி ........ 160
வேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ் நிதி வழங்கும் அலகுகள் – உத்தரப் பிரதேசம் முதலிடம் ........ 160
இணையதளத்தில் குடும்பஸ்ரீ தயாரிப்புப் பொருட்கள் ........ 160
பயிர்த் தாளடியின் மூலம் ஆற்றல் (மின்சாரம்) உற்பத்தி ........ 161
பாஸ்கரப்தா ........ 161
ஸ்ரீதன்வந்திரி மரபியல் மருத்துவ விற்பனைக் கூடத் திட்டம் ........ 161
ராணி சென்னம்மா ஜெயந்தி ........ 161
கோவா மாநிலத்தின் சமீபத்திய சாதனை ........ 162
இலவசக் கல்வித் திட்டம் ........ 162
ஃபைசாபாத் இரயில் சந்திப்பு ........ 162

வனவிலங்குச் செயல்திட்டம் – மகாராஷ்டிரா ....... 163
**பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ....... 163**
2021 IHA புளூ பிளானட் பரிசு ....... 163
அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான சாந்தி சுவரூப் பட்நாகர் பரிசு – 2021 ....... 163
லெப்டினன்ட் ஜெனரல் குர்பிர்பால் சிங் ....... 164
2021 யிடான் பரிசு ....... 164
வாழ்வாதார உரிமைக்கான விருது 2021 ....... 165
கௌசலாச்சார்யா விருதுகள் 2021 ....... 166
லோகப்பிரியா கோபிநாத் போர்தோலாய் விருது ....... 166
இயற்பியலுக்கான நோபல் பரிசு – 2021 ....... 167
நாட்டு நலப்பணித் திட்ட விருதுகள் 2019-20 ....... 167
இலக்கியத்திற்கான நோபல் பரிசு 2021 ....... 168
டேனியல் கிரேக் ....... 168
2021 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு ....... 169
ஃபோர்ப்ஸ் இந்தியா பணக்காரர் பட்டியல் 2021 ....... 170
கர்நாடகா விகாஷ் கிராமினா வங்கி ....... 170
ராஜா சாரி ....... 171
2021 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய தலைமைத்துவ மனிதநேய விருதுகள் ....... 171
சத்யஜித் ரே விருது ....... 172
வயலார் விருது ....... 172
நடிகர் நெடுமுடி வேணு ....... 172
லால்பகதூர் சாஸ்திரி சிறந்த பணிக்கான தேசிய விருது ....... 173
அருண் குமார் மிஷ்ரா ....... 173
சஜ்ஜன் ஜிண்டல் ....... 174
C.K. பிரஹலாத் விருது ....... 175
பிராணி மித்ரா 2021 ....... 175
சைவத் தோல் முன்னெடுப்பு ....... 175
ஹென்றிட்டா லாக்ஸ் ....... 176
வில்லியம் ஷட்னர் ....... 176
உலகின் உயரமான பெண்மணி ....... 177
சுற்றுச்சூழல்சார் ஆஸ்கார் விருதுகள் ....... 177
தற்காப்புக் கலை கல்விப் பரிசு 2021 ....... 178
புவி காப்பாளர் விருது ....... 178
சத்யஜித் ரே வாழ்நாள் சாதனையாளர் விருது ....... 178
தாதா சாகேப் பால்கே விருது ....... 179
67வது தேசியத் திரைப்பட விருதுகள் - 2019 ....... 179
2022 ஜோசப் A. கஷ்மன் விருது ....... 179
அனிதா ஆனந்த் ....... 180
ஜெர்மன் புத்தக வர்த்தக அமைப்பின் அமைதிப் பரிசு – 2021 ....... 181

விளையாட்டுச் செய்திகள் ....... 181
T20 உலகக் கோப்பை கீதம் ....... 181
T20 கிரிக்கெட் போட்டியில் 10,000 ரன்கள் குவிப்பு – விராட் கோலி ....... 182
இந்தியாவின் முதல் விளையாட்டுத்துறை நடுவண் தீர்ப்பாயம் ....... 182
ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்சிப் போட்டி ....... 183
ஸ்மிருதி மந்தானா ....... 183
துராந்த் கோப்பை ....... 184
ஹாக்கி நட்சத்திர விருதுகள் 2020 – 21 ....... 184
2024 ஆம் ஆண்டிற்கான ஐரோப்பிய சாம்பியன்சிப் சின்னம் ....... 185
ISSF இளையோர் சாம்பியன்சிப் ....... 185
FIH நட்சத்திர விருதுகள் ....... 186
ஆடவர் உலகக் குத்துச்சண்டை சாம்பியன்சிப் போட்டி ....... 186
அன்ஷூ மாலிக் ....... 186
சுனில் சேத்ரி ....... 187
இபா ....... 188
ஜீனியர் உலக சாம்பியன்சிப் – இந்தியத் துப்பாக்கிச் சுடும் வீரர்கள் ....... 188
எமி ஹண்டர் ....... 189
IPL 2021 ....... 189
SAFF சாம்பியன்சிப் ....... 190
குர்டிஸ் கேம்பர் ....... 190
வாழ்நாள் கௌரவ உறுப்பினர் அந்தஸ்து ....... 191
நாடுகளுக்கிடையேயான சாம்பியன்சிப் போட்டிகள் ....... 192
FIFA தரவரிசைகள் 2021 ....... 192
உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மட்டை ....... 193
ஃபேபியோ குவார்டராரோ ....... 193
முக்கிய தினங்கள் ....... 194
சர்வதேச முதியோர் தினம் – 01 அக்டோபர் ....... 194
சர்வதேச காப்பி தினம் – 01 அக்டோபர் ....... 194
உலக சைவ தினம் – 01 அக்டோபர் ....... 194
தேசியத் தன்னார்வ இரத்த தான தினம் – 01 அக்டோபர் ....... 194
சர்வதேச அகிம்சை தினம் – 02 அக்டோபர் ....... 195
உலகப் பண்ணை விலங்குகள் தினம் – 02 அக்டோபர் ....... 195
வனவிலங்குகள் வாரம் 2021 – அக்டோபர் 02 முதல் 08 வரை ....... 195
உலக விண்வெளி வாரம் – அக்டோபர் 04 முதல் 10 வரை ....... 195
உலக வாழ்விட தினம் – 04 அக்டோபர் ....... 196
உலக விலங்கு தினம் – 04 அக்டோபர் ....... 196
2021 ஆம் ஆண்டிற்கான உலக கட்டிடக்கலை தினம் – 04 அக்டோபர் ....... 196
உலக ஆசிரியர் தினம் – 5 அக்டோபர் ....... 197
கங்கை ஆற்று ஓங்கில் தினம் – 5 அக்டோபர் ....... 197

தேசிய ஓய்வூதிய முறை தினம் – 01 அக்டோபர் ....197
மனநலம் குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாரம் - அக்டோபர் 05 முதல் 10 வரை ....198
மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு மாதம் 2021 – அக்டோபர் 01 முதல் 31 வரை ....198
உலக பருத்தி தினம் – 07 அக்டோபர் ....198
உலக நிதியியல் திட்டமிடல் தினம் 2021 – 06 அக்டோபர் ....199
உலக முட்டை தினம் 2021 – 08 அக்டோபர் ....200
இந்திய விமானப்படை தினம் – 08 அக்டோபர் ....200
விரைவு அதிரடிப் படை நிறுவப் பட்ட தினம் – 08 அக்டோபர் ....200
உலக புலம்பெயர் பறவைகள் தினம் – 09 அக்டோபர் ....201
உலக அஞ்சல் தினம் – 09 அக்டோபர் ....201
இந்திய வெளியுறவுப் பணி தினம் – 09 அக்டோபர் ....201
தேசிய அஞ்சல் தினம் – 10 அக்டோபர் ....202
உலக மனநல தினம் – 10 அக்டோபர் ....202
மரண தண்டனைக்கு எதிரான உலக தினம் – 10 அக்டோபர் ....203
சர்வதேச பெண் குழந்தை தினம் – 11 அக்டோபர் ....203
72வது தரைப்படை ராணுவ தினம் – 09 அக்டோபர் ....203
உலக நல்வாழ்வு மற்றும் நோய்த் தடுப்பு நாள் – 09 அக்டோபர் ....204
உலக மூட்டழற்சி தினம் - 12 அக்டோபர் ....204
சர்வதேசப் பேரிடர் குறைப்பு தினம் – 13 அக்டோபர் ....205
சர்வதேச மின்னணுக் கழிவு தினம் – 14 அக்டோபர் ....206
உலகப் பார்வை தினம் – 14 அக்டோபர் ....206
உலகத் தரநிலைகள் தினம் – 14 அக்டோபர் ....206
சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் – 15 அக்டோபர் ....207
உலக மாணாக்கர் தினம் 2021 – 15 அக்டோபர் ....207
உலக ஒயிட் கேன் தினம் – 15 அக்டோபர் ....208
உலக கை கழுவும் தினம் – 15 அக்டோபர் ....208
உலக உணவு தினம் – 16 அக்டோபர் ....208
உலக மயக்க மருந்து தினம் – 16 அக்டோபர் ....208
சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் – 17 அக்டோபர் ....209
உலகப் புள்ளி விவரங்கள் தினம் – 20 அக்டோபர் ....209
உலக ஆஸ்டியோபோரோசிஸ் தினம் – 20 அக்டோபர் ....210
சர்வதேச சமையல்காரர்கள் தினம் – 20 அக்டோபர் ....210
தேசிய ஒற்றுமை தினம் – 20 அக்டோபர் ....210
காவலர் நினைவு தினம் – 21 அக்டோபர் ....211
உலக அயோடின் குறைபாட்டுத் தினம் – 21 அக்டோபர் ....212
திக்குதல் குறித்த விழிப்புணர்விற்கான சர்வதேச தினம் – 22 அக்டோபர் ....212
மோல் தினம் – 23 அக்டோபர் ....212
உலக ஆற்றல் தினம் – 22 அக்டோபர் ....213
சர்வதேச பனிச் சிறுத்தை தினம் – 23 அக்டோபர் ....213

ஐக்கிய நாடுகள் தினம் – அக்டோபர் 24 ........ 214
உலக மேம்பாட்டுத் தகவல் தினம் – அக்டோபர் 24 ........ 214
உலக போலியோ தினம் – அக்டோபர் 24 ........ 214
சர்வதேச ராஜ்ஜிய உறவு (இராஜதந்திரம்) அதிகாரிகள் தினம் – 24 அக்டோபர் ........ 215
சர்வதேச கலைஞர்கள் தினம் – 25 அக்டோபர் ........ 215
உலக ஒலி–ஒளிசார் மரபு தினம் – 27 அக்டோபர் ........ 215
இந்திய இராணுவத்தின் 75வது காலாட்படை தினம் – 27 அக்டோபர் ........ 216
ஆயுதக் குறைப்பு வாரம் – அக்டோபர் 24 முதல் 30 வரை ........ 216
ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வாரம் – அக்டோபர் 26 முதல் நவம்பர் 01 வரை ........ 217
சர்வதேச இயங்குபடம் (அனிமேசன்) தினம் – 28 அக்டோபர் ........ 217
சர்வதேச இணையதள தினம் – 29 அக்டோபர் ........ 218
உலக சொரியாசிஸ் (காளாஞ்சகப் படை) தினம் – 29 அக்டோபர் ........ 218
உலகப் பக்கவாத தினம் – 29 அக்டோபர் ........ 218
உலக ஊடகம் மற்றும் தகவல் குறித்த கல்வியறிவு வாரம் – அக்டோபர் 24 முதல் 31 வரை ........ 219
உலக சேமிப்பு  தினம் – 30 அக்டோபர் ........ 219
உலக நகரங்கள் தினம் – 31 அக்டோபர் ........ 220
தேசிய ஒற்றுமை தினம் – 31 அக்டோபர் ........ 220
இதரச் செய்திகள் ........ 221
My Life in Full – புத்தகம் ........ 221
The Fractured Himalaya – புத்தகம் ........ 221
வோல் சோயின்காவின் புதியப் புத்தகம் ........ 222
ஜெய்தீர்த் ராவின் புதிய புத்தகம் ........ 222
மெர்செர் உலக ஓய்வூதியக் குறியீடு – 2021 ........ 223
Writing for My Life ........ 223
HOOTE ........ 223

# TNPSC துளிகள்

- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது முதியோர்களுக்காக “Elder line” எனப்படும் ஒரு இந்திய அளவிலான உதவி எண்ணினை வெளியிட்டுள்ளது.
  - இதற்கான இலவச உதவி எண் ஆனது 14567 ஆகும்.
- ராஜஸ்தான் மாநிலத்தில் தயாரிக்கப்படும் சோஜத் மெஹந்தி எனும் மருதாணிக்கு புவிசார் குறியீடானது வழங்கப் பட்டுள்ளது.
  - சோஜத் என்னுமிடத்தில் வளர்க்கப்படும் மெஹந்தி இலைகளிலிருந்து உருவாக்கப் படும் சோஜத் மெஹந்தியானது இயற்கையான முறையில் மழைநீரைப் பயன்படுத்திப் பயிரிடப் படுகிறது.
- சென்னை எழும்பூரிலுள்ள பழைய காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் தமிழக காவல்துறை அருங்காட்சியகமானது அமைக்கப் பட்டுள்ளது.
  - இந்தக் கட்டிடமானது 1856 ஆம் ஆண்டில் சென்னையின் முதல் காவல் ஆணையராக இருந்த லெப்டினன்ட் கர்னல் ஜான் கார்ன் போல்டர்சன் என்பவரின் தலைமையகமாக இருந்தது.
- நாசாவின் ஆய்வுக்கலனான இன்சைட் செவ்வாய்க் கிரகத்தில் 4.2 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாக அங்கு உணரப்பட்டதைக் கண்டறிந்தது.
  - இது செவ்வாய்க் கிரகத்தில் பதிவான மிகப்பெரிய மற்றும் ஒரு நீண்ட நேர நிலநடுக்கமாகும்.
- மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் “JANCARE” எனத் தலைப்பிடப்பட்ட அம்ரித் கிராண்ட் சவால் என்ற திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
  - இந்தியாவின் சுகாதார நலம் சார்ந்த சவால்களை எதிர்கொள்வதற்கான புதிய கருத்துக்கள் மற்றும் தீர்வுகள் போன்றவற்றைக் கொண்டு வரும் 75 புத்தாக்க நிறுவனங்களை அடையாளம் காணுவதை நோக்கமாகக் கொண்டு இது தொடங்கப் பட்டுள்ளது.
- சீனாவிற்கு அடுத்தபடியாக துபாய் நாட்டின் 2வது மிகப்பெரிய வர்த்தகப் பங்குதாரராக இந்தியா உருவெடுத்துள்ளது.
  - அமெரிக்கா 3வது இடத்தில் உள்ளது.
- ஏமன் நாட்டைச் சேர்ந்த மனிதநேய அமைப்பு ஒன்று 2021 ஆம் ஆண்டு UNHCR நான்சென் அகதிகள் விருதிற்குத் தேர்வாகியுள்ளது.
  - மனிதநேய மேம்பாட்டிற்கான ஜீல் அல்பெனா சங்கம் என்ற இந்த அமைப்பானது 2017 ஆம் ஆண்டில் அமீன் ஜீப்ரான் என்பவரால் நிறுவப்பட்டது.
- வடகொரிய நாடானது ஹ்வாசாங்-8 என்ற ஒரு புதிய மீயொலி ஏவுகணையினை வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது.
  - இந்த புதிய மீயொலி ஏவுகணைகள், உந்துவிசை ஆயுத அமைப்புடன் ஒப்பிடப் படுகையில் குறைவான உயரத்தில் பறக்கக் கூடியதாகும்.
- தேசிய கூடைப்பந்து சங்கமானது ரன்வீர் சிங் என்ற நடிகரை இந்தியாவிற்கான தனது விளம்பரத் தூதராக அறிவித்துள்ளது.

- குடியரசுத் துணைத் தலைவர் M. வெங்கய்யா நாயுடு அவர்கள் மூத்த வயோதிக மருத்துவர் V.S. நடராஜன் என்பவருக்கு வயோஸ்ரேஷ்த சம்மான் தேசிய விருதினை வழங்கினார்.
  - முதியோரின் ஆரோக்கிய நலனுக்காக இவர் தனது நிறுவனம் (V.S. நடராஜன் வயோதிக மருத்துவ அறக்கட்டளை) மூலம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.
- இந்திய மற்றும் ஆஸ்திரேலிய மகளிர் அணிகள் இடையிலான முதலாவது பிங்க் பந்து பகல்-இரவு டெஸ்ட் போட்டியானது, ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து எனுமிடத்தில் உள்ள கராரா ஓவல் எனுமிடத்தில் நடத்தப் பட்டது.
  - இதில் இந்திய அணிக்கு மிதாலி ராஜ் தலைமை தாங்கினார்.
- அமெரிக்க மீன்வளம் மற்றும் வனவிலங்குச் சேவைகள் அமைப்பின் கூற்றுப்படி, அமெரிக்கப் பெரும் தேனீக்களின் (பம்பில் தேனீ) எண்ணிக்கையானது கடந்த 20 ஆண்டுகளில் 89% வரை குறைந்துள்ளது.
  - இந்த தேனீ இனமானது அருகிவரும் இனமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது
- நிதி ஆயோக் அமைப்பானது 'மாநில ஊட்டச்சத்து நிலை' (விவரக்குறிப்பு) என்ற ஒரு அறிக்கையினை வெளியிட்டது.
  - இந்த அறிக்கையில் 19 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் தனது ஊட்டச்சத்து விவரக் குறிப்பு அறிக்கையினைப் பெற்றன.
- இம்பாலிலுள்ள ஜவஹர்லால் நேரு மணிப்பூர் நடன அகாடமி (JNMDA) மண்டபத்தில் நாத – சங்கீர்த்தன விழா தொடங்கியது.
  - இது மூன்று நாள் அளவிலான ஒரு இசை மற்றும் நடன விழாவாகும்.
- தாலிபன்கள் 1964 ஆம் ஆண்டின் ஆப்கானிஸ்தான் அரசியலமைப்பிலிருந்து ஷரியா அல்லது இஸ்லாமியச் சட்டத்துடன் முரண்படாத சில விதிகளைத் தற்காலிக அடிப்படையில் சட்டமாக்க உள்ளதாக அறிவித்துள்ளனர்.
  - இந்த அரசியலமைப்பினை ஏற்பதனால் பெண்களுக்கு தற்சமயம் வாக்குரிமை வழங்கப் படும்.
- 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 அன்று ஹவாய் நாட்டின் பெருந்தீவில் (Big Island) உள்ள கிலாவ்யா என்ற எரிமலை வெடித்தது.
  - புவியிலுள்ள அதிகம் செயல்பாட்டிலிருக்கும் எரிமலைகளுள் இதுவும் ஒன்றாகும்.
- பூடான் நாட்டிற்காக ஒரு சிறிய செயற்கைக்கோளை உருவாக்குவதற்காக வேண்டி கூட்டு உற்பத்தி மீதான ஓர் அமலாக்க ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.
  - இந்த ஒப்பந்தமானது இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு மற்றும் பூடான் நாட்டின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்புத் துறை ஆகியவற்றிற்கு இடையே கையெழுத்தானது.
- இந்தியாவில் 10 கோடி அளவிலான கோவிட்-19 தடுப்பூசிகளைச் செலுத்திய முதல் மாநிலமாக உத்தரப்பிரதேசம் உருவெடுத்துள்ளது.
- தமிழக நிதித் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அமைச்சர்கள் குழுவின் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இந்த அமைச்சர்கள் குழுவானது GST அமைப்பில் சீர்திருத்தங்களை மதிப்பிடச் செய்வதற்காக GST சபையினால் அமைக்கப்பட்டதாகும்.

- பிரதமர் நரேந்திர மோடி சிறப்பம்சங்களைக் கொண்ட 35 பயிர் வகைகளை நாட்டிற்கு என்று அர்ப்பணித்தார்.
    - இந்தப் புதிய பயிர் வகைகள் பருவநிலை மாற்றம் மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு போன்ற பெரிய பிரச்சினைகளை எதிர்கொள்வதில் உதவுவதை நோக்கமாகக் கொண்டு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
- MSD பார்மாசியூட்டிகல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது கார்டாசில் – 9 எனப்படும் இந்தியாவின் முதல் பாலினம் சாராத, மனித பாப்பிலாமா வைரஸ் தடுப்பூசியினை வெளியிடுவதாக அறிவித்தது.
    - இந்தத் தடுப்பூசியினால் HPV வகைகளால் ஏற்படும் நோய்த் தொற்றினையும் புற்றுநோய்களையும் இதன் மூலம் குறைக்க உதவும்.
- சான் மரினோ நாடானது கருக்கலைப்பினைச் சட்டப்பூர்வமாக்குவதற்கான ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க வாக்கெடுப்பில் அதற்குச் சாதகமாக வாக்களித்தது.
    - எந்தவொரு சூழ்நிலையின் கீழும் கருக்கலைப்பினை முற்றிலுமாக தடை செய்த கடைசி நாடுகளுள் ஒன்று மரினோ என்பதால் இந்த வாக்கெடுப்பு ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
- இந்திய நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 02 அன்று தேசிய போதைப்பொருள் எதிர்ப்புத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
    - இந்தியாவில் போதைப்பொருளுக்கு அடிமையாதல் மற்றும் அவற்றின் தவறான பயன்பாடு குறித்த ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான உடலியல் அல்லது மருத்துவத்திற்கான நோபல் பரிசானது டேவிட் ஜூலியஸ் மற்றும் ஆர்டெம் படபௌசியன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
    - வெப்பநிலை மற்றும் தொடுதிறன் உணர்வி போன்றவற்றைக் கண்டறிந்ததற்காக இவர்களுக்கு இந்த விருதானது வழங்கப்பட்டது.
- கிழக்கு அண்டார்டிகா மற்றும் வெடெல் கடல் ஆகிய இடங்களைக் கடல்சார்ந்த பாதுகாக்கப்பட்ட இடங்களாக நியமிக்கப் படுவதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு முன்மொழிதலுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கி வருகிறது.
- உலகம் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமையன்று உலக புன்னகைத் தினத்தை அனுசரிக்கிறது.
    - இந்த ஆண்டு இத்தினமானது அக்டோபர் 01 அன்று அனுசரிக்கப்பட்டது.
- ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 03 உலக தன்னடக்க தினமாக அனுசரிக்கப்படுகிறது.
    - மதுப்பழக்கத்தைக் கைவிட வேண்டி இத்தினம் மக்களை ஊக்குவிக்கிறது.
- ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 03 உலக இயற்கை தினமாக அனுசரிக்கப்படுகிறது.
    - இத்தினமானது நமது அற்புதமான இயற்கையைப் பாதுகாப்பது குறித்த ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கத்தார் நாட்டின் முதல் சட்டசபைத் தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
    - தேர்தலில் பங்கேற்ற 26 பெண் வேட்பாளர்களில் எவரும் வெற்றி பெறவில்லை.
- ஐரோப்பிய மருந்து முகமையானது 18 வயது மற்றும் அதற்கும் மேற்பட்ட நபர்களுக்கு பைசர் /பயன்டெக் என்ற கோவிட்-19 தடுப்பு மருந்தின் கூடுதல் தவணையைச் செலுத்துவதற்கு அனுமதி வழங்கியது.

- ஐரோப்பிய மருந்து முகமையின் கருத்துப்படி, இந்தக் கூடுதல் தவணை மருந்தானது 2வது தவணை செலுத்திய 28 நாட்களுக்கு (குறைந்தது) பிறகு கடுமையான நோயெதிர்ப்புக் குறைபாடுள்ள நபர்களுக்கு வழங்கப்படும்.

❖ 2021 ஆம் ஆண்டின் வேதியியலுக்கான நோபல் பரிசானது பெஞ்சமின் லிஸ்ட் மற்றும் டேவிட் W.C. மேக்மில்லன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

- சமச்சீரற்றக் கரிம வினையூக்கியை உருவாக்கியதற்காக இவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

❖ இந்தியா-ஜப்பான் இடையிலான JIMEX எனப்படும் இருதரப்பு கடல்சார் பயிற்சியானது அரபிக் கடலில் நடத்தப் பட்டது.

- JIMEX என்பது இந்தியக் கடற்படை மற்றும் ஜப்பான் நாட்டின் கடல்சார் சுய பாதுகாப்பு (தற்காப்பு) படை ஆகியவற்றிற்கு இடையே 2012 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பயிற்சிகளாகும்.

❖ செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய கோள்களுக்கு இடையே உள்ள மிகப்பெரிய குறுங்கோள் பட்டை பற்றி ஆய்வு மேற்கொள்வதற்காக ஓர் ஆய்வுக் கலத்தினை அனுப்புவதற்குத் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய அரபு அமீரகம் அறிவித்தது.

- இது பேரண்டத்தின் தோற்றம் பற்றிய தகவல்களை சேகரிப்பதற்கான ஒரு ஆய்வு ஆகும்.

❖ 2030 ஆம் ஆண்டுக்குள் வேளாண்மை மற்றும் வனத்துறைகளில் முறையே பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வினை 55% மற்றும் 65% என்ற அளவிற்கு குறைப்பதற்கான ஒரு திட்டத்திற்கு டென்மார்க் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

❖ இந்திய அறிவியலாளர்கள் குழு ஒன்று குவார் கம் மற்றும் சைட்டோசன் ஆகியவற்றைப் பயன்படுத்தி நச்சுத் தன்மையற்ற, சுற்றுச்சூழலுக்கு உகந்த, உயிரி சிதைவுறும் பாலிமரை உருவாக்கியுள்ளது.

- குவார் கம் மற்றும் சைட்டோசன் ஆகியவை நண்டு மற்றும் இறால்களின் ஓடுகளிலிருந்தும் குவார் (துவரை) செடியிலிருந்தும் பிரித்தெடுக்கப்பட்ட பாலி சாக்கரைடுகளாகும்.

❖ ஏர் இந்தியா விமான நிறுவனத்தின் முன்னோடி நிறுவனமான டாடா குழுமம் ஏர் இந்தியா நிறுவனம் தேசிய மயமாக்கப் பட்டு ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்குப் பிறகு டாடா நிறுவனமே அதை மீட்டுள்ளது.

- ஏர் இந்தியா நிறுவனத்தில் அரசின் 100% பங்கிற்கு டாடா சன்ஸ் நிறுவனம் 180 பில்லியன் ரூபாய் என்ற அளவிற்கு ஏலத் தொகையினை அறிவித்தது.

❖ சென்னையிலுள்ள கணித அறிவியல் கல்வி நிறுவனத்தின் பேராசிரியர் சாகேத் சௌரப் என்பவருக்கு 2021 ஆம் ஆண்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான சாந்தி சுவரூப் பட்நாகர் பரிசானது வழங்கப்பட்டுள்ளது.

- இவருக்குக் கணித அறிவியல் துறையில் விருது வழங்கப்பட்டது.

❖ 2021 ஆம் ஆண்டு உலக மல்யுத்த சாம்பியன்சிப் போட்டியின் 50 கிலோ கிராம் எடைப் பிரிவில் வெண்கலம் வென்றதன் மூலம் சரிதா மோர் தனது முதல் பதக்கத்தினை வென்று உள்ளார்.

- இப்போட்டியானது நார்வே நாட்டின் ஓஸ்லோ என்னுமிடத்தில் நடத்தப் பட்டது.

❖ தலைமைப் பொருளாதார ஆலோசகர் K.V. சுப்பிரமணியன், இந்திய நிதி அமைச்சகத்தில்

தனது 3 ஆண்டு காலப் பதவிக் காலம் முடிந்த பிறகு கல்வித் துறைக்கு திரும்ப உள்ளதாக முடிவு செய்துள்ளார்.

❖ இந்தியா-ஐக்கிய ராஜ்ஜியம் இடையிலான நிறுவன அளவிலான கூட்டு இராணுவப் பயிற்சியான அஜயா வாரியர் என்ற பயிற்சியின் 6வது பதிப்பானது சமீபத்தில் தொடங்கப் பட்டது.
   - இப்பயிற்சியானது உத்தரகாண்ட் மாநிலத்திலுள்ள சௌபாதியா என்னுமிடத்தில் தொடங்கியது.

❖ அடுத்த ஆண்டு நடைபெற உள்ள பர்மிங்காம் காமன்வெல்த் விளையாட்டு ஹாக்கிப் போட்டியிலிருந்து (2022) இந்தியா பங்கேற்காமல் வெளியேற இருக்கிறது.
   - கோவிட்-19 தொற்று மற்றும் இந்தியாவிலிருந்துப் பயணிக்கும் பயணிகளுக்கு ஐக்கியப் பேரரசில் விதிக்கப் படும் பாகுபாடு மிக்க தனிமைப்படுத்துதல் விதிகள் போன்ற காரணங்களைக் குறிப்பிட்டு இந்த முடிவானது மேற்கொள்ளப்பட்டது.

❖ ஜெஃப் பெசோஸ் மற்றும் எலான் மஸ்க் ஆகியோருடன் குறைந்தது 100 பில்லியன் டாலர் செல்வத்துடன் கூடிய உலகின் மிகச்சிறந்த செல்வந்தர்கள் குழுமத்தில் முகேஷ் அம்பானி இணைந்தார்.
   - இவர் ஆசியாவின் மிகப்பெரிய பணக்காரர் ஆவார்.

❖ டாக்டர் அப்துல் காதீர் கான் தனது 85வது வயதில் காலமானார்.
   - இவர் "பாகிஸ்தானின் அணுகுண்டின் தந்தை" எனக் கருதப்படுகிறார்.

❖ டிஆர்டிஓ (DRDO) தலைவர் டாக்டர் ஜி சதீஷ் ரெட்டிக்கு இந்திய விண்வெளிக் கழகம் (ASI) மதிப்பு மிக்க ஆரியபட்டா விருதை வழங்கியுள்ளது.

❖ 2020 ஊபர் கோப்பை இறுதிப் போட்டியில் ஸ்பெயினுக்கு எதிராக இந்திய மகளிர் பேட்மிண்டன் அணி வெற்றி பெற்றுள்ளது.

❖ நாட்டிலேயே முதன்முறையாக தமிழ்நாடு அரசானது தூத்துக்குடியில் சர்வதேச மரச் சாமான் பூங்காவை அமைக்க உள்ளது.

❖ வெனிசுலா நாடானது குறைவான அளவில் 6 பூஜ்ஜியங்களைக் கொண்ட ஒரு புதிய பணத்தினை அறிமுகப் படுத்த உள்ளது.
   - இந்தப் புதிய பணத்திற்கான அதிகபட்ச பணமதிப்பானது 25 டாலரை விட சற்று குறைவாக 100 பொலிவராக இருக்கும்.

❖ விண்வெளியில் படமாக்கப்பட உள்ள முதல் படம் "Challenge" எனும் திரைப்படமாகும் (ரஷ்யத் திரைப்படம்).
   - ரஷ்யாவின் திரைப்பட இயக்குனர் கிளிம் ஷிபென்கோ இத்திரைப்படத்தினை இயக்குகிறார்.

❖ மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சரான முக்தார் அப்பாஸ் நக்வி 2022 ஆம் ஆண்டு ஹஜ் செயல்முறை முழுவதும் 100% டிஜிட்டல் மயமாக்கப் படும் எனக் கூறினார்.
   - இந்தோனேசியாவிற்குப் பிறகு அதிக எண்ணிக்கையிலான ஹஜ் யாத்திரைப் பயணிகள் இந்தியாவிலிருந்துச் செல்கின்றனர்.

❖ செபாஸ்டியன் குர்ஸ் ராஜினாமா செய்ததையடுத்து அலெக்சாண்டர் செல்லன்பர்க் என்பவர் ஆஸ்திரிய நாட்டின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- லஞ்ச ஊழலில் ஈடுபட்டதன் காரணமாக செபாஸ்டியன் குர்ஸ் ராஜினாமா செய்தார்.

❖ ராஜஸ்தான் அரசானது சமீபத்தில் தான் நிறைவேற்றிய திருமணப் பதிவு மசோதாவினை மறுபரிசீலனை செய்வதற்காக அதனைத் திரும்பப் பெற முடிவு செய்துள்ளது.

- இந்த மசோதாவின் விதிகள் குழந்தைத் திருமணங்களை ஊக்குவிக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப் படுகிறது.

❖ முன்னாள் இந்திய குடிமைப்பணி அதிகாரி அமித் காரே, பிரதமர் நரேந்திர மோடி அவர்களுடைய ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- இவரது பதவிக் காலம் 2 ஆண்டுகளாகும்.

❖ கோவிட்-19 மீதான நிபுணர் குழுவானது பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவாக்சின் என்ற தடுப்பு மருந்தினை 2 வயது முதல் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குச் செலுத்துவதற்காக அதன் அவசரகாலப் பயன்பாட்டிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

❖ ஈரான் நாடானது தனது பரந்து விரிந்த மத்திய பாலைவனப்பகுதியில் இரண்டு நாட்கள் அளவிலான ஒரு மிகப்பெரிய விமானப்படை பாதுகாப்புப் பயிற்சியைத் தொடங்கியது.

- இந்தப் பயிற்சியானது வெல்யாத் என்று அழைக்கப்படுகிறது.

❖ பெங்களூருவில் M.S. தோனி கிரிக்கெட் அகாடமியானது திறக்கப்பட்டுள்ளது.

- கேம்பிளே மற்றும் ஆர்கா ஸ்போர்ட்ஸ் ஆகிய விளையாட்டுத் துறை நிறுவனங்கள் இந்த அகாடமியைத் தொடங்கியுள்ளன.

❖ அரசியல் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளில் தனது அரசு ஊழியர்கள் பங்கேற்பதற்கு ஹரியானா மாநில அரசு தடை விதித்துள்ளது.

❖ ஆஸ்திரேலிய நாடானது நாசா நிறுவனத்திற்காக 20 கிலோகிராம் எடையுடைய, பகுதியளவு தன்னிச்சையாக இயங்கக் கூடிய சந்திரனுக்கான ஒரு உலாவியினைக் கட்டமைக்க உள்ளதாக அறிவித்துள்ளது.

- இந்த உலாவியானது நிலவில் ஆக்சிஜன் உள்ளதா எனக் கண்டறிவதற்கு வேண்டி நாசாவிற்கு உதவும்.

❖ பதினைந்து வயதான திவ்யா தேஷ்முக் இந்தியாவின் 21வது பெண் செஸ் கிராண்ட் மாஸ்டர் ஆனார்.

- ஹங்கேரியின் புதாபெஸ்டில் நடைபெற்ற பர்ஸ்ட் சாட்டர்டே கிராண்ட் மாஸ்டர் என்ற போட்டியில் இவர் இந்தச் சாதனையை புரிந்தார்.

❖ 2022 ஆம் ஆண்டிற்கான மகளிர் ஆசிய கோப்பைப் போட்டிக்கான அதிகாரப்பூர்வ முழக்கமானது “அனைவருக்குமான எங்கள் இலக்கு” (Our Goal for All) என்பதாகும்.

- இது ஆசிய கால்பந்துக் கூட்டமைப்பு மற்றும் உள்நாட்டு ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றால் வெளியிடப் பட்டது.

❖ ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 17 ஆம் தேதியானது உலக அதிர்ச்சி தினமாக அனுசரிக்கப் படுகிறது.

- உலகம் முழுவதிலும் இறப்பு மற்றும் இயலாமைக்குக் காரணமாக விளங்குகின்ற அதிகரித்து வரும் விபத்துகள் மற்றும் காயங்கள் பற்றி குறிப்பிட்டுக் காட்டவும், அதனைத் தடுப்புதற்கான அவசியத்தைக் குறிப்பிட்டுக் காட்டவும் வேண்டி இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.

❖ கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் கொச்சினை டிமென்சியா நோயால் (மறதி நோய்) பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதுவான நகராக அறிவித்தார்.

- உத்போத் எனப்படும் டிமென்சியா நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உகந்த மாவட்டத் திட்டத்தினைத் தொடங்கி வைக்கும் போது இந்த அறிவிப்பினை அவர் வெளியிட்டார்.

❖ உலகின் குறைவான வருமானம் உடைய நாடுகளின் கடன் சுமையில் 12% உயர்வு ஏற்படும் என உலக வங்கி எச்சரித்துள்ளது.

- உலக வங்கியின் 2022 ஆம் ஆண்டிற்கான சர்வதேசக் கடன் புள்ளி விவரங்கள் எனும் அறிக்கையானது, குறைவான மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகள் எதிர் கொள்ளும் கடன் பாதிப்புகளில் வியக்குத்தகு உயர்வினைக் காட்டுகிறது.

❖ இந்திய அணியின் முன்னாள் மட்டைப்பந்து வீரரான ராகுல் டிராவிட் இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

- இவர் ரவி சாஸ்திரியை அடுத்து இந்தப் பதவியை ஏற்க உள்ளார்.

❖ இந்தியாவின் கோவிட்-19 தடுப்பூசி வழங்கீடு குறித்த ஒரு கீதத்தினை (பாரத் கா திகாகரன்) மத்திய அரசு வெளியிட்டது.

- இந்தப் பாடலை பிரபலப் பாடகர் பத்மஸ்ரீ கைலாஷ் கேர் பாடியுள்ளார்.

❖ இந்திய இராணுவத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கோர்கா ரைபிள்ஸ் (எல்லைப் படை) படையின் 5வது படைப்பிரிவினைச் சேர்ந்த ஒரு அணியானது மதிப்பு மிக்க கேம்பிரிய ரோந்துப் பயிற்சியில் தங்கப் பதக்கம் வென்றது.

- இது ஐக்கிய ராஜ்ஜியத்தில் நடத்தப் பட்டது.

❖ சர்வதேச சூரியசக்திக் கூட்டிணைவில் இஸ்ரேல் புதிய உறுப்பினராக இணைந்தது.

❖ E.R. சேக் என்பவர் ஆயுதத் தளவாட இயக்குநரகத்தின் (ஒருங்கிணைப்பு மற்றும் பணிகள்) முதலாவது தலைமை இயக்குநராகப் பொறுப்பேற்றார்.

- இது ஆயுதத் தொழிற்சாலை வாரியத்திற்குப் பதிலாக புதிதாக உருவாக்கப்பட்ட நிறுவனமாகும்.

❖ குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரிடையே மனநலம் குறித்து ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் மனநலம் குறித்த தவறான கருத்துகளை உடைத்தெறிவதற்காக சர்வதேச கிரிக்கெட் சபை மற்றும் யுனிசெஃப் ஆகியவை ஒன்றிணைந்துச் செயல்பட முடிவு செய்துள்ளள.

- ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளில் நடைபெற உள்ள 2021 ஆடவர் T20 உலகக் கோப்பைப் போட்டியை முன்னிட்டு இந்த முடிவானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.

❖ 2வது கடற்படைத் தளபதிகள் மாநாடானது (2021) சமீபத்தில் புதுடெல்லியில் தொடங்கப் பட்டது.

- இந்த மாநாடானது முக்கியச் செயல்பாடுகள், சாதனங்கள், தளவாடங்கள், மனித வள மேம்பாடு, பயிற்சி மற்றும் நிர்வாகச் செயல்பாடுகள் போன்றவற்றை மதிப்பீடு செய்வதற்கானதாகும்.

❖ R. பிரக்ஞானந்தா, அமெரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்டோபர் யூவ் என்பவரைத் தோற்கடித்து ஜூலியஸ் பேர் சேலஞ்சர்ஸ் செஸ் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.

❖ NATO அமைப்பிற்கான (வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு) தனது பணிகளை நிறுத்துவதாக ரஷ்யா அறிவித்தது.

- மத்திய வான்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய M. சிந்தியா 6 விமான வழித் தடங்களைக் காணொளி வாயிலாக திறந்து வைத்தார்.
  - அந்த 6 விமான வழித் தடங்களாவன; கொல்கத்தா–கவுகாத்தி, கவுகாத்தி-ஐஸ்வால், ஐஸ்வால்-ஷில்லாங், ஷில்லாங்-ஐஸ்வால், ஐஸ்வால்-கவுகாத்தி மற்றும் கவுகாத்தி–கொல்கத்தா ஆகியன.
- ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்கு நீர்மப் பெட்ரோலிய வாயுவினை (LPG) பரிமாற்றும் நடவடிக்கையானது முதன்முறையாக இந்தியக் கடற்கரைப் பகுதியில் கொல்கத்தாவில் பாரத் பெட்ரோலிய கழக நிறுவனத்தினால் மேற்கொள்ளப் பட்டது.
  - கொல்கத்தாவில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பரிமாற்றமானது கணிசமான அளவில் அந்நிய செலாவணியைச் சேமிப்பதில் வர்த்தகத் துறைக்கும் நமது நாட்டிற்கும் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- சர்வதேச நாணய நிதியத்தின் ஆராய்ச்சித் துறையின் தலைமைப் பொருளாதார வல்லுநரும் இயக்குநருமான கீதா கோபிநாத் 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தனது பதவியிலிருந்து விலக உள்ளார்.
  - இவர் சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது பெண் பொருளாதார வல்லுநர் ஆவார்.
- வாள்வீச்சு வீராங்கனை பவானி தேவி பிரான்சு நாட்டில் நடைபெற்ற சார்லேவில்லே தேசியப் போட்டியின் மகளிருக்கான தனிநபர் வாள்வீச்சுப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
  - இவர் தற்போது உலகளவில் 50வது இடத்திலும் இந்திய அளவில் முதலிடத்திலும் உள்ள வாள்வீச்சு வீராங்கனை ஆவார்.
- இந்திய அமெரிக்க அறிவியலாளரான டாக்டர் விவேக் லால் என்பவருக்கு துபாயில் சமீபத்தில் நடைபெற்ற ரிட்டோசா ஃபேமிலி என்ற ஒரு உச்சி மாநாட்டில் வாழ்நாள் சாதனையாளர் விருதானது வழங்கப் பட்டது.
  - இந்திய-அமெரிக்கப் பாதுகாப்பு வர்த்தகத்தினை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகித்தமைக்காக டாக்டர் லால் பிரபலமாக அறியப் படுகிறார்.
- உத்தரகாண்ட் மாநிலமானது அதன் அனைத்துத் தகுதியுள்ள மக்களுக்கும் கோவிட்-19 தடுப்பூசியின் முதல் தவணையை வழங்கியுள்ளது.
- ஜப்பானிலுள்ள அசோ எரிமலையானது சமீபத்தில் வெடித்துச் சிதறியது.
  - அசோ எரிமலையானது ஜப்பானிலுள்ள மிகப்பெரிய செயல்பாட்டில் உள்ள ஒரு எரிமலையாகும்.
- முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் "TRUTH Social" எனப்படும் தனது சொந்தச் சமூக ஊடகத்தினை தொடங்கியுள்ளார்.
  - பேஸ்புக் மற்றும் டிவிட்டர் பக்கங்களில் டொனால்ட் டிரம்பின் கணக்குகள் தடை செய்யப் பட்டதைத் தொடர்ந்து இந்த ஊடக தளமானது தொடங்கப்பட்டது.
- ஈக்வெடார் நாட்டு அதிபர் கில்லர்மோ லாசோ தென் அமெரிக்காவில் 60 நாட்களுக்கு நெருக்கடி நிலையை அறிவித்துள்ளார்.
  - தீவிரமான போதைப்பொருள் சார்ந்த குற்றங்கள் அதிகரித்து வருவதன் காரணமாக இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டது.
- தென்கொரிய நாடானது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தனது முதல் விண்வெளி ராக்கெட்டினைச் சோதனைக்கு உட்படுத்தியது.

  - முழுவதுமாக உள்நாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கட்டமைக்கப் பட்ட 'நூரி' என்பது தென்கொரிய நாட்டின் முதலாவது ஏவுகலமாகும்.
- ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 20 ஆம் தேதியன்று சர்வதேச வான்வழிப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
  - வான்வழிப் பயணத்தினைப் பாதுகாப்பாக வைப்பதற்கு கடினமாக உழைக்கும் நபர்களை அங்கீகரித்து பாராட்டுவதற்காக வேண்டி இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்திய நாடானது முதலாவது மற்றும் 2வது தவணை உள்பட 100 கோடி கோவிட் தடுப்பூசிகளை செலுத்தியுள்ளது.
- நிதியியல் நடவடிக்கைப் பணிக்குழுவானது பாகிஸ்தான் நாட்டினை 'சாம்பல் நிறப் பட்டியலில்' தக்க வைத்துள்ளது.
  - இந்த முறை துருக்கி, ஜோர்டன் மற்றும் மாலி ஆகிய நாடுகளையும் தனது சாம்பல் நிறப் பட்டியலில் அந்த அமைப்பு சேர்த்துள்ளது.
- பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் "Veer Savarkar : The man who could have prevented partition's" என்ற புத்தகத்தினை வெளியிட்டார்.
  - இந்தப் புத்தகமானது உதய் மஹுர்கர் மற்றும் சிராயு பண்டிட் ஆகியோரால் எழுதப் பட்டது.
- அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பானது மாடர்னா மற்றும் ஜான்சன் & ஜான்சன் நிறுவனங்களின் கோவிட்-19 தடுப்பூசிகளுக்கான கூடுதல் அல்லது ஊக்க மருந்துத் தவணைகளை அங்கீகரித்துள்ளது.
  - அமெரிக்கர்கள் தாங்கள் செலுத்திக் கொண்ட தடுப்பு மருந்திலிருந்து வேறுபட்ட ஒரு மருந்தினை ஊக்க மருந்துத் தவணையாக தேர்ந்தெடுக்கலாம் எனவும் அந்த அமைப்பு அறிவித்தது.
- நாசாவின் புதிய விண்வெளித் தொலைநோக்கியானது விண்ணில் ஏவப்பட்ட பிறகு 29 உலவு தினங்களை எதிர்கொள்ள உள்ளது.
  - புவியிலிருந்து கிட்டத்தட்ட மில்லியன் கணக்கான மைல்கள் (1.6 மில்லியன் கி.மீ.) தொலைவு வரையில் உள்ளார்ந்த ஒரு விண்வெளி இலக்கினை நோக்கிச் செல்ல இருப்பவதால் இது நிகழ உள்ளது.
- பீகார் மாநிலத்தின் சட்டசபைக் கட்டிடத்தின் நூற்றாண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்திற்காக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பாட்னா சென்று அடைந்தார்.
- ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 24 ஆம் தேதி அன்று சர்வதேசப் பருவநிலை நடவடிக்கை தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்திய அரசானது பீகாரின் ஜெய்நகர் முதல் நேபாளத்தின் குர்தா வரையிலான எல்லைகளுக்கு இடைப்பட்ட ஒரு இரயில் இணைப்புப் பாதையை நேபாளத்திடம் ஒப்படைத்துள்ளது.
- ஜெர்மனி நாட்டினைச் சேர்ந்த விளையாட்டுத்துறை ஆடை நிறுவனமான அடிடாஸ் பாலிவுட் நடிகை தீபிகா படுகோனை பெண் விளையாட்டு வீராங்கனைகளின் ஆடைகளுக்கான ஒரு உலகளாவிய விளம்பரத் தூதராக அறிவித்தது.
  - இவர் அடிடாஸ் பெண்களுக்கான பிராண்டை உலகளவில் பிரதிநிதித்துவப் படுத்துவார்.

- ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் நிபுணர் ஒருவர் ஈரான் நாட்டின் மரண தண்டனையை "விதிகளுக்குட்படாமல் உயிரைப் பறித்தல்" என்று விவரித்து உள்ளார்.
    - சட்டங்களைச் சீர்திருத்தி மரண தண்டனை விதிமுறையை ரத்து செய்யுமாறு ஈரானிடம் ஐக்கிய நாடுகள் அமைப்பு கூறியுள்ளது.
- தமிழக அரசானது உதயன் என்பவரை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் புதிய தலைவராக நியமித்துள்ளது.
- தனியார் துறை வங்கியான ICICI வங்கியானது இந்துஸ்தான் யூனிலீவர் நிறுவனத்தின் சந்தை மூலதனத்தை விஞ்சி, சந்தை மதிப்பில் 5வது மிகப்பெரிய நிறுவனமாக மாறியுள்ளது.
    - HDFC வங்கியை அடுத்து, சந்தை மூலதனத்தின் அடிப்படையில் மும்பை பங்குச் சந்தையில் முதல் 5 நிறுவனங்கள் பட்டியலில் சேர்ந்த 2வது வங்கி ICICI வங்கி ஆகும்.
- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஸ்ரீநகர், சார்ஜா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவற்றுக்கு இடையிலான முதல் நேரடி சர்வதேச விமானத்தினைத் தொடங்கி வைத்தார்.
    - இந்தியாவின் மலிவு விலையிலான ஏர்லைன் (விமான) நிறுவனமான GO FIRST, ஸ்ரீநகர் முதல் சார்ஜா வரை நேரடி விமானங்களை இயக்கத் தொடங்கிய முதல் விமான நிறுவனம் ஆகும்.
- சத்தீஸ்கரின் ராய்ப்பூரில் தேசியப் பழங்குடியினர் நடனத் திருவிழாவானது அக்டோபர் 28 முதல் 30 வரை நடைபெற உள்ளது.
    - தேசியப் பழங்குடியினர் நடனத் திருவிழாவில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்வேறு பழங்குடி சமூகங்களைச் சேர்ந்த பல கலைஞர்கள் பங்கேற்பர்.
- அரசிற்குச் சொந்தமான கெயில் (இந்தியா) லிமிடெட் நிறுவனமானது இந்தியாவின் மிகப்பெரிய பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலையைக் கட்டமைக்க உள்ளது.
- சூடானின் முன்னணி ராணுவத் தளபதி ஜெனரல் அப்தெல்-ஃபத்தா புர்ஹான் அங்கு ஆட்சியிலிருந்த இறையாண்மை சபையைக் கலைத்து நாட்டில் நெருக்கடி நிலையை அறிவித்தார்.
    - இவரது படைகள் நாட்டின் தற்காலிகப் பிரதமர் அப்தல்லா ஹம்டோக் மற்றும் பிற உயர் அதிகாரிகளை கைது செய்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப் பட்டது.
- ஈராக் நாட்டின் தொல்லியலாளர்கள் ஒரு மிகப்பெரிய அளவிலான மதுபான தொழிற் சாலையைக் கண்டுபிடித்துள்ளதாக அறிவித்தனர்.
    - இது 2,700 ஆண்டுகளுக்கு முன்பு அசீரிய மன்னர்களின் ஆட்சியில் இருந்ததாக கூறப்படுகிறது.
- இந்திய நாடானது ஆசிய மேம்பாட்டு வங்கி மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கிகளில் 2 பில்லியன் டாலர் கடன் பெறுவதற்கு வேண்டி விண்ணப்பித்துள்ளது.
    - 700 மில்லியன் கோவிட்-19 தடுப்பு மருந்துகளை வாங்குவதற்காக வேண்டி இந்தக் கடனானது பெறப்பட இருக்கிறது.
- குறைவான தடுப்பூசி வழங்கீட்டு வீதம் உடைய மாவட்டங்களில் "ஹர் கர் தஸ்தக்" (Knock Every Door) என்ற ஒரு பிரச்சாரத்தினைத் தொடங்க சுகாதார அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

- இது தடுப்பூசியைப் பெறுவதற்கு மக்களை உற்சாகப்படுத்தவும், ஊக்குவிக்கவும் வேண்டி மேற்கொள்ளப் படும்.

❖ இந்தியா-பசிபிக் பிராந்தியப் பேச்சுவார்த்தையாது (2021) மூன்று நாட்கள் அளவிலான ஒரு இணைய நிகழ்ச்சியாக நடத்தப்படுகிறது.

- "21 ஆம் நூற்றாண்டில் கடல்சார் உத்திகளின் பரிணாமம் : கட்டாய முடிவுகள், சவால்கள் மற்றும் முற்போக்குப் பாதை" என்ற ஒரு கருத்துரு மீது இந்தப் பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்படும்.

❖ TVS மோட்டார் கம்பெனி (நிறுவனம்) ஆனது இந்தியப் பசுமை ஆற்றல் விருதினைப் பெற்றுள்ளது.

- இது "சிறந்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டாளர்" என்று அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

❖ திரு. ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் முதலியார் குப்பம் என்னுமிடத்தில் 'இல்லம் தேடி கல்வி' என்ற திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

❖ மத்திய சுகாதாரம் & குடும்பநலத் துறை அமைச்சர் மான்சுக் மாண்டவ்யா, 6வது இந்தியத் தேசிய சூத்திரங்கள் பதிவேட்டினை வெளியிட்டார்.

- இந்தியாவில் மருந்துப் பொருட்களைப் பகுத்தறிந்துப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக வேண்டி இந்திய மருந்தகக் குழுவினால் இந்தப் பதிவேடானது வெளியிடப் பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## போயிங் ஒப்பந்தம் – தமிழ்நாடு சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனம்



❖ தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனமானது முதன் முறையாக "போயிங்" எனப்படும் மிகப்பெரிய விமான நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

❖ சேலத்தில் அமைந்துள்ள விண்வெளிப் பொறியாளர் தனியார் நிறுவனமானது போயிங் நிறுவனத்திடமிருந்து இந்த நீண்டகால ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.

❖ தற்போது இந்த நிறுவனம் அந்த உலகளாவிய விமான நிறுவனத்தின் தயாரிப்புகளுக்குத் தேவையான முக்கிய விமான பாகங்கள் மற்றும் கூறுகளைத் தயாரித்து வழங்க உள்ளது.

## சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டப் பணிகள்

- ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியானது சென்னை மெட்ரோ இரயில் இணைப்பினை விரிவுபடுத்துவதற்காக 356.67 மில்லியன் அமெரிக்க டாலர் (2.65 லட்சம் கோடி ரூபாய்) மதிப்பிலான கடனை வழங்குகிறது.
- இத்துடன் ஆசிய உள்கட்டமைப்பு வங்கியானது மொத்தம் 6.7 பில்லியன் அமெரிக்க டாலர்களை முதலீடு செய்து இந்தியாவினை தனது மிகப் பெரிய பயனாளியாக மாற்றியுள்ளது.
- இது சென்னையில் ஒருங்கிணைந்தப் பொருளாதாரம் மற்றும் போக்குவரத்துத் துறை வளர்ச்சியை ஊக்குவிக்கும்.
- இந்த மெட்ரோ திட்டம் கிழக்கில் கலங்கரை விளக்கம் முதல் மேற்கில் பூந்தமல்லி புறவழிச்சாலை வரை நீண்டு இருக்கும்.
- நகரத்தில் பசுமைப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற வகையில் இந்த ரயில் நிலையம் கூரையில் சூரிய ஒளி உற்பத்தி செய்யும் மின்தகடுகளைக் கொண்டு இருக்கும்.




## மருத்துவச் சாதன உற்பத்திப் பூங்கா



- காஞ்சிபுரம் மாவட்டம் ஓரகடத்தில் மருத்துவச் சாதன உற்பத்திப் பூங்காவானது நிறுவப் பட உள்ளது.
- இதன் மூலம் சுமார் 10,000 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்த தொழில்துறைப் பூங்காவில் செயற்கை சுவாசக் கருவிகள், இரத்த அழுத்த கண்காணிப்புக் கருவிகள், இருதயத் துடிப்பு முடுக்கிகள், அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கான உபகரணங்கள் மற்றும் மருத்துவத்துறை சார்ந்த இதர உபகரணங்கள் அனைத்தும் தயாரிக்கப்படும்.

## சென்னையின் நீடித்த மற்றும் நிலையான நகர்ப்புறச் சேவைகள்

- சென்னையின் நீடித்த மற்றும் நிலையான நகர்ப்புறச் சேவைகளுக்கு உதவி வழங்கச் செய்வதற்காக வேண்டி 150 மில்லியன் டாலர் அளவிலான திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த நகரத்தை "உலகத்தரம் வாய்ந்த நகரமாக" மாற்ற வேண்டி இந்த முயற்சியானது மேற்கொள்ளப்படுகிறது.
- இந்தத் திட்டமானது சென்னையை மேலும் பசுமை வாய்ந்த, வாழ்வதற்கு ஏதுவான மற்றும் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் ஒரு நகரமாக மாற்றுவதற்கான தமிழக அரசின் குறிக்கோளினை நிறைவேற்றச் செய்யும்.
- இது நகரின் நான்கு முக்கிய நகர்ப்புறச் சேவைகளின் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கொண்டு வரும். அவை
    - தண்ணீர் வழங்கீடு மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைப்பு
    - இயங்குதிறன் (போக்குவரத்து)
    - சுகாதாரம் மற்றும்
    - திடக்கழிவு மேலாண்மை
- தமிழ்நாட்டிற்கான இத்திட்டம் தவிர, மேகாலயா மாநிலத்திலும் சுகாதாரச் சேவைகளின் தர மேம்பாட்டிற்கான 40 மில்லியன் டாலர் மதிப்பிலான திட்டத்திற்கும் உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

## ஸ்டார்மிங் ஆபரேஷன்

- தமிழக மாநில காவல்துறையானது செப்டம்பர் 23 அன்று 48 மணி நேர மாநில அளவிலான ஸ்டார்மிங் ஆபரேஷன் என்ற நடவடிக்கையினைத் தொடங்கியது.
- காவல்துறை தலைமை இயக்குநர் C. சைலேந்திர பாபு இந்த நடவடிக்கைக்கான ஆணையைப் பிறப்பித்தார்.
- தமிழகத்தில் இனி ரவுடிகளுக்கு இடம் இல்லை என்பதை உறுதி செய்வதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## செம்மொழி விருதுகள்

- மத்திய செம்மொழி தமிழ் ஆராய்ச்சி கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி தமிழ் விருதுகளை தமிழக அரசு அறிவித்தது.
- இந்த விருதானது 2010 முதல் 2019 வரையிலான காலகட்டத்திற்கு வழங்கப்படுகிறது.
- 2010 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் V.S. ராஜம் பெறுகிறார்.
- 2011 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் பொன் கோதண்டராமன் பெறுகிறார்.
- 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளுக்கு முறையே பேராசிரியர் E. சுந்தரமூர்த்தி மற்றும் பேராசிரியர் P. மருதநாயகம் ஆகியோர் பெறுகின்றனர்.
- 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளுக்கு முறையே பேராசிரியர் K, மோகனராசு மற்றும் பேராசிரியர் மறைமலை இலக்குவனார் ஆகியோர் பெறுகின்றனர்.
- 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளுக்கு முறையே பேராசிரியர் கா. ராஜன் மற்றும் பேராசிரியர் உல்ரிச் நிக்கோலஸ் ஆகியோர் பெறுகின்றனர்.
- 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு முறையே கவிஞர் ஈரோடு தமிழன்பன் மற்றும் பேராசிரியர் கு. சிவமணி ஆகியோர் பெறுகின்றனர்.

## LifeSigns




- மதுரையின் அரசு இராஜாஜி மருத்துவமனையானது LifeSigns எனப்படும் கம்பியில்லா நோயாளிக் கண்காணிப்பு உயிரி உணர்வியை உருவாக்கியுள்ளது.
- தனிமைப்படுத்தப்பட வேண்டிய மற்றும் தொற்று நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
- இந்தக் கருவியானது உடலில் இணைக்கப்பட்ட ஒரு சில்லினை (Chip) போன்றது.
- இக்கருவி வெப்பநிலை, நாடித்துடிப்பு, சுவாசம், ஆக்சிஜன் செறிவு நிலை மற்றும் ECG அசைவு போன்ற முக்கிய அளவீடுகளை ஒரு மருத்துவ ஊழியரின் உதவியின்றி பதிவு செய்கிறது.

## தனிப்பெரும் கருணை தினம்



- தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 19வது நூற்றாண்டைச் சேர்ந்த புனிதத் துறவியான வள்ளலார் பிறந்த நாளானது (அக்டோபர் 05) இனி ஒவ்வோர் ஆண்டும் தனிப்பெரும் கருணை தினமாக (ஆண்டவரின் கருணை) கொண்டாடப்படும் என அறிவித்தார்.
- திருவருட்பிரகாச வள்ளலார் சிதம்பரம் ராமலிங்கம் பொதுவாக இந்தியாவிலும் உலகம் முழுவதும் வள்ளலார் ராமலிங்க சுவாமிகள் மற்றும் இராமலிங்க அடிகள் என்று

அழைக்கப்படுகிறார்.

- வள்ளலார் அவர்கள் கடலூர் மாவட்டத்தின் சிதம்பரம் அருகே உள்ள மருதூரில் 1823 ஆம் ஆண்டில் பிறந்தார்.
- இவர் கடலூர் மாவட்டத்தில் உள்ள வடலூரில் சத்திய ஞான சபையை நிறுவினார்.

## முக அடையாளம் காணும் மென்பொருள்

- தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முக அடையாளம் காணும் ஒரு மென் பொருளைத் தொடங்கி வைத்தார்.
- இது "தரவு ஆதாரங்களுடன்" சந்தேகத்திற்குரிய நபர்களின் புகைப்படங்களை ஒப்பிட்டுப் பார்க்க காவல்துறைப் பணியாளர்களுக்கு உதவும்.
- தரவு ஆதாரங்கள் என்பது குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் அமைப்பில் பதிவேற்றப்பட்ட புகைப்படங்களைக் குறிக்கிறது.

## கள்ளிக்காட்டு இதிகாசம்




- கவிஞர் வைரமுத்துவின் சாகித்திய அகாடமி விருது பெற்ற கள்ளிக்காட்டு இதிகாசம் 22 இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்படுகிறது.
- இந்த மொழி பெயர்ப்பானது சாகித்திய அகாடமியினால் மேற்கொள்ளப்படுகிறது.
- வைகை அணை மீதான கட்டுமானப் பணியின் போது இடம்பெயர்த்தப்பட்ட 14 கிராமங்களைச் சேர்ந்த மக்களின் துயரத்தை இந்தப் புத்தகம் சித்தரிக்கிறது.

## புலம்பெயர் தமிழர் நல வாரியம்

- புலம்பெயர் தமிழர்களுக்கான நல வாரியமானது அமைக்கப்பட உள்ளது.
- தமிழ்நாடு புலம்பெயர் தமிழர்கள் நலச் சட்டமானது 2011 ஆம் ஆண்டு மார்ச் 01 அன்று

முந்தைய தி.மு.க. ஆட்சியின் போது இயற்றப்பட்டது.

- முன்மொழியப்பட்டுள்ள இந்த நல வாரியமானது, “புலம்பெயர் தமிழர் நல வாரியம்” என அழைக்கப் படும்.
- ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 12 ஆம் தேதியானது உலக தமிழர்கள் தினமாக அனுசரிக்கப் படும்.

## கவிஞர் பிறைசூடன்



- பிரபல பாடலாசிரியரும் கவிஞருமான பிறைசூடன் சமீபத்தில் காலமானார்.
- இவருக்கு வயது 65 ஆகும்.
- 1985 ஆம் ஆண்டில் R.C. சக்தி என்பவரால் இயக்கப்பட்ட சிறை என்ற படத்தின் மூலம் இவர் பாடலாசிரியராக அறிமுகமானார்.
- M.S. விஸ்வநாதன் இவருக்கு கவிஞானி என்ற பட்டத்தை வழங்கினார்.
- மேலும், இவர் தென்னிந்திய எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகவும் பணியாற்றி உள்ளார்.
- அண்மையில் ஆஸ்கார் விருதுக்குப் பரிந்துரைக்கப்படும் இந்திய மொழித் திரைப் படங்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் ஒருவராக அவர் தேர்ந்தெடுக்கப் பட்டு இருந்தார்.

## ஆதிச்சநல்லூர் தொல்லியல் ஆய்வு தளம்


- இந்திய தொல்லியல் துறையானது 17 ஆண்டு கால நீண்ட இடைவெளிக்குப் பிறகு, ஆதிச்சநல்லூர் தொல்லியல் ஆய்வுத் தளத்தில் அகழ்வாராய்ச்சியை மீண்டும் தொடங்க உள்ளது.
- இது தூத்துக்குடி மாவட்டத்தில் பாயும் தாமிரபணி ஆற்றின் கரையில் 125 ஏக்கருக்கும் மேலான பரப்பளவில் அமைந்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த ஓர் அருங்காட்சியகத்தை நிறுவ மத்திய அரசு திட்டமிட்டது.
- ஆதிச்சநல்லூர் தளமானது 1876 ஆம் ஆண்டில் ஜெர்மன் நாட்டுத் தொல்லியல் ஆர்வலர் டாக்டர் ஜகோர் என்பவரால் முதன்முதலில் அகழாய்வு செய்யப்பட்டது.

- பிரிட்டீஷ் இந்தியாவின் தொல்லியல் துறை மேற்பார்வை பொறியாளர் அலெக்சாண்டர் ரியா 1899 மற்றும் 1905 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்தத் தளத்தில் அகழாய்வு மேற்கொண்டார்.
- இந்தியத் தொல்லியல் துறையின் மேற்பார்வை தொல்லியல் ஆய்வாளர் டாக்டர் சத்தியமூர்த்தி என்பவரும், 2004 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்தத் தளத்தில் ஆய்வினை மேற்கொண்டார்.



## மாநில அளவிலான திஷா குழு

- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான மாநில அளவிலான திஷா என்ற குழுவானது மத்திய அரசின் நிதி உதவியினைப் பெறும் திட்டங்களின் அமலாக்கத்தினைக் கண்காணிக்கும்.
- அந்த திட்டங்களாவன; மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா, தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம், பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா போன்றவையாகும்.
- ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் K.R. பெரியகருப்பன் இக்குழுவின் துணைத் தலைவராக செயல்படுவார்.



## தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கம்




- தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் தலைவராக ஐசரி கணேஷ் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- கல்வியாளரும் விளையாட்டு நிர்வாகியுமான ஐசரி கணேஷ் கடந்த 15 ஆண்டுகளாக தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் துணைத் தலைவராக இருந்து வருகிறார்.
- அவர் வேல்ஸ் குழும நிறுவனங்களின் தலைவராவார்.
- அவர் இந்திய டேக்வாண்டோ கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு டேக்வாண்டோ சங்கத்தின் தலைவராகவும் உள்ளார்.

## கடற்பாசிப் பூங்கா

- இந்தியாவில் முதல் பல்நோக்கு கடற்பாசிப் பூங்காவானது தமிழ்நாட்டில் நிறுவப் படும்.
- உலகில் கடல் சார்ந்த பொருட்கள் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.

## மாநிலங்களவைத் தேர்தல்



- தமிழ்நாட்டின் இரண்டு திமுக வேட்பாளர்கள் - டாக்டர் கனிமொழி என்விஎன் சோமு மற்றும் கேஆர்என் ராஜேஷ் குமார் - மாநிலங்களவைக்குப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.
- தமிழகச் சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அதிமுக உறுப்பினர்கள் கே பி முனுசாமி மற்றும் ஆர் வைத்திலிங்கம் ஆகியோர் தமது பதவிகளை ராஜினாமா செய்ததால் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக வேண்டி இந்த இடைத்தேர்தல் நடத்தப் பட்டது.
- செல்வகணபதி புதுச்சேரியின் முதல் பாஜக எம்.பி. ஆனார்.

## வருமுன் காப்போம்

- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழப்பாடியில் நடந்த விழாவில் 'வருமுன் காப்போம்' என்ற திட்டத்தை 'கலைஞரின் வருமுன் காப்போம்' என்ற பெயரில் மீண்டும் தொடங்கி வைத்தார்.
- ஒரு வருடத்தில், இத்திட்டத்தின் கீழ் 1,250 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்றார்.
- வருமுன் காப்போம் திட்டத்தை முதன்முதலில் முன்னாள் முதல்வர் எம் கருணாநிதி அவர்கள் 2006 ஆம் ஆண்டில் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம், மக்களிடையே நோய்களைத் தடுப்பது மற்றும் அவர்களின் ஆரோக்கியத்தை உறுதி செய்வது என்பதாகும்.
- இந்த முகாம்கள் பல், காதுகள், மூக்கு மற்றும் தொண்டை சார்ந்தது, வயிறு, குடல், உயர் இரத்த அழுத்தம், டிப்தீரியா, எலும்பு மற்றும் மூட்டு, சிறுநீரகம், இதயம் மற்றும் மனநலம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்.
- புதிதாக அடையாளம் காணப்பட்ட நோயாளிகள் தங்கள் வீட்டில் இருந்தபடியே மருந்துகளைப் பெற உதவும் வகையில் 'மக்களைத் தேடி மருத்துவம்' (மக்களின் வீடுகளுக்கு மருந்துகளை எடுத்துச் செல்லும்) திட்டத்துடன் இத்திட்டம் இணைக்கப் படும்.




## கோயில் நகைகளைத் தங்கக் கட்டிகளாக மாற்றுதல்

- இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆலயங்களின் தங்க நகைகளை உருக்குவதற்கான ஆரம்ப வேலைகளை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

- திருவேற்காட்டிலுள்ள அருள்மிகு கருமாரியம்மன் ஆலயம், சமயபுரத்திலுள்ள அருள்மிகு மாரியம்மன் ஆலயம் மற்றும் விருதுநகரின் இருக்கன்குடியிலுள்ள அருள்மிகு மாரியம்மன் ஆலயம் ஆகியவற்றில் இப்பணிகளை முதல்வர் தொடங்கி வைத்தார்.
- இந்த ஆலயங்களின் தங்க நகைகள் உருக்கப்பட்டு தங்கக்கட்டிகளாக மாற்றப்படும்.
- தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் தங்கக்கட்டிகளைச் சேமிப்பதன் மூலம் பெறப் படும் நிதிகளானது ஆலய மேம்பாட்டுப் பணிகளுக்குப் பயன்படுத்தப் படும்.
- பக்தர்களால் வழங்கப்பட்டு, கடந்த 10 ஆண்டுகளாக பயனற்ற நிலையிலிருக்கும் தங்க நகைகளை மட்டுமே அரசானது உருக்கி கட்டிகளாக மாற்ற உள்ளது.

## T23 புலி

- மனித உண்ணியாக மாறிய முதுமலை புலிகள் காப்பகத்தின் T23 புலியானது இறுதியாக தமிழக வனத்துறையினரால் உயிருடன் பிடிக்கப்பட்டது.
- 22 நாட்கள் அளவிலான மிகப்பெரிய தேடுதல் வேட்டைக்குப் பிறகு வனத்துறையினர் இந்தப் புலியைப் பிடித்தனர்.
- T23 புலியானது மசினகுடி காட்டுப்பகுதி அருகே கண்டறியப்பட்டது.
- இது மைசூரு மிருகக் காட்சிச்சாலைக்கு கொண்டு செல்லப் பட்டது



## பட்டியலிடப்பட்ட சாதியினர்/பழங்குடியினர் ஆணையம்

- தமிழக அரசானது பட்டியலிடப்பட்ட சாதியினர்/பழங்குடியினர் ஆணையத்திற்கான உறுப்பினர்களை நியமித்தது.
- உயர்நீதிமன்ற நீதிபதி சிவக்குமார் இந்த ஆணையத்தின் தலைவராக செயல்படுவார் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
- 'தலித் முரசு' என்ற இதழின் ஆசிரியர் புனித பாண்டியன் இந்த ஆணையத்தின் துணைத் தலைவராக செயல்படுவார்.
- இந்த ஆணையத்தில் மேலும் 5 உறுப்பினர்கள் இடம் பெறுவர்.
    - வழக்கறிஞர் குமாரதேவன்,
    - எழில் இளங்கோவன் (ஒரு எழுத்தாளர்),

  - லீலாவதி தனராஜ், (பழங்குடியின மாணவர்களுக்குக் கல்வி வழங்குவதில் ஈடுபட்டுள்ள சமூக ஆர்வலர்)
  - வழக்கறிஞர் இளஞ்செழியன் மற்றும்
  - பேராசிரியர் ரகுபதி
- இந்த ஆணைய உறுப்பினர்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகளாகும்.
- பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினரின் சட்ட உரிமைகள் பாதுகாக்கப் படுவதை இவர்கள் உறுதி செய்வர்.

## மீன் குறியீடு



- அலங்கரிக்கப்பட்ட மீன் குறியீடு பொறிக்கப்பட்ட உறைகிணறு ஒன்று அகழ்ந்து எடுக்கப் பட்டுள்ளது.
- மதுரை அருகே உள்ள கீழடியில் நடைபெற்று வரும் தொல்லியல் அகழாய்வின் ஏழாம் கட்டத்தில் இந்த உறை கிணறு அகழ்ந்தெடுக்கப்பட்டது.
- மீன் குறியீடானது வலுவான பாண்டிய மன்னனின் கொடியின் ஓர் அங்கமாக இருந்தது.

## பாரத்நெட் திட்டம்

- தமிழ்நாடு பைபர்நெட் கார்பரேஷன் லிமிடெட் நிறுவனமானது, தமிழ்நாட்டில் பாரத் நெட் திட்டத்தை அமல்படுத்துவதற்கான ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது வெவ்வேறு கட்டமைப்பு ஒருங்கிணைப்பு நிறுவனங்களுடன் 4 தொகுப்புகளில் செயல்படுத்தப்படுகிறது.
- தமிழ்நாடு பைபர்நெட் கார்பரேஷன் என்பது தமிழ்நாட்டில் பாரத்நெட் திட்டத்தை அமல்படுத்துவதற்கான ஒரு சிறப்பு நோக்கம் கொண்ட அமைப்பாகும்.
- அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் 1 Gbps அளவிலான அலைவரிசை இணைப்பினை வழங்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## மக்கள் பள்ளித் திட்டம்

- 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குப் பொது முடக்கத்தின் போது கற்றலில் ஏற்பட்ட இடைவெளி மற்றும் இழப்பு ஆகியவற்றைக் குறைக்கும் ஒரு முயற்சியாக தமிழக அரசானது ஒரு புதிய கற்பித்தல் திட்டத்தைச் செயல்படுத்துகிறது.
- தற்போது ஆசிரியர்கள் மாணவர்களை அணுகி அவர்களுக்குப் பாடம் கற்பிப்பர்.
- மக்கள் பள்ளித் திட்டத்தின் ஒரு முக்கிய நோக்கமானது மாணாக்கர்களின் வீட்டின் அருகில் உள்ள பள்ளியல்லாத சிறிய கூடார அமைப்பில் கல்வியை வழங்குவதாகும்.

## உள்கட்டமைப்புத் திட்டங்களை கண்காணிப்பதற்கான தமிழக அரசின் இணைய தளம்

- தமிழகத்தின் அனைத்து முக்கிய உள்கட்டமைப்புத் திட்டப் பணிகளின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்வதற்காக தகவல் தொழில்நுட்பத் துறையினால் உருவாக்கப்பட்ட இணைய தளங்களை முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- மேலும் இவை தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தகவல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பம் மூலம் இயங்கும் நிறுவனங்களும் மாநில அரசுடன் தொடர்பு கொள்ளவும் அதன் கொள்கை உருவாக்கத்தில் பங்களிக்கவும் உதவுகிறது.
- தமிழ்நாடு மின்னாளுமை நிறுவனமானது 'இ – முன்னேற்றம்' என்ற ஒரு தளத்தினை உருவாக்கியுள்ளது.
- இந்த வலைதளமானது ஒரு குறிப்பிட்ட கால அடிப்படையில் ஒப்பந்த தேதி, தொடக்க தேதி, செலவு மதிப்பீடு, மாதாந்திர அடிப்படையில் நிதி மற்றும் கட்டமைப்புப் பரிமாணங்களில் திட்டப் பணிகளின் முன்னேற்றம், இடத்தினைக் குறித்த தகவல் மற்றும் அந்த இடத்தின் புவிசார் தகவல் அமைப்பு நிலைகள் மற்றும் புகைப்படங்கள் ஆகியனவற்றைக் கொண்டிருக்கும்.
- தமிழ்நாடு மின்னாளுகை நிறுவனமானது 'IT நண்பன்' என்ற ஒரு ஊடாடும் தளத்தினையும் உருவாக்கியுள்ளது.

- இது தகவல் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து செயல்படுவதோடு தமிழகத்தின் அனைத்துத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களும் மாநில அரசின் கொள்கை உருவாக்கத்தில் மாநில அரசுடன் தொடர்பு கொண்டு பங்காற்ற வழிவகை செய்கிறது.
- தமிழ்நாடு மெய்நிகர் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட மேம்பட்ட அம்சங்களுடன் கூடிய இரண்டு தமிழ் கணினி மென்பொருட்களையும் திரு. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.
- கீழடி – தமிழிணைய விசைப்பலகை ஆனது தமிழ் 99 விசைப்பலகை, ஒலியியல் விசைப் பலகை மற்றும் பழைய தட்டச்சு சார்ந்த விசைப்பலகை ஆகிய 3 வகை விசைப் பலகையுடன் செயல்படும்.
- தமிழி – தமிழிணைய ஒருங்குறி மாற்றி எனும் மென்பொருளானது உரை, கோப்பு மற்றும் கோப்புறை ஆகியவற்றை மாற்றி வழங்கும்.

## சமூக நீதி கண்காணிப்புக் குழு




- முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏழு உறுப்பினர்கள் அடங்கிய சமூக நீதி கண்காணிப்புக் குழுவினை நிறுவுவதாக அறிவித்தார்.
- திராவிட சித்தாந்தவாதி சுப. வீரபாண்டியன் இந்தக் குழுவிற்குத் தலைமை தாங்குவார்.
- தமிழ்நாடு முழுவதும் கல்வி, வேலைவாய்ப்பு, பணி அமர்வு, பதவி உயர்வு மற்றும் நியமனம் ஆகியவற்றில் சமூக நீதியானது சரியான முறையில் அமல்படுத்தப் படுகிறதா என இந்தக் குழு கண்காணிக்கும்.
- மேலும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவ்வப்போது மாநில அரசிற்குப் பரிந்துரைகளையும் இந்தக் குழு வழங்கும்.
- இக்குழுவின் மற்ற உறுப்பினர்கள்

  - ஓய்வு பெற்ற இந்திய குடிமைப்பணி அதிகாரி K. தனவேல்
  - பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் முன்னாள் துணை ஆளுநர் சுவாமிநாதன் தேவதாஸ்
  - தமிழ்க் கவிஞர் மனுஷ்யபுத்திரன்
  - ஆதிதிராவிடர் மற்றும் பட்டியலிடப்பட்ட சாதியினர் தொடர்பான சட்டங்களின் நிபுணர் A. ஜெய்சன்
  - R. ராஜேந்திரன் – பொருளாதார நிபுணர்
  - G. கருணாநிதி – அனைத்திந்திய இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஊழியர் சங்கக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர்.


## கலைஞர் பொற்கிழி விருது

- இந்த விருதானது 2008 ஆம் ஆண்டு முதல் தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் புத்தக கண்காட்சியில் தமிழ் மற்றும் பிறமொழி எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் ஒரு வருடாந்திர இலக்கிய விருதாகும்.
- ஒவ்வொரு விருதும் 1 லட்சம் ரூபாயை உள்ளடக்கியதாகும்.
- இதற்கான நிதியானது 2007ஆம் ஆண்டில் மு.கருணாநிதி அவர்கள் வழங்கிய 1 கோடி ரூபாய் நன்கொடை மூலமாக வழங்கப்படுகிறது.
- இந்த ஆண்டில் கீழ்க்காணும் நபர்களுக்கு இந்த விருதானது வழங்கப்பட்டது.
  - அபி – கவிதை
  - இராஜேந்திர சோழன் – புனைக்கதை
  - S. இராமகிருஷ்ணன் – உரைநடை
  - வெளி ரங்கராஜன் – நாடகம்
  - மருதநாயகம் – ஆங்கிலம்
  - நதித் சாகியா – இதர இந்திய மொழி (காஷ்மீரி)



## கீழடி அகழாய்வு – ஏழாம் கட்டம்

- தமிழக மாநில தொல்லியல் துறையானது சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி, கொந்தகை மற்றும் அகரம் ஆகிய பகுதிகளில் அகழாய்வுப் பணிகளைத் தொடங்கியது.
- ஏழாம் கட்ட அகழாய்வுப் பணிகளானது தமிழக மாநில தொல்லியல் துறையினால் நடத்தப் பட்டது.
- கீழடி என்பது குறைந்தபட்சம் 2,600 வருடங்கள் பழமையான ஒரு நகர்ப்புற குடியிருப்புப் பகுதியாகும்.
- இந்த அகழாய்வின் ஏழாம் கட்டத்தின் சிறப்பம்சமானது உறை கிணறுகள் ஆகும்.
- இந்த உறை கிணறுகளானது ஊற்றுகள் மற்றும் தண்ணீர் எடுக்கும் கிணறுகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.
- அகழாய்வுத் தளங்களில் ஒரு திறந்தவெளி அருங்காட்சியகத்தை நிறுவத் திட்டமிட்டுள்ள நிலையில் அகழாய்வுப் பணிகள் நிறைவடைந்த பின்னரும் அந்த இடங்களை மண்ணைக் கொண்டு நிரப்பாமல் அப்படியே விடுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்த அருங்காட்சியகமானது அமைக்கப்பட்டால் இது தமிழ்நாட்டின் இது போன்ற முதல்வகை அருங்காட்சியகமாக திகழும்.
- இங்கு கண்டெடுக்கப்பட்ட மீன் சின்னம் பொறிக்கப்பட்ட உறை கிணறு மற்றும் இதர சின்னங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்கள், இங்கு வாழ்ந்த மக்கள் நாட்டின் பிற பகுதிகளுடன் (வட இந்தியா) வர்த்தகப் பரிவர்த்தனைகளை மேற்கொண்டனர் என்ற கோட்பாட்டினை வலுப்படுத்துகின்றன.




## பனை வெல்லம்

- ரேஷன் (பொது விநியோகக் கடை) கடைகள் மூலம் கற்பகம் என்ற பெயரின் கீழ் பனை வெல்லத்தினை விற்கும் திட்டத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- பொது விநியோக கடைகளின் மூலம் பனை வெல்லத்தினை விற்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தமிழக மாநில அரசு தனது வேளாண் பட்ஜெட்டில் அறிவித்திருந்தது.

- பல்பொருள் அங்காடிகளில் கரும்பனை என்ற பெயரின் கீழ் பனை வெல்லத்தினை விற்பனை செய்வதற்கான ஒரு திட்டத்தினையும் திரு ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- மேலும் அவர் tnkhadi என்ற செயலி உள்பட கைத்தறி, கைவினைப் பொருட்கள், நெசவு மற்றும் காதித் துறைகளின் கீழ் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.
- Tnkhadi என்ற செயலியானது தீபாவளியின் போது சிறப்பு விற்பனைக்காக காதி கைவினைப் பொருட்கள் மற்றும் தமிழ்த்தறி எனப்படும் பட்டுப்புடவைகள் போன்றவற்றை விற்பனை செய்வதற்காக தொடங்கப் பட்டது.

## கூழாங்கல்




- தமிழ்மொழித் திரைப்படமான கூழாங்கல் (சர்வதேச அளவில் Pebbles என்ற பெயரில் வெளியானது) 94வது அகாடமி விருதுகளுக்காக இந்தியா சார்பாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது (ஆஸ்கர்ஸ் 2022).
- இத்திரைப்படத்தினை இயக்குநர் வினோத்ராஜ் P.S. என்பவர் இயக்கியுள்ளார்.
- இத்திரைப்படத்தினை விக்னேஷ் சிவன் மற்றும் நயன்தாரா ஆகியோர் இணைந்து தயாரித்துள்ளனர்.
- 94வது அகாடமி விருதுகள் ஆனது அமெரிக்காவின் லாஸ் ஏஞ்செல்ஸ் எனுமிடத்தில் நடைபெற உள்ளது.

## இலங்கைத் தமிழர் நலனுக்கான ஆலோசனைக் குழு

- இலங்கைத் தமிழர் நலனுக்காக ஒரு ஆலோசனைக் குழுவினை அமைக்க தமிழக அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்தது.
- 20 உறுப்பினர்கள் அடங்கிய இந்த ஆலோசனைக் குழுவானது தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் அயல்நாட்டுத் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி K.S. மஸ்தான் அவர்களுடைய தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.
- மனுராஜ் சண்முகசுந்தரம் இந்த ஆலோசனைக் குழுவின் துணைத் தலைவர் ஆவார்.
- முகாம்களின் உள்கட்டமைப்பு, அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், கல்வி மற்றும் சமூகப் பாதுகாப்பு உதவிகளை வகைப்படுத்துதல், தேசியம் மற்றும் இலங்கைக்குத் திருப்பி அனுப்புதல் போன்ற நடவடிக்கைகளை இந்த ஆலோசனைக் குழு மேற்பார்வையிடும் என அரசு கூறியது.

# தேசியச் செய்திகள்

## இந்தியப் பத்திரிக்கைக் கழகம் – தேர்தல்

- ஆனந்த பசார் பத்திரிக்கைக் குழுமத்தின் தலைமை ஆசிரியரும் துணைத் தலைவருமான அவீக் சர்கார் இந்தியப் பத்திரிக்கைக் கழகத்தின் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- இது நாட்டின் மிகப்பெரிய முன்னணிப் பத்திரிக்கை நிறுவனமாகும்.
- K.N. சாந்த் குமார் அதன் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இவர் டெக்கான் ஹெரால்டு மற்றும் பிரஜா வாணி எனப்படும் கன்னட மொழிப் பத்திரிக்கை ஆகியவற்றை வெளியிடும் தி பிரிண்டர்ஸ் (மைசூர்) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநராவார்.




## பரசுராம் கண்ட்

- இந்திய அரசானது பிரசுராம் கண்ட் எனப்படும் தளத்தின் மேம்பாட்டுப் பணிகளைத் தொடங்கியுள்ளது.
- இது அருணாச்சலப் பிரதேசத்தில் பாயும் லோஹித் நதியின் தாழ்நிலைப் பகுதிகளில் அமைந்துள்ள பிரம்மபுத்திர பீடபூமிப் பகுதியில் அமைந்த ஒரு இந்துமத யாத்திரைத் தளமாகும்.
- இந்தத் திட்டமானது சுற்றுலா அமைச்சகத்தின் யாத்திரைப் புத்துயிர்ப்பு மற்றும் ஆன்மீகம், பாரம்பரிய தள மேம்பாட்டு இயக்கத் திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்டது.




## காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர்

- காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் முழு நேரத் தலைவராக சௌமித்ரா குமார் ஹல்தார் என்பவரை மத்திய அரசு நியமித்துள்ளது.
- இந்த ஆணையம் நிறுவப்பட்டு 3 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு முழு நேரத் தலைவரை அரசு நியமித்துள்ளது.
- தற்போது ஹல்தார் மத்திய நீர்வள ஆணையத்தின் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.




## அமுல் தேன்

- மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் அமுல் தேன் என்ற தயாரிப்பினை வெளியிட்டார்.
- அமுல் தேன் ஆனது குஜராத் கூட்டுறவு பால்பொருள் சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு நிறுவனத்தின் தயாரிப்புப் பொருளாகும்.
- இந்த தயாரிப்பானது தேசிய தேனீக்கள் வாரியத்துடன் இணைந்து அமுல் நிறுவனத்தினால் வெளியிடப் பட்டது.



## ஆயுதத் தொழிற்சாலை வாரியம் கலைப்பு

- 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியிலிருந்து ஆயுதத் தொழிற்சாலை வாரியத்தினைக் கலைப்பதற்குப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.
- இந்த உத்தரவானது 1775 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமான ஆயுதத் தொழிற்சாலை வாரியத்தினை ரத்து செய்யும்.
- அக்டோபர் 01 ஆம் தேதிக்குப் பிறகு இந்த வாரியத்தின் சொத்துக்கள், ஊழியர்கள் மற்றும் அதன் மேலாண்மை ஆகிய அனைத்தும் புதிதாக நிறுவப்பட்ட ஏழு பாதுகாப்பு பொதுத் துறை நிறுவனங்களுக்கு மாற்றப்படும்.




## நிதி 2.0 திட்டம்

- மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, நிதி 2.0 (NIDHI 2.0 – National Integrated Database of Hospitality Industry – விருந்தோம்பல் தொழில் துறையின் தேசிய ஒருங்கிணைந்த தரவுத் தளம்) என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டமானது 2021 ஆம் ஆண்டு உலகச் சுற்றுலாத் தினத்தன்று (செப்டம்பர் 27) தொடங்கப் பட்டது.
- இந்த நிதித் திட்டமானது சுற்றுலாத் துறை அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டது.
- இது சுற்றுலாத் துறையினை டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத் துறையின் வணிகம் செய்தலை எளிதாக்குதல் போன்றவற்றை வழங்குவதற்கான ஒரு திட்டமாகும்.

## AUSINDEX – 4வது மீள் பயிற்சி

- இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப் படும் கடல்சார் பயிற்சியான 4வது AUSINDEX பயிற்சியில் ஆஸ்திரேலியக் கடற் பகுதியில் ஈடுபட்டன.
- USINDEX பயிற்சியானது 2015 ஆம் ஆண்டில் ஒரு இருதரப்புக் கடல்சார் பயிற்சியாக தொடங்கப் பட்டது.
- 3வது AUSINDEX பயிற்சியானது 2019 ஆம் ஆண்டில் வங்காள விரிகுடாவில் நடத்தப் பட்டது.
- 3வது AUSINDEX பயிற்சியில் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பிற்கான பயிற்சிகளும் நடத்தப் பட்டன.

## முக்கியத் துறைமுகங்களில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் 60 சதவிகிதப் பங்கு

- சூரிய ஆற்றல் மற்றும் காற்றாலை ஆற்றல் மூலம் இந்தியாவின் முக்கியத் துறைமுகங்களில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கினை 60 % ஆக உயர்த்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- தற்போது வரை துறைமுகங்களில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கு 10 சதவீதத்திற்கும் குறைவானத் தேவையையே கொண்டுள்ளது.
- 2030 ஆம் ஆண்டுக்குள் 50% துறைமுக உபகரணங்களை மின்மயமாக்குவதையும் அரசு இலக்காக நிர்ணயித்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டுக்குள் கார்பன் உமிழ்வினை 30% வரை குறைப்பதற்கும் துறைமுகங்கள் இலக்கு நிர்ணயித்துள்ளன.

## தளவாட வர்த்தக எளிமையாக்குதலுக்கான தளம்




- மத்திய வாத்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், தளவாட வாத்தக எளிமையாக்குதலுக்கான தளத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இது இந்திய ஏற்றுமதி அமைப்புகளின் கூட்டமைப்பினால் உருவாக்கப்பட்ட ஒரு வர்த்தக வசதி தளமாகும்.
- ஏற்றுமதியாளர்கள் மற்றும் தளவாட சேவை வழங்குநர்களை ஒரே தளத்தில் இயங்கச் செய்வதன் நோக்கில் இது தொடங்கப்பட்டது.

- இந்த தளத்தினைத் தொடங்கி வைக்கும் போது, 'வணிக விதிகள்' அனைத்துப் பங்கு தாரர்களுக்கும் சமமாக இருக்க வேண்டும் என்பதையும் அமைச்சர் குறிப்பிட்டார்.
- இந்தத் தளமானது 'வானிஜ்ய சப்தா சமாபன் சமாரோ' எனும் ஒரு நிகழ்வின் போது தொடங்கப் பட்டது.

## மக்களின் திட்டம் என்ற பிரச்சாரம் – 2021

- மத்தியப் பஞ்சாயத்து ராஜ் மற்றும் ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் கிரிராஜ் சிங் "மக்களின் திட்டம் பிரச்சாரம் – 2021 சப்கி யோஜனா சப்கா விகாஸ்" என்ற பிரச்சாரத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இவர் செயல்திறன்மிக்க கிராம சபை தளம் (Gram Sabha Dashboard) என்ற ஒன்றினையும் தொடங்கி வைத்தார்.
- மேலும் கிராமோதய் சங்கல்ப் எனும் இதழின் 10வது பதிப்பினையும் அந்த அமைச்சர் வெளியிட்டார்.

## டிஜி சாக்சாம் திட்டம்

- இத்திட்டமானது மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் அவர்களால் தொடங்கப்பட்டது.
- இளைஞர்களின் டிஜிட்டல் திறனை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் வேலை வாய்ப்பினை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்தோடு இந்த டிஜிட்டல் திறன் திட்டமானது தொடங்கப்பட்டது.
- டிஜி சாக்சாம் என்பது மைக்ரோசாஃப்ட் இந்தியா நிறுவனம் மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சி ஆகும்.
- இத்திட்டமானது "ஆகா கான் இந்திய ஊரக உதவித் திட்டம்" என்ற திட்டத்தின் மூலம் இத்துறையில் அமல்படுத்தப்படும்.




## சுவச் பாரத் மிஷன் நகர்ப்புறம் 2.0 மற்றும் AMRUT 2.0

- 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 1 அன்று பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் புதுப்பிப்பு மற்றும் நகர மாற்றத்திற்கான அடல் திட்டத்தின் 2வது பதிப்போடு சுவச் பாரத் திட்டம் நகர்ப்புறம் 2.0 என்ற திட்டத்தினையும் தொடங்கி வைத்தார்.

- இந்தத் திட்டங்கள் புதுடெல்லியிலுள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் தொடங்கப் பட்டன.
- அனைத்து நகரங்களையும் குப்பைகள் அற்றவையாகவும் அவற்றைத் தண்ணீர்ப் பற்றாக்குறை அற்றவையாக மாற்றும் உயர்நோக்கினைப் பூர்த்தி செய்வதற்காகவும் வேண்டி இந்தத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.




## மாவட்ட மருத்துவமனைகளின் மதிப்பீட்டு அறிக்கை




- இந்தியாவில் ஒரு மாவட்ட மருத்துவமனையில் சராசரியாக 1 லட்சம் பேருக்கு 24 படுக்கைகள் உள்ளன.
- நிதி ஆயோக் வெளியிட்ட மாவட்ட மருத்துவமனைகளின் மதிப்பீட்டு அறிக்கையில் இத்தகவலானது கூறப்பட்டுள்ளது.

- பீகாரிலுள்ள மருத்துவமனைகளில் சராசரியாக 1 லட்சம் பேருக்கு 6 படுக்கைகள் என்ற குறைவான அளவிலேயே உள்ளன.
- புதுச்சேரியின் மருத்துவமனைகளில் அதிக எண்ணிக்கையுடன், 1 லட்சம் பேருக்கு 222 படுக்கைகள் உள்ளன.
- 2012 ஆம் ஆண்டு இந்தியப் பொதுச் சுகாதார தரநிலைகளின் வழிகாட்டுதலின்படி மாவட்ட மருத்துவமனைகளில் சராசரியாக 1 லட்சம் பேருக்குக் குறைந்தபட்சமாக 22 படுக்கைகள் இருக்க வேண்டும்.

## பால் ரக்சா பெட்டகம்

- ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் அனைத்து இந்திய ஆயுர்வேதக் கல்வி நிறுவனமானது பால் ரக்சா பெட்டகத்தினை உருவாக்கியுள்ளது.
- இது நோய் எதிர்ப்புத் திறனை மேம்படுத்தும்.
- குழந்தைகளின் நோய் எதிர்ப்புத் திறனை உத்வேகப்படுத்தும் நோக்கத்தோடு இது உருவாக்கப் பட்டுள்ளது.
- SARS-CoV2 வைரசிற்கு எதிரான போராட்டத்தில் அவர்களுக்கு உதவும் வகையில் இக்கருவி உருவாக்கப்பட்டுள்ளது.
- இது உத்தரகாண்ட் மாநிலத்திலுள்ள இந்திய மருந்தாளுகை கழக நிறுவனத்தினால் (Indian Medicines Pharmaceutical Corporation Limited) தயாரிக்கப்பட்டது.

## விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம்

- இந்திய நாட்டின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் ஆஸ்திரேலிய நாட்டின் வர்த்தகம், சுற்றுலா மற்றும் முதலீட்டு அமைச்சர் டான் தெஹார் ஆகியோர் இந்தியா-ஆஸ்திரேலியா இடையிலான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்த அலுவல்முறை பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்கியுள்ளனர்.
- 17வது இந்திய ஆஸ்திரேலியக் கூட்டு அமைச்சரக குழுக் கூட்டத்தின் போது இந்நிகழ்வானது நடைபெற்றது.
- இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளும் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக வேண்டி தங்களது உறுதிப்பாட்டினை மீண்டும் வலியுறுத்தியுள்ளன.



## அமேசான் வருங்காலப் பொறியாளர் திட்டம்




- மிகப்பெரிய இணைய வர்த்தக நிறுவனமான அமேசான் இந்தியா நிறுவனமானது இந்தியாவில் "அமேசான் வருங்கால பொறியாளர் திட்டத்தினை" தொடங்குவதாக அறிவித்துள்ளது.
- இது ஒரு உலகளாவிய கணினி அறிவியல் கல்வித் திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது தரமான கணினி அறிவியல் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளை குறைந்த பிரதிநிதித்துவம் உடைய தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் எளிதில் பெறுவதற்கு வழிவகை செய்யும்.

## வேளாண் வேதிப்பொருள் உற்பத்தியாளர் – இந்தியா

- இந்திய நாடானது உலகின் 4வது மிகப்பெரிய வேளாண் வேதிப்பொருள் உற்பத்தியாளராக உள்ளதாக வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தெரிவித்து உள்ளார்.
- Croplife India எனும் அமைப்பின் 41வது வருடாந்திரப் பொதுக் குழுச் சந்திப்பில் உரையாற்றும் போது அமைச்சர் இந்தத் தகவலை கூறினார்.
- Croplife India என்பது 15 பயிர்முறை அறிவியல் நிறுவனங்களை உள்ளடக்கிய ஓர் உயர்நிலை அமைப்பாகும்.


## தூய்மை இந்தியா இயக்கம்



- இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாகூர், 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 01 அன்று ஒரு மாத அளவிலான தூய்மை இந்தியா இயக்கத்தினை பிரயாக்ராஜ் எனுமிடத்தில் தொடங்கி வைத்தார்.
- இந்தத் தேசிய அளவிலான இயக்கமானது ஒரு முறை பயன்படுத்தப்படும் நெகிழிப் பொருட்கள் மற்றும் இதரக் கழிவுகளை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியா முழுவதும் 744 மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு 6 கிராமங்களில் இந்த இயக்கம் நடத்தப் பட்டு வருகிறது.
- இந்த இயக்கமானது நேரு யுவ கேந்த்ரா சங்கதன் திட்டத்துடன் தொடர்புடைய இளையோர் குழுக்கள் மற்றும் தேசிய சேவைத் திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் ஆகியவை மூலம் நடத்தப் படுகிறது.

## ஆயுதப்படைச் சிறப்பு அதிகாரச் சட்டம்

- 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 01 அன்று அருணாச்சலப் பிரதேசத்தின் 3 மாவட்டங்களில் ஆயுதப்படைச் சிறப்பு அதிகாரச் சட்டத்தினை மேலும் 6 மாதங்களுக்கு நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டது.
- அருணாச்சலப் பிரதேசத்திலுள்ள சங்க்லாங், லாங்டிங் மற்றும் திரப் (Changlang, Longding, and Tirap) மற்றும் அசாம் எல்லையோரம் உள்ள மகதேவ்பூர் மற்றும் நம்சாய் காவல் நிலையத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகள் ஆகியவற்றைக் கலவரம் மிக்க பகுதியாக அரசு அறிவித்தது.




## GST வீதங்கள்

- இரண்டு மாதங்களுக்குள் வரி வீதங்களைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் வெவ்வேறு வரி வரம்புகளை ஒன்றிணைப்பதைக் குறித்துப் பரிசீலித்தல் போன்றவற்றிற்காக ஓர் அமைச்சர்கள் குழுவினை மத்திய அரசு நியமித்துள்து.
- கர்நாடக முதல்வர் பசவராஜ் S. பொம்மை இக்குழுவிற்குத் தலைமை தாங்குகிறார்.
- தற்போதுள்ள GST வரி வீதமானது 0, 5%. 12%. 18% மற்றும் 28% என்ற 5 பெரிய வரிவீத வரம்புகளைக் கொண்டுள்ளது.

## மித்ர சக்தி




- 8வது இந்திய இலங்கை இருதரப்புக் கூட்டுப் பயிற்சியானது 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 04 தொடங்கி அக்டோபர் 15 வரை நடைபெற உள்ளது.
- இது இலங்கையின் அம்பாரா என்னுமிடத்திலுள்ள போர்ப் பயிற்சிப் பள்ளியில் நடத்தப் படும்.
- இப்பயிற்சியானது மித்ர சக்தி என அழைக்கப்படுகிறது.
- இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 120 வீரர்களை உள்ளடக்கிய அனைத்து ஆயுதப் படைப் பிரிவானது இலங்கை இராணுவத்தின் பட்டாளத்துடன் இணைந்து இந்தக் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடும்.
- 7வது மித்ர சக்தி கூட்டுப் பயிற்சியானது 2019 ஆம் ஆண்டில் மகாராஷ்டிராவின் பூனேவிலுள்ள வெளிநாட்டுப் பயிற்சி மையத்தில் நடத்தப்பட்டது.

## காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வு




- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் பூபேந்தர யாதவ் காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வின் முதல் காலாண்டுப் பகுதிக்கான (2021 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் வரை) அறிக்கையினை வெளியிட்டார்.

- இந்த அறிக்கையானது காலாண்டிற்கான அனைத்திந்திய ரீதியிலான நிறுவனம் சார்ந்த வேலைவாய்ப்பு ஆய்வின் ஓர் அங்கமாகும்.
- இது தொழிலாளர் வாரியத்தினால் தயாரிக்கப்படுகிறது.
- IT / BPO துறைகளில் 152 சதவீத வளர்ச்சியானது பதிவாகியுள்ளது.
- மற்ற துறைகளில் வளர்ச்சி வீதம் ஆனது
  - சுகாதாரம் – 77%
  - கல்வி – 39%
  - தயாரிப்பு – 22%
  - போக்குவரத்து – 68% மற்றும்
  - கட்டுமானம் – 42% ஆகும்
- வர்த்தகத்தில் வேலைவாய்ப்பானது 25% வரை குறைந்துள்ளது.
- விடுதி & உணவகம் போன்ற துறைகளில் 13% வரை குறைந்துள்ளது.
- நிதியியல் சேவைத் துறையின் வேலைவாய்ப்பு 48% உயர்ந்துள்ளது.

## காதி தேசியக் கொடி

- காதித் துணியினால் நெய்யப்பட்ட உலகின் மிகப்பெரிய தேசியக் கொடியானது லடாக் ஒன்றியப் பிரதேசத்தின் லே பகுதியில் 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 02 அன்று பறக்க விடப் பட்டுள்ளது.
- மகாத்மா காந்தி அவர்களின் 152வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு லடாக் துணை நிலை ஆளுநர் R.K. மாத்தூர் இந்த தேசியக் கொடியைப் படர விட்டார்.
- இந்த நினைவுச் சின்னமான காதித் தேசியக் கொடியானது காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையத்தினால் தயாரிக்கப்பட்டது.
- இது 225 அடி நீளமும் 150 அடி அகலமும் 1,400 கிலோ கிராமிற்கும் அதிகமான எடையும் கொண்டதாகும்.
- இந்தத் தேசியக் கொடியிலுள்ள அசோகச் சக்கரமானது 30 அடி விட்டம் உடையது.
- இந்தக் கொடியைத் தயாரிப்பதற்கு 70 கைவினைஞர்களுக்கு 49 நாட்கள் ஆனது.



## விரிவான பொருளாதாரக் கூட்டிணைவு ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் விரிவான பொருளாதாரக் கூட்டிணைவு ஒப்பந்தத்திற்காக வேண்டி அரசுமுறையிலான பேச்சு வார்த்தையைத் தொடங்கி உள்ளன.
- இரு நாடுகளும் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் இந்தப் பேச்சுவார்த்தையை நிறைவு செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளன.
- இரு நாடுகளும் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரு அரசுமுறை ஒப்பந்தத்தில் கையெழுத்திட உள்ளன.

## நுண்ணுயிர் குருதி 2 ஆம் வகை டெங்கு




- நுண்ணுயிர் குருதி 2 ஆம் வகை டெங்கு நோய் அதிகரித்து வரும் பாதிப்புகளின் சவால் குறித்து மத்திய அரசு சமீபத்தில் ஓர் உயர்மட்டக் குழுக் கூட்டத்தினைக் கூட்டியது.
- இந்த வகை நோய் பதிவாகியுள்ள மாநிலங்களாவன : ஆந்திரப் பிரதேசம், குஜராத், கர்நாடகா, கேரளா, மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, ராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா ஆகியனவாகும்.


## புலிப் பேரணிகள்

- மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்திர யாதவ் இந்தியாவிலுள்ள 18 புலிகள் வாழிட மாநிலங்களில் புலிப் பேரணிகளைத் தொடங்கி வைத்தார்.
- "வனவிலங்கு வாரக் கொண்டாட்டம்" மற்றும் "அசாதி கா அம்ரித் மகோத்சவ்" ஆகியவற்றின் ஓர் அங்கமாக 51 புலிகள் காப்பகங்களில் இந்தப் புலிப் பேரணிகள் தொடங்கப் பட்டன.

- மூன்று புலிகள் காப்பகங்களில் இந்தப் பேரணிகள் காணொளி வாயிலாக நடத்தப் பட்டன. அவையாவன :
    - பிலிகிரி ரங்கநாத சுவாமி ஆலயம் புலிகள் காப்பகம் – கர்நாடகா.
    - நவேகாவன் நக்சிரா புலிகள் காப்பகம் – மகாராஷ்டிரா.
    - சஞ்சய் புலிகள் காப்பகம் – மத்தியப் பிரதேசம்.
- "India for Tigers – A Rally on wheels" என்ற கருத்துருவுடன் இப்பேரணிகள் தொடங்கப் பட்டன.




## சாச்சா சௌத்ரி



- புகழ்பெற்ற ஒரு இந்திய நகைச்சுவைக் கதை கேலிச்சித்திரக் கதாபாத்திரமான சாச்சா சௌத்ரி, மத்திய அரசின் உதவி பெறும் நமாமி கங்கை திட்டத்தின் அதிகாரப் பூர்வ சின்னமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- நதித் தூய்மையாக்கல் பிரச்சாரத்தில் குழந்தைகளை இணைக்க சாச்சா சௌத்ரி கதாபாத்திரம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இந்த நகைச்சுவைக் கதைகள் ஆரம்பத்தில் இந்தி, ஆங்கிலம் மற்றும் வங்காளம் ஆகிய மொழிகளில் தொடங்கப்படும்.

## ஆளில்லா விமானங்கள் மூலம் தடுப்பூசி விநியோகம்




- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் ஆளில்லா விமானச் செயல்பாடு மற்றும் விரிவாக்க அமைப்பானது (i-Drone) மணிப்பூரில் தொடங்கப்பட்டது.
- இது "சுகாதாரத்தில் அந்த்யோதயா" என்ற திட்டத்திற்கான அரசின் உறுதிப்பாட்டின் அடிப்படையில் தொடங்கப்பட்டது.
- தெற்கு ஆசியாவில் 15 கி.மீ. தூரத்திற்கு கோவிட்-19 தடுப்பு மருந்தினைக் கொண்டு செல்ல இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட (மேக் இன் இந்தியா) ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- பிஷ்ணுபூர் மாவட்ட மருத்துவமனையிலிருந்து மணிப்பூரில் உள்ள கராங் தீவின் லோக்தாக் ஏரிப்பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் விநியோகம் செய்வதற்காக இந்த மருந்துகள் கொண்டு செல்லப்படுகின்றன.
- இந்த இரு இடங்களுக்கும் இடையிலான தூரம் 26 கி.மீ. ஆகும்.

## நகர மாநாடு – லக்னோ

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் "ஆசாதி @ 75 – புதிய நகர்ப்புற இந்தியா : நகர்ப்புறப் பகுதியை மாற்றியமைத்தலுக்கான மாநாடு மற்றும் பொருட்காட்சி" என்ற ஒரு நிகழ்வினைத் தொடங்கி வைத்தார்.
- AMRUT திட்டம் மற்றும் பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் கீழ் உத்தரப் பிரதேசத்தில் 75 நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

- FAME-II திட்டத்தின் கீழ் 7 நகரங்களுக்கு 75 ஸ்மார்ட் மின்சாரப் பேருந்துகள் தொடங்கி வைக்கப் பட்டன.
- அந்த ஏழு நகரங்களாவன : லக்னோ, வாரணாசி, கான்பூர், பிரயாக்ராஜ், கோரக்பூர், காசியாபாத் மற்றும் ஜான்சி ஆகியனவாகும்.

## மகாபாஹு பிரம்புத்திரா நதி பாரம்பரிய மையம்

- அசாம் மாநிலத்தின் கவுஹாத்தியில் அமைக்கப்பட்டுள்ள மகாபாஹு பிரம்புத்திரா நதி பாரம்பரிய மையத்தினை குடியரசுத் துணைத் தலைவர் வெங்கய்யா நாயுடு திறந்து வைத்தார்.
- இந்த மையமானது முதலில் காம்ரூப் மாவட்டத்தின் ஆங்கிலேய உதவி ஆணையர் மற்றும் ஆட்சியரின் இல்லமாக இருந்தது.
- விடுதலைக்குப் பிறகு, இந்தக் கட்டிடம் 2011 ஆம் ஆண்டு வரையில் துணை ஆணையரின் மாளிகையாக இருந்தது.

## இந்திய அமைதிகாப்புப் படையினருக்குக் கௌரவம்

- தெற்கு சூடான் நாட்டிற்கான ஐக்கிய நாடுகள் அமைதித் திட்டப் பணியில் பணியாற்றும் 800க்கும் மேற்பட்ட இந்திய அமைதிகாப்புப் படையினருக்கு மதிப்பு மிக்க ஐ.நா. பதக்கமானது வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டது.
- இந்திய அமைதிகாப்புப் படையினர் தங்களது சேவைப் பணியை முடித்து நிறைவு செய்ததற்காக வேண்டி இந்தப் பதக்கமானது அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



## கல்வி நிலை அறிக்கை – இந்தியா

- ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பானது "இந்தியாவின் கல்வி நிலை அறிக்கை 2021 : ஆசிரியர்கள் இன்றி வகுப்பில்லை" என்று தலைப்பிடப் பட்ட தனது அறிக்கையினை வெளியிட்டது.
- உலக ஆசிரியர் தினத்தன்று (அக்டோபர் 05) இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

- இது 3வது கல்வி நிலை அறிக்கையாகும்.
- இந்த ஆண்டு "ஆசிரியர்கள், கற்பித்தல் மற்றும் ஆசிரியர் கல்வி" என்ற கருத்துருவின் மீது இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் சுமார் 1.2 லட்சம் ஒற்றை ஆசிரியர் பள்ளிகள் உள்ளன.
- அதிக ஒற்றை ஆசிரியர்களைக் கொண்ட பள்ளிகளை உடைய 3 மாநிலங்களாவன ; அருணாச்சலப் பிரதேசம் (18.22%), கோவா (16.08%) மற்றும் தெலங்கானா (15.71%) ஆகியனவாகும்.
- வருடாந்திர தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு மற்றும் கல்வித் தகவலுக்கான ஒருங்கிணைந்த மாவட்டத் தகவல் அமைப்பு ஆகியவற்றின் பகுப்பாய்வின் அடிப்படையில் இந்த அறிக்கையின் தரவுகள் தயாரிக்கப்பட்டன.




## ஆபத்துக் காப்பான்களுக்கான திட்டம்

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகமானது ஆபத்துக் காப்பான்களுக்கான திட்டம் ஒன்றினைத் தொடங்கியது.
- இந்தத் திட்டமானது 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 15 அன்று தொடங்கி 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை நடைமுறையில் இருக்கும்.
- இந்தத் திட்டத்தின்கீழ், விபத்து நடந்த சில மணி நேரத்திற்குள் அந்த நபரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அவரது உயிரைக் காப்பாற்றுவோருக்கு ரூ.5,000 பரிசுத் தொகையானது (ஒவ்வொரு விபத்திற்கும்) வழங்கப்படும்.
- ஒவ்வொரு விபத்திலிருந்தும் காப்பவருக்கு சன்மானம் வழங்குவதோடு தகுதியுடைய ஆபத்துக் காப்பான்களுக்கு 10 தேசிய அளவிலான விருதுகளையும் அமைச்சகம் வழங்க உள்ளது.
- அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.1,00,000 பரிசுத் தொகையானது வழங்கப்படும்.
- ஒரு தனிநபரான ஆபத்துக் காப்பானிற்கு ஒரு வருடத்தில் அதிகபட்சமாக 5 முறை சன்மானம் வழங்கப்படும்.




## தொழில்துறைப் பூங்கா மதிப்பீடுகள் அமைப்பு அறிக்கை

- 2வது தொழில்துறைப் பூங்கா மதிப்பீடுகள் அமைப்பு அறிக்கையானது வணிக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையானது இந்தியாவினுடைய தொழில்துறையில் போட்டித்தன்மையை மேம்படுத்தி முதலீட்டினை ஈர்க்கும்.




*Figure 1: Snapshot of key government initiatives to promote growth of the manufacturing and service sectors*

- IPRS (Industrial Park Rating System) மாதிரி பயிற்சியானது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.

- தொழிற்துறைப் பூங்கா மதிப்பீடுகள் அமைப்பு அறிக்கையில் 41 தொழிற்துறைப் பூங்காக்கள் “தலைமை அமைப்புகள்” என மதிப்பிடப் பட்டுள்ளன.
- 90 தொழிற்துறைப் பூங்காக்கள் “சவால் நிறைந்தவை” என்ற பிரிவின் கீழ் மதிப்பிடப் பட்டுள்ளன.
- 185 தொழிற்துறைப் பூங்காக்கள் “உயர்நோக்கு இலட்சியவாதிகள்” (Aspirers) என்ற பிரிவின் கீழ் மதிப்பிடப் பட்டுள்ளன.

## தேசிய சாலைப் பாதுகாப்பு வாரியம்

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகமானது தேசிய சாலைப் பாதுகாப்பு வாரியத்தை அமைக்க உள்ளதாக அறிவித்தது.
- சாலைப் பாதுகாப்பு, புதுமை கண்டுபிடிப்பு மற்றும் புதியத் தொழில்நுட்ப ஏற்பு போன்றவற்றின் மேம்பாட்டிற்குத் தேசிய சாலைப் பாதுகாப்பு வாரியம் பொறுப்பு வகிக்கும்.
- சாலைப் போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகன இயக்கத்தினை இது ஒழுங்குமுறைப் படுத்தும்.
- இந்த வாரியத்தின் தலைமையகமானது தேசிய தலைநகர் பகுதியில் நிறுவப்படும்.
- இந்த வாரியத்தின் அனைத்து உறுப்பினர்களும் மத்திய அரசினால் நியமிக்கப் படுவர்.

## PM MITRA பூங்காக்கள்




- நாடு முழுவதும் 7 புதிய மிகப்பெரிய (மெகா) ஜவுளிப் பூங்காக்களை (அ) PM MITRA பூங்காக்களை அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- இது பொருளாதாரத்தில் ஜவுளித் துறையின் வளர்ச்சியை மேலும் உயர்த்துவதில் உதவுவதற்கும், உலக ஜவுளித்துறை வரைபடத்தில் இந்தியாவினை வலுவாக நிலை நிறுத்துவதற்குமான ஒரு முயற்சியாகும்.
- இந்த மிகப்பெரிய ஒருங்கிணைந்த ஜவுளிப் பிராந்திய மற்றும் ஆடைப் பூங்காக்கள் என்பவை மதிப்பிற்குரிய பிரதமரின் 5F என்ற குறிக்கோளின் அடிப்படையில் அமைக்கப்பட உள்ளது.
- '5F' சூத்திரமானது வேளாண்மையிலிருந்து இழை; இழையிலிருந்துத் தொழிற்சாலை; தொழிற்சாலையிலிருந்து ஆடை வடிவமைப்பு; ஆடை வடிவமைப்பில் இருந்து வெளிநாடு ஆகியவற்றைக் கொண்டதாகும்.
- இந்தப் பூங்காக்கள் வெவ்வேறு மாநிலங்களிலிலுள்ள பசுமை நிலம் மற்றும் தொழில்துறை சார்ந்த நிலங்களில் அமைக்கப்படும்.
- இவை பொது-தனியார் கூட்டிணைவு முறையில் உரிமை கோரப்படும்.

## இந்தியாவின் புதிய புலிகள் காப்பகம்

- குரு காசிதாஸ் தேசியப் பூங்கா மற்றும் தமோர் பிங்க்லா வனவிலங்குச் சரணாலயம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பகுதிகளை புலிகள் காப்பகமாக அறிவிப்பதற்கான சத்தீஸ்கர் அரசின் முன்மொழிதலுக்கு சமீபத்தில் அனுமதி வழங்கப்பட்டது.
- இதற்கு தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- இந்தப் புதிய காப்பகமானது மத்தியப் பிரதேசம் மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களுடன் ஒட்டிய அம்மாநில எல்லையின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது.
- இது சத்தீஸ்கர் மாநிலத்தின் 4வது புலிகள் காப்பகமாகத் திகழும்.
- இந்த மாநிலத்திலுள்ள மற்ற 3 புலிகள் காப்பகங்களாவன; உதன்டி-சித்தனடி, அச்சனகுமார் மற்றும் இந்திராவதி காப்பகங்கள் ஆகியனவாகும்.
- குரு காசிதாஸ் தேசியப் பூங்காவானது நாட்டில் ஆசியச் சிறுத்தைகள் கடைசியாகக் காணப்பட்ட வாழ்விடமாக இருந்தது.



## ஜிம் கார்பெட் தேசியப் பூங்கா

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துறையின் இணை அமைச்சர் அஷ்வினி குமார் சௌபே கார்பெட் தேசியப் பூங்காவின் பெயரை ராம்கங்கா தேசியப் பூங்கா என்று பெயர் மாற்றம் செய்வதற்கு முன்மொழிந்துள்ளார்.
- ஜிம் கார்பெட் தேசியப் பூங்காவானது உத்தரகாண்ட் மாநிலத்தின் நைனிடால் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இந்தப் பூங்காவானது ராம்கங்கா நதியினால் உருவாக்கப்பட்ட பட்லி டூன் என்ற ஒரு பள்ளத்தாக்கினை உள்ளடக்கியதாகும்.
- இந்த தேசியப் பூங்காவானது அருகி வரும் வங்காளப் புலியைப் பாதுகாப்பதற்காக வேண்டி ஹைய்லே தேசியப் பூங்காவாக 1936 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இதன் உருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகித்த ஜிம் கார்பெட் என்பவரின் நினைவாக இந்தப் பூங்காவிற்கு இப்பெயர் சூட்டப்பட்டது.
- இது இந்தியாவின் மிகப்பழமையான தேசியப் பூங்காவாகும்.
- இது 1973 ஆம் ஆண்டில் புலிகள் பாதுகாப்புத் திட்டம் (Project Tiger) என்ற ஒரு முன்னெடுப்பின் கீழ் கொண்ட வரப்பட்ட முதல் பகுதியாகும்.




Jim Corbett National Park name change: Uttarakhand's Jim Corbett National Park is likely to be renamed Ramganga National Park after the river that flows through the tiger reserve.

## புவிசார் குறியீடுகள்

- 51 புதிய பொருட்களுக்குச் சென்னை பதிவகத்தினால் புவிசார் குறியீடு வழங்கப் பட்டது.
- அவை ஜெர்மன் பியர் (முன்செனர் பியர்), இத்தாலிய வெய்ன்டு புளூ சீஸ் (கோர்கோன்சோலா - gorgonzola), கிரேக்கத்தினைச் சேர்ந்த தாவர பிசின் (சியோஸ் மஸ்திஹா - Chios Mastiha) மற்றும் செக் குடியரசு நாட்டின் பல்வேறு வகை விதைக் கூடுகள் (ஐடெக்கி க்மெல் - zatecky chmel) ஆகியனவாகும்.
- தமிழ்நாட்டில் 5 பொருட்களுக்குப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

- அவை கன்னியாகுமரி கிராம்பு, தஞ்சாவூர், நெட்டி வேலைப்பாடுகள், கருப்பூர் கலம்காரி ஓவியங்கள் மற்றும் அரும்பாவூர்+கள்ளக்குறிச்சி ஆகிய பகுதிகளின் மரச் செதுக்கு வேலைப்பாடுகள் ஆகியனவாகும்.




## இந்திய விண்வெளிக் கூட்டமைப்பு

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 11 அன்று இந்திய விண்வெளிக் கூட்டமைப்பினை டிஜிட்டல் ரீதியில் தொடங்கி வைக்க உள்ளார்.
- இந்திய விண்வெளிக் கூட்டமைப்பானது விண்வெளி மற்றும் செயற்கைக் கோள் நிறுவனங்களுடன் தொடர்புடைய ஒரு முதன்மைத் தொழில்துறையாகும்.
- இந்தக் கூட்டமைப்பின் ஸ்தாபன உறுப்பினர்கள், நெல்கோ (டாட்டா குழுமம்), பாரதி ஏர்டெல், லார்சென் & டியூப்ரோ, மேப்மை இந்தியா, ஒன்வெப், வால்சந்த் நகர் இன்டஸ்ட்ரீஸ் மற்றும் ஆனந்த் டெக்னாலஜி லிமிடெட் ஆகியனவாகும்.
- அதன் முக்கிய உறுப்பினர்களாவன : BEL, கோத்ரெஜ், ஹியூஜெஸ் இந்தியா, சென்டம் எலக்ட்ரானிக்ஸ், அசிஷ்டா-BST ஏரோஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் மக்சார் இந்தியா ஆகியனவாகும்.




## ஹென்லே கடவுச்சீட்டுக் குறியீடு 2021

- 2021 ஆம் ஆண்டு ஹென்லே கடவுச்சீட்டுக் குறியீட்டில் இந்தியாவின் நிலை கடந்த ஆண்டிலிருந்து 6 இடங்கள் பின்தங்கியுள்ளது.
- தற்போது இதில் இந்தியா 90வது இடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீடானது உலகில் பயணத்திற்கு மிகவும் ஏதுவான கடவுச்சீட்டுகளை பட்டியலிடுகிறது.
- இந்தக் குறியீட்டில் ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் முதலிடத்தில் உள்ளன.
- இக்குறியீடானது 227 சுற்றுலாத் தளங்கள் மற்றும் 199 கடவுச்சீட்டுகளை மதிப்பிடுகிறது.
- இந்தத் தரவரிசையானது சர்வதேச வான்வழிப் போக்குவரத்துக் கூட்டமைப்புத் தரவுகளின் கணக்கெடுப்பு அடிப்படையிலானதாகும்.

## எத்தனால் 20 திட்டம்

- இந்திய அரசானது எத்தனால் 20 திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இத்திட்டமானது 2025 ஆம் ஆண்டுக்குள் பெட்ரோலுடன் 20% எத்தனால் கலந்து உபயோகிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது..
- தற்போது இந்தியாவில் 8.5% எத்தனால் பெட்ரோலுடன் கலக்கப்படுகிறது.




## புதிய பாம்பன் இரயில்வே பாலம்



- இந்திய இரயில்வே நிர்வாகமானது மண்டபம் என்னுமிடத்தில் 2.05 கி.மீ. நீளமான புதிய பாம்பன் இரயில்வே பாலம் அமைக்கும் பணிகளைத் தொடங்கியது.
- இந்தப் பாலமானது ராமேஸ்வரத்தினை தமிழகத்தின் பிரதான நிலப்பரப்புடன் இணைக்கும்.
- தற்போதுள்ள பாம்பன் இரயில் பாலம் 105 ஆண்டுகள் பழமையானதாகும்.
- இது இந்தியாவின் முதலாவது செங்குத்து வாக்கில் உயர்த்தக் கூடிய இரயில்வே கடல் பாலமாகும்.


## இயற்கை மற்றும் மக்களுக்கான உயர் லட்சியக் கூட்டணி

HIGH AMBITION COALITION
FOR NATURE AND PEOPLE

- இயற்கை மற்றும் மக்களுக்கான உயர் லட்சியக் கூட்டணியில் இந்தியா அதிகாரப் பூர்வமாக இணைந்துள்ளது.
- புதுடெல்லியில் பிரான்சு மற்றும் இந்திய நாட்டு அரசுகளுக்கிடையே நடத்தப் பட்ட ஒரு விழாவில் இந்தியா இந்தக் கூட்டணியில் இணைத்தது.
- இந்தக் கூட்டணியானது 70 நாடுகளுக்கும் மேலான நாடுகளை உள்ளடக்கியக் குழு ஆகும்.
- 2030 ஆம் ஆண்டுக்குள் குறைந்தபட்சமாக உலகின் 30% நிலம் மற்றும் பெருங் கடல்களைப் பாதுகாப்பதற்கான ஒரு சர்வதேச ஒப்பந்தத்தினை ஊக்குவிப்பதை இந்தக் கூட்டணி நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பிரதான் மந்திரி கதி சக்தி

- பிரதான் மந்திரி கதி சக்தி எனப்படும் முதலாவது தேசிய உள்கட்டமைப்பு ஆளுகைத் திட்டத்தினை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்.
- இந்த ஆளுகைத் திட்டமானது 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 13 அன்று தொடங்கி வைக்கப் படும்.
- கதி சக்தி திட்டமானது 2021 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று பிரதமர் மோடி அவர்களால் அறிவிக்கப்பட்டது.
- உடனடித் தகவல்களை வழங்குவதற்காக கதி சக்தி இணைய தளமானது தொடங்கப் பட்டது.
- இது அமைச்சர்களிடையே சிறந்த ஒருங்கிணைப்பினை நல்கும்.




## திரிசூல் மற்றும் கருடா

- இந்திய இரயில்வே நிர்வாகமானது "திரிசூல்" மற்றும் "கருடா" எனப்படும் இரண்டு நீண்ட தூரச் சரக்கு (இழுவை) இரயில்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இவை வழக்கமான சரக்கு இரயில்களின் சாதாரணமான அமைப்பை விட இரண்டு அல்லது பல மடங்கு நீளமானதாகும்.
- திரிசூல் என்பது தெற்கு மத்திய இரயில்வே மண்டலத்தின் மூன்று சரக்கு இரயில்களை அதாவது 177 பெட்டிகளைக் கொண்ட முதலாவது நீண்ட தூர இரயில் ஆகும்.
- இந்த இரயிலானது விஜயவாடா பிரிவின் கொண்டப்பள்ளி என்ற இரயில் நிலையத்திலிருந்து கிழக்கு கடற்கரை இரயில்வே மண்டலத்தின் குர்தா பிரிவு வரை இயக்கப் படுகிறது.
- தெற்கு மத்திய இரயில்வே மண்டலமானது இதனைத் தொடர்ந்து "கருடா" எனப்படும் அது போன்ற மற்றொரு இரயிலினை குண்டக்கல் பிரிவின் ராய்ச்சூர் பகுதியிலிருந்து செகந்திரபாத் பிரிவின் மனுகூரு பகுதி வரை இயக்குகிறது.

## மலபார் பயிற்சி 2021

- இந்தியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் வங்காள விரிகுடாவில் 2வது கட்டமாக பலதரப்பட்ட மலபார் கடற்படைப் பயிற்சியில் பங்கேற்கின்றன.
- பலதரப்பு மலபார் கடற்படைப் பயிற்சியின் முதல் கட்டமானது பிலிப்பைன்ஸ் கடலில் 2021 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் 26 முதல் 29, வரை நடைபெற்றது.
- மலபார் பயிற்சியானது 1992 ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையே ஆண்டுதோறும் நடக்கக் கூடிய ஒரு இருதரப்பு கடற்படைப் பயிற்சியாக தொடங்கியது.



## டிஜிட்டல் வாழ்க்கைத் தரக் குறியீடு




- 3வது வருடாந்திர டிஜிட்டல் வாழ்க்கைத்தரக் குறியீட்டில் 110 நாடுகளில் இந்தியா 59வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- இந்த ஆய்வானது சர்ஃப்சார்க் எனப்படும் ஒரு இணையவழிப் பாதுகாப்பு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.
- இக்குறியீடானது 5 டிஜிட்டல் நல்வாழ்வு தூண்களின் (குறிகாட்டிகளின்) அடிப்படையில் உலக நாடுகளை மதிப்பீடு செய்கிறது.
- இந்தியாவின் தரவரிசை
    - மின்னாளுகையில் 33வது இடம்
    - மின்னணுப் பாதுகாப்பில் 36வது இடம்
    - இணையத்திற்கான கட்டணத்தில் 47வது இடம்

- இணைய தரத்தில் 67வது இடம்

❖ இது இந்தியா மின்னணு உள்கட்டமைப்பில் மிகக்குறைந்த மதிப்போடு 91வது இடத்தில் உள்ளதைக் காட்டுகின்றது.

❖ இந்திய நாடானது ஆசிய அளவில் 17வது இடத்திலும் தெற்காசியப் பகுதியில் முதலிடத்திலும் உள்ளது.

❖ கடந்த ஆண்டு முதல் இந்தியாவின் மின்னணுப் பாதுகாப்பு 76% வரை மேம்பட்டுள்ள வகையில், தற்போது இந்தியா சீனாவை விட அதிக மதிப்பைப் பெற்று உள்ளது.

## ரிலையன்ஸ் நியூ எனர்ஜி சோலார் லிமிடெட்

❖ ரிலையன்ஸ் நியூ எனர்ஜி சோலார் லிமிடெட் நிறுவனமானது REC சோலார் ஹோல்டிங்ஸ் AS (REC குழுமம்) நிறுவனத்தின் 100% பங்கினை சீனாவின் நேஷனல் புளூஸ்டார் (குழுமம்) லிமிடெட் என்ற நிறுவனத்திடமிருந்து வாங்க உள்ளதாக அறிவித்துள்ளது.

❖ ரிலையன்ஸ் நியூ எனர்ஜி சோலார் லிமிடெட் நிறுவனமானது முழுவதும் ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான அதன் துணை நிறுவனம் ஆகும்.

## ஆகாஷா ஏர்




❖ வான்வழிப் போக்குவரத்து அமைச்சகமானது “ஆகாஷா ஏர்” என்ற புதிய விமான நிறுவனத்திற்கு இந்தியாவில் அதன் சேவையினைத் தொடங்குவதற்காக வேண்டி தடையின்மைச் சான்றிதழை வழங்கியுள்ளது.

❖ ஆகாஷா ஏர் என்பது ஜெட் ஏர்வேஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அலுவலர் வினய் தூபே மற்றும் ராகேஷ் ஜுன்ஜுன்வாலா ஆகியோரால் நிறுவப் பட்டதாகும்.

❖ 2022 ஆம் ஆண்டின் மத்தியில் இந்த நிறுவனம் தனது சேவையைத் தொடங்க இலக்கு நிர்ணயித்துள்ளது.

❖ ஆகாஷா ஏர்லைன் ஒரு மிகக் குறைந்த விலையிலான விமானச் சேவையாகும் (Ultra-low-cost carrier service).

## தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் 28வது நிறுவன தினம் நிகழ்ச்சி

- ❖ பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் 28வது நிறுவன நிகழ்ச்சியில் உரையாற்றினார்.
- ❖ இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணையமானது 1993 ஆம் ஆண்டு அக்டோபர் 12 அன்று நிறுவப்பட்ட ஒரு சட்டரீதியிலான அமைப்பாகும்.
- ❖ இது 1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்த ஆணையமானது நிறுவப்பட்டது.
- ❖ இது விளிம்பு நிலையில் உள்ளவர்களின் மனித உரிமைகளையும் அவர்களது மதிப்பினையும் மேம்படுத்துவதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் நிறுவப்பட்டது.




## ஏழு புதிய பாதுகாப்புத் துறை நிறுவனங்கள்

- ❖ ஆயுதத் துறையைப் பெருநிறுவன மயமாக்குதலின் ஒரு பகுதியாக அக்டோபர் 15 அன்று ஏழு புதிய பாதுகாப்புத்துறை நிறுவனங்களை இந்திய அரசு தொடங்கியது.
- ❖ இந்தப் புதிய அரசு நிறுவனங்களானது ஆயுதத் தளவாடங்கள், வாகனங்கள், வெடி மருந்துகள், ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும்.
- ❖ 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 01 அன்று முதல் ஆயுதத் தளவாட தொழிற்சாலை வாரியத்தைக் கலைக்கும் அரசின் ஆணையைத் தொடர்ந்து அந்த வாரியத்திலிருந்து 7 புதிய பாதுகாப்புத் துறை நிறுவனங்களைத் தொடங்கும் நடவடிக்கையானது தோன்றியது.



## ஜெய்ப்பூர் சர்வதேச விமான நிலையம்

- கௌதம் அதானி தலைமையிலான அதானி குழுமமானது ஜெய்ப்பூர் சர்வதேச விமான நிலையத்தின் பொறுப்புகளை இந்திய விமான நிலைய ஆணையத்திடமிருந்துப் பெற்றுக் கொண்டது.
- இந்திய அரசானது இந்த விமான நிலையத்தினை அதானி குழுமத்திடம் 50 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு வழங்கியது.
- ஜெய்ப்பூர் விமான நிலையமானது தினசரி விமானப் போக்குவரத்துச் செயல்பாடுகளில் இந்தியாவின் 11வது பரபரப்பான விமான நிலையமாகும்.

## சர்வதேச எரிசக்தி முகமை மற்றும் இந்தியா





- சர்வதேச எரிசக்தி முகமையானது இந்தியாவினை அதன் முழு நேர உறுப்பினராகப் பொறுப்பேற்குமாறு அழைப்பு விடுத்துள்ளது.
- உலகின் 3வது மிகப்பெரிய ஆற்றல் நுகர்வு நாடாக இந்தியா திகழ்வதன் காரணமாக இந்த உறுப்பினர் பொறுப்பிற்கான அழைப்பானது விடுக்கப்பட்டுள்ளது
- இந்த அழைப்பானது ஏற்கப் பட்டால், இந்தியா தனது மூலோபாய எண்ணெய் இருப்பினை 90 நாட்கள் தேவைக்கு அதிகரிக்க வேண்டும்.
- 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியா சர்வதேச எரிசக்தி முகமையின் இணை உறுப்பினர் ஆனது.

## மத்திய உயிரியல் பூங்கா ஆணையம்

- இந்திய உயிரியல் பூங்காக்களுக்கான தொலைநோக்குத் திட்டமானது (2021-2031) சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இந்தத் தொலைநோக்குத் திட்டமானது இந்திய உயிரியல் பூங்காக்களை மேம்படுத்துதல் மற்றும் மத்திய உயிரியல் பூங்கா ஆணையத்தினை வலுப்படுத்துதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்திய உயிரியல் பூங்காக்களுக்கான சட்டப்பூர்வ ஒழுங்குமுறை அமைப்பாகும்.
- இது 1992 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்த ஆணையத்தின் முக்கிய நோக்கமானது நாட்டின் உயிரிப் பன்முகத் தன்மையைக் குறிப்பாக, 1998 ஆம் ஆண்டு தேசிய உயிரியல் பூங்கா கொள்கையின் படி விலங்கினங்களைப் பாதுகாப்பதில் நாட்டின் முயற்சியைப் பூர்த்தி செய்வதும் வலுப்படுத்துவதுமே ஆகும்.

***முக்கியப் பணிகள்***

- இது இந்திய உயிரியல் பூங்காக்களில் உள்ள விலங்குகளின் பராமரிப்பு மற்றும் சுகாதார நலனுக்கான குறைந்தபட்ச தரநிலைகள் மற்றும் விதிமுறைகளை விதிக்கிறது.
- நாட்டிலுள்ள ஒவ்வோர் உயிரியல் பூங்காவும் தனது செயல்பாட்டிற்காக மத்திய உயிரியல் பூங்கா ஆணையத்திடம் அங்கீகாரம் பெற வேண்டும்.
- இந்த ஆணையத்தினால் உயிரியல் பூங்காக்களின் அங்கீகாரத்தினைத் திரும்ப பெறவும் இயலும்.




## பல்முனை தளவாடங்கள் பூங்கா

- திருவள்ளுவர் மாவட்டத்தின் மப்பேடு என்னுமிடத்தில் ஒரு பல்முனை தளவாடப் பூங்காவினை நிறுவுவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமானது கையெழுத்தானது.
- இது தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டுக் கழகம், தேசிய நெடுஞ்சாலைத் தளவாட மேலாண்மை நிறுவனம் மற்றும் சென்னை துறைமுக நிறுவனம் ஆகியவை இடையே மேற்கொள்ளப்பட்டது.

- சென்னைப் புறநகர் சாலைப் பகுதியில் நிறுவப்பட உள்ள இந்தப் பூங்காவானது சென்னை விமான நிலையம், சென்னைத் துறைமுகம், காமராஜர் துறைமுகம், காட்டுப் பள்ளி துறைமுகம் ஆகியவற்றை இணைக்கும்.

## ஆற்றல் நிதிக் கழகம் – மகாரத்னா அந்தஸ்து




- ஆற்றல் நிதிக் கழகத்திற்கு மத்திய அரசு மகாரத்னா அந்தஸ்தினை வழங்கியுள்ளது.
- இந்தியாவில் மகாரத்னா அந்தஸ்து பெற்ற 11வது அரசு நிறுவனமாக ஆற்றல் நிதிக் கழகம் மாறியுள்ளது.
- ஆற்றல் நிதிக் கழகமானது இந்தியாவிலுள்ள ஒரு மிகப்பெரிய உள்கட்டமைப்பு நிறுவனமாகும்.
- இந்த உயர்த்தப் பட்ட அந்தஸ்தானது,
  - இந்த நிறுவனத்தினைத் தரமான முதலீடுகளை மேற்கொள்ளவும்.
  - நிதிசார் கூட்டு நிறுவனங்களை நிறுவவும், அதற்கு முழுவதும் சொந்தமான துணை நிறுவனங்களை உருவாக்கவும்,
  - இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இணைப்பு நடவடிக்கைகள் மற்றும் கையகப்படுத்துதல் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும் வழிவகை செய்யும்.

## தேசியப் பசுமை தீர்ப்பாயம் குறித்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு

- "தேசியப் பசுமை தீர்ப்பாயமானது தன்னிச்சையான அதிகாரங்களைக் கொண்டு உள்ளது எனவும் சுற்றுச்சூழல் சார்ந்தப் பிரச்சினைகளை அது தானே விசாரிக்க முடியும்" என்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை உச்சநீதிமன்றம் வழங்கி உள்ளது.
- சுற்றுச்சூழல் வழக்குகளை தேசியப் பசுமை தீர்ப்பாயமானது தாமாக விசாரிக்க அதிகாரம் இல்லை என்று மத்திய அரசு கூறியதைத் தொடர்ந்து இந்தத் தீர்ப்பானது வழங்கப்பட்டுள்ளது
- 2010 ஆம் ஆண்டு தேசியப் பசுமை தீர்ப்பாயச் சட்டத்தின் கீழ், 2010 ஆம் ஆண்டு அக்டோபர் 18 அன்று தேசியப் பசுமை தீர்ப்பாயம் நிறுவப்பட்டது.

## தரம் குறைந்த நிலங்களைப் புணரமைத்தல்




- ❖ மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்திர யாதவ், உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கத்தின் இழப்பிற்கு நிலச் சீரழிவுதான் காரணம் எனக் கூறி உள்ளார்.
- ❖ 2030 ஆம் ஆண்டுக்குள் 26 மில்லியன் ஹெக்டேர் அளவிலான தரம் குறைந்த நிலங்களைப் புணரமைப்பதற்கு இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.
- ❖ இதற்கு முன்பு விதிக்கப்பட்ட 21 மில்லியன் ஹெக்டேர் என்ற இலக்கை விட இது அதிகமாகும்.

## பாஸ்பேட் மற்றும் பொட்டாசிக் உரங்களுக்கு மானியம்

- ❖ ராபி அல்லது குளிர்கால நடவுப் பருவத்திற்கான கூடுதல் உர மானியத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ பொருளாதார விவகாரங்கள் மீதான அமைச்சரவைக் குழுவானது பாஸ்பேட் மற்றும் பொட்டாசிய உரங்களுக்கான புதிய ஊட்டச்சத்து சார்ந்த மானிய விகிதங்களுக்கு ஒப்புதல் அளித்தது.
- ❖ மத்திய அரசினால் ஒரு அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்படும் யூரியாவைப் போல அல்லாமல், அதற்குப் பதிலாக யூரியா சாராத உரங்களின் விலைகள் ஊட்டச் சத்து சார்ந்த மானிய விகிதங்களை அரசு நிர்ணயிப்பதைப் போல விதிக்கப் படுகின்றன.

## யுத் அப்யாஸ் பயிற்சி 2021

- ❖ இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து அமெரிக்காவில் உள்ள அலாஸ்காவில் 15 நாட்கள் அளவிலான மிகப்பெரிய இராணுவப் பயிற்சியினைத் தொடங்க உள்ளன.
- ❖ 2021 ஆம் ஆண்டானது 17வது யுத் அப்யாஸ் பயிற்சியினைக் குறிக்கிறது.

- இந்தப் பயிற்சியானது அலாஸ்காவிலுள்ள எல்மென்டோர்ஃப் ரிச்சர்டுசன் எனும் ஒரு கூட்டுப் பயிற்சித் தளத்தில் நடத்தப்பட உள்ளது.
- இந்தப் பயிற்சியானது இரு நாடுகளுக்கிடையேயான ஒரு இருதரப்பு ராணுவ ஒத்துழைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கானதாகும்.

## அடல் சமூகப் புத்தாக்க மையம்

- இந்தியாவின் முதலாவது அடல் சமூகப் புத்தாக்க மையமானது ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் உள்ள விவேகானந்தா உலகப் பல்கலைக்கழகத்தில் திறக்கப்பட்டது.
- இந்திய அரசு, அடல் புத்தாக்கத் திட்டம் மற்றும் நிதி ஆயோக் ஆகியவற்றால் அமைக்கப்பட்ட நாட்டின் முதல் மையமாக இது திகழும்.
- இந்த மையமானது பெரிய அளவிலான கருதுகோள்களை வடிவமைக்கும் மற்றும் வளமான எதிர்காலச் சமுதாயத்தினை மாற்றியமைக்க உதவும் புதுமையான கருதுகோள்களை ஆதரித்து அதனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## SC120 – LOX

- இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனமானது “அதி கனமான” செமி-கிரையோஜெனிக் உந்துவிசை கலத்தினை (SC120 – LOX) இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திடம் வழங்கியுள்ளது.
- இந்த செமி-கிரையோஜெனிக் திரவ ஆக்சிஜன் கலனானது SC120 நிலையின் ஓர் அங்கமாகும்.
- SC120 நிலையானது தற்போதுள்ள GSLV MK – III ஏவுகலனில் உள்ள L110 நிலையினை மாற்றி விண்வெளிப் பொருளை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.




## எல்லைப் பாதுகாப்பு படை அதிகார வரம்பு

- பஞ்சாப், மேற்கு வங்காளம் மற்றும் அசாம் ஆகிய மாநிலங்களில் உள்ள சர்வதேச எல்லைகளில் எல்லைப் பாதுகாப்பு படையின் அதிகார வரம்பினை 50 கி.மீ. தொலைவு வரை உள்துறை அமைச்சகம் நீட்டித்துள்ளது.
- அதே சமயம், குஜராத் மாநிலத்தில் எல்லைப் பாதுகாப்பு படையின் செயல்பாட்டுப் பகுதியை 80 கிலோ மீட்டரிலிருந்து 50 கிலோ மீட்டராகவும் அமைச்சகம் குறைத்து உள்ளது.
- 1968 ஆம் ஆண்டு எல்லைப் பாதுகாப்பு படைச் சட்டத்தின் கீழ் இந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவதாக அரசு கூறியது.

- எல்லைப் பாதுகாப்புப் படையானது கைது, தேடுதல் மற்றும் பறிமுதல் போன்ற நடவடிக்கைககளை மேற்கொள்வதற்கான அதிகாரங்கள் இந்த மாநிலங்களில் 15 கி.மீ. தொலைவு வரை மட்டுமே நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

## ‘ஒன் ஹெல்த்’ கூட்டமைப்பு





- உயிரித் தொழில்நுட்பத் துறையானது ‘ஒன் ஹெல்த்’ கூட்டமைப்பினை (One Health’ consortium) தொடங்கியுள்ளது.
- இது உயிரித் தொழில்நுட்பத் துறையின் முதலாவது ‘ஒன் ஹெல்த்’ திட்டம் ஆகும்.
- இந்தக் கூட்டமைப்பானது இந்தியாவில் நிலவும் விலங்குவழி மற்றும் எல்லைக் கடந்த நோய்த் தொற்றுக் கிருமிகள், முக்கிய வைரஸ் கிருமிகள், பாக்டீரிய மற்றும் ஒட்டுண்ணி நோய்த் தொற்றுகளைக் கண்காணிப்பதற்கு அதிகாரம் பெற்றுள்ளது.
- இந்தத் திட்டமானது தற்போதுள்ள நோய்க் கண்டறியும் சோதனை முறைகளின் பயன்பாட்டினைக் கண்காணித்தல் மற்றும் புதிதாக உருவாகும் நோய்களின் பரவலைக் கண்காணித்தல் மற்றும் புரிந்து கொள்வதற்கான கூடுதல் செயல்முறைகளை உருவாக்குதல் போன்றவற்றையும் மேற்கொள்ளும்.

## நெகிழிக் கழிவுகளின் மறுசுழற்சிக்கான இலக்கு

- மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகமானது 2016 ஆம் ஆண்டு நெகிழிக் கழிவு மேலாண்மை விதிகளின் கீழ் விரிவுபடுத்தப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பினை ஒழுங்குமுறைபடுத்துவதற்காக ஒரு வரைவு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த வரைவானது இந்தியாவில் நெகிழிப் பைப் பொட்டலக் கழிவுகளை உற்பத்தி செய்யும் தயாரிப்பாளர்கள், தயாரிப்புப் பொருள் உரிமையாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் கழிவுகளின் அளவை நிர்வகித்து ஒழுங்குபடுத்த வேண்டும் எனக் கூறுகிறது.

## நிலக்கரி உற்பத்தி




- மத்திய அரசானது ஒரே வாரத்திற்குள் தனது தினசரி நிலக்கரி உற்பத்தியை 1.94 மில்லியனிலிருந்து 2 மில்லியன் டன்களாக உயர்த்தியுள்ளது.
- இது மாநிலங்கள், மின் நிறுவனங்கள் மற்றும் இரயில்வே துறைகளில் அதிகரிக்கும் நிலக்கரியின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப் படுகிறது.
- நிலக்கரி இருப்பினை அதிகரித்துக் கொள்ள, இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியுடன் 10% என்ற அளவில் உள்ளூர் நிலக்கரியைக் கலந்து பயன்படுத்த அனுமதி பெற்ற மின்சக்தி உற்பத்தி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## உலகின் சிறந்த முதலாளிகள் 2021

- முகேஷ் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனமானது போர்ப்ஸ் அமைப்பினால் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த முதலாளிகள் பட்டியலில் இந்தியப் பெரு நிறுவனங்கள் அளவில் முதலிடத்தில் உள்ளது.
- உலக அளவிலான 750 உலகப் பெருநிறுவனங்களில் ரிலையன்ஸ் நிறுவனம் 52வது இடத்தைப் பெற்றுள்ளது.
- தென்கொரிய நாட்டின் மிகப்பெரிய நிறுவனமான சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் இப்பட்டியலின் ஒட்டு மொத்த தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலானது சந்தை ஆராய்ச்சி நிறுவனமான ஸ்டாடிஸ்டாவுடன் இணைந்து போர்ப்ஸ் அமைப்பினால் தயாரிக்கப் பட்டுள்ளது.



**TOP 10 INDIAN FIRMS IN THE RANKING**

| COMPANY | RANKING |
|---|---|
| Reliance Industries | 52 |
| ICICI Bank | 65 |
| HDFC Bank | 77 |
| HCL Technologies | 90 |
| SBI | 119 |
| Larsen & Toubro | 127 |
| Bajaj | 215 |
| Axis Bank | 254 |
| Indian Bank | 314 |
| ONGC | 404 |

Source: Forbes

## டாக்டர் A.P.J. அப்துல் கலாம் பிரேர்னா ஸ்தல்

- டாக்டர் A.P.J. அப்துல் கலாம் பிரேர்னா ஸ்தல் ஆனது விசாகப்பட்டினத்திலுள்ள கடல் சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வகத்தில் திறக்கப் பட்டுள்ளது.
- பாரத ரத்னா விருது பெற்ற டாக்டர் A.P.J. அப்துல்கலாம் அவர்களுடைய 90வது பிறந்த நாளினை நினைவு கூறும் விதமாகவும் ஆசாதி கா அம்ரித் மகோத்சவின் நினைவாகவும் பிரேர்னா ஸ்தல் திறக்கப் பட்டது.
- கடல்சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வகத்தின் தயாரிப்புகளான வருணாஸ்திரா, மேம்படுத்தப்பட்ட இலகுரக கடற்கணை (Torpedo Advanced Light) மற்றும் மாரீச் டெகாய் (Maareech decoy - போலி ஆயுதம்) போன்றவையும் இந்த ஆய்வகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் காட்சிப்படுத்தப் படுகின்றன.
- இந்த ஆய்வகமானது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் கீழ் இயங்கும் ஒரு முக்கிய கடல்சார் ஆராய்ச்சி ஆய்வகமாகும்.

## சட்டரீதியிலான கருக்கலைப்பிற்கான உச்சவரம்பு

- மத்திய அரசானது சட்டரீதியிலான கருக்கலைப்பிற்கான உச்சவரம்பினை முன்பிருந்த 20 வாரங்களிலிருந்து 24 வாரங்களாக அதிகரித்துள்ளது.
- இது சிறப்புப் பிரிவு பெண்களுக்கானதாகும்.
- மத்திய அரசானது 2021 ஆம் ஆண்டு மருத்துவக் கருக்கலைப்பு (திருத்தம்) விதிகளின் கீழ் இந்தப் புதிய விதிகளை அறிவித்தது.
- கர்ப்பம் ஓரளவு வளர்ச்சியடைந்த கட்டத்திலும் கருவை அகற்ற வழிவகை செய்யும் மருத்துவத் தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்திற்கு ஏற்ப இந்த உச்சகட்ட வரம்பானது நிர்ணயிக்கப் பட்டுள்ளது.




## பருவநிலை நெகிழ்திறன் தகவல் அமைப்பு மற்றும் திட்டமிடல் கருவி

- மத்திய ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் கிரிராஜ் சிங், பருவநிலை நெகிழ்திறன் தகவல் அமைப்பு மற்றும் திட்டமிடல் என்ற கருவியினை வெளியிட்டார்.
- இந்தக் கருவியானது MGNREGA திட்டத்தின் கீழ் புவியிடத் தகவல் அமைப்பு சார்ந்த நீர்நிலை திட்டமிடலில் பருவநிலை குறித்த தகவல்களை ஒருங்கிணைப்பதற்காக வேண்டி வெளியிடப் பட்டது.

## சைனிக் பள்ளி சமூகத்துடன் பள்ளிகள் இணைப்பு

- சைனிக் பள்ளி சமூகத்துடன் 100 பள்ளிகளை இணைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- சைனிக் பள்ளி சமூகத்துடன் 100 அரசு மற்றும் தனியார் பள்ளிகளை இணைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இணைக்கப்பட உள்ள சைனிக் பள்ளிகள் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் சைனிக் பள்ளி சமூகத்தின் கீழ் இயக்கப் படும்.

## மாஸ்கோ ஒழுங்கமைவுச் சந்திப்பு

- ஆப்கானிஸ்தான் குறித்த மாஸ்கோ ஒழுங்கமைவுச் சந்திப்பில் பங்கேற்க இந்தியாவிற்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.
- இந்தச் சந்திப்பில் தாலிபன் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.
- இந்தியா இச்சந்திப்பில் இணைச் செயலாளர் என்ற நிலையில் பங்கேற்க உள்ளது.
- 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் காபூல் நகரம் தாலிபன்களால் கைப்பற்றப்பட்ட பிறகு நடைபெறும் முதலாவது மாஸ்கோ ஒழுங்கமைவுப் பேச்சுவார்த்தை இதுவாகும்.

- கடந்த மாதத்தில் இடைக்கால அரசினை அமைத்த பிறகு தாலிபன்களை நேருக்கு நேராக இந்தியா சந்திப்பது இதுவே முதல் முறையாகும்
- மாஸ்கோ ஒழுங்கமைவு என்பது ஆப்கானிஸ்தான் நெருக்கடிக்கு ஒரு பிராந்திய தீர்வினைக் கண்டறிவதற்கான ரஷ்ய நாட்டின் ஒரு முன்னெடுப்பாகும்.

## சீந்திலக் கொடி (அமிர்தவல்லி) மூலிகை

- ஆயுஷ் அமைச்சகமானது, சீந்திலக் கொடி (கிலோய்) என்ற மருத்துவத் தாவரத்தினை இயற்கை மூலிகையாகப் பயன்படுத்துபவர்கள் அனைவரையும் எச்சரித்துள்ளது.
- அவற்றை கவனமாகப் பயன்படுத்தவும், சீந்திலக் கொடி போன்று தோற்றமளிக்கும், ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய தாவரங்களைத் தவிர்க்கவும் வேண்டி அமைச்சகம் கோரியுள்ளது.
- குடுச்சி என்றும் அறியப்படும் இத்தாவரத்தின் அறிவியல் பெயர் 'டினோஸ்போரா கார்டிஃபோலியா' (Tinospora Cordifolia) என்பதாகும்.
- இது ஆயுஷ் மருத்துவமுறையின் சிகிச்சைகளில் நீண்டகாலமாக பயன்படுத்தப் படுகிறது.
- ஆனால் துரதிருஷ்டவசமாக டினோஸ்போரா குடும்பத்தினைச் சேர்ந்த (டினோஸ் போரா கிரிஸ்பா) சீந்திலக் கொடி போன்று தோற்றமளிக்கும் தாவரங்கள் சீந்திலக் கொடி என்று தவறாக கருதப் படுகின்றன.



## ஒரு சூரியன் ஓர் உலகம் ஒரு கட்டமைப்பு

- சர்வதேச சூரியசக்திக் கூட்டிணைவின் 4வது பொதுச் சபையானது காணொளி வாயிலாக நடத்தப்படுகிறது.
- இந்தியாவின் ஒரு சூரியன் ஓர் உலகம் ஒரு கட்டமைப்பு என்ற முன்னெடுப்பின் செயலாக்கம் (One Sun One World One Grid – OSOWOG) உள்ளிட்ட சூரியசக்தித் துறையின் பல முன்னெடுப்புகள் இந்தச் சபையில் விவாதிக்கப்படும்.
- OSOWOG என்பது உலகளாவிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்புகளை "The Sun Never Sets" என்ற ஒரு தொலைநோக்குடன் இணைப்பதற்கான இந்தியாவின் ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்த முன்னெடுப்பானது 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற சர்வதேச சூரியசக்திக் கூட்டிணைவின் முதலாவது பொதுச் சபையில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் குறிப்பிடப்பட்டது.

## மணிப்பூர் மலை

- ஹாரியட் மலையை (Mount Harriet) மணிப்பூர் மலை என பெயர் மாற்றுவதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- ஹாரியட் மலையானது அந்தமான் மற்றும் நிகோபர் தீவுகளிலுள்ள 3வது உயரிய சிகரமாகும்.
- மணிப்பூரின் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு கௌரவம் அளிக்கும் வகையில் இந்தப் பெயர் மாற்றம் ஆனது செய்யப்பட்டது.
- ஆங்கிலேய-மணிப்பூர் போரின் போது (1891) மணிப்பூரின் மகாராஜா குல்சந்திரா சிங் உள்பட 22 இதர விடுதலைப் போராட்ட வீரர்கள் இங்கு சிறை வைக்கப்பட்டனர்.

## தேசியப் பாதுகாப்புப் படை – ஸ்தாபன தினம்

- தேசியப் பாதுகாப்புப் படையானது ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 16 அன்று தனது ஸ்தாபன தினத்தினைக் கொண்டாடுகிறது.
- இப்படையானது பிரபலமாக கருப்புப் பூனைப் படை (Black Cats) என அழைக்கப் படுகிறது.
- தேசியப் பாதுகாப்புப் படையானது உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு தீவிரவாத எதிர்ப்புப் படைப் பிரிவு ஆகும்.
- 2021 ஆம் ஆண்டானது இந்தப் படை நிறுவப் பட்டதன் 37வது ஆண்டினைக் குறிக்கிறது.
- இப்படைப் பிரிவானது 1984 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.




## 11வது P-8i ரக விமானம்

- இந்தியக் கடற்படையானது போயிங் நிறுவனத்திடமிருந்து தனக்கான 11வது P-8i ரக விமானத்தைப் பெற்றது.
- இந்த நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் விமானமானது, 4 கூடுதல் போயிங் விமானங்களை வாங்குவதற்கு இந்தியா மேற்கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படும் 3வது விமானமாகும்.
- 2009 ஆம் ஆண்டில் 8 போயிங் P-8i ரக விமானங்களை வாங்குவதற்காக மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

- இந்த விமானமானது ஏற்கனவே இந்தியக் கடற்படைக்கு வழங்கப் பட்டு விட்டது.
- மேலும் நான்கு விமானங்களை வாங்குவதற்கான ஒப்பந்தமானது 2016 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.



## இந்திய நாட்டின் புவிசார் ஆற்றல் வரைபடம்

- இந்த வரைபடமானது இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு மற்றும் இந்திய அரசின் ஆற்றல் அமைச்சகங்களுடன் இணைந்து நிதி ஆயோக் அமைப்பினால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்தப் புவிசார் ஆற்றல் வரைபடமானது எண்ணெய் மற்றும் எரிவாயுக் கிணறுகள், பெட்ரோலியச் சுத்திகரிப்பு நிலையங்கள், மரபுசார் எரிசக்தி ஆலைகள், நிலக்கரித் தளங்கள் மற்றும் நிலக்கரி அமைவிடங்கள் போன்ற ஆற்றல் வளங்களின் முழுமையான தகவலை வழங்குகிறது.
- ஆற்றல் வளங்களின் புவிசார் தகவல் அமைப்பு வரைபடமானது இந்தியாவின் ஆற்றல் துறையில் நிகழ்நேர மற்றும் ஒருங்கிணைந்தத் திட்டமிடலை உறுதி செய்வதில் உதவியாக இருக்கும்.

## புதிய குவாட் (நான்கு நாடுகள்) குழுமம் – மேற்கு ஆசியா

- இந்தியா, இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் தனது வெளியுறவு அமைச்சர்களின் முதல் சந்திப்பினை நடத்துவதன் மூலம் “ஆப்ரஹாம் உடன்படிக்கை” உருவாக்கிய உத்வேகத்தினைக் கட்டமைக்கத் தயாராக உள்ளன.
- இந்தச் சந்திப்பானது மேற்கு ஆசியாவில் “புதிய குவாட் குழுமம்” என விவரிக்கப் படுகிறது.
- இந்தச் சந்திப்பானது 4 நாடுகளை ஒரே நடைமுறையில் ஒருங்கிணைத்த ஒரு முதல் சந்திப்பு ஆகும்.
- இந்தச் சந்திப்பானது பாதுகாப்பு, இணைப்பு மற்றும் ஆற்றல் உள்ளிட்ட பகுதிகளில் ஒத்துழைப்பின் மீது ஈடுபாடு செலுத்தும் புதிய பலதரப்பு மற்றும் பன்முகக் கட்டமைப்புகளை உருவாக்கும் இந்திய நாட்டின் முயற்சியுடன் ஒன்றிணைக்கப் படும்.

## Gen-next ஜனநாயகக் கட்டமைப்பு

- Gen-next ஜனநாயகக் கட்டமைப்பு என்ற புதிய முன்னெடுப்பின் கீழ், 35 வயதிற்கு உட்பட்ட இளம் தலைவர்களுக்கு இந்தியா ஆதரவளிக்க உள்ளது.
- இது இந்தியக் கலாச்சார உறவுகள் சபையினால் திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த நிகழ்வானது மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அவர்களால் தொடங்கி வைக்கப் படும்.
- இந்தியக் கலாச்சார உறவுகள் சபையானது வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு தன்னிச்சையான அமைப்பாகும்.
- இந்தச் சபையானது இந்தியாவின் வெளியுறவு கலாச்சார உறவுகள் தொடர்பான கொள்கைகளைக் கையாள்கிறது.
- 75 வெவ்வேறு ஜனநாயக நாடுகளைச் சேர்ந்த இளம் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப் படும்.
- இந்த இளம் தலைவர்கள் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி மற்றும் இதர முக்கியக் கட்சிகளிலிருந்து அழைக்கப் படுவர்.

## ஆதார் ஹேக்கத்தான் 2021

- இந்திய தனித்துவ அடையாள ஆணையமானது "ஆதார் ஹேக்கத்தான் 2021" என்ற நிகழ்வினை நடத்த உள்ளது.
- தகவல் தொழில்நுட்பத் துறையில் இளம் புதுமை படைப்பாளர்களை அடையாளம் காணுவதற்காக இந்த நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது.
- இது ஆதார் குழுவினால் நடத்தப்படும் முதல் நிகழ்ச்சியாகும்.
- இந்தியத் தனித்துவ அடையாள ஆணையமானது 2016 ஆம் ஆண்டு ஆதார் சட்டத்தின் விதிகளின் படி நிறுவப் பட்டது.
- இந்த ஆணையமானது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் நிறுவப் பட்டது.


## அல்லியம் நெஜியானம்



- 2019 ஆம் ஆண்டில் உத்தரகாண்டில் கண்டறியப்பட்ட ஒரு தாவரமானது அல்லியம் இனத்தின் புதிய சிற்றினமாக உறுதி செய்யப் பட்டுள்ளது.
- அல்லியம் நெஜியானம் என்பது வெங்காயத்தின் புதிய இனமாகும்.
- இது உத்தரகாண்ட் மாநிலத்தின் சமோலி மாவட்டத்தில் உள்ள நிதி பள்ளத்தாக்கில் அமைந்த மலரி கிராமத்தில் இந்திய திபெத்திய எல்லைப் பகுதியில் கண்டறியப் பட்டது.
- இது இந்தியாவின் மேற்கு இமாலயப் பகுதிகளில் மட்டுமே காணப் படுகிறது.
- இது உலகின் வேறு எந்தப் பகுதிகளிலும் இதுவரை கண்டறியப் படவில்லை.

## மேம்படுத்தப்பட்ட காற்றுத் தர முன்னெச்சரிக்கை அமைப்பு

- இந்திய வெப்பமண்டல வானிலை நிறுவனமானது, தீர்மான ஆதரவு அமைப்பு (Decision Support System - DSS) மற்றும் காற்றுத் தர முன்னெச்சரிக்கை அமைப்பு (Air Quality Early Warning System – AQECWS) ஆகியவற்றை உருவாக்கியுள்ளது.
- DSS மற்றும் AQECWS ஆகிய அமைப்புகளானது டெல்லி-தேசியத் தலைநகர் பகுதியில் சிறப்பான காற்றுத் தர மேலாண்மைக்காக தொடங்கப் பட்டது.
- அருகமைந்த மாநிலங்களில் உயிரிப் பொருட்கள் எரிக்கப்படும் நிகழ்வுகளின் பங்களிப்பு பற்றிய தகவல்களை வழங்குவதே இந்த அமைப்பின் ஒரு தனித்துவமான அம்சமாகும்.




## 4வது பொதுச் சபை – சர்வதேச சூரியசக்திக் கூட்டிணைவு

- சர்வதேச சூரியசக்திக் கூட்டிணைவின் 4வது பொதுச் சபையானது காணொளி வாயிலாக நடத்தப் படுகிறது.
- சர்வதேச சூரியசக்திக் கூட்டிணைவு சபையின் தலைவர் R.K. சிங் இந்தச் சபைக்குத் தலைமை தாங்குவார்.
- இவர் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறைக்கான மத்திய அமைச்சர் ஆவார்.




## குஷிநகர் சர்வதேச விமான நிலையம்

- உத்தரப் பிரதேசத்தில் புத்தரின் பரிநிர்வாண தளத்தில் அமைக்கப்பட்டுள்ள குஷி நகர் சர்வதேச விமான நிலையத்தினைப் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.
- பௌத்தம் சார்ந்த பகுதிகளில் சுற்றுலாவினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த விமான நிலையம் நிறுவப் பட்டுள்ளது.
- குஷிநகரானது புத்தர் தனது வாழ்நாளின் இறுதி நாட்களை கழித்த ஒரு பண்டைய நகரமாகும்.
- இங்கு தான் புத்தர் இறந்த பிறகு அவர் மகா பரிநிர்வாண நிலையை அடைந்தார்.



## உலக உணவுப் பாதுகாப்புக் குறியீடு 2021

- 2021 ஆம் ஆண்டு உலக உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில், மதிப்பிடப்பட்டுள்ள 113 நாடுகளில் இந்தியா 71வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- லண்டனிலுள்ள எக்னாமிஸ்ட் இம்பாக்ட் என்ற அமைப்பினால் வடிவமைக்கப்பட்ட இந்தக் குறியீடானது கார்டிவா அக்ரிசைன்ஸ் (Corteva Agriscience) என்ற அமைப்பு மூலம் நிதி வழங்கப் பெறுகிறது.
- இந்தக் குறியீட்டில் இந்தியாவின் ஒட்டு மொத்த மதிப்பு 57.2 ஆகும்.
- அயர்லாந்து, ஆஸ்திரேலியா, ஐக்கிய ராஜ்ஜியம், பின்லாந்து, ஸ்விட்சர்லாந்து, நெதர்லாந்து, கனடா, ஜப்பான், பிரான்சு மற்றும் அமெரிக்கா ஆகியவை முதலிடத்தைப் பகிர்ந்துள்ளன.

## மைக்ரோசாஃப்ட் செயற்கை நுண்ணறிவுப் புத்தாக்கத் திட்டம்

- மைக்ரோசாஃப்ட் நிறுவனமானது "செயற்கை நுண்ணறிவுப் புத்தாக்கத் திட்டம்" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தியாவில் புத்தாக்க நிறுவனச் சூழலமைவுகளுக்கு ஆதரவு அளிக்கும் அதன் முயற்சியில் இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது செயற்கை நுண்ணறிவினை மேம்படுத்துகின்ற புத்தாக்க நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும்.
- இந்தத் திட்டத்திற்கு TiE மும்பை என்ற அமைப்பு ஆதரவளிக்கிறது.

## கொங்கண் சக்தி

- ஐக்கிய ராஜ்ஜியம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இணைந்து கொங்கண் சக்தி எனப்படும் தங்களது மிகப்பெரிய கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட உள்ளன.
- இப்பயிற்சியில் ஐக்கிய ராஜ்ஜியத்தின் போர் விமானந்தாங்கிக் கப்பல் குழுமமானது மேற்கு இந்தியப் பெருங்கடல் பகுதியில் மீண்டும் நுழைந்து கலந்து கொள்ள உள்ளது.
- கொங்கண் சக்தி என்பது இந்தியாவிற்கும் ஐக்கிய ராஜ்ஜியத்திற்கும் இடையிலான முதலாவது முப்படைகளுக்குமிடையேயான ஒரு பயிற்சியாகும்.

## மரபணு மாற்றப்படாத அரிசி

- இந்திய நாடானது மரபணு மாற்றப்படாத அரிசி வகைகளை மட்டுமே உலகிற்கு ஏற்றுமதி செய்கிறது என்று அரசு கூறியுள்ளது.
- வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகமானது இந்தியாவில் வணிக வகையிலான மரபணு மாற்றப்பட்ட அரிசி வகை பயன்பாட்டில் இல்லை என்று தெளிவுபடுத்தியுள்ளது.
- மரபணு மாற்றப்பட்ட அரிசியினை வணிக பயன்பாட்டிற்காகப் பயிரிடுவதற்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## நானோ நைட்ரஜன் நீர்ம உரம்

- இலங்கை நாடானது தீங்கு விளைவிக்காத நானோ நைட்ரஜன் நீர்ம உரங்கள் அடங்கிய சரக்குப் பெட்டகத்தினை இந்தியாவிலிருந்துப் பெற்றுள்ளது.
- இந்தியா 3.1 மில்லியன் லிட்டர் அளவிலான உயர்தர தீங்கு விளைவிக்காத நானோ நைட்ரஜன் நீர்ம உரத்தினை இலங்கைக்கு அனுப்பியது.
- இலங்கையின் மக்காச் சோளம் மற்றும் நெல் சாகுபடியில் இந்த உரங்கள் உதவும்.
- நானோ நைட்ரஜன் நீர்ம உரமானது இந்திய விவசாயிகள் உரங்கள் கூட்டுறவு லிமிடெட் என்ற நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.
- இது உலகிலேயே முதன்முறையாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

## மின்சாரத்தைப் பயன்படுத்திச் சமையல்

CEEW
THE COUNCIL

- டெல்லி மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றில் வசிக்கும் 17% குடும்பத்தினர் ஏதோ ஒரு வகையான மின்சார உபகரணத்தைப் பயன்படுத்தி உணவு சமைக்கின்றனர்.
- ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் நீர் ஆகியவை மீதான சபையினால் வெளியிடப்பட்ட ஒரு சுயாதீன ஆய்வில் இது கூறப்பட்டுள்ளது.
- டெல்லி, தமிழ்நாடு, தெலங்கானா, அசாம் மற்றும் கேரளா ஆகியவை மின்சாரச் சமையல் முறையை நோக்கி முன்னேறி வருகின்றன.

## மத்தியப் பொதுப் பணியாளர் தேர்வாணையம் – உதவி எண்

- மத்தியப் பொதுப் பணியாளர் தேர்வாணையமானது ஓர் இலவச உதவி எண்ணினை வெளியிட்டுள்ளது.
- பொருளாதார ரீதியில் நலிவடைந்த பிரிவினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த அரசு வேலைக்காகப் பயின்று வரும் ஆர்வலர்கள் இந்த வசதியைப் பயன்படுத்தலாம்.
- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை நிரப்ப உதவுவது அல்லது மத்திய பொதுப் பணித் தேர்வாணையத்தின் தேர்வுகள் (அ) ஆட்சேர்ப்பு தொடர்பான அவர்களின் சந்தேகங்களைத் தீர்க்கும் நோக்கத்துடன் இந்த இலவச உதவி எண்ணானது வெளியிடப் பட்டது.
- அந்த இலவச உதவி எண் "1800118711" என்பதாகும்.

## UDAN தினம் – அக்டோபர் 21


- இந்திய அரசானது அக்டோபர் 21 ஆம் தேதியினை UDAN தினமாக அறிவித்துள்ளது.
- இந்தத் தினமானது அத்திட்டத்தின் திட்ட ஆவணம் முதன்முதலில் வெளியிடப்பட்ட நாள் ஆகும்.
- இந்தத் திட்டமானது நாட்டின் தொலைதூர மற்றும் பிராந்தியப் பகுதிகளுக்குப் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துவதையும் விமானப் பயணத்தை மலிவானதாக பெறச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் தேசிய வான்வழிப் போக்குவரத்துக் கொள்கையின் ஒரு முக்கிய அங்கமாகும்.
- இந்தத் திட்டம் 2016 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் தொடங்கப்பட்டது.

- இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து நிதி வழங்கும்.




## சிறிய நத்தை இனங்கள்

- ஜியோரிசா மவ்மெயென்சிஸ் என்று பெயரிடப்பட்ட சிறிய நத்தை இனமானது சமீபத்தில் மேகாலயாவின் மவ்ஸ்மாய் (Mawsmai) என்ற பகுதியில் கண்டறியப்பட்டது.
- இவை சுண்ணாம்புப் பாறைக் குகைகள் அல்லது சுண்ணாம்பு கரைசலால் உருவான சுண்ணாம்புக் கரடு நிலப்பகுதிகளைக் கொண்ட சிறிய வாழிடங்களில் மட்டுமே காணப் படுகின்றன.
- இது போன்ற கண்டுபிடிப்பு மேற்கொள்ளப் பட்டு 170 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த இனம் கண்டறியப் பட்டுள்ளது.
- 1851 ஆம் ஆண்டில் தற்போது கண்டறியப்பட்டுள்ள இதே இனத்தைச் சேர்ந்த ஜியோரிசா சரிட்டா என்ற இனமானது கண்டறியப்பட்டது.
- ஜியோரிசா குடும்பத்தைச் சேர்ந்த இனங்கள் ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளில் பரவலாகக் காணப்படுகின்றன.



## சர்வதேச நாணய மற்றும் நிதியியல் குழு சந்திப்பு

- நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுநர் வாரியத்தின் சர்வதேச நாணய மற்றும் நிதியியல் குழுவின் முழுமையான சந்திப்பில் பங்கேற்றார்.
- இந்தச் சந்திப்பில் அமெரிக்காவின் வாசிங்டன் டி.சி. நகரில் நடத்தப் பட்டது.
- இந்தச் சந்திப்பில் சர்வதேச நாணய நிதியத்தின் 190 உறுப்பினர் நாடுகளைச் சேர்ந்த ஆளுநர்கள்/மாற்று ஆளுநர்கள் பங்கேற்றனர்.
- "தடுப்பூசி வழங்கீடு, அளவீடு மற்றும் உத்வேகப்படுத்துதல்" ஆகியவை இந்தச் சந்திப்பின் முக்கிய விவாதங்களாக இருந்தன.
- வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு உலகளாவியத் தடுப்பூசி வழங்கீடு அவசியமானது என்பதை இந்தியா அங்கீகரிப்பதாக நிர்மலா சீதாராமன் கூறினார்.




## சட்டத்தின் ஆட்சிக் குறியீடு 2021

- உலக நீதித் திட்டங்கள் என்ற அமைப்பின் 2021 ஆம் ஆண்டு சட்டத்தின் ஆட்சிக் குறியீட்டில் இடம் பெற்ற 139 நாடுகள் மற்றும் அதிகார வரம்பு எல்லைகளில் இந்தியா 79வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இந்த அமைப்பானது 0 முதல் 1 வரையிலான மதிப்பின் அடிப்படையில் நாடுகளை தரவரிசைப் படுத்துகிறது.
- 1 என்ற மதிப்பானது சட்டத்தின் ஆட்சி என்ற கொள்கை வலுவாகக் கடைபிடிக்கப் படுவதைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டு டென்மார்க், நார்வே மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் முதலிடத்தைப் பெற்றுள்ளன.

## NPCI அடையாள வழங்கீட்டு முறை

- இந்தியத் தேசிய பணவழங்கீட்டுக் கழகமானது அடையாள வழங்கீட்டு முறையை தொடங்கியுள்ளது.
- நுகர்வோர்களின் பாதுகாப்பினை மேலும் மேம்படுத்துவதற்கும் நுகர்வோருக்கு தடையற்ற வணிக அனுபவத்தை வழங்குவதற்கும் வேண்டி இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இந்த முறையானது Rupay அட்டைகளின் அடையாள வழங்கீட்டிற்கு உதவியாக இருக்கும்.

## ABHYAS




- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது அதிவேகமான, வானில் ஏவுகணைகளைத் தாக்கி அழிக்கவல்ல அபியாஸ் என்ற வாகனத்தை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்தது.
- அபியாஸ் பலவகையான ஏவுகணை அமைப்புகளை மதிப்பீடு செய்யப் பயன்படுத்தப் படும்.
- ஒடிசாவின் சந்திப்பூர் என்னுமிடத்தில் வங்காள விரிகுடா கடற்கரையருகே அமைந்த ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் இது பரிசோதிக்கப்பட்டது.
- இது பெங்களூருவினைத் தலைமையிடமாகக் கொண்ட பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் வானூர்தி மேம்பாட்டு நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப் பட்டது.

## உள்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு குறித்து இந்தியா – ஐக்கிய ராஜ்ஜியம் பேச்சு வார்த்தை

- இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் S. ஜெய்சங்கர் மற்றும் பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலாளர் லிஷ் டுரூஸ் உள்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர்.
- இந்தப் பேச்சுவார்த்தையில் உள்கட்டமைப்பு முதலீடு, இராணுவ ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து விவாதிப்பட்டது.
- லிஷ் டுரூஸ் இந்தியா மற்றும் பிரிட்டிஷ் பொருளாதாரங்களை மேம்படுத்துவதற்காக வேண்டி இந்தியாவுடன் தொழில்நுட்பம் மற்றும் உள்கட்டமைப்பு போன்றவற்றில் ஒப்பந்தகளை அறிவிப்பார் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்த உறவுகளானது வளர்ந்து வரும் நாடுகளை நிலையான மற்றும் தூய்மையான முறையில் வளர உதவும்.
- இரு அமைச்சர்களும், இந்தியா – ஐக்கிய ராஜ்ஜியம் மெய்நிகர் உச்சி மாநாட்டின் போது தொடங்கப்பட்ட '2030 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்' என்ற திட்டத்தினை ஆய்வு செய்தனர்.




## வெங்கடராகவன் சுபா ஸ்ரீநிவாசன் – புதிய புத்தகம்



- 'The Origin Story of India's States' என்று தலைப்பிடப்பட்ட புத்தகமானது வெங்கடராகவன் சுபா ஸ்ரீநிவாசன் என்பரால் எழுதப்பட்டது.
- இந்தப் புத்தகமானது பென்குயின் ராண்டம் ஹவுஸ் இந்தியா என்ற பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டது.
- இது இந்தியாவினுடைய 28 மாநிலங்கள் மற்றும் 8 ஒன்றியப் பிரதேசங்களின் உருவாக்கம் பற்றியும் அவற்றின் தொடர் மாற்றங்கள் பற்றியும் கூறும் ஒரு புத்தகம் ஆகும்.
- வெங்கடராகவன் சுபாஸ்ரீ நிவாசன் கர்நாடகாவின் பெங்களூருவைச் சேர்ந்த ஒரு எழுத்தாளர், நடிகர் மற்றும் உத்திசார் ஆலோசகர் ஆவார்.
- இது இவருடைய முதலாவது புனைவுக் கதை சாராத ஒரு புத்தகமாகும்.

## பண்ணி எருமை – செயற்கைக் கருத்தரிப்பு



The Banni is Asia's largest grassland spread across 2617 sq.km

- குஜராத் மாநிலத்தின் கிர் சோம்நாத் மாவட்டத்தில் உள்ள ஒரு விவசாயி வீட்டில் வளர்க்கப்படும் பண்ணி இன எருமையில் மூலம் இந்தியாவின் முதலாவது செயற்கைக் கருத்தரிப்பு மூலம் உருவான கன்று ஒன்று பிறந்தது.
- பன்னி இன எருமையானது குஜராத் மாநிலத்தின் கட்ச் பகுதியில் பெருமளவில் காணப் படுகிறது.
- பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக வேண்டி மரபணு ரீதியில் உயர்வகையான எருமைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் முயற்சியில் இந்த செயற்கைக் கருத்தரிப்பு முறையானது மேற்கொள்ளப் பட்டது.
- தானேஜ் கிராமத்தைச் சேர்ந்த பால் பண்ணையாளருக்கு உரிமையான பண்ணி எருமை, செயற்கைக் கருத்தரிப்பு மூலமான (சோதனைக் குழாய்) ஒரு ஆண் கன்றினை ஈன்றது.

## இந்தியாவில் சராசரி ஆயுள்காலம்

- கோவிட்-19 பெருந்தொற்றினால், இந்தியாவில் சராசரி ஆயுள் காலமானது கிட்டத் தட்ட 2 ஆண்டுகள் குறைந்துள்ளது.
- மும்பையில் உள்ள சர்வதேச மக்கட்தொகை ஆய்வு நிறுவனத்தின் அறிவியலாளர்களின் அறிக்கையில் இத்தகவல் கூறப் பட்டுள்ளது.

- ஆண்கள் மற்றும் பெண்களில் அவரது பிறப்பின் போதே ஆயுட்காலத்தில் குறைவு ஏற்படுவதாக இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- 2019 ஆம் ஆண்டில் பெண்களின் ஆயுட்காலம் 72 ஆண்டுகளாகவும் ஆண்களின் ஆயுட்காலம் 69.5 ஆண்டுகளாக இருந்தது.
- ஆனால் 2020 ஆம் ஆண்டில் பெண்களின் ஆயுட்காலம் 69.8 ஆண்டுகளாகவும் ஆண்களின் ஆயுட்காலம் 67.5 ஆண்டுகளாகவும் குறைந்துள்ளது.

## கருடா செயலி

- இந்தியத் தலைமை தேர்தல் ஆணையமானது அனைத்து வாக்குச்சாவடிகளையும் டிஜிட்டல் முறையில் மதிப்பிடுவதற்காக கருடா என்ற செயலியைத் தொடங்கி உள்ளது.
- தேர்தல் பணிகளை விரைவாகவும், திறம்படவும் வெளிப்படையாகவும் சரியான நேரத்திலும் செய்து முடிப்பதை உறுதி செய்வதற்காக இது தொடங்கப் பட்டுள்ளது.
- கருடா செயலியின் மூலம் வாக்குச்சாவடி அலுவலர்கள், வாக்குச்சாவடிகளின் புகைப்படங்கள் மற்றும் இடம் சார்ந்த தகவல்களை பதிவேற்றம் செய்வர்.
- காகிதம் சார்ந்த பணிகளைக் குறைப்பதில் இந்தச் செயலி உதவும்.





## கண்டன (போராட்டம் நடத்தும்) உரிமை – உச்சநீதிமன்றம்



- தடையற்றப் போக்குவரத்திற்கு இடையூறாக பொதுச் சாலைகளில் ஆர்ப்பாட்டம் செய்ய முடியாது என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
- சாஹீன்பாக் போராட்ட வழக்கில் உச்சநீதிமன்றம் இது குறித்த சட்டத்தைக் தெரிவித்துள்ளதாக உச்சநீதிமன்றம் குறிப்பிட்டது.
- போராட்டம் நடத்தும் உரிமையானது மக்களின் போக்குவரத்தினைத் தடை செய்யக் கூடாது.


## ஐ.என்.எஸ். விக்ராந்த்




- இந்தியாவின் முதலாவது உள்நாட்டுத் தயாரிப்பான விக்ராந்த் எனப்படும் விமானந் தாங்கிக் கப்பலானது அதற்கான கடல்சார்ந்த சோதனைகளின் 2வது கட்டத்தைத் தொடங்கியது.
- இந்தக் கப்பலானது 40,000 டன் எடை கொண்ட விமானந்தாங்கி கப்பல் ஆகும்.
- இது இந்தியாவில் கட்டமைக்கப்பட்ட மிகப்பெரிய மற்றும் மிக சிக்கலான போர்க் கப்பலாகும்.
- இக்கப்பலானது கொச்சின் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டமைக்கப் பட்டது.

## பிரதான் மந்திரி ஆத்ம நிர்பார் ஸ்வஸ்த் பாரத் யோஜனா

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் "பிரதான் மந்திரி ஆத்ம நிர்பர் பாரத் சுகாதார உள்கட்டமைப்புத் திட்டம் மற்றும் செயல்பாட்டு வழிமுறைகளின் வெளியீட்டினை" தொடங்கி வைத்தார்.
- இத்திட்டமானது இந்தியாவின் மிகப்பெரிய திட்டங்களில் ஒன்றாக திகழும்.
- நாடு முழுவதும் சுகாதார உள்கட்டமைப்பினை வலுப்படுத்துவதில் இத்திட்டம் ஈடுபாடு செலுத்தும்.
- தேசிய சுகாதாரத் திட்டத்துடன் கூடுதலாக இத்திட்டமானது தொடங்கப்படும்.




## UDAN 4.1

- மத்திய வான்வழிப் போக்குவரத்து அமைச்சர், ஜோதிராதித்யா சிந்தியா, ஷில்லாங்-திப்ருகர் பிரிவிற்கான முதல் நேரடி விமானத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இந்த விமானமானது உதே தேஷ் கே ஆம் நாகரிக் என்ற பிராந்திய இணைப்புத் திட்டத்தின் கீழ் இயக்கப் பட்டது.
- 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஷில்லாங் விமான நிலையத்தில் 5000க்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்துள்ளனர்.
- UDAN 4.1 திட்டமானது 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## கடல்சார்ந்த பாய்மரப் படகுப் போட்டி

- இந்தியக் கடற்படையானது கொச்சி முதல் கோவா வரையில் ஒரு கடல் சார்ந்த படகுப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது.
- ஆசாதி கா அம்ரித் மகோத்சவ் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இது நடத்தப் படுகிறது.
- இந்த நிகழ்ச்சியானது இந்தியக் கடற்படை பாய்மரப் படகுக் கூட்டமைப்பின் கீழ் ஏற்பாடு செய்யப் பட்டது.

## IPL – இரண்டு புதிய அணிகள்

- அகமதாபாத் மற்றும் லக்னோ ஆகிய அணிகள் 2022 ஆம் ஆண்டு முதல் இந்திய பிரீமியர் லீக் போட்டியில் பங்கேற்க உள்ள இரண்டு புதிய அணிகள் ஆகும்
- எனவே போட்டியில் பங்கேற்கும் மொத்த அணிகளின் எண்ணிக்கை 10 ஆக உயர்கிறது.
- RP-சஞ்சீவ் கோயங்கா குழுமமானது (RP-Sanjiv Goenka Group) லக்னோ அணியின் உரிமையாளர் ஆகும்.
- CVC கேபிட்டல் பாட்னர்ஸ் (CVC Capital Partners) அகமதாபாத் அணியின் உரிமையாளர் ஆகும்.
- IPL போட்டியின் முதல் தொடரானது 2008 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- IPL போட்டியின் 15வது தொடரில் 10 அணிகள் போட்டியிட உள்ளன.

## 9 மருத்துவக் கல்லூரிகள் – திறப்பு விழா

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் உத்தரப் பிரதேசத்தில் 9 மருத்துவக் கல்லூரிகளைத் திறந்து வைத்தார்.
- இந்த 9 கல்லூரிகள் சித்தார்த் நகர், இட்டாஹ், ஹர்தோய், ஃபதேபூர், பிரதாப்நகர், தியோரியா, காசிப்பூர், மிர்சாப்பூர் மற்றும் ஜான்பூர் ஆகிய இடங்களில் கட்டமைக்கப் பட்டுள்ளது.
- இதில் எட்டு மருத்துவக் கல்லூரிகள் புதிய மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதற்கான மத்திய அரசின் உதவி பெறும் திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- ஜான்பூரில் நிறுவப்பட்ட ஒரு கல்லூரியானது மாநில அரசினால் தனது சொந்த வளங்களைக் கொண்டு கட்டப்பட்டது.
- மத்திய அரசின் இந்தத் திட்டமானது பின்னடைந்த மற்றும் உயர் லட்சிய மாவட்டங்களைத் தேர்ந்தெடுக்கிறது.
- இத்திட்டமானது பல்வேறு மாநிலங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளின் பரவலில் உள்ள வேறுபாடுகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியா மற்றும் கிர்கிஸ்தான்

- இந்தியா மற்றும் கிர்கிஸ்தான் ஆகிய நாடுகள் புதுடெல்லியில் தமது முதலாவது உத்திசார் பேச்சுவார்த்தையை நிகழ்த்தின.
- இந்த உச்சி மாநாட்டின் போது பாதுகாப்பு & ராணுவ ஒத்துழைப்புகளை மேம்படுத்த இரு நாடுகளும் ஒப்புக் கொண்டன.
- ஆப்கானிஸ்தானில் நிலவும் சூழ்நிலையினால் இரு நாடுகளும் அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களை எதிர் கொள்கின்றன.
- ஆப்கானிஸ்தானைப் பிரத்தியேகமாகக் குறிப்பிட்டுப் பிராந்தியப் பாதுகாப்பு சூழல் குறித்தும் இரு நாடுகளும் பேச்சுவார்த்தையினை நடத்தின.

## புதிய வனவிலங்கு டி.என்.ஏ பரிசோதனைப் பகுப்பாய்வு ஆய்வகம்

- மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரே அவர்கள் இந்தியாவின் முதலாவது மாநில அரசிற்குச் சொந்தமான வனவிலங்கு டி.என்.ஏ பரிசோதனைப் பகுப்பாய்வு ஆய்வகத்தினைத் திறந்து வைத்தார்.
- இந்த ஆய்வகமானது மகாராஷ்டிராவின் நாக்பூரில் உள்ள பிராந்திய தடய அறிவியல் ஆய்வகத்தில் திறக்கப்பட்டது.
- தற்போது டேஹ்ராடூன் மற்றும் ஹைதராபாத் ஆகிய இடங்களில் 2 வனவிலங்கு டி.என்.ஏ பரிசோதனை ஆய்வகங்கள் உள்ளன.
- இவை முழுவதும் மத்திய அரசிற்குச் சொந்தமானவை.
- புதிதாக திறக்கப்பட்டுள்ள இந்த ஆய்வகமானது இந்தியாவில் மாநில அரசிற்குச் சொந்தமான முதல் ஆய்வகமாகும்.

## இணையதள ஒழுங்குமுறையில் ரேடியோ தகவல் தொடர்பு

- கொல்கத்தாவிலுள்ள ஸ்யாமா பிரசாத் முகர்ஜி துறைமுகமானது இணையதள ஒழுங்குமுறையில் ரேடியோ தகவல்தொடர்பினைப் பெற்ற இந்தியாவின் முதல் துறைமுகமாகும்.
- இந்தத் தகவல்தொடர்பு முறையானது நீண்ட வரம்புடைய கடல்சார் தகவல் தொடர்பு அமைப்பாகும்.
- இது புயல்கள் மற்றும் சீரற்றப் பருவநிலையின் போது உதவும்.
- இந்தத் துறைமுகமானது கடந்த 152 ஆண்டுகளாக இந்தியாவின் முக்கியத் துறைமுகங்களில் ஒன்றாக அதன் பங்கினைத் தொடர்ந்து வகித்து வருகிறது.

## 18வது ASEAN – இந்தியா உச்சி மாநாடு



- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 18வது ASEAN-இந்தியா உச்சி மாநாட்டில் பங்கேற்றார்.
- ASEAN-இந்தியா உச்சி மாநாடானது, உயர்மட்ட நிலையில் இணைந்து செயல்படுவதற்காக இந்தியா மற்றும் ASEAN நாடுகளுக்கான ஒரு வாய்ப்பினை வழங்குவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படுகிறது.
- பிரதமர் மோடி அவர்கள், ASEAN-இந்தியா உத்திசார் கூட்டிணைவின் நிலை குறித்து 18வது ASEAN-இந்தியா உச்சி நாட்டில் ஆய்வு செய்ய உள்ளார்.
- புரூனே நாட்டினுடைய சுல்தானின் அழைப்பின் பேரில் பிரதமர் மோடி அவர்கள் இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.
- இது மோடியால் பங்கேற்கப் படும் 9வது ஆசியான் இந்தியா உச்சி மாநாடு ஆகும்.
- 2022 ஆம் ஆண்டானது ஆசியான் இந்தியா உறவுகளுக்கான கூட்டணியின் 30வது வருடத்தைக் குறிப்பதோடு, அந்த வருடம் ஆசியான்-இந்தியா நட்பு வருடம் என்றும் அனுசரிக்கப் படும்.

## 16வது கிழக்காசிய உச்சி மாநாடு

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 16வது கிழக்காசிய உச்சி மாநாட்டில் பங்கேற்றார்.
- தடையற்ற, பரந்த மற்றும் உள்ளார்ந்த இந்திய-பசிபிக் பகுதி மீதும் அப்பகுதியில் ASEAN என்ற கருத்துருவின் மையக் கொள்கை மீதும் இந்தியாவின் ஈடுபாடு குறித்து அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.
- 16வது கிழக்காசிய உச்சி மாநாடானது புரூனே தலைமையில் நடைபெற்றது.
- கிழக்காசிய உச்சி மாநாடானது இந்திய பசிபிக் பகுதியில் முன்னணித் தலைவர்கள் பங்கேற்கும் ஒரு முன்னணி மன்றமாகும்.
- இது பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பங்கேற்கும் 7வது கிழக்காசிய உச்சி மாநாடாகும்.
- கிழக்காசிய உச்சி மாநாட்டுத் தலைவர்கள் 3 அறிக்கைகளை ஏற்றுக் கொண்டதுடன் இந்த உச்சி மாநாடு நிறைவடைந்தது. அவையாவன;
  - மனநலம்,
  - சுற்றுலா மூலம் பொருளாதார மீட்சி மற்றும்
  - நிலையான மீட்சி

## Green Day Ahead Market

- மத்திய ஆற்றல் மற்றும் புதிய & புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை அமைச்சர் R.K. சிங், "Green Day Ahead Market" (GDAM) எனும் ஒரு புதிய சந்தைத் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இது இந்தியாவினைப் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்காக பிரத்தியேகமாக GDAM என்ற திட்டத்தைத் தொடங்கிய உலகின் ஒரே ஒரு மிகப்பெரிய மின்சாரச் சந்தையாக மாற்றி உள்ளது.
- இது எவரும் உற்பத்தி ஆலையை அமைத்து விநியோக நிறுவனங்கள் மற்றும் தொழில் துறைகளுக்கு விநியோகிப்பதற்கு வழிவகை செய்யும் வகையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையை நிறுவுவதற்கான புதிய முன்னெடுப்பு ஆகும்.

## கிரிஷி உடான் 2.0 திட்டம்

- வான்வழிப் போக்குவரத்து அமைச்சகமானது "கிரிஷி உடான் 2.0" என்ற திட்டத்தினை தொடங்கியது.
- இத்திட்டத்தின் கீழ், மலைப்பகுதி, பழங்குடியினர் வாழும் பகுதி மற்றும் வட கிழக்குப் பகுதிகளில் உள்ள விமானநிலையங்களில் சரக்குப் போக்குவரத்து தொடர்பான உள்கட்டமைப்பானது நிறுவப்படும்.
- விவசாயிகள் வேளாண் உற்பத்திப் பொருட்களைச் சந்தைகளுக்குக் கொண்டு செல்வதற்கு இது போன்ற உள்கட்டமைப்புகள் உதவும்.

*குறிப்பு*

- வேளாண் உற்பத்திப் பொருட்களைக் கொண்டு செல்வது குறித்த தகவல்களைப் பங்குதாரர்களிடம் பரப்புவதற்கு ஏதுவாக கிரிஷி உடான் 2.0 திட்டத்தின் கீழ் இ-குஷால் என்ற தளமானது உருவாக்கப்படும்.

## அக்னி-5

- இந்திய நாடானது அக்னி-5 எனப்படும் நிலம் விட்டு நிலம் பாயும் ஒரு உந்துவிசை ஏவுகணையினை வெற்றிகரமாகப் பரிசோதித்தது.
- ஒடிசா கடற்கரையிலுள்ள APJ அப்துல்கலாம் தீவிலிருந்து இந்த ஏவுகணை ஏவப் பட்டது.
- இந்த ஏவுகணையானது 3 நிலைகளைக் கொண்ட திட எரிபொருள் எந்திரத்தினைப் பயன்படுத்துகிறது.
- இது அதிக துல்லியத் திறனுடன் 5000 கி.மீ. தூரம் வரையிலான இலக்குகளையும் தாக்க வல்லது.
- அக்னி-5 ஏவுகணையின் வெற்றிகரமான சோதனையானது "நம்பகமான குறைந்த பட்ச தடுப்புத் திறனை" கொண்டிருப்பதற்கான இந்தியாவின் கொள்கையுடன் ஒத்துப் போகிறது.
- இந்தக் கொள்கையானது "No First Use" என்பதன் மீதான உறுதிப்பாட்டினை உறுதிப் படுத்துகிறது.
- அக்னி-5 ஏவுகணையானது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் கட்டமைக்கப் பட்டுள்ளது.



## CII ஆசியா சுகாதார உச்சி மாநாடு – 2021

- மத்திய சுகாதார மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் டாக்டர் மான்சுக் மாண்டவ்யா 2021 ஆம் ஆண்டு CII ஆசிய சுகாதார உச்சி மாநாட்டில் பங்கேற்றார்.
- இரண்டு நாட்கள் அளவிலான இந்த உச்சி மாநாட்டின் கருத்துரு, "சிறப்பான நாளைக்காக சுகாதார நலனை மாற்றியமைத்தல்" என்பதாகும்.
- இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்பானது, நோயாளிகளுக்குக் கிடைக்கும் பயன்கள் மற்றும் அத்துறையின் அனுபவங்களை மேம்பட்ட முறையில் வழங்கும் டிஜிட்டல் பரிமாற்றங்களின் மீதான சிறப்பு கவனத்துடன், சுகாதாரச் சேவையினை வழங்குவதில் இந்தியா மற்றும் உலக நாடுகள் எதிர்கொள்ளும் மிக முக்கியச் சவால்கள் குறித்து விவாதிப்பதற்கான ஒரு மையப்படுத்தப்பட்ட மன்றத்தினை வழங்குவதற்காக இந்த உச்சி மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளது.
- "தவாய் பி கதாய் பி" மற்றும் "தோ கஜ் கி தூரி, மஸ்க் ஹை சரூரி" போன்ற இயக்கங்கள் நாட்டின் மக்களை எவ்வாறு சென்றடைந்தன என்பது பற்றியும் நாட்டில் கோவிட்-19 தொற்றைக் கட்டுப்படுத்த அவை எவ்வாறு உதவியது என்பது பற்றியும் மத்திய அமைச்சர் இதில் குறிப்பிட்டார்.

## ஆளுகைத் திறனில் முன்னணியிலுள்ள மாநிலங்கள்

- பொது விவகாரங்கள் மையத்தினால் வெளியிடப்பட்ட ஆளுகைச் செயல்திறன் மீதான சமீபத்திய ஒரு அறிக்கையில் கேரளா, தமிழ்நாடு மற்றும் தெலங்கானா ஆகியவை முன்னணி மாநிலங்களாக உள்ளன.
- 2020 ஆம் ஆண்டிற்கான தரவரிசையுடன் ஒப்பிடுகையில் ஆந்திரப் பிரதேசத்தைப் பின்னுக்குத் தள்ளி தெலுங்கானா மாநிலம் 3வது இடத்தைப் பெற்றுள்ளது.
- ஜார்க்கண்ட மாநிலமானது இந்த ஆண்டு 15வது இடத்திலிருந்து 9வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- இந்தக் குறியீட்டில் இடம் பெற்ற சிறு மாநிலங்களில் சிக்கிம், கோவா மற்றும் மிசோரம் ஆகியவை முன்னணியாளர்களாக உருவெடுத்துள்ளன.
- ஒன்றியப் பிரதேசங்களில் புதுச்சேரி, ஜம்மு & காஷ்மீர் மற்றும் சண்டிகர் ஆகியவை முன்னணியாளர்களாக உருவெடுத்துள்ளன.
- பொது விவகாரங்கள் மையமானது பெங்களூருவில் அமைந்துள்ள ஒரு இலாப நோக்கமற்ற ஆலோசனை சேவை வழங்கும் அமைப்பாகும்.

PUBLIC AFFAIRS CENTRE
Committed to good governance


## சர்தாக்

- ‘சர்தாக்’ எனப்படும் புதிய இந்திய கடலோரக் காவற்படைக் கப்பலானது இணைக்கப் பட்டுள்ளது.
- இது குஜராத்தில் உள்ள போர்பந்தர் என்னுமிடத்தில் நிறுத்தப்படும்.
- இந்தக் கப்பல் இணைக்கப்பட்ட நடவடிக்கையானது இந்தியாவின் கடல்சார் பாதுகாப்பு மற்றும் தேசப் பாதுகாப்பிற்கு ஒரு முக்கிய ஊக்கமாக உள்ளது.




## தேசியப் பாதுகாப்பு மீதான புனே பேச்சுவாத்தை

- தேசியப் பாதுகாப்பு மீதான 6வது புனே பேச்சுவார்த்தையானது (2021) புனே சர்வதேச மையத்தினால் தொடங்கப்பட்டது.
- ‘பேரிடர் மற்றும் பெருந்தொற்றுக் காலங்களில் தேசியப் பாதுகாப்பிற்கான தயார் நிலை’ என்ற ஒரு கருத்துருவின் கீழ் இது ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்தச் சந்திப்பின்போது, இந்தியத் தேசியப் பாதுகாப்பு மீது பேரிடர்கள் மற்றும் பெருந்தொற்றுகளின் தாக்கங்கள் குறித்து பங்கேற்பாளர்கள் விவாதிப்பர்.
- பேரிடர் தொடர்பான உத்திகளையும் அவர்கள் பரிந்துரைப்பர்.
- இந்தப் பேச்சுவார்த்தையானது, புதுடெல்லியின் கொள்கை தொலைநோக்கு அறக் கட்டளை, மேம்பட்ட உத்திசார் ஆய்விற்கான மையம் மற்றும் சண்டிகரின் தீர்ப்பாய அறக்கட்டளை (தி டிரிபுயுன் டிரஸ்ட்) ஆகியவற்றுடன் இணைந்து புனே சர்வதேச மையத்தினால் நடத்தப்படுகிறது.



### 7 உறுப்பினர்கள் கொண்ட பொருளாதார ஆலோசனைக் குழு – மறுசீரமைப்பு

- மத்திய அரசனாது பிரதமருக்கான 7 உறுப்பினர்கள் கொண்ட பொருளாதார ஆலோசனைக் குழுவினை மறுசீரமைத்துள்ளது.
- இந்தக் குழுவின் தலைவராக பிபேக் தேப்ராய் தொடர்ந்து செயல்படுவார்.
- 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 2 ஆண்டு காலத்திற்கு நிறுவப்பட்ட இந்தக் குழுவானது முந்தையப் பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவிற்குப் பதிலாக நிறுவப் பட்டது.




## சர்வதேசச் செய்திகள்

### ஜப்பான் நாட்டின் பிரதமர்




- ஜப்பான் நாட்டின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஃபுமியோ கிஷிடா ஆளும் கட்சியின் தலைமைத்துவத் தேர்தலில் வெற்றி பெற்று, நாட்டின் அடுத்தப் பிரதமராக பதவி ஏற்பதை உறுதி செய்துள்ளார்.
- இவர் டாரோ கோனோ என்பவரை 257 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.
- ஆட்சிக் காலம் முடிந்து தற்போது வெளியேறும் கட்சியின் தலைவரும் தற்போதையப் பிரதமருமான யோஷிஹிட் சுகா என்பவருக்கு அடுத்தபடியாக கிஷிடா பதவி ஏற்க உள்ளார்.

## UNESCO உலகப் புத்தகத் தலைநகரம் – 2023

- UNESCO அமைப்பின் தலைமை இயக்குநர் ஆட்ரி அசோலே, அக்ரா (கானா) என்னுமிடத்தை 2023 ஆம் ஆண்டிற்கான UNESCO உலகப் புத்தகத் தலைநகராக அறிவித்துள்ளார்.
- 2022 ஆம் ஆண்டிற்குத் தேர்வான குவாடலஜாரா (மெக்சிகோ) என்னுமிடத்திற்குப் பிறகு, கானா நாட்டில் இளைஞர்கள் மீதான வலுவான கவனம், கலாச்சாரம் மற்றும் அதன் செல்வச் செழிப்பிற்கு ஆற்றும் பங்கு போன்றவற்றிற்காக வேண்டி அக்ரா நகரமானது தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- யுனெஸ்கோவின் உலகப் புத்தகத் தலைநகரங்களானது அனைத்து வயது மக்களிடையேப் புத்தகங்கள் பற்றியும் அதன் வாசிப்புப் பற்றியும் ஊக்குவிப்பினை நல்குவதற்காக வேண்டி நியமிக்கப் படுகின்றன.

## ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டம்

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 அன்று ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டமானது தேசிய டிஜிட்டல் சுகாதார திட்டம் என்ற மாதிரி திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்டது.
- இந்த முதன்மையான முன்னெடுப்புகளானது,
  - ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு தனித்துவமான சுகாதார அடையாள அட்டையை உருவாக்குதல் மற்றும்
  - டிஜிட்டல் சுகாதார நல நிபுணர்கள் மற்றும் சுகாதாரநல வசதிகள் ஆகியோரைக் கொண்டுள்ள பதிவேட்டினை உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் நாடு தழுவிய தொடக்கமானது ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவுடன் ஒத்துப் போகிறது.





## லேண்ட்சாட் – 9

- இது சமீபத்தில் நாசாவினால் விண்ணில் ஏவப்பட்டது.
- இது ஒரு புவி கண்காணிப்புச் செயற்கைக் கோளாகும்
- இது நாசா மற்றும் அமெரிக்கப் புவியியல் ஆய்வு அமைப்பு ஆகியவற்றின் கூட்டுத் திட்டமாகும்.
- லேண்ட்சாட் – 8 செயற்கைக் கோளுடன் இணைந்து இந்த செயற்கைக்கோள் புவிப் பரப்பின் மீதான புகைப்படங்களைச் சேகரிக்கும்.
- புவி முழுவதிலும் படமெடுக்க இதற்கு 8 நாட்கள் ஆகும்.
- லேண்ட்சாட் – 9 செயற்கைக் கோளில் பொருத்தப்பட்டுள்ள உபகரணங்களாவன : செயல்பாட்டில் உள்ள நிலப் புகைப்படமெடுக்கும் கருவி-2 (OLI-2) மற்றும் வெப்ப அகச்சிவப்பு உணர்வி-2 (TIRS-2) ஆகியனவாகும்.



## 2030 ஆம் ஆண்டுக்குள் மூளைக்காய்ச்சலை ஒழிப்பதற்கான ஒரு உலகளாவிய செயல்திட்டம்




- உலக சுகாதார அமைப்பானது மூளைக் காய்ச்சலை ஒழிப்பதற்கான முதலாவது உலகளாவிய செயல்திட்டத்தை வெளியிட்டுள்ளது.
- அந்த செயல்திட்டமானது பின்வருவனவற்றை உள்ளடக்கியது
  - பாக்டீரியத்தால் உண்டாகும் மூளைக் காய்ச்சலின் தொற்றினை ஒழித்தல்
  - தடுப்பூசிகள் மூலம் தடுக்கவல்ல பாக்டீரிய மூளைக் காய்ச்சலை 50% ஆகவும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளை 70% ஆகவும் குறைத்தல், மற்றும்
  - மூளைக் காய்ச்சலிலிருந்து மீண்டதற்குப் பிறகான வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் உடல் இயலாமையைக் குறைத்தல் ஆகும்.

## UNCTAD டிஜிட்டல் பொருளாதார அறிக்கை 2021




- ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மன்ற அமைப்பானது சமீபத்தில் இந்த அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கையில், நாடுகளுக்கிடையே சுதந்திரமான தகவல் பரிமாற்றத்தை அனுமதிக்கும் 6 நாடுகளுள் ஒன்றாக பிலிப்பைன்ஸ் நாட்டினை UNCTAD அமைப்பு குறிப்பிட்டுள்ளது.
- மற்ற 5 நாடுகள் : கனடா, ஆஸ்திரேலியா, மெக்சிகோ, சிங்கப்பூர் மற்றும் அமெரிக்கா ஆகியனவாகும்.

- இந்த நாடுகள் தகவல் பரிமாற்றத்திற்காக 'இலகுமுறையிலான அணுகுமுறையை' கையாளுகின்றன.
- நாடுகளின் எல்லைக்கு அப்பாற்பட்ட தகவல் பரிமாற்றத்திற்கான "கட்டுப்பாடுமிக்க" அல்லது "பாதுகாக்கப்பட்ட" அணுகுமுறையை இந்தியா பின்பற்றுகிறது.

## நிகோலஸ் சர்கோசி – ஓராண்டு சிறைத் தண்டனை



- பிரஞ்சு நாட்டின் முன்னாள் அதிபர் நிகோலஸ் சர்கோசிக்கு பிரஞ்சு நீதிமன்றம் ஓராண்டு சிறைத் தண்டனை விதித்துள்ளது.
- 2012 ஆம் ஆண்டு மறுதேர்தலின் போது அதிகபட்ச சட்டப்பூர்வத் தொகையினை விட இரண்டு மடங்கு அதிகம் செலவு செய்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.
- சர்கோசி வீட்டிலேயே இருந்த படி ஒரு மின்னணு கண்காணிப்பு காப்பு அணிந்து இந்த ஓராண்டு சிறைத் தண்டனையை அனுபவிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கும்.

## பஹ்ரைன் உலகளாவிய கடல் – வான்வழி மையம்

- பஹ்ரைன் ராஜ்ஜியமானது விரைவான பிராந்திய பல்முனை தளவாட மையத்தைத் தொடங்கியுள்ளது.
- முழுவதுமான கடல் போக்குவரத்துடன் ஒப்பிடுகையில் சராசரிப் போக்குவரத்து நேரத்தை இது 50% வரை குறைப்பதாக கூறப்பட்டுள்ளது.
- வான்வழிப் போக்குவரத்தில் 40% வரையிலான செலவினை இது குறைக்கிறது.



## உணவு முறைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் உச்சி மாநாடு

- ❖ உணவு முறைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் உச்சிமாநாடானது அனைவரும் உணவு முறைகளின் மூலம் ஆற்றலைப் பெறச் செய்வதற்கான ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க வாய்ப்பாக அமையும்.
- ❖ இது கோவிட் – 19 தொற்றிலிருந்து நாம் மீண்டு வருவதோடு, 2030 ஆம் ஆண்டுக்குள் அனைத்து 17 நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சிக்கான மேம்பாட்டு இலக்குகளையும் அடைய நம்மை மீண்டும் அதே பாதையில் கொண்டுச் செல்லச் செய்வதற்கான ஒரு இயக்கமாகும்.
- ❖ 2021 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ் உணவு முறைகள் குறித்த உச்சி மாநாட்டினை நடத்த உள்ளார்.




## செனகல் – மௌரிடேனியன் நீர்வள வடிநிலம்




- ❖ நான்கு மேற்கு ஆப்பிரிக்க நாடுகளானது செனகல் – மௌரிடேனியன் நீர்வள வடிநிலத்திற்கான எல்லைகளைக் கடந்த ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்கான ஒரு கூட்டுப் பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- ❖ அந்த 4 நாடுகளாவன - காம்பியா, கினியா பிசாவோ, மௌரிடேனியா மற்றும் செனகல் ஆகும்.

- இது குறித்த ஒத்துழைப்பிற்காக வேண்டி சட்டப்பூர்வ ரீதியிலான மற்றும் நிறுவனம் சார்ந்த ஒரு கட்டமைப்பினை நிறுவ இந்த நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன.
- இது மேற்கு ஆப்பிரிக்காவில் இவ்வாறான முதல் செயல்முறையாகவும் உலகளவில் பகிரப்பட்ட நிலத்தடி நீர் வளங்கள் குறித்த வலுவான ஒத்துழைப்பிற்கான ஒரு பாதைக்கும் வழிவகுக்கும்.
- 2018 ஆம் ஆண்டில் UNECE நீர்வள மாநாட்டில் இணைந்தவுடன் செனகல் இந்தப் பிரகடனத்தைக் கோரியது.

## மோல்னுபிரவிர்

- மோல்னுபிரவிர் மருந்தானது லேசான (அ) மிதமான நோய் அறிகுறிகளைக் கொண்ட கோவிட்-19 நோயாளிகள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவதற்கான வாய்ப்புகளைப் பாதியளவாகக் குறைத்துள்ளது.
- மெர்க் ரிட்ஜ்பேக் பையோதெராபெட்டிக்ஸ் (Merck and Ridgeback Biotherapeutics) என்ற மருந்து நிறுவனமானது இத்தகவலைக் கூறியுள்ளது.
- இந்த மருந்திற்கு 'EIDD 2801' என இந்த நிறுவனம் பெயரிட்டுள்ளது.
- இதில் 'E' என்பது அமெரிக்காவின் எமோரி பல்கலைக்கழகத்தில் இந்த மருந்து தயாரிக்கப் பட்டதைக் குறிக்கிறது.
- இந்த வைரஸ் தடுப்பு மருந்துகள் வைரஸ் பிரதிபலிக்கும் செயல்முறையைத் தடுப்பதன் மூலம் செயல்படுகின்றன.



## கட்சி சின்னங்கள் – தேர்தல் ஆணையம்

- இந்திய தேர்தல் ஆணையமானது பீகாரின் லோக் ஜன்சக்தி கட்சியின் 'பங்களா' சின்னத்தினை முடக்கியுள்ளது.
- தற்போது வரவிருக்கும் சட்டமன்ற இடைத் தேர்தலில் இந்தக் கட்சியின் இரு பிரிவினரும் இந்த சின்னத்தினைப் பயன்படுத்த இயலாது.
- அதன் வழிகாட்டுதல்களின்படி,
    - ஒரு கட்சி/வேட்பாளர் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் போது தேர்தல் ஆணையத்தின் இலவச சின்னங்கள் பட்டியலில் இருந்து 3 சின்னங்களைத் தேர்ந்தெடுத்து அப்பட்டியலை வழங்க வேண்டும்.
    - அவற்றுள் முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் அந்தக் கட்சி/வேட்பாளருக்கு ஒரு சின்னம் ஒதுக்கப்படுகிறது.
    - அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சி உடையும் போது அதற்கான சின்னத்தை ஒதுக்குவது குறித்து தேர்தல் ஆணையம் முடிவெடுக்கும்.

## உலகக் கண்காட்சி 2020 – துபாய்


- ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நகரில் உலகக் கண்காட்சி 2020 என்ற நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இந்தக் கண்காட்சியின் முக்கியக் கருத்துரு, "Connecting minds, Creating The Future" என்பதாகும்.
- 2020 ஆம் ஆண்டின் கண்காட்சியானது மத்தியக் கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்கா & தெற்காசியப் பகுதியில் நடத்தப்படும் முதல் கண்காட்சியாகும்.
- இந்தக் கண்காட்சியில் இந்தியக் காட்சி கூடத்திற்கான கருத்துரு, "Openness Opportunity and Growth" என்பதாகும்.

## சிர்கான் ஏவுகணை




- ரஷ்ய நாடானது முதல் முறையாக அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து தனது மீயொலி ஏவுகணையைச் செலுத்தி வெற்றிகரமாகப் பரிசோதித்து உள்ளது.
- சிர்கான் ஏவுகணை எனப் பெயரிடப்பட்ட இந்த ஏவுகணையானது செவேரோட்வின்ஸ்க் (Severodvinsk) என்ற நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்பட்டது.
- நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து சிர்கான் ஏவுகணை ஏவப்படுவது இதுவே முதல்முறை ஆகும்.

## 2021 ஆம் ஆண்டிற்கான உலக குழந்தைகளின் நிலை குறித்த அறிக்கை




- மத்திய சுகாதார அமைச்சர் மான்சுக் மாண்டவ்யா, ‘உலக குழந்தைகளின் நிலை 2021 : என் மனதில் : குழந்தைகளின் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்’ என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டார்.
- இந்த அறிக்கையானது யுனிசெஃப்பின் உலகளாவிய ஒரு முதன்மை வெளியீடாகும்.
- உலகளவில் 15 முதல் 24 வயதிற்குட்பட்ட 5 இளம் வயதினரில் ஒருவர் மனச்சோர்வு உடையவர்களாகவும் அல்லது சில வேலைகளைச் செய்வதில் சிறிதும் ஆர்வம் காட்டாத நபர்களாகவும் உள்ளனர்.
- இந்தியாவில் 7 இளம் வயதினரில் ஒருவர் மனச்சோர்வு உடையவர்களாகவும் அல்லது சில வேலைகளைச் செய்வதில் சிறிதும் ஆர்வம் காட்டாத நபர்களாகவும் உள்ளனர்.


## பண்டோரா ஆவணங்கள் விவகாரம்



- வெளிநாடுகளில் கோடிக்கணக்கில் சொத்துக்களைச் சட்ட விரோதமாக வாங்கிக் குவித்த நபர்கள் குறித்த பண்டோரா ஆவணங்களைச் சர்வதேசப் புலனாய்வுப் பத்திரிக்கையாளர்கள் கூட்டமைப்பு வெளியிட்டுள்ளது.
- வியட்நாம், பெலிஸ் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளிலுள்ள 29,000 வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளின் உரிம விவரங்களை உள்ளடக்கிய மற்றும் வரி ஏய்ப்பு வாய்ப்பினைக் கொண்டுள்ள வெளிநாடுகளிலுள்ள 14 நிறுவனங்களைச் சேர்ந்த 11.9 மில்லியன் ஆவணங்கள் இதில் வெளியாகியுள்ளன.
- இந்த வழக்கில் 380 இந்தியக் குடிமகன்களும் பெயரிடப்பட்டுள்ளனர்.


## பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசு 2021

- அறிவியலுக்கான ராயல் ஸ்வீடிஷ் அகாடமியானது ஆல்பிரட் நோபலின் நினைவாக பொருளாதார அறிவியலுக்கான ஸ்வெரிஜஸ் ரிக்ஸ்பேங்க் பரிசை வழங்க முடிவு செய்துள்ளது.
- இந்தப் பரிசின் ஒரு பாதியானது அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டேவிட் கார்டு அவர்களுக்கு "தொழிலாளர் பொருளாதாரத்தில் அவரது அனுபவப் பூர்வப் பங்களிப்புகளுக்காக" வழங்கப்பட்டு உள்ளது.
- மற்றொரு பாதியானது ஜோசுவா ஆங்கிரிஸ்ட் (அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி) மற்றும் கைடோ இம்பென்ஸ் (அமெரிக்காவின் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம்) ஆகியோருக்கு "for their methodological contributions to the analysis of causal relationships" (ஒப்பந்த உறவுமுறைகளுக்கான ஆய்வுகளுக்கு தங்களது முறையான பங்களிப்புகள்) என்ற கருத்திற்காக வழங்கப்படுகிறது.
- 1968 ஆம் ஆண்டில், ஸ்வெரிஜஸ் ரிக்ஸ்பேங்க் (ஸ்வீடனின் மத்திய வங்கி) ஆனது நோபல் பரிசின் நிறுவனர் ஆல்ஃபிரட் நோபலின் நினைவாகப் பொருளாதார அறிவியலுக்கான பரிசை நிறுவியது.
- பொருளாதார அறிவியலில் முதல் பரிசானது ராக்னர் ஃபிரிஷ் மற்றும் ஜான் டின்பெர்கனுக்கு 1969 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.



## ஜெர்மனி தேர்தல் 2021

- ஏஞ்சலா மெர்க்கலின் பழமைவாதக் கட்சியானது 2021 பண்டேஸ்டாக்கின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 2021 ஜெர்மனி தேசியத் தேர்தலில் தோற்று விட்டது.
- அதிபர் ஏஞ்சலா மெர்க்கலின் கிறிஸ்துவ ஜனநாயக ஒன்றியக் கட்சியை சமூக ஜனநாயக கட்சியானது தோற்கடித்துள்ளது.
- இங்கு ஒரு நிலையான அரசாங்கத்தை அமைக்க குறைந்தது மூன்று கட்சிகள் தேவைப் படும்.
- 72 ஆண்டுகளுக்கு முன்பு (1949) ஜெர்மனியக் கூட்டாட்சி குடியரசு நிறுவப்பட்ட பிறகு இவ்வாறு நிகழ்வது இதுவே முதல் முறையாகும்.
- ஏஞ்சலா மெர்க்கல் ஜெர்மனியின் முதல் பெண் அதிபராக 2005 ஆம் ஆண்டில் பதவி ஏற்றார்.
- பண்டேஸ்டாக் என்பது ஜெர்மனியின் மக்களால் தேர்ந்தேடுக்கப்பட்ட ஒரு பாராளுமன்ற அவையாகும்.





## 'சுற்றுச்சூழல் அச்சுறுத்தல் அறிக்கை (ETR) 2021: சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்கள், நெகிழ்ச்சி மற்றும் அமைதியைப் புரிந்து கொள்வது'

- இதைப் பொருளாதாரம் மற்றும் அமைதி நிறுவனம் வெளியிட்டது.
- உணவு ஆபத்து, நீர் ஆபத்து, விரைவான மக்கள்தொகை வளர்ச்சி, வெப்பநிலை முரண்பாடுகள் மற்றும் இயற்கைப் பேரழிவுகள் தொடர்பான அச்சுறுத்தல்களுக்காக 178 நாடுகளில் உள்ள துணை தேசிய நிர்வாக அலகுகளின் தரவை இது மதிப்பீடு செய்தது.
- மிகவும் பாதிக்கப்படக் கூடிய நாடுகள் மத்திய கிழக்கு மற்றும் வடக்கு ஆப்பிரிக்கா, துணை-சஹாரா ஆப்பிரிக்கா மற்றும் தெற்காசியா ஆகிய பகுதிகளில் காணப் படுகின்றன.
- ஒரு பிராந்தியமாக, தெற்கு ஆசியாவானது தண்ணீர் மற்றும் உணவு அபாயங்களுடன் மிக மோசமான நிலையில் உள்ளது.




**ஊரக மேம்பாட்டு அறிக்கை 2021**




- IFAD என்ற அமைப்பின் ஊரக மேம்பாட்டு அறிக்கையானது (2021) "கிராமப்புறச் செழிப்பிற்கான உணவு முறைகளை மாற்றியமைத்தல்" என்பதன் மீது ஈடுபாடு செலுத்துகிறது (IFAD – International Fund for Agricultural Development – வேளாண் மேம்பாட்டிற்கான சர்வதேச நிதியம்).
- இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகள் உணவு முறைகள் குறித்த உச்சி மாநாட்டின் போது வெளியிடப் பட்டது.

- இந்த அறிக்கையானது கிராமப்புற பண்ணைகளிலும், பண்ணைச் செயல்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் உள்ளூர், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களிலும் அரசு முதலீட்டின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகிறது.
- அந்தச் செயல்பாடுகளாவன: சேமிப்பு, செயல்முறை, சந்தைப்படுத்துதல் மற்றும் உணவு விநியோகம் ஆகியனவாகும்.

## பலூன் பயணம்

- வேர்ல்டு வியூ எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனமானது மக்களை விண்வெளியின் ஸ்ட்ராடோ என்ற அடுக்கு மண்டலத்திற்குக் கொண்டு செல்லும் வகையிலான ஒரு பலூன் அமைப்பினை உருவாக்கி வருகிறது.
- இதன் வணிக ரீதியிலான முதல் பயணமானது 2024 ஆம் ஆண்டின் முற்பகுதியில் தொடங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- வேர்ல்டு வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனமானது அரிசோனா நாட்டிலுள்ள ஒரு நிறுவனமாகும்.



## G20 அசாதாரண திறனுடைய தலைவர்கள் உச்சி மாநாடு



- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்றார்.
- இது ஆப்கானிஸ்தானில் நிலவும் நிலைமை குறித்து விவாதிப்பதற்காக ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இந்த நிகழ்வானது G20 அமைப்பின் இத்தாலி நாட்டுத் தலைமையின் கீழ் காணொலி வாயிலாக நடத்தப் பட்டது.
- உலக நாட்டின் தலைவர்கள் ஆப்கானிஸ்தான் நாட்டின் மனிதநேயத் தேவைகள் அடிப்படைத் தேவைகள் மற்றும் வாழ்வாதார அணுகல் ஆகியவற்றைப் பூர்த்தி செய்தல் பற்றி விவாதிப்பர்.

## நோயெதிர்ப்புக் குறைபாட்டிற்காக வேண்டி 3வது தவணை

- உலக சுகாதார அமைப்பானது நோயெதிர்ப்புக் குறைபாடுடையவர்களுக்கு 3வது தவணை தடுப்பு மருந்தினை வழங்க பரிந்துரைத்துள்ளது.
- நோயெதிர்ப்பு குறித்த நிபுணர்களின் உத்திசார் ஆலோசனைக் குழுவின் 4 நாட்கள் அளவிலான சந்திப்பினைத் தொடர்ந்து இது வெளியிடப் பட்டது.
- இது குறித்த இறுதி அறிக்கையானது டிசம்பர் மாதத்தில் வெளியிடப்படும்.
- மிதமான மற்றும் தீவிரமான நோயெதிர்ப்புக் குறைபாடு உடையவர்களுக்கு உலக சுகாதார அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பு மருந்துகளின் கூடுதல் தவணையானது கட்டாயமாகச் செலுத்தப்பட வேண்டும் என இக்குழு கூறியுள்ளது.

## உலகின் முதலாவது தானியங்கு இரயில்

- ஜெர்மனியானது உலகின் முதலாவது தானியங்கு மற்றும் ஓட்டுநர் இல்லாத இரயிலினைத் தொடங்கியுள்ளது.
- இது உலகின் முதல் தானியங்கு இரயில் என அறியப்படுகிறது.
- இந்த இரயிலானது 'சீமென்ஸ் அண்ட் டாய்ச் பான்' (Siemens and Deutsche Bahn) என்ற நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டது.



## அமெரிக்கப் பூர்வீக மக்கள் தினம்

- அமெரிக்க அதிபர் ஜோ பைடன், அக்டோபர் 11 ஆம் தேதியினை அமெரிக்கப் பூர்வீக மக்கள் தினமாக அறிவித்துள்ளார்.
- இத்தினத்தினை அதிகாரப் பூர்வமாக அங்கீகரித்த முதல் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஆவார்.
- இத்தினமானது அக்டோபர் மாதத்தின் 2வது திங்கள்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அமெரிக்காவில் வாழ்ந்து வரும் பழங்குடி (பூர்வீக) சமூகங்களை அங்கீகரிக்கிறது.

## உலகப் பட்டினிக் குறியீடு

- இந்தக் குறியீடானது 'கன்சர்ன் வேர்ல்டுவைட்' என்ற ஐயர்லாந்து நாட்டு உதவி வழங்கும் நிறுவனம் மற்றும் "வெல்த் ஹங்கர் ஹில்ஃப்" (Welt Hunger Hilfe) என்ற ஜெர்மானிய நாட்டு நிறுவனம் ஆகியவற்றால் இணைந்து தயாரிக்கப்படுகிறது.
- இந்தக் குறியீடானது இந்தியாவில் நிலவும் பட்டினி நிலையானது கவலைக் கிடமானதாக உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில், 116 நாடுகளில் இந்தியா 101வது நிலையில் உள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியா இக்குறியீட்டில் 91வது இடத்தில் இருந்தது.
- 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம், ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் குழந்தைகளிடையே வளர்ச்சி குன்றுதல் போன்ற குறிகாட்டிகளில் இந்தியா மேம்பட்டுள்ளது.

## ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் அதிகப் பெரும்பான்மையுடன் 2022-24 ஆகிய காலகட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு இந்தியா மீண்டும் தேர்வாகியுள்ளது.
- இந்த முடிவானது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76வது கூட்டத்தில் மேற்கொள்ளப் பட்டது.
- 193 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 184 வாக்குகளைப் பெற்று இந்தியா இந்தப் பதவிக்குத் தேர்வாகியுள்ளது.

## ஜாயின்ட் சீ 2021 கடற்படைப் பயிற்சி

- சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் இணைந்து ஜப்பான் கடலில் "ஜாயின்ட் சீ 2021 கடற்படைப் பயிற்சி" எனும் ஒரு கூட்டுக் கடற்படைப் பயிற்சியை நடத்துகின்றன.
- ரஷ்யாவிற்கும் சீனாவிற்கும் இடையே சமீபத்தில் வளர்ந்து வரும் அரசியல் மற்றும் இராணுவ ஒத்துழைப்பினை இது குறிக்கிறது.
- இந்தப் பயிற்சியானது ஜப்பான் கடலிலுள்ள ரஷ்யாவின் பீட்டர் தி கிரேட் வளைகுடாவில் தொடங்கப் பட்டது.

## EY குறியீடு

- 58வது புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் ஒரு நாட்டின் ஈர்ப்புத் திறன் குறியீட்டில் இந்தியா தனது 3வது இடத்தினைத் தக்க வைத்துள்ளது.
- இந்தக் குறியீடானது எர்ன்ஸ்ட் & யங் என்ற அமைப்பினால் வெளியிடப் பட்டது.
- இந்த அறிக்கையின்படி, அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகியவை தனது முதல் 3 இடங்களைத் தக்க வைத்துள்ளன.
- 2021 ஆம் ஆண்டிற்கான இந்தக் குறியீடானது உலகின் 40 முன்னணி உலக நாடுகளை அதனுடைய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முதலீடு மற்றும் பயன்பாட்டு வாய்ப்புகளை ஈர்க்கும் திறனைப் பொறுத்து மதிப்பிடுகின்றது.

**THE TOP 10**

1. United States of America
2. China
3. India
4. Chile
5. Germany
6. Brazil
7. Mexico
8. France
9. Canada
10. Australia

Source: EY

## குன்மிங் பல்லுயிர்ப் பெருக்க நிதி




- சீனா நாடானது சமீபத்தில் "குன்மிங் பல்லுயிர்ப் பெருக்க நிதி" என்ற புதிய நிதியில் 233 மில்லியன் டாலர்களை வழங்குவதாக உறுதியளித்தது.
- இது வளர்ந்து வரும் நாடுகளில் உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கத்தின் பாதுகாப்பிற்கு உதவிட வேண்டி அளிக்கப் பட்டதாகும்.

- ஐக்கிய நாடுகள் அமைப்பின் வளங்காப்பு உச்சி மாநாட்டின் போது பெரியப் பங்கு தார நாடுகள் உடன்படவில்லை என்றாலும் இந்த முடிவானது மேற்கொள்ளப் பட்டது.
- உயிரிப் பல்லுயிர்ப் பெருக்க வளங்காப்பில் சர்வதேச அளவிலான பங்கினை வகிக்க எண்ணுவதாலும் உலகின் மிகப்பெரிய மாசு உண்டாக்கும் நாடாக திகழ்வதாலும் சீனா இந்த உறுதிப்பாட்டினை மேற்கொண்டது.
- இந்த உச்சி மாநாடானது 2030 மற்றும் 2050 ஆகிய ஆண்டுகளுக்கான இலக்குகளை நிர்ணயித்து ஒரு புதிய ஒப்பந்தத்தை நிறுவ முயல்கிறது.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் முதல் பசுமைப் பத்திரம்

- ஐரோப்பிய ஆணையமானது 12 பில்லியன் யுரோக்களை திரட்டும் தனது முதலாவது பசுமைப் பத்திரங்களை வெளியிட்டது.
- ஐரோப்பிய ஒன்றியத்தின் நிர்வாகக் கிளையானது, 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பசுமைப் பத்திரங்களில் 250 பில்லியன் யூரோ வரை வெளியிடுவதற்குத் திட்டம் இட்டுள்ளது.
- இது கொரோனா வைரஸ் நெருக்கடியிலிருந்து தனது 27 நாடுகளின் மீள்விற்கு நிதி வழங்குவதற்கான தனது திட்டங்களுக்கு ஆதரவு அளிப்பதற்கானதாகும்.

## மூளைக் காய்ச்சலை ஒழிப்பதற்கான உலகளாவிய செயல்திட்டம்

- 2030 ஆம் ஆண்டுக்குள் மூளைக் காய்ச்சலை ஒழிப்பதற்கான ஒரு உலகளாவிய செயல்திட்டத்தினை உலக சுகாதார அமைப்பு சமீபத்தில் வெளியிட்டது.
- பாக்டீரியத்தினால் உண்டாகும் மூளைக் காய்ச்சல் தொற்றுகளை ஒழிப்பதே இதன் நோக்கமாகும்.
- இறப்பு வீதத்தை 70% வரை குறைப்பதையும் பாதிப்பு எண்ணிக்கையைப் பாதியாக குறைப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## Cop 26

- ஐக்கிய ராஜ்ஜியமானது ஐக்கிய நாடுகள் பருவநிலை மாற்ற மாநாட்டின் 26வது பங்குதாரர் மாநாட்டினை நடத்த உள்ளது.
- இந்த ஆண்டானது 26வது பங்குதாரர் மாநாட்டினைக் குறிக்கிறது.
- இந்த மாநாடானது கிளாஸ்கோவிலுள்ள ஸ்காட்டிஷ் ஈவன்ட் வளாகத்தில் நடைபெற உள்ளது.
- பங்குதாரர் மாநாடானது ஐக்கிய நாடுகள் பருவநிலை மாற்றக் கட்டமைப்பு மாநாட்டு அமைப்பின் கீழ் இயங்குகிறது.
- ஐக்கிய நாடுகள் பருவநிலை மாற்றக் கட்டமைப்பு மாநாட்டு அமைப்பானது 1994 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.




## மீயொலி வேக ஏவுகணை – சீனா

- ❖ பைனான்சியல் டைம்ஸ் இதழின் அறிக்கையின்படி, 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சீனா அணுசக்தி திறன் கொண்ட ஒரு மீயொலி வேக ஏவுகணையைச் சோதனை செய்தது.
- ❖ இந்தப் பரிசோதனையைச் சீனா இரகசியமாக மேற்கொண்டதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- ❖ இந்த ஏவுகணையானது அதன் இலக்கை நோக்கிப் பயணிப்பதற்கு முன்பாக உலகினைச் சுற்றி வந்தது.
- ❖ இருப்பினும் அது சுமார் 24 மைல்கள் தொலைவில் தனது இலக்கைத் தவற விட்டது.
- ❖ மீயொலி வேக ஆயுதங்களில் சீனா வியக்கத்தகு முன்னேற்றம் அடைந்துள்ளதை இது நிரூபிக்கிறது.
- ❖ இந்தச் சோதனையானது அமெரிக்காவின் சோதனையை விட மேம்பட்டதாகும்.
- ❖ இந்த ஆயுதமானது கோட்பாட்டின்படி தென்துருவத்தின் மேல்பகுதியில் பறக்க வல்லது என அறிக்கை கூறுகிறது.
- ❖ அமெரிக்க இராணுவத்தின் ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகள் பெரும்பாலும் வட துருவப் பாதையில் மட்டுமே கவனம் செலுத்துவதால் இந்த ஏவுகணையானது அதற்கு ஒரு பெரிய சவாலாக இருக்கும்.



## G20 புத்தாக்கக் கூட்டிணைவு

- G20 நாடுகள் குழுமத்திற்குத் தலைமை தாங்கும் இத்தாலி நாடானது 'G20 புத்தாக்கக் கூட்டிணைவினை' வெளியிட்டுள்ளது.
- இது புதுமையான திட்டங்களை முன்னோக்கிச் செயல்படுத்த வடிவமைக்கப்பட்ட ஒரு புதிய மற்றும் தனித்துவமான முன்னெடுப்பாகும்.
- இது ஒரு நிலையான வருங்காலத்தினை உருவாக்குவதற்கான ஒரு முன்னெடுப்பு ஆகும்.
- G20 புத்தாக்க நிகழ்ச்சியானது இத்தாலியின் சொரென்டோ எனுமிடத்தில் நடத்தப் பட்டது.

## உலக காசநோய் அறிக்கை 2021

- உலக சுகாதார அமைப்பானது, 2021 ஆம் ஆண்டிற்கான உலக காசநோய் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- காசநோய் ஒழிப்பின் முன்னேற்றத்தில் பலத்தப் பின்னடைவினை ஏற்படுத்திய கோவிட்-19 தொற்றின் விளைவுகளை இந்த அறிக்கை குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.
- காசநோய் ஒழிப்பில் இந்தியா மிகவும் பாதிப்படைந்த நாடாக இந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் காசநோய் பாதிப்பில் 20% குறைவு ஏற்பட்டுள்ளது (அதாவது 4.1 மில்லியன் பாதிப்புகள் குறைவு).

## ஆப்பிரிக்காவின் பனிப்பாறைகள்

- உலக வானிலை அமைப்பு மற்றும் இதர நிறுவனங்கள் தனது புதிய அறிக்கையினை சமீபத்தில் வெளியிட்டன.
- பருவநிலை மாற்றம் காரணமாக அடுத்த இருபது ஆண்டுகளில் ஆப்பிரிக்காவின் அரிய பனிப்பாறைகள் அழிந்து போகும் என்று இந்த நிறுவனங்கள் தங்களது அறிக்கையில் எச்சரித்துள்ளன.
- ஸ்காட்லாந்தில் நடைபெற உள்ள "ஐ.நா. பருவநிலை மாநாட்டை" முன்னிட்டு இந்த அறிக்கையானது வெளியிடப் பட்டது.
- கென்யா மலை, கிளிமாஞ்சாரோ மலை மற்றும் உகாண்டாவிலுள்ள ருவன்சோரி மலைகள் ஆகியவற்றில் பனிப்பாறைகள் குறைந்து வருவது, விரைவான மற்றும் பரவலான மாற்றங்கள் வரவிருப்பதைக் குறிக்கும் அடையாளங்கள் என இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

## இந்தியாவின் நிலக்கரிப் பற்றாக்குறையைத் தீர்க்க ரஷ்யா உதவி

- சுரங்கம் மற்றும் எஃகு தொழில்துறையில் ஒன்றிணைந்துச் செயல்படுவதற்காக இந்தியாவும் ரஷ்யாவும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளன.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது குறிப்பாக கற்கரியாக்க நடவடிக்கைகள் (coking coal) மீது ஈடுபாடு செலுத்துகிறது.
- இந்த ஒப்பந்தமானது இந்தியாவினுடைய 2017 ஆம் ஆண்டு தேசிய எஃகுக் கொள்கையின் கீழ் 2030 ஆம் ஆண்டுக்குள் 300 மில்லியன் டன் எஃகு உற்பத்தியை எட்டுவதற்கு இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.
- மேலும் இதற்காக முன்னோக்கிய மற்றும் பின்னோக்கிய ஒருங்கிணைப்பிலும் (forward and backward integration) ஈடுபட்டு வருகிறது.

## 2021 உற்பத்தி இடையீட்டு (இடைவெளி) அறிக்கை




- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது "2021 உற்பத்தி இடையீட்டு அறிக்கை" என்ற தனது அறிக்கையினை சமீபத்தில் வெளியிட்டது.
- புதைபடிவ எரிபொருட்களை உற்பத்தி செய்வதற்கான அரசின் திட்டமானது பாரீஸ் ஒப்பந்த வரம்புகளின் இலக்குகளிலிருந்து விலகும் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- இந்த அறிக்கையானது "அரசு திட்டமிட்ட நிலக்கரி, வாயு மற்றும் எண்ணெய் உற்பத்தி" மற்றும் "பாரீஸ் ஒப்பந்த வரம்புகளின் இலக்குகளுடன் பொருந்தாத உலகளாவிய உற்பத்தி நிலைகள்" ஆகியவற்றிற்கு இடையேயான இடைவெளியை மதிப்பிடுகிறது.
- 2030 ஆம் ஆண்டில் புவி வெப்பமடைதலை 1.5°C என்ற அளவில் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான புதைபடிவ எரிபொருட்களின் அளவை விட இரண்டு மடங்கிற்கும் மேலாக உற்பத்தி செய்வதற்கு அரசுகள் திட்டமிடுவதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- உலகில் உற்பத்தி இடைவெளியானது மாறாமல் உள்ளதை இது குறிப்பிடுகிறது.

## பார்படாஸ்

- பார்படாஸ் எனப்படும் கரீபியத் தீவு நாடானது குடியரசாக மாறும் தனது முயற்சியில் அதன் முதலாவது அதிபரைத் தேர்ந்தெடுத்துள்ளது.

- இந்த நடவடிக்கை மூலம் பார்படாஸ் அரசின் தலைவராக இருந்த பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத் அந்தப் பதவியிலிருந்து நீக்கப் படுகிறார்.
- 2021 ஆம் ஆண்டு நவம்பர் 30 அன்று சான்ட்ரா மேசன் என்பவர் அந்நாட்டு அதிபராகப் பொறுப்பேற்க உள்ளார்.
- சான்ட்ரா மேசன் அந்தத் தீவு நாட்டின் தற்போதைய கவர்னர் ஜெனரல் ஆவார்.
- நவம்பர் 30 ஆம் தேதியானது பிரிட்டனிடமிருந்து பார்படாஸ் நாடு விடுதலை பெற்றதன் 55வது நிறைவு ஆண்டினைக் குறிக்கிறது.




## சிறப்பு அறக்கட்டளை நிதி

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது ஆப்கானிஸ்தான் நாட்டிற்காக ஒரு சிறப்பு அறக்கட்டளை நிதியினை உருவாக்கியுள்ளது.
- இது ஆப்கானியர்களுக்கு அவசரமாகத் தேவைப்படும் பணத்தினை நேரடியாக வழங்குவதற்கான நடவடிக்கையாகும்.
- ஆப்கானிய குடும்பங்களுக்குப் பணப்புழக்கத்தை அதிகரித்து வழங்கும் ஒரு நோக்கத்துடன் இந்த நிதியானது உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த நிதிக்கு ஜெர்மனி முதல் நாடாக தனது பங்களிப்பினை வழங்கியது.

## சாகரோவ் பரிசு

- சிறையில் அடைக்கப்பட்டுள்ள ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி (Alexei Navalny) என்பவருக்குச் சமீபத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயரிய மனித உரிமைகள் பரிசானது வழங்கப்பட்டது.
- சிந்தனைச் சுதந்திரத்திற்கான சாகரோவ் பரிசானது பொதுவாக சாகரோவ் பரிசு என அழைக்கப்படுகிறது.

- இது மனித உரிமைகள் மற்றும் சிந்தனைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக தனது வாழ்வையே அர்ப்பணித்த தனிநபர்கள் அல்லது குழுக்களுக்கு வழங்கப்படும் ஒரு கௌரவ விருதாகும்.
- ரஷ்ய விஞ்ஞானியும் கொள்கை எதிர்ப்பாளருமான ஆன்ட்ரே சாகரோவ் என்பவரின் நினைவாக பெயரிடப்பட்ட இந்தப் பரிசானது 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐரோப்பியப் பாராளுமன்றத்தினால் நிறுவப்பட்டது.




## மீயொலி வேக ஏவுகணை – அமெரிக்கா

- அமெரிக்காவானது மீயொலி வேக ஏவுகணைத் தொழில்நுட்பத்தினை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.
- மீயொலி ஏவுகணைத் தொழில்நுட்பமானது ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகளால் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு புதிய ஆயுத அமைப்பு ஆகும்.
- இந்தச் சோதனையானது விர்ஜீனியாவின் வாலோப்ஸ் (Wallops, Virginia) என்னுமிடத்திலுள்ள நாசாவின் ஒரு சோதனைத் தளத்தில் நடத்தப்பட்டது.



## கம்ப்ரே விஜா எரிமலை

- ஸ்பெயின் நாட்டின் லா பால்மா என்ற தீவிலுள்ள கம்பரே விஜா எரிமலை (Cumbre Vieja volcano) வெடித்துச் சிதறியது.
- ஸ்பெயின் நாட்டின் கேனரி தீவுகளில் ஒரு பகுதியில் அமைந்த லா பால்மா தீவின் பொருளாதாரமானது பெரும்பாலும் சுற்றுலா மற்றும் வாழைத் தோட்டப்பயிர் வளர்ப்பினை அடிப்படையாகக் கொண்டது.
- ஸ்பெயின் அரசானது சேதமடைந்த உள்கட்டமைப்புகளை மீண்டும் புணரமைப்பதில் உதவ மில்லியன் கணக்கான யூரோக்களை (டாலர்கள்) வழங்க உறுதியளித்துள்ளது.

## ஐக்கிய நாடுகள் உலகளாவிய நிலையானப் போக்குவரத்து மாநாடு

- 2வது ஐக்கிய நாடுகள் உலகளாவிய நிலையானப் போக்குவரத்து மாநாடானது சமீபத்தில் சீனாவின் பெய்ஜிங்கில் நிறைவடைந்தது.
- இதில் சீனாவின் பட்டை மற்றும் சாலை திட்டம் மற்றும் CPEC போன்ற திட்டங்களை இந்தியா வலுவாக எதிர்த்தது.

*பட்டை மற்றும் சாலை திட்டம்*

- இது 2013 ஆம் ஆண்டில் சீன அதிபர் ஜி ஜின்பிங் தொடங்கிய பல பில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது சீனாவின் செல்வாக்கை அதிகரிக்கும் நோக்கில் தொடங்கப் பட்டது.
- இது தென்கிழக்கு ஆசியா, மத்திய ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியாவின் வளைகுடாப் பகுதியினை நிலம் மற்றும் கடல் வழிகளைக் கொண்ட ஒரு கட்டமைப்புடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டது.




## உலக அச்சுறுத்தல் மதிப்பீட்டு அறிக்கை 2021



- We protect The Global என்ற கூட்டணியானது சமீபத்தில் இந்த அறிக்கையினை வெளியிட்டது.
- சிறார் பாலியல் வன்முறையானது நீண்ட காலமாக தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையாக உள்ளதாக இந்த அறிக்கை கூறுகின்றது.
- கோவிட் – 19 தொற்றுக் காலங்களில் சிறார் பாலியல் வன்முறை வழக்குகள் மற்றும் இணையவழி வன்முறை வழக்குகள் அதிகரித்துள்ளன.
- We protect the Global கூட்டணியானது சுமார் 200 அரசுகள், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் குடிமைச் சமூக அமைப்புகள் அடங்கிய ஒரு உலகளாவிய இயக்கமாகும்.
- சிறார் பாலியல் வன்முறை மற்றும் இணையவழி வன்முறைகளை எதிர்கொள்வதில் உலக நடவடிக்கைகளின் போக்கை மாற்றுவதற்காக வேண்டி இவை ஒன்றிணைந்துப் பணியாற்றுகின்றன.

## COP15

- உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கம் மீதான உடன்படிக்கை குறித்த 15வது பங்குதாரர்கள் மாநாடானது சீனாவின் யுனான் மாகாணத்திலுள்ள குன்மிங் எனுமிடத்தில் நடதத்தப் பட்டது.
- இந்த மாநாட்டின் கருத்துரு, "Ecological Civilization: Building a shared future for All Life on Earth" என்பதாகும்.
- இதில் தலைவர்கள் குன்மிங் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டனர்
- இந்தச் சந்திப்பானது இரண்டு கட்டங்களாக நடைபெறுகிறது.
- முதல் கட்ட சந்திப்பானது அக்டோபர் 11 முதல் 15 வரை காணொளி மூலம் நடைபெற்றது.
- இரண்டாம் கட்ட சந்திப்பானது 2022 ஆம் ஆண்டில் நேரடி சந்திப்பாக நடைபெறும்.




## ஷிஜியன் – 21

- சீன நாடானது ஷிஜியன் - 21 எனப்படும் புதிய செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.
- விண்வெளியில் உள்ள தேவையற்ற சாதனங்களைக் குறைக்கும் தொழில் நுட்பங்களைச் சோதிப்பதற்காகவும் அதனை சரிபார்ப்பதற்காகவும் வேண்டி இந்தச் செயற்கைக் கோள் பயன்படுத்தப் படும்.

- இது லாங் மார்ச் தொடர்வரிசை ஏவுதல் ராக்கெட்டுகளின் மூலமான 393வது விண்வெளித் திட்டத்தினைக் குறிக்கிறது.



## புதிய எல்லைச் சட்டம்

- நாட்டின் நில எல்லைப்பகுதிகளின் பாதுகாப்பிற்காகவும் அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்துவதற்காகவும் வேண்டி சீன அரசு முதல்முறையாக ஒரு தேசியச் சட்டத்தினை இயற்றியுள்ளது.
- இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினைகளின் காரணமாக இந்த சீனச் சட்டமானது இயற்றப் பட்டது.
- இந்திய நாடானது அருணாச்சலப் பிரதேசம் முதல் ஜம்மு & காஷ்மீர் வரையில் 3,488 கி.மீ. தொலைவிலான எல்லையைச் சீனாவுடன் பகிர்ந்து கொள்கிறது.
- சீனாவின் இந்தியாவுடனான எல்லையானது இன்னமும் முழுமையாக வரையறுக்கப் பட வில்லை.
- எனினும், அசல் கட்டுப்பாட்டு கோட்டின் எல்லை வரம்பினை தெளிவுபடுத்துவதற்கும் அதனை உறுதிப்படுத்துவதற்குமான செயல்முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## COP26-IRIS முன்னெடுப்பு

- இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் ஆகியவை சிறிய வளர்ந்து வரும் தீவு நாடுகளுடன் இணைந்து புதிய முன்னெடுப்பினைத் தொடங்க திட்டமிட்டுள்ளன.
- இது "நெகிழ்திறனுடைய தீவு நாடுகளுக்கான உள்கட்டமைப்பு" என்று அழைக்கப் படுகிறது.
- இது (COP 26) 26வது பங்குதாரர்கள் மாநாட்டின் பின்னணியில் தொடங்க உள்ளது.
- இந்த முன்னெடுப்பானது தீவு நாடுகளில் ஏற்படும் பேரிடர்களை எதிர்கொள்ளவும் பொருளாதார இழப்புகளை குறைக்கவும் வல்ல ஒரு உள்கட்டமைப்பினை உருவாக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## "Innovations for you" டிஜி-புத்தகம்

- நிதி ஆயோக் அமைப்பின் அடல் புத்தாக்க திட்டமானது "Innovations for You" டிஜி-புத்தகத்தினை வெளியிட்டுள்ளது.
- இந்தப் புத்தகத்தில் சுகாதார நலன் குறித்து அதிகம் கூறப்பட்டுள்ளது.
- "Innovations for You" என்பது வெவ்வேறு களங்களில் அடல் புத்தாக்கத் திட்டத்தின் புத்தாக்க நிறுவனங்கள் பெற்ற வெற்றி கதைகளைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு முன்னெடுப்பாகும்.

## "X" பாலினக் குறியீடுடன் கூடிய கடவுச் சீட்டு

- "X" பாலினக் குறியீடுடன் கூடிய முதல் கடவுச் சீட்டினை அமெரிக்கா வெளியிட்டது.
- ஆண் அல்லது பெண் என அங்கீகரிக்கப் படாதவர்களின் உரிமைகளை அங்கீகரிப்பதில் இது ஒரு மைல்கல்லாக அமைகிறது.
- ஃபோர்ட் கோலின்சைச் சேர்ந்த மாற்றுப் பாலின ஆர்வலரான டானா சிய்ம் என்பவரின் போராட்டத்தைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## நாடுகளில் மாறி வரும் வளங்கள் – 2021

- உலக வங்கியானது சமீபத்தில் இந்த அறிக்கையினை வெளியிட்டது.
- மனித மூலதனம் என்பது "ஒரு நபரின் வாழ்நாள் முழுவதும் ஈட்டப்படும் வருவாய்" என்று உலக வங்கி வரையறை செய்கிறது.
- காற்று மாசுபாட்டினால் தெற்காசியா அதிக மனித மூலதன இழப்பினை எதிர் கொள்கிறது என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- உலக வளத்தின் மிகப்பெரிய ஆதாரமாக மனித மூலதனம் திகழ்ந்ததாக அறிக்கை கூறுகிறது.
- சமீபத்திய இந்த அறிக்கையானது 146 நாடுகளின் வள உருவாக்கம் மற்றும் பங்கீடு குறித்து மதிப்பிட்டுள்ளது.
- 1995 முதல் 2018 வரையிலான 20 ஆண்டு காலப் பதிவுகளை இது உள்ளடக்கியது.
- தெற்காசியப் பகுதியின் 80% வளங்களானது ஆண்களைச் சாரும்.

## நீல ஹைட்ரஜன்

- நீல ஹைட்ரஜனை உற்பத்தி செய்ய உலகின் மிகப்பெரிய இயற்கை – எரிவாயு திட்டங்களில் ஒன்றினைப் பயன்படுத்த உள்ளதாக சவுதி அரேபியா அறிவித்தது.
- 110 பில்லியன் டாலர் மதிப்பிலான ஜஃபுராஹ் மேம்பாட்டு அமைப்பிலிருந்து மிகப்பெரிய அளவிலான வாயுவானது நீல ஹைட்ரஜன் தயாரிப்பிற்கு வேண்டி பயன்படுத்தப் படும்.
- நீல ஹைட்ரஜன் வாயுவானது இயற்கை எரிவாயுவை உருமாற்றி, கார்பன்டை ஆக்சைடினை உறிஞ்சுதல் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.

## மெட்டா

- பேஸ்புக் நிறுவனமானது தனது தலைமை நிறுவனத்தின் பெயரை மாற்றுகிறது.
- தனது சிக்கலான சமூக வலைதளத்தின் மேம்பட்ட புதிய வலைதளத்தினை வழங்கச் செய்வதற்காக 'மெட்டா' என்று தனது பெயரை மாற்றியுள்ளது.
- பேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் ஆகிய ஊடகங்கள் தனது பெயர்களை இந்தப் பெயரின் கீழ் வைத்து இயங்கும்.




## பசுமை இல்ல வாயு அறிக்கை

- உலக வானிலை அமைப்பானது சமீபத்தில் தனது பசுமை இல்ல வாயு அறிக்கையினை வெளியிட்டது.
- வளிமண்டலத்தில் வெப்பத்தினை உட்கிரக்கும் பசுமை இல்ல வாயுக்களின் அளவானது 2020 ஆம் ஆண்டில் மீண்டும் புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- வருடாந்திர அதிகரிப்பு வீதமானது 2011-20 காலத்தின் சராசரியை விட அதிகமாக இருந்தது.
- இந்தப் போக்கானது 2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்ததாக அந்த அறிக்கை கூறுகிறது.
- 2020 ஆம் ஆண்டில் கார்பன் டை ஆக்சைடின் செறிவு 413.2 ppm ஆக உயர்ந்தது.
- இது தொழிற்துறைக் காலத்திற்கு முந்தைய நிலையில் 149% ஆகும்.




## சினின்சியோன் பிட்டிரீம் எரிபொருள் கல மின் நிலையம்

- தென்கொரியா நாடானது சினின்சியோன் பிட்டிரீம் எரிபொருள் கல மின் நிலையத்தின் நிறைவு விழாவை அறிவித்தது.
- மொத்தம் 7 8MW திறனுடைய இந்த மின் நிலையமானது POSCO எனர்ஜி மற்றும் தூசன் பியூல் செல் ஆகியவை வழங்கிய எரிபொருள் கலன்களைக் கொண்டு 2017 ஆம் ஆண்டு

முதல் 4 கட்டங்களாக கட்டப்பட்டது.

- இது தற்போது செயல்பாட்டிலுள்ள உலகின் மிகப்பெரிய எரிபொருள் கலமின் நிலையமாகும் (fuel cell power plant).
- மற்ற மின் உற்பத்தி மையங்களைப் போலல்லாமல், ஹைட்ரஜன் எரிபொருள் கலன்கள் அதிக வெப்பநிலையின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யாது என்பதால் இது குறைந்த அளவு நைட்ரஜன் ஆக்சைடுகள் மற்றும் சல்பர் ஆக்சைடுகளை மட்டுமே வெளியிடும்.

## அதிபர் தேர்தல்களுக்கான சர்வதேசக் கண்காணிப்பு அமைப்பு

- இந்தியத் தலைமை தேர்தல் ஆணையரான சுசீல் சந்திரா, அதிபர் தேர்தலை மேற்பார்வையிடுவதற்காக உஸ்பெகிஸ்தான் நாட்டிற்குச் செல்லும் 3 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவிற்குத் தலைமை தாங்கினார்.
- உஸ்பெகிஸ்தான் அதிபரான சவ்கத் மிரிசியோயூவ் 80%க்கும் அதிகமான வாக்குகள் பெற்று அந்த நாட்டின் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.
- இவர் மீண்டும் 4 ஆண்டு காலப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## குறைவான வளர்ச்சியடைந்த நாடுகள் அறிக்கை – 2021


- இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் மேம்பாடு மீதான மாநாட்டு அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- இந்த வருடாந்திர அறிக்கையானது உலகின் மிகவும் வறிய நாடுகளின் சமூகப் பொருளாதாரப் பகுப்பாய்வு மற்றும் அதன் தரவுகள் குறித்த விரிவான மற்றும் அதிகாரப்பூர்வ ஆதாரத்தினை வழங்குகிறது.
- இந்த அறிக்கையின்படி, குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளின் தனிநாட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியானது உலக சராசரியை (2019) விட 10% குறைவானது ஆகும்.
- இதில் 46 நாடுகளைக் குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளாக ஐக்கிய நாடுகள் அமைப்பு நிர்ணயித்துள்ளது.
- இந்தப் பட்டியலானது 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுமதிப்பீடு செய்யப்படுகிறது.



# பொருளாதாரச் செய்திகள்

## Ways and Means Advances (வழிவகைக்கான முன்பணம்)

- 2021-2022 ஆம் நிதி ஆண்டின் (அதாவது அக்டோபர் 2021 முதல் மார்ச் 2022) 2வது அரையாண்டிற்கான வழிவகை முன்பணத்திற்கான வரம்பினை இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ளது.
- அதற்கான வரம்பு ரூ.50,000 கோடியாகும்.
- வழிவகை முன்பண வரம்பின் 75 சதவீதத்தை இந்திய அரசு உபயோகிக்கும் போது புதிய சந்தைக் கடன்களை இந்திய ரிசர்வ் வங்கி வழங்கலாம்.
- சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, இந்திய அரசுடன் ஆலோசித்து, எந்த நேரத்திலும் இந்த வரம்பினைத் திருத்தி அமைப்பதற்கான உரிமையை இந்திய ரிசர்வ் வங்கி தக்க வைத்துள்ளது.




## உடனடி சரிபார்ப்பு நடவடிக்கையிலிருந்து IOB நீக்கம்

- இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மீது விதிக்கப்பட்டிருந்த உடனடி சரிபார்ப்பு நடவடிக்கைக் கட்டுப்பாடுகளை (Prompt corrective Actions – PCA) நீக்குவதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.
- இந்த முடிவானது கடன் வழங்குவதற்குக் குறிப்பாக பெரு நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதையும் கடன் வழங்கும் கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்குமான அதிகச் சுதந்திரத்தினை வழங்குகிறது.
- இந்த வங்கியின் அதிக நிகர செயல்பாட்டுச் சொத்துக்கள் மற்றும் சொத்துக்கள் மீதான குறைவான வருமானம் ஆகியவற்றின் காரணமாக 2015 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இது PCA கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது.
- அது இந்த வங்கியின் நிலை மாறும் சொத்துக்கள் அதிகரிக்கப் படுவதிலிருந்துத் தடுக்கப் பட்டது.

## Rupay On-the-Go

- ❖ இந்தியத் தேசியப் பணவழங்கீட்டு கழகமானது YES வங்கி என்ற தனியார் துறை வங்கியுடன் கைகோர்த்துள்ளது.
- ❖ Rupay On-the-Go எனும் நேரடித் தொடர்பற்ற பணவழங்கீட்டு வசதியை அறிமுகப் படுத்துவதற்கான ஒரு கூட்டணியாகும்.
- ❖ இது நுகர்வோர்கள் தாம் தினம் உபயோகிக்கும் அணிகலன்களைப் பயன்படுத்தி சிறிய மற்றும் பெரிய மதிப்பிலான பரிவர்த்தனைகளை மேற்கொள்ளச் செய்வதற்காக தொடங்கப்பட்டது.
- ❖ இது நியோகிரெட் எனப்படும் நிதித் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு நிறுவனம் மற்றும் சேஷாசாய் எனப்படும் தயாரிப்பு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து தொடங்கப் பட்டுள்ளது.




## NAPRE




- ❖ மத்திய சுகாதார மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் மான்சுக் மாண்டவ்யா மற்றும் மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத் துறை அமைச்சர் பர்சோத்தம் ரூபலா ஆகியோர் இணைந்து 2030 ஆம் ஆண்டுக்குள் நாய்களால் பரவும் வெறி நாய்க்கடி நோயினை ஒழிப்பதற்கான ஒரு தேசிய செயல் திட்டத்தினை (National Action plan for Dog mediated rabies elimination by 2030 – NAPRE) வெளியிட்டனர்.

- இது 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 அன்று உலக வெறிநாய்க்கடி நோய் தினத்தன்று வெளியிடப்பட்டது.
- இந்தச் செயல்திட்டமானது 2030 ஆம் ஆண்டுக்குள் வெறிநாய்க்கடி நோயினை ஒழிப்பதற்கான ஒரு செயல்முறையாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

## PM POSHAN திட்டம் தொடர்ச்சி




- பள்ளிகளில் PM POSHAN திட்டத்தினைத் தொடர்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இத்திட்டமானது மத்திய அரசினால் நிதி வழங்கப்படும் ஒரு திட்டமாகும்.
- இத்திட்டமானது மேலும் 5 ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும்.
- 2021-22 முதல் 2025-26 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இத்திட்டம் பயனளிக்கும்.

## ஹருன் இந்தியா பணக்காரர்கள் பட்டியல் – 2021

- ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத் தலைவர் முகேஷ் அம்பானி தொடர்ந்து 10வது ஆண்டாக ஹருன் இந்தியா பணக்காரர்கள் பட்டியலில் முதலிடத்தினைப் பிடித்து உள்ளார்.
- அதானி குழுமத் தலைவர் கௌதம் அதானி 2வது இடத்தினைப் பிடித்துள்ளார்.
- சிவ் நாடார் & HCL டெக்னாலஜீஸ் குழுமமானது 3வது இடத்தினைப் பிடித்துள்ளது.

| INDIA A-LISTERS: Hurun India Rich List 2021 | | | |
|---|---|---|---|
| **India Rank (Global Rank)** | | **Net worth ($bn)** | **Company** |
| 1(8) | Mukesh Ambani | 83 | Reliance Industries |
| 2(48) | Gautam Adani & family | 32 | Adani |
| 3(58) | Shiv Nadar & family | 27 | HCL |
| 4(104) | Lakshmi N Mittal | 19 | ArcelorMittal |
| 5(113) | Cyrus Poonawalla | 18.5 | Serum |
| 6(117) | Hinduja Brothers | 18 | Hinduja |
| 7(154) | Uday Kotak | 15 | Kotak Mahindra Bank |
| 8(160) | Radhakishan Damani & family | 14.5 | Avenue Supermarts |
| 9(185) | Jay Chaudhry | 13 | Zscaler |
| 10(194) | Dilip Shanghvi & family | 12.5 | Sun Pharmaceutical Industries |

*Source: 10th Edition of Hurun Global Rich List 2021 Report*

## நிலையான நிதி மீதான நிபுணர் குழு

- சர்வதேச நிதியியல் சேவை மைய ஆணையமானது ஒரு நிபுணர் குழுவினை அமைத்துள்ளது.
- சர்வதேச நிதியியல் சேவை மையங்களில் நிலையான நிதி மையங்களை உருவாக்குவதற்கான ஓர் அணுகுமுறையை இக்குழு பரிந்துரைத்துள்ளது.
- இக்குழுவின் தலைவர் C.K. மிஷ்ரா என்பவராவார்.
- C.K. மிஷ்ரா இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகத்தின் முன்னாள் செயலாளர் ஆவார்.
- இக்குழுவானது தலைவர் மற்றும் உறுப்பினர் செயலாளருடன் சேர்த்து மொத்தம் 10 உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

## இந்திய நாட்டின் வெளிநாட்டுக் கடன்

- ஜுன் மாத இறுதியில் இந்திய நாட்டின் வெளிநாட்டுக் கடன் 571.3 பில்லியன் டாலராக இருந்தது.
- 2021 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் இருந்த அதன் அளவை விட 1.6 பில்லியன் டாலர் அதிகரித்ததாக தற்போது பதிவாகியுள்ளது.
- இருப்பினும் 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை 21.1 சதவீதமாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வெளிநாட்டுக் கடன் ஆகியவற்றுக்கு இடையேயான விகிதமானது ஜுன் மாத இறுதியில் 20.2% ஆகக் குறைந்துள்ளது.

## தேசியச் சொத்து மறு சீரமைப்பு நிறுவனம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது ரூ.6000 கோடி மதிப்பிலான தேசியச் சொத்து மறு சீரமைப்பு நிறுவனத்திற்கு உரிமம் வழங்கி உள்ளது.
- இந்த நடவடிக்கையானது வாராக் கடன் வங்கியின் செயல்பாடுகளைத் தொடங்க உதவும்.
- தேசியச் சொத்து மறு சீரமைப்பு நிறுவனமானது பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த பிறகு 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மும்பை நகரில் நிறுவப்பட்டது.
- வாராக் கடன் வங்கியை நிறுவும் பணியானது இந்திய வங்கிகள் சங்கத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.




## உலகளாவிய நிதித் தொழில்நுட்ப விழா 2021

- 2வது உலகளாவிய நிதித் தொழில்நுட்ப விழாவினை (2021) இந்தியா ஏற்பாடு செய்து உள்ளது.
- இந்த ஆண்டிற்கான இவ்விழாவின் கருத்துரு, "நிதித் தொழில்நுட்பம் : உலக டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு அதிகாரமளித்தல்" என்பதாகும்.
- இந்த விழாவானது இந்தியத் தேசியப் பணவழங்கீட்டுக் கழகம், நிதித் தொழில்நுட்ப ஒருங்கிணைப்புச் சபை மற்றும் இந்திய இணையதளம் & கைபேசிக் கூட்டமைப்பு ஆகியவற்றால் இந்தியப் பணவழங்கீட்டுச் சபையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப் பட்டது.



## எல்லைகளைக் கடந்த வரி ஆய்வாளர்கள்




- எல்லைகளைக் கடந்த வரி ஆய்வாளர்கள் என்ற திட்டமானது செசல்ஸ் நாட்டில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்திய நாடானது இந்தத் திட்டத்தின் ஒரு பங்குதார நிர்வாக நாடாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பிற்கு ஆதரவாக இந்தியா தனது வரி நிபுணத்துவத்தினை அதற்கு வழங்கும்.

## கோடக் மஹிந்திரா வங்கி




- கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட் தனது வங்கிக் கட்டமைப்பின் மூலம் நேரடி மற்றும் மறைமுக வரிகளை வசூலிப்பதற்கு அரசிடம் அனுமதி பெற்றுள்ளது.
- அவற்றுள் வருமான வரி, சரக்கு மற்றும் சேவை வரி போன்றவையும் அடங்கும்.
- இத்துடன் இந்த ஒப்புதலைப் பெற்ற முதல் பட்டியலிடப்பட்ட தனியார் துறை வங்கியாக கோடக் மஹிந்திரா வங்கி மாறியுள்ளது.

## உலக முதலீட்டாளர்கள் வாரம்

- சர்வதேசப் பத்திரங்கள் ஆணைய அமைப்பானது (International Organization of Securities Commissions – IOSCO) 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 04 முதல் அக்டோபர் 10 வரையிலான தனது 5வது வருடாந்திர உலக முதலீட்டாளர்கள் வாரத்தினைத் தொடங்கி வைத்தது.
- இது IOSCO என்ற அமைப்பினால் ஊக்குவிக்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இந்த இரண்டு முக்கியப் பகுதிகளில் பத்திர ஒழுங்குமுறை அமைப்புகள் மேற்கொள்ளும் பல்வேறு முன்னெடுப்புகளைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்கும் வேண்டி மேற்கொள்ளப் படுவதாகும்.
- 2021 ஆம் ஆண்டிற்கான IOSCOவின் உலக முதலீட்டாளர்கள் வாரப் பிரச்சாரமானது இரண்டு கருத்துருக்களை அடிப்படையாகக் கொண்டது.
- அவையாவன,
    - நீடித்த நிலையான நிதி மற்றும்
    - மோசடி மற்றும் ஊழல் தடுப்புகள்




## நாணயக் கொள்கை குழுவின் அறிவிப்புகள்

- இந்திய ரிசர்வ் வங்கியின் 3 உறுப்பினர்கள் கொண்ட நாணயக் கொள்கை குழுவானது இசைவு நிலைப்பாடுகளைக் கடைபிடித்து, 4% ரெப்போ வீதத்தை மாற்றாமல் வைத்திருக்கிறது.
- இது கோவிட்-19 தொற்றின் தாக்கத்தைக் குறைத்து வளர்ச்சியை மீட்டு அதனை நிலை நிறுத்துவதற்கான ஒரு முடிவாகும்.
- பணவீக்கமானது வரம்பிற்குள் இருப்பதையும் நாணயக் கொள்கைக் குழு உறுதி செய்துள்ளது.
- தலைகீழ் ரெப்போ வீதமும், முன்பைப் போலவே 3.35 சதவீதமாக வைக்கப் பட்டுள்ளது.
- விளிம்பு நிலை வசதி (மேம்படுத்தப் பட்ட கடன் வசதி) மற்றும் வங்கி வீதம் ஆகியவையும் 4.25 சதவீதத்தில் இருந்து மாற்றாமல் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- கொள்கை வீதத்தில் இந்திய ரிசர்வ் வங்கி தொடர்ந்து 8வது முறையாக இந்த நிலைப்பாட்டைக் கடைபிடிக்கிறது.

## இந்தியாவில் இணைய சங்கேதப் பணத் தொழில்துறை




- இணைய சங்கேதப் பணத் தொழில்நுட்பத் தொழில்துறையானது இந்தியாவில் 2030 ஆம் ஆண்டில் 241 மில்லியன் டாலர்களையும் உலகளவில் 2026 ஆம் ஆண்டில் 2.3 பில்லியன் டாலர்களையும் எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- WazirX நிறுவனத்துடன் இணைந்து நாஸ்காம் (Nasscom) நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்ட 'இந்தியாவில் இணைய சங்கேதப் பணத் தொழில்துறை' என்ற அறிக்கையில் இத்தகவல் கூறப்பட்டுள்ளது.
- இந்தியாவிலுள்ள 60%க்கும் மேற்பட்ட மாநிலங்கள் இணைய சங்கேதப் பணத் தொழில்நுட்ப ஏற்பு மாநிலங்களாக உருவாகி வருவதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- இந்தச் சந்தையானது 2030 ஆம் ஆண்டுக்குள் 8,00,000க்கும் மேலான வேலை வாய்ப்பினை உருவாக்கும் திறனைக் கொண்டுள்ளது.

## இந்தியப் பொருளாதாரம் – உலக வங்கியின் அறிக்கை



- 2021-22 ஆம் நிதி ஆண்டில் இந்தியப் பொருளாதாரம் 8.3% என்ற அளவு வரை உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- “Shifting Gears : Digitization and Services – Led Development” என்று தலைப்பிடப்பட்ட உலக வங்கியின் அறிக்கையில் இந்தத் தகவல் கூறப்பட்டுள்ளது.
- கோவிட்-19 தொற்றிற்கு எதிரான தடுப்பூசி செலுத்தும் வேகம் மற்றும் வேளாண் & தொழிலாளர் சீர்திருத்தங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவது போன்றவற்றைப் பொருத்து அடுத்த நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வாய்ப்புகள் நிர்ணயிக்கப் படும்.
- 2021-22 ஆம் நிதி ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் (ஏப்ரல்-ஜுன்) இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 20.1% வரை உயர்ந்துள்ளது.
- 2020-21 ஆம் நிதி ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் கொரோனா வைரசின் காரணமாக விதிக்கப்பட்ட தேசிய அளவிலான பொது முடக்கத்தினால் இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 24.4 வரை சுருங்கியது.

## குறைந்தபட்ச பெருநிறுவன வரி


- இந்தியா உட்பட 136 நாடுகள், அவை வருமானம் ஈட்டும் சந்தைகளில் 15% என்ற குறைந்த பட்ச அளவிலான பெருநிறுவன வரிவிகிதத்தினையும் பெரு நிறுவனங்களின் லாபத்தின் மீது வரி விதிக்கும் ஒரு சமமான முறையையும் அமல்படுத்திட ஒப்புக் கொண்டன.
- ஆப்பிள், ஆல்பாஃபெட் மற்றும் ஃபேஸ்புக் போன்ற பெரிய பன்னாட்டு நிறுவனங்களும் நைக் மற்றும் ஸ்டார்பக்ஸ் போன்றவையும் வரி செலுத்துவதைத் தவிர்ப்பதற்காக குறைந்த வரி வரம்புகளின் மூலம் இலாபம் ஈட்டுகின்றன.
- இந்தப் புதிய திட்டமானது பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது லாப பரிமாற்ற நடவடிக்கைக்கான வாய்ப்புகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலகளாவிய பலபரிமாண வறுமை குறியீடு – 2021

- இந்த குறியீடானது “ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு” மற்றும் “ஆக்ஸ்ஃபோர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முன்னெடுப்பு” ஆகியவற்றால் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையானது 5.9 பில்லியன் மக்களை உள்ளடக்கிய 109 நாடுகளில் பல பரிமாண வறுமையின் நிலை மற்றும் அதன் அமைப்பை ஆய்வு செய்கிறது.

### *இந்தியாவின் நிலை*

- இந்தியாவில் 9.4% மக்கள் தொகையைக் கொண்ட பட்டியலினப் பழங்குடியினர் சமுதாயமானது ஏழ்மை நிலையில் உள்ளது.
- 129 மில்லியன் மக்களில் 65 மில்லியன் மக்கள் பலபரிமாண வறுமை நிலையில் உள்ளனர்.
- 283 மில்லியன் அளவிலான பட்டியலினச் சாதியினர் சமுதாயத்தில் 94 மில்லியன் பேர் பலபரிமாண வறுமை நிலையில் வாழ்கின்றனர்.




## ஒன்றிணைந்த சிறு நிதியியல் வங்கி

- இந்திய ரிசர்வ் வங்கியானது ஒன்றிணைந்த சிறு நிதியியல் வங்கிக்கு வங்கிச் செயல்பாட்டிற்கான உரிமத்தினை வழங்கியுள்ளது.
- இந்த வங்கியானது சென்ட்ரம் நிதிச் சேவை நிறுவனம் மற்றும் ரிசிலியன்ட் இன்னோவேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (பாரத்பே) ஆகிய நிறுவனங்களால் இணைந்து உருவாக்கப்பட்டது.
- ஒரு வங்கியை நிறுவுவதற்கு இரு பங்குதாரர்கள் சமமான முறையில் ஒன்றிணைவது இதுவே முதல்முறையாகும்.

## உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம்

- இந்த அறிக்கையானது சர்வதேச நாணய நிதியத்தினால் வெளியிடப்படுகிறது.
- இந்த அறிக்கையானது 2021 ஆம் ஆண்டில் லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபிய நாடுகளின் வளர்ச்சிக் கணிப்புகளை மேம்படுத்தியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் உலக நாடுகளின் பொருளாதாரமானது 9% வரை வளர்ச்சி அடைந்துள்ளதாக சர்வதேச நாணயம் நிதியம் கூறுகிறது.
- 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இது 6% ஆக உயரும் என எதிர்பார்க்கப்பட்டது.
- கோவிட் – 19 தொற்று நோய் தொடர்ந்து நீடிப்பதால் பொருளாதார வளர்ச்சி இன்னும் அந்த நிலைமைகளுக்கு ஏற்பவே உள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் 4.9% வளர்ச்சி இருக்கும் என சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கிறது.

## இன்டஸ்இன்ட் வங்கி

- மத்திய நேரடி வரிகள் வாரியம் மற்றும் மத்திய மறைமுக வரி மற்றும் சுங்கவரி வாரியம் ஆகியவற்றின் சார்பாக நேரடி மற்றும் மறைமுக வரிகளை வசூலிப்பதற்கு இன்டஸ்இன்ட் வங்கியிடம் இந்திய ரிசர்வ் வங்கி அங்கீகாரம் வழங்கியுள்ளது.
- இதன்மூலம் இந்த வங்கியின் வாடிக்கையாளர்கள் 'இன்டஸ்நெட்' மற்றும் 'இன்டஸ்மொபைல்' போன்ற தளங்கள் மூலம் தங்கள் நேரடி மற்றும் மறைமுக வரிகளைச் செலுத்த முடியும்.

## கோடக் மஹிந்திரா வங்கி – மைக்ரோ ஏ.டி.எம்

- தனியார் வங்கி நிறுவனமான கோடக் மஹிந்திரா வங்கியானது நாடு முழுவதும் மைக்ரோ (சிறு) தானியங்கி பணம் வழங்கும் (ஏ.டி.எம்) இயந்திரங்களைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- பணம் பெறும் அட்டைகளை வைத்துள்ள அனைத்து வங்கி வாடிக்கையாளர்களும் பணம் எடுத்தல் மற்றும் கணக்கு நிலுவைகளைச் சரிபார்த்தல் போன்ற முக்கிய வங்கிச் சேவைகளுக்கு வேண்டி கோடக் மைக்ரோ ஏ.டி.எம். இயந்திரங்களை உபயோகிக்கலாம்.
- ஏ.டி.எம். இய்னதிரங்களின் சிறிய அளவு வடிவமான மைக்ரோ ஏ.டி.எம் இயந்திரங்கள் ஒரு சிறிய கையடக்கச் சாதனமாகும்.
- இந்த வங்கியானது மைக்ரோ ஏ.டி.எம். இயந்திரங்களைத் தொடங்க, அதன் விரிவான வணிகத் தொடர்பாளர் கட்டமைப்பினைப் பயன்படுத்துகிறது.

## நேரடி வரி வசூல் - கரூர் வைஸ்யா வங்கி

- மத்திய நேரடி வரிகள் வாரியம் சார்பாக நேரடி வரிகளை வசூலிக்க கரூர் வைஸ்யா வங்கிக்கு இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி வழங்கி உள்ளது.
- அனுமதி பெற்ற பிறகு, நேரடி வரிகளை வசூலிப்பதற்கு மத்திய நேரடி வரிகள் வாரியத்துடன் கரூர் வைஸ்யா வங்கி தனது ஒருங்கிணைப்புச் செயல்முறையைத் தொடங்கியது.
- இந்த ஒருங்கிணைப்பானது தனது வாடிக்கையாளர்களை எந்தவொரு வங்கிக் கிளைகள்/இணைய வங்கி/ கைபேசி வங்கிச் சேவைகள் (Dlite கைபேசிச் செயலி) மூலம் நேரடி வரிகளைச் செலுத்த வழி வகுக்கும்.

## நப்சன்ரக்சான்

- தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியானது, வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகளுக்காக ரூ.1000 கோடி அளவிலான கடன் உறுதி நிதி அறக்கட்டளை அமைப்பினை உருவாக்குவதாக அறிவித்துள்ளது.
- இது வேளாண் உற்பத்தியாளர் அமைப்பிற்கு கடன் உறுதியினை வழங்குவதற்கான ஒரு பிரத்தியேக நிதியாகும்.

- இந்த நிதியானது நப்சன்ரக்சான் டிரஸ்ட் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் ஆதரவின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த நிறுவனமானது முழுவதும் தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் ஒரு துணை நிறுவனமாகும்.

## பான்க்அஸ்யூரன்ஸ் கூட்டிணைவு

- பார்தி AXA லைஃப் காப்பீட்டு நிறுவனமானது உத்கர்ஷ் சிறுநிதியியல் வங்கியுடன் பான்க்அஸ்யூசூரன்ஸ் என்ற கூட்டிணைவில் இணைந்துள்ளது.
- இது இந்தியா முழுவதும் வங்கிக் கட்டமைப்பு மூலமாக ஆயுள் காப்பீட்டு வசதிகளை விநியோகிப்பதை உறுதி செய்வதற்கானதாகும்.
- இந்தக் கூட்டிணைவானது பார்த் AXA லைஃப் நிறுவனத்தினை காப்பீட்டு அமைப்புகளுடன் இணைந்து 2ஆம் நிலை மற்றும் 3ஆம் நிலை சந்தைகளை அடைய வழிவகுப்பதோடு இந்தியாவில் காப்பீட்டின் பரவலை அதிகரிக்கவும் உதவும்.

## 100 மில்லியன் டாலர் கடன் வசதி

- HDFC வங்கி, மாஸ்டர்கார்டு, அமெரிக்க சர்வதேச மேம்பாட்டு நிதியியல் கழகம் மற்றும் சர்வதேச மேம்பாட்டிற்கான அமெரிக்க முகமை ஆகியவை இந்தியாவின் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்காக வேண்டி 100 மில்லியன் டாலர் கடன் வசதியை வழங்கியுள்ளன.
- இந்தக் கடன் வசதியானது சர்வதேச மேம்பாட்டிற்கான அமெரிக்க முகமையின் உலகப் பெண்கள் பொருளாதார மேம்பாட்டு நிதி முன்னெடுப்பு மற்றும் இந்தியாவில் அதனுடைய கோவிட் – 19 நிவாரணப் பணிகள் ஆகியவற்றின் ஒரு பகுதியாகும்.

## ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி – வருடாந்திர சந்திப்பு

- மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் 6வது வருடாந்திரச் சந்திப்பில் பங்கேற்று உள்ளார்.
- இந்தச் சந்திப்பின் கருத்துரு, "இன்றைய முதலீடு நாளைய மாற்றம்" என்பதாகும்.
- இந்த ஆண்டின் சந்திப்பானது ஐக்கிய அரபு அமீரக அரசுடன் இணைந்து ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி தொடர்பான முக்கிய விஷயங்கள் மற்றும் அதன் எதிர்கால நோக்கம் தொடர்பான முக்கிய முடிவுகளை எடுப்பதே இந்த வருடாந்திரச் சந்திப்பின் முக்கிய நோக்கமாகும்.
- இந்திய நிதித் துறை அமைச்சர் "கோவிட்-19 நெருக்கடி மற்றும் கோவிட்-19 தொற்றிற்குப் பிந்தைய ஆதரவு" என்ற கருத்துரு பற்றிய தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார்.

## இணைய சங்கேதப் பண உரிமம் – அறிக்கை

- நைஜீரிய நாட்டின் இணையதளப் பயன்பாட்டாளர்கள் உலகிலேயே அதிகளவில் இணைய சங்கேதப் பண உரிமங்களை வைத்துள்ளனர்.
- இதனைத் தொடர்ந்து மலேசியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் உள்ளன.
- கம்பாரிசன் ஃபர்ம் ஃபைன்டர் என்ற அமைப்பின் தரவுகளின் அடிப்படையில் இது கூறப் பட்டுள்ளது.
- ஜப்பான் இப்பட்டியலில் மிகக்குறைவான இடத்தினைப் பெற்றுள்ளது.
- இதில் இந்தியா 7வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- இணைய சங்கேதப் பணம் வைத்துள்ள இந்தியர்களில் சுமார் 57% பேர் பிட்காயினில் முதலீடு செய்துள்ளனர் என்று 2021 ஆம் ஆண்டு இணைய சங்கேதப் பண ஏற்புக் குறியீடு கூறுகிறது.

## எலான் மஸ்க்

- டெஸ்லா நிறுவனத்தின் இணை நிறுவனரும் அதன் தலைமை நிர்வாக அலுவலருமான எலான் மஸ்க் உலகின் பணக்கார மனிதராக உருவெடுத்துள்ளார்.
- 300 பில்லியன் டாலர் நிகர மதிப்பினை எட்டிய முதல் நபர் இவரே ஆவார்.
- இவர் 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 25 அன்று மட்டும் 36 பில்லியன் டாலரை தனது சொத்து மதிப்பில் சேர்த்தார்.
- ப்ளூம்பெர்க் கோடீஸ்வரர்கள் குறியீட்டானது வரலாற்றில் இதுவரையில் இல்லாத மிகப்பெரிய ஒற்றைத் தின இலாபம் என்று இதனைக் குறிப்பிட்டுள்ளது.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கருவிழி மாற்று சிகிச்சைக்கு மாற்றுமுறை

- ஹைதராபாத்தின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது உபயோகமற்ற கரு விழிகளிலிருந்து ஒரு ஹைட்ராஜெல்லினை உருவாக்கியுள்ளது.
- கார்னியல் மாற்று அறுவை சிகிச்சைக்குப் பதிலாக இதனைப் பயன்படுத்தலாம்.
- இதற்கான ஆராய்ச்சிக் குழுவிற்கு இந்த நிறுவனத்தின் உயிரி மருத்துவப் பொறியியல் துறையில் பணி புரியும் துணைப் பேராசிரியர் டாக்டர் பல்குனி பதி என்பவர் தலைமை ஏற்றார்.





## மிகக் குறைவான செலவில் ஹைட்ரஜன் உற்பத்தி

- சூரிய ஒளி மற்றும் நீர் ஆகிய நிலையான வள ஆதாரங்களைப் பயன்படுத்தி கணிசமான அளவில் ஹைட்ரஜனை உற்பத்தி செய்யும் ஒரு மிகப்பெரிய உலையினை அறிவியலாளர்கள் முதன்முறையாக வடிவமைத்துள்ளனர்.
- இது செலவு குறைவான மற்றும் நிலையான செயல்முறையாகும்.
- இந்தச் செயல்முறைக்காக கார்பன் நைட்ரைடுகள் எனப்படும் புவியில் அதிகம் காணப்படும் வேதிப்பொருளை ஒரு வினையூக்கியாகப் பயன்படுத்தியுள்ளனர்.


## லூசி மிஷன் – ட்ரோஜன் குறுங்கோளுக்கு அனுப்பப்பட்ட முதல் விண்கலம்

- நாசா நிறுவனமானது வியாழன் கோளின் ட்ரோஜன் குறுங்கோளை ஆய்வு செய்வதற்கான முதல் விண்கலமான லூசியினை அட்லஸ்-V என்ற ராக்கெட் மூலம் விண்ணில் ஏவ உள்ளது.
- இது சூரிய மண்டலத்தின் பூர்வீகம் பற்றிய நுண்ணறிவுகளைச் சேகரிப்பதற்கான ஒரு விண்கலமாகும்.

- மனித இனத்தின் பரிணாம வளர்ச்சியைப் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கிய ஒரு பழங்கால புதைப்படிவத்தின் நினைவாக இந்த ஆய்விற்கு “லூசி” எனப் பெயரிடப் பட்டது.




## செவ்வாய் உலாவி விண்கலம்




- இந்திய நாட்டின் செவ்வாய் உலாவி விண்கலமானது தனது சுற்றுப்பாதையில் 7 வருடங்களை நிறைவு செய்துள்ளது.
- இது அதனுடைய நிர்ணயிக்கப்பட்ட ஆயுட்காலத்தை விட 6 மாதங்கள் அதிகமாக செயல்பட்டுள்ளது.
- இந்த விண்கலமானது இஸ்ரோவின் முதலாவது வேற்றுக் கோள்களுக்கு அனுப்பப் பட்ட ஒரு விண்கலமாகும்.
- 2013 ஆம் ஆண்டு நவம்பர் 05 அன்று விண்ணில் ஏவப்பட்ட இந்த ஆய்வுக்கலமானது 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 அன்று மேற்கொள்ளப்பட்ட அதன் முயற்சியிலேயே செவ்வாய்க் கிரகத்தின் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது.

## DART விண்கலம்

- அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா, "குறுங்கோள் அழிப்பு – இரட்டை குறுங்கோள் திசைதிருப்பு சோதனை விண்கலத்தை" (asteroid-killing Double Asteroid Redirection Test (DART) spacecraft) ஏவ உள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்த விண்கலமானது குறுங்கோள் மோதல்களுக்கு எதிராக ஒரு பாதுகாப்பு அமைப்பினை உருவாக்கும் கருத்தின் அடிப்படையிலானதாகும்.
- இந்த விண்கலமானது ஸ்பேஸ்X நிறுவனத்தின் ஃபால்கன் 9 ராக்கெட்டின் மூலம் விண்ணில் ஏவப்படும்.
- இது கலிஃபோர்னியாவிலுள்ள வான்டன்பெர்க் விண்வெளிப் படைத் தளத்திலிருந்து விண்ணில் ஏவப்படும்.




## உலகின் முதல் மலேரியா தடுப்பு மருந்து – மாஸ்குயிரிக்ஸ்





- உலக சுகாதார அமைப்பானது "RTS, S/ASOI" அல்லது மாஸ்குயிர்க்ஸ் எனப்படும் மலேரியா தடுப்பு மருந்தினை ஆப்பிரிக்காவில் பயன்படுத்துவதற்கு வேண்டி ஒப்புதல் அளித்துள்ளது.
- RTS, S/ASOI என்பது உலகின் முதல் மலேரியா தடுப்பு மருந்தாகும்.
- இந்தத் தடுப்பு மருந்தானது 1987 ஆம் ஆண்டில் GSK எனப்படும் மருந்து உற்பத்தி நிறுவனத்தினால் முதன்முதலில் உருவாக்கப்பட்டது.
- இது கானா, கென்யா மற்றும் மலாவி என்ற மூன்று ஆப்பிரிக்க நாடுகளில் ஒரு சோதனை அடிப்படையில் பரிசோதிக்கப் பட்டது.

## ஸ்டார்ஸ்கேப்ஸ்

- ஸ்டார்ஸ்கேப்ஸ் என்ற நிறுவனமானது உத்தரகாண்ட் மாநிலத்தில் ஒரு பொது ஆய்வகத்தினைத் தொடங்கியுள்ளது.
- ஸ்டார்ஸ்கேப்ஸ் எக்ஸ்பீரியன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட 'ஸ்டார்கேட் ஆய்வகம் பீம்டால்' எனும் இந்த புதிய ஆய்வகமானது பீம்டால் எனுமிடத்தில் அமைந்துள்ளது.
- இதன் மூலம் சுற்றுலாப் பயணிகள் ஒரு முழுமையான வானியல் அனுபவத்தினைப் பெறுவர்.

## சமவெப்ப அச்சு வடிப்பு தொழில்நுட்பம்





- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது விமான என்ஜின்களுக்கான முக்கியத்துவம் வாய்ந்த சம வெப்பநிலைக்கு அண்மையிலான ஒரு அச்சு வடிப்புத் தொழில்நுட்பத்தினை உருவாக்கியுள்ளது.
- சமவெப்பநிலை அச்சு வடிப்பு முறையானது ஒரு மூடப்பட்ட முறையிலான வார்ப்பு செயல்முறை ஆகும்.
- இங்கு வார்ப்புகளும் வேலைப்பாடு செய்யப்பட வேண்டிய பொருள்களும் ஒரே வெப்பநிலைக்கு வெப்பப்படுத்தப்படும்.
- இந்தத் தொழில்நுட்ப உருவாக்கத்தின் மூலம் இது போன்ற முக்கிய விமான எஞ்ஜின் கூறுகளை உருவாக்கும் திறனுடைய உலகளாவிய எஞ்சின் உற்பத்தி நிறுவனம் கூட்டமைப்பில் இந்தியா இணைந்துள்ளது.


## புளூட்டோவின் வளிமண்டலம்

- புளூட்டோ என்ற குள்ளக் கோளானது சூரியனிடமிருந்து வெகுதொலைவில் நகரும் போது அதன் வளிமண்டலம் மறைந்து போகிறது என்பதற்கான ஆதாரங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பனிக்கட்டி நிறைந்த இந்தக் குள்ளக் கோளின் வளிமண்டலமானது பெருமளவில் நைட்ரஜனால் ஆனது.

❖ இந்தக் குள்ளக் கோளானது குயிப்பர் பட்டையில் உள்ளது.




## இந்தியப் பெருங்கடலின் இருதுருவம் – கணிப்பு




❖ ஹைதராபாத் பல்கலைக்கழகத்தின் புதிய ஆய்வானது அடுத்த 5 முதல் 10 ஆண்டுகளுக்கான பருவமழை முன்னறிவிப்பினை முன்னதாகவே கணிப்பதற்கான, இந்தியப் பெருங்கடலின் இரு துருவத்திற்கான பத்தாண்டு கால கணிப்புத் திறன்களை கண்டறிந்துள்ளதாகக் கூறியுள்ளது.

❖ இரண்டு மாதிரி முறைகளானது 10 ஆண்டுகள் வரையிலான கணிசமான கணிப்பு திறன்களை வழங்குகின்றன என்று கண்டறியப்பட்டது.

❖ அந்த இரு மாதிரிகளாவன : ஜப்பான் நாட்டின் MIROCS மற்றும் கனடா நாட்டின் CanCM4 ஆகியனவாகும்.

❖ இந்தியப் பெருங்கடலின் இரு துருவமானது (இந்திய நினோ என்றும் அழைக்கப் படுகிறது) கடல்பரப்பு வெப்பநிலையில் ஒரு ஒழுங்கற்ற அலைவு (irregular oscillation) முறையாகும்.

## சூரிய மண்டலத்தின் வெளிப்புறத்திலிருந்து வரும் சமிக்ஞைகள்



- நெதர்லாந்தில் அமைந்துள்ள உலகின் மிகப்பெரிய சக்திவாய்ந்த ரேடியோ அலைவாங்கியான (antenna) குறை அதிர்வெண் வரிசை (Low – frequency Array – LoFAR) அமைப்பானது சூரிய மண்டலத்தின் வெளிப்புறத்திலிருந்து வரும் சமிக்ஞைகளைச் சேகரித்தது.
- முதன்முறையாக இவர்கள் 19 தொலைதூர குள்ளக் கோள்களிலிருந்து சில சமிக்ஞைகளைக் கண்டறிந்துள்ளனர்.
- அவற்றில் 4 குள்ளக் கோள்கள், தன்னைச் சுற்றி வரும் வகையிலான கோள்களைக் கொண்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.
- இந்த நட்சத்திரங்களைச் சுற்றி, மறைந்திருக்கும் கோள்கள் இருப்பதை இந்த நிகழ்வு குறிக்கிறது.
- மேலும் புவியைத் தவிர சூரிய மண்டலத்தில் (அ) அதற்கு அப்பாற்பட்ட பகுதியில் வாழ்வதற்கான சூழல் இருக்கிறதா என்ற கேள்விக்கும் இதன் மூலம் பதிலளிக்க இயலும்.

## மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு

- 1000 Mwh அளவிலான மாதிரி மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பினை நிறுவுவதற்கான ஒரு ஈடுபாட்டு அறிக்கையினைப் பெறுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மாதிரித் திட்டமானது ஆற்றல் அமைச்சகம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத் தக்க ஆற்றல்துறை அமைச்சகத்தின் கூட்டு முயற்சியாகும்.
- இந்தியாவில் ஆற்றல் சேமிப்பு அமைப்பினை நிறுவுவதற்கான செயல்திட்டத்தை வழங்குவதற்காக இரு அமைச்சகங்களும் செயலாற்றி வருகின்றன.
- இது புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட 2030 ஆம் ஆண்டுக்குள் 450 GW புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இலக்கை அடைவது என்ற உயர் இலக்கினை அடைவதை ஆதரிப்பதற்கான ஒரு திட்டமாகும்.

## லயோசெல் இழை

- லென்சிங் குழுமமானது இத்தாலி நாட்டின் ஆரஞ்சு ஃபைபர் என்ற நிறுவனத்துடன் இணைந்து ஆரஞ்சுப் பழத்தோல்களிலிருந்து லயோசெல் இழையினை உருவாக்கி உள்ளது.

- லயோசெல் இழை என்பது பருத்தி அல்லது பட்டு இழைக்குப் பதிலாக பயன்படுத்தப் படும் ஒரு பகுதியளவு செயற்கை இழையாகும்.
- சிட்ரஸ் கழிவுகளைப் பயன்பாட்டிற்கு உட்படுத்த ஆரஞ்சு இழை உதவும்.



## சூரியக் கண்காணிப்புச் செயற்கைக்கோள்

- சீன நாடானது தனது முதலாவது சூரியக் கண்காணிப்புச் செயற்கைக் கோளினை விண்ணில் ஏவியது.
- இது வடக்கு சான்சி மாகாணத்திலுள்ள தையூவான் செயற்கைக் கோள் ஏவு தளத்திலிருந்து (Taiyuan Satellite Launch Centre) லாங் மார்ச் 2D ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.
- 550 கிலோ கிராம் எடையுள்ள ஷிஹி (Xihe) செயற்கைக் கோளானது 3 ஆண்டுகளுக்கு சூரியச் செயல்பாடுகளைக் கண்காணிக்கும்.

## சென்சோ – 13

- 6 மாத கால வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு விண்வெளிப் பயணத்திற்காக மூன்று விண்வெளி வீரர்களை ஏந்திச் செல்லும் சென்சோ – 13 என்ற விண்கலத்தினை சீனா விண்ணில் ஏவியது.
- இந்த விண்கலமானது கன்சூ என்ற வடக்கு மேற்கு மாகாணத்திலுள்ள ஜியுவான் என்ற செயற்கைக் கோள் ஏவுதளத்திலிருந்து லாங் மார்ச் 2F ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.
- இந்த விண்கலமானது தியான்ஹே பெட்டகத்துடன் இணைக்கப்படும்.

## லூசி விண்கலம்

- வியாழன் கோளினுடைய டிரோஜன் குறுங்கோளைப் பற்றி ஆய்வு செய்வதற்கான தனது முதல் விண்கலத்தினை நாசா விண்ணில் ஏவியது.
- இந்த விண்வெளி ஆய்வுக் கலமானது லூசி என அழைக்கப்படுகிறது.
- லூசி திட்டம் என்பது அதிக எண்ணிக்கையிலான குறுங்கோள்களை ஆய்வு செய்வதற்கான 12 ஆண்டு கால ஆய்வுப் பயணமாகும்.

## புரோஸ்டேட் புற்றுநோய் சிகிச்சை

- கான்பூரின் இந்திய தொழில்நுட்பக் கல்வி கழகத்தின் ஒரு குழுவானது புரோஸ்டேட் புற்றுநோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்கு DLX1 மரபணு என்ற ஒரு புதிய இலக்கினை அடையாளம் கண்டுள்ளது.
- புரோஸ்டேட் புற்றுநோயின் வளர்ச்சி மற்றும் உருவாக்கத்தில் DLX1 மரபணு ஒரு முக்கியப் பங்கினை வகிப்பதாக இந்தக் குழு கண்டறிந்துள்ளது.
- அந்தக் குழுவானது புரதத்தை உருவாக்கும் DLX1 மரபணுவினை மரபணு ரீதியாக நீக்கிய போது புற்றுநோய் செல்களின் வளர்ச்சி, உருவாக்கம் மற்றும் உடலின் பிற பாகங்களுக்கு பரவுதல் போன்ற திறன்களில் பாதிப்பு ஏற்பட்டது.
- புரோஸ்டேட் புற்றுநோய் செல்களில் DLX1 மரபணுக்களின் அளவு அதிகரிப்பதற்கு ஆண்ட்ரோஜன் ஏற்பி மற்றும் இணைவு மரபணுப் பொருளான ERG ஆகியவையே காரணம் என இக்குழு மேலும் நிரூபித்துக் காட்டியது.
- மேலும் புரோமோடோமைன் மற்றும் எக்ஸ்ட்ரா டெர்மினல் என்ற புரதமானது ஆண்ட்ரோஜன் ஏற்பி மற்றும் ERG ஆகிய இரண்டின் செயல்பாட்டிற்கும் உதவுகிறது எனவும் அக்குழு கண்டறிந்தது.

## புதிய சேவை வழங்கீட்டு (Server) சில்லு


- அலிபாபா குரூப் ஹோல்டிங் லிமிடெட் நிறுவனமானது மேம்படுத்தப்பட்ட 5-நானோ மீட்டர் தொழில்நுட்பம் அடிப்படையில் ஒரு புதிய சேவை வழங்கீட்டுச் சில்லினை அறிமுகம் செய்துள்ளது.
- இது குறைகடத்தி (semi conductor) தயாரிப்பில் சீன நாட்டின் தன்னிறைவில் ஒரு மைல்கல்லினைக் குறிக்கிறது.
- இந்தப் புதிய சில்லானது சாஃப்ட் பாங்க் குருப் கார்ப்பரேசன் (SoftBank Group Corporation) வழங்கிய நுண்கட்டமைப்பின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப் பட்டது.



## பன்றியிலிருந்து மனிதனுக்குப் பொருத்தப்படும் சிறுநீரகம்

- முதன்முறையாக மரபணு மாற்றப்பட்ட ஒரு பன்றியிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சிறுநீரகத்தினை ஒரு மனித நோயாளிக்கு வைக்கும் அறுவைச் சிகிச்சையினை அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் வெற்றிகரமாக செய்து முடித்தனர்.

- ஆல்ஃபா-கால் (alpha-gal) என்ற ஒரு சர்க்கரை மூலக்கூறினை உற்பத்தி செய்யாத வகையில் மரபணு மாற்றப்பட்ட ஒரு பன்றியிடமிருந்து இந்தச் சிறுநீரகத்தினை அறிவியலாளர்கள் பெற்றனர்.
- ஆல்ஃபா-கால் மனித நோயெதிர்ப்பு மண்டலத்தைத் தாக்கி, உடல் உறுப்பினை நிராகரித்திட உடலினைத் தூண்டும்.
- மேலும் சிறுநீரகம் பொருத்தப்பட்டவரின் உடல் உடனடியாக அந்த சிறுநீரகத்தை நிராகரிக்க வில்லை.
- மேலும், சிறுநீரகம் இணைக்கப்பட்ட பல மணி நேரங்களுக்கு அது சாதாரணமாக செயல்பட்டது.




## நாசா DART திட்டம்

- நாசா நிறுவனமானது இரட்டை குறுங்கோள் திசை திருப்பு சோதனைத் திட்டத்தைத் தொடங்க தயாராகி வருகிறது.
- இது, ஒரு குறுங்கோளுடன் பூமி மோதுவதைத் தடுப்பதற்காக தொழில்நுட்பங்களைக் கொண்டு கோள்களின் பாதுகாப்பிற்காக இயக்கப்படும் ஒரு பரிசோதனை ஆகும்.
- இந்தத் திட்டமானது 2021 ஆம் ஆண்டு நவம்பர் 24 அன்று கலிபோர்னியாவிலுள்ள வான்டன்பெர்க் விண்வெளிப் படைத் தளத்திலிருந்து ஸ்பேஸ் X பால்கன் 9 என்ற ராக்கெட்டின் மூலம் விண்ணில் ஏவப்படும்.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## ரக்தமிச்சைஸ் மும்பா


- இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தினைச் சேர்ந்த நான்கு அறிவியலாளர்கள் குழு ஒன்று, பார்வையற்ற நன்னீர் வாழ் (ஈல்) விலாங்கு மீன் இனத்தினைக் கண்டறிந்து உள்ளது.
- இந்தப் புதிய விலாங்கு மீன் வகையானது மகாராஷ்டிராவின் மும்பை பகுதியில் கண்டறியப் பட்டுள்ளது.
- இந்த விலாங்கு மீன் இனமானது மண்ணிற்கு அடியில் புதைந்து வாழும் பார்வையற்ற நன்னீர் வாழ் மீன் இனம் என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.
- மகாராஷ்டிரா மற்றும் மேற்கு தொடர்ச்சி மலையின் வடக்குப் பகுதிகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட முதல் இனம் இதுவாகும்.
- இந்த இனம் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தின் நினைவாக ரக்தமிச்சைஸ் மும்பா எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- இது இந்திய நாட்டினைப் பிறப்பிடமாகக் கொண்ட ரக்தமிச்சின் இனத்தைச் சேர்ந்த 5வது இனமாகும்.

## ஆகஸ்ட் 2021 – வெப்பமான மாதம்

- கடந்த 142 ஆண்டுகளில் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமானது 6வது வெப்பமான மாதமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்காவின் சுற்றுச்சூழல் தகவல் பகுப்பாய்விற்கான தேசியப் பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாக அமைப்பின் தேசிய மையத்தினால் இத்தகவல் வழங்கப் பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டானது வட துருவ அரைக்கோளத்தில் 2வது வெப்பமான கோடைக் காலமாக பதிவாகியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டானது வட துருவ அரைக்கோளத்தில் வெப்பமான கோடைக் காலமாக பதிவாகியுள்ளது.


## பருவநிலை சேவை நிலை 2021 : நீர்வள அறிக்கை

- உலக வானிலை அமைப்பானது இந்த அறிக்கையினை வெளியிட்டது.
- உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, பருவ நிலை மாற்றமானது வெள்ளப் பெருக்கு மற்றும் வறட்சி போன்ற நீர் சம்பந்தமான இடர்களை அதிகரிக்கிறது.
- நீர் பற்றாக்குறையால், பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கையையும் பருவநிலை மாற்றம் அதிகரிக்கச் செய்கிறது.
- புவியிலுள்ள நீரில் 0.5 சதவீதம் மட்டுமே உபயோகிக்கத் தக்கது என்பதாலும் மற்றும் அது நன்னீர் என்பதாலும் இந்த நிலைமை மோசம் அடைந்து வருவதாகவும் இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.





## CAF எல்லை சார்ந்த நாடுகளின் சந்திப்பு

- காணொலி வாயிலாக நடைபெற்ற 2 நாள் அளவிலான மத்திய ஆசிய வான்வழி எல்லை சார்ந்த நாடுகளின் சந்திப்பானது சமீபத்தில் நடத்தப் பட்டது.
- வான்வழி என்பது ஓர் ஒற்றை (அ) புலம்பெயர்ந்த உயிரினங்களின் குழு அதன் வருடாந்திர வாழ்நாள் சுழற்சியை நிறைவு செய்வதற்கான ஒரு புவியியல் பகுதி ஆகும்.
- வருடாந்திர வாழ்நாள் சுழற்சியில் இனப்பெருக்கம், வளர்ப்பு, நிலை தங்குதல் மற்றும் இனப்பெருக்கம் அல்லாத நிலை ஆகியவை அடங்கும்.
- மத்திய ஆசிய வான்வழியானது ஆர்க்டிக் மற்றும் இந்தியப் பெருங்கடல்களுக்கு இடைப்பட்ட யுரேசியாவின் மிகப்பெரியப் பரப்பினை உள்ளடக்கியது ஆகும்.
- இதில் இந்தியா உட்பட 30 நாடுகள் அடங்கும்.



## ஷாஹீன் புயல்





- ❖ குலாப் மற்றும் ஷாஹீன் ஆகிய புயல்கள் தெற்கு மற்றும் மேற்கு ஆசியாவில் கணிசமான சேதத்தை ஏற்படுத்திய வகையில் தொடர்ச்சியாக உருவான வெப்ப மண்டலப் புயல்களாகும்.
- ❖ குலாப் புயலானது கிழக்கு இந்தியாவைத் தாக்கியது.
- ❖ ஷாஹீன் புயலானது பாகிஸ்தான், ஈரான், ஓமன் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளைத் தாக்கியது.
- ❖ 2021 ஆம் ஆண்டு வட இந்திய புயல் பருவத்தில் 3வது பெயரிடப்பட்ட புயல் குலாப் புயலாகும்.
- ❖ வங்காள விரிகுடாவில் தோன்றிய குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையிலிருந்து குலாப் புயல் தோன்றியது.
- ❖ இந்தியாவின் ஆந்திரப் பிரதேசப் பகுதியில் குலாப் புயல் கரையைக் கடந்தது.
- ❖ இந்தப் புயல் அமைப்பானது தொடர்ந்து மேற்கு நோக்கி நகர்ந்து, அரபிக்கடலில் மையம் கொண்டது.
- ❖ இந்தப் புயலமைப்பானது மீண்டும் ஒரு புயல் காற்றாக உருவெடுத்தது.
- ❖ இந்திய வானியல் துறை இதற்கு ஷாஹீன் எனப் பெயரிட்டது.
- ❖ ஓமன் வளைகுடாவை அடைந்த போது இப்புயல் மெல்ல மெல்ல வலுப் பெற்றது.
- ❖ இப்புயலானது 1 ஆம் வகை புயலுக்குச் சமமாக ஓமனில் ஒரு அரிதான நிகழ்வாக கரையைக் கடந்தது.
- ❖ பாகிஸ்தான் நாட்டினால் பரிந்துரைக்கப்பட்ட குலாப் என்ற பெயருக்கு உருது/இந்தி மொழியில் ரோஜா என்று பொருள் ஆகும்.
- ❖ கத்தார் நாட்டினால் பரிந்துரைக்கப்பட்ட ஷாஹீன் என்ற பெயருக்கு அரபு மொழியில் பருந்து (falcon) என்று பொருளாகும்.

## உலக பவளப்பாறை கண்காணிப்பு கட்டமைப்பு

- ❖ உலக பவளப்பாறை கண்காணிப்பு கட்டமைப்பானது உலகம் முழுவதுமுள்ள பவளப் பாறைகளின் நிலை குறித்து ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்த அறிக்கையானது 13 ஆண்டுகளில் முதல்முறையாக உலக வெப்பமயமாதலின் மோசமான விளைவுகளைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

- கடந்த 10 ஆண்டுகளில் உலகம் தனது பவளப்பாறைகளில் சுமார் 14 சதவீதத்தினை இழந்துள்ளது.
- கடலின் மேற்பரப்பு வெப்பநிலை உயர்வினால் ஏற்படும் பவள வெளுப்பு நிகழ்வுகள் தான் பவளப்பாறை அழிவிற்கு ஒரு முக்கியக் காரணமாகும்.
- திடமான பவளப்பாறைப் பரவலில் சீரான சரிவு ஏற்பட்டுள்ளது.
- திடமான பவளப்பாறைப் பரவலானது பவளப்பாறைகளின் ஒரு ஆரோக்கியமான நிலையைக் குறிக்கும்.
- பவளப்பாறை முகடுகளில் பாசிகள் உருவாவது அந்த அமைப்புகளின் மீதான பாதிப்பினைக் குறிக்கும் ஒரு அறிகுறியாகும்.
- 2010 ஆம் ஆண்டு முதல் உலகின் பவளப்பாறைகள் மீது பாசி உருவாகும் அளவானது 20% வரை உயர்ந்துள்ளது.




## பருவநிலை நிதி வழங்கல் இலக்கு

- ஆசிய மேம்பாட்டு வங்கியானது 2019-2030 ஆகிய காலகட்டத்தில் தனது வளர்ந்து வரும் உறுப்பினர் நாடுகளுக்கும் வழங்கும் பருவநிலை நிதிவழங்கல் இலக்கினை 20 பில்லியன் டாலர் உயர்த்தி 100 பில்லியன் டாலராக அதிகரிப்பதாக அறிவித்துள்ளது.


- முன்பாக 2018 ஆம் ஆண்டில் ஆசியாவின் வளர்ந்து வரும் நாடுகளுக்கு 2019-30 காலகட்டத்திற்கான பருவநிலை நிதி வழங்கலுக்காக 80 பில்லியன் டாலர் என்ற இலக்கினை ஆசிய மேம்பாட்டு வங்கி அறிவித்தது.
- 20 பில்லியன் டாலர் கூடுதல் நிதி உதவியானது குறைந்த கார்பன் ஆற்றல் வளங்கள், பருவநிலை ஏற்புத் திட்டங்கள் மற்றும் தனியார் துறை திட்டங்கள் போன்ற பருவநிலை தணிப்பு முயற்சிகளுக்குப் பயன்படுத்தப்படும்.

## பயிர் எரிப்பினால் ஏற்படும் உமிழ்வு

- புளூ ஸ்கை அனாலிட்டிக்ஸ் எனப்படும் ஒரு பருவநிலை தொழில்நுட்பத் தொடக்க நிறுவனமானது பயிர் எரிப்பினால் ஏற்படும் உமிழ்வு குறித்த அறிக்கை ஒன்றினை வெளியிட்டது.
- இந்த அறிக்கையில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- 2015-2020 ஆண்டுகளில் உலகின் மொத்த உமிழ்வில் 13 சதவீதமானது இந்தியாவின் பங்கு என இந்த அறிக்கை கூறுகிறது.
- 2020 ஆம் ஆண்டில் மட்டும் பயிர் எரிப்பின் மூலம் இந்தியா 12.2% உமிழ்வினை வெளியிட்டுள்ளதாக இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

## பருவநிலை மீதான தேசிய நுண்ணறிவு மதிப்பீடு

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது இந்தியாவினை "பருவநிலை குறித்த கவலை அளிக்கும் நாடுகள்" என்று வகைப்படுத்தியுள்ளது.
- இது பருவநிலை மீதான தேசிய நுண்ணறிவு மதிப்பீடு என்ற ஒரு அறிக்கையில் குறிப்பிடப் பட்டது.
- இது பருவநிலை குறித்த தன்னளவில் இது போன்ற முதல் அறிக்கையாகும்.
- இது தேசிய நுண்ணறிவு இயக்குநரகத்தின் அமெரிக்க அலுவலகத்தினால் ஒருங்கிணைக்கப் பட்டது.




## சுகாதாரம் மற்றும் பருவநிலை மாற்றம் மீதான லான்செட் கவுன்ட் டவுன்

- கடந்த 5 ஆண்டுகளில் அதிக வெப்பநிலைக்கு அதிகம் பாதிப்புக்குள்ளாகும் மக்களை அதிகம் கொண்ட 5 நாடுகளுள் ஒன்றாக இந்தியா உள்ளது.

- 1990 ஆம் ஆண்டை விட தற்போது இந்தியா 15% வரையில் அதிக வெப்பநிலையால் பாதிக்கப்படக் கூடிய ஒரு நாடாக மாறியுள்ளது.
- இந்த மதிப்பீடுகளானது சுகாதாரம் மற்றும் பருவநிலை மாற்றம் மீதான லான்செட் கவுன்ட் டவுன் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- இது தி லான்செட் எனப்படும் மருத்துவ இதழின் ஒரு பிரதான அறிக்கையாகும்.





## சவுதி பசுமை முன்னெடுப்பு மன்றம்

- சவுதியின் இளவரசர் முகமது பின் சல்மான் ரியாத் நகரில் இந்த மன்றத்தினைத் திறந்து வைத்துள்ளார்.
- மேலும் உலக மீத்தேன் உறுதிப்பாட்டில் சவுதி அரேபியா இணைவதாகவும் அவர் அறிவித்தார்.
- சவுதி அரேபியா உலகின் முன்னணி எண்ணெய் ஏற்றுமதி நாடாகும்.
- இது அமெரிக்காவின் இலக்கிற்கு அடுத்து 10 ஆண்டுகள் கழித்து 2060 ஆம் ஆண்டுக்குள் நிகர சுழிய அளவிலான பசுமை வீட்டு வாயு உமிழ்வினை அடைய இலக்கு நிர்ணயித்துள்ளது.
- உலகின் 2வது மிகப்பெரிய வாயு உமிழ்வு நாடான அமெரிக்கா 2050 ஆம் ஆண்டுக்குள் நிகர சுழிய நிலையை அடைய உறுதி பூண்டுள்ளது.
- உலகின் மிகப்பெரிய மற்றும் 3வது மிகப்பெரிய வாயு உமிழ்வு நாடுகளான சீனாவும் இந்தியாவும் இந்தக் காலவரையறைக்கு வேண்டி ஒரு உறுதியினை மேற்கொள்ள வில்லை.
- நிகர சுழியம் என்பது தான் பிடிப்பதை விட குறைவாக பசுமை இல்ல வாயுக்களை வெளியிடுவதாகும்.

## சுழிய நிகர கார்பன் உமிழ்வு – 2050

- 2050 ஆம் ஆண்டிற்குள் நிகர கார்பன் உமிழ்வினை சுழியமாக்குவதற்கான ஒரு இலக்கினை உறுதி செய்வதற்கு வேண்டி அரசின் ஒரு இளநிலை கூட்டணி விதித்த நிபந்தனைகளை ஆஸ்திரேலிய அமைச்சரவை பரிசீலிக்க உள்ளது.
- ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரிசன், அந்த நாட்டின் பசுமை இல்ல வாயுவின் உமிழ்வினைக் குறைப்பதற்கான ஒரு உயர்லட்சியத் திட்டத்தை மேற்கொள்ள விரும்புவதால் இந்த உறுதிப்பாடு ஆஸ்திரேலியாவிற்கு முக்கியமானதாகும்.

- ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற உள்ள ஐ.நா. உச்சி மாநாட்டின் பின்னணியில் இது மேற்கொள்ளப் படுகிறது.




## ஆசியாவின் பருவநிலை அறிக்கை 2020

- வெப்பமண்டலப் புயல்கள், வெள்ளங்கள் மற்றும் வறட்சிகளின் காரணமாக இந்தியா சராசரியாக ஆண்டுக்கு 87 பில்லியன் டாலர் வரையிலான இழப்பினைச் சந்தித்து உள்ளது.
- ஆசியாவின் பருவநிலை அறிக்கையில் (2020) இது கூறப்பட்டுள்ளது.
- உலக வானிலை அமைப்பானது இது போன்ற முதல்வகையிலான ஒரு பல நிறுவன அறிக்கையினை வெளியிட்டது.
- சீன நாடானது அதிகபட்ச சராசரி வருடாந்திர இழப்பினைக் கண்டுள்ளது.
- இதனைத் தொடர்ந்து இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உள்ளன.
- அதிகபட்ச சராசரி வருடாந்திர இழப்பானது அதிக வறட்சியுடன் தொடர்புடையது.
- 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில் இந்தியா மற்றும் வங்காளதேசம் இடையேயுள்ள சுந்தரவனப் பகுதியைத் தாக்கிய அம்பன் புயல் இந்தியாவில் 2.4 மில்லியன் மக்களையும் வங்காளதேசத்தில் 2.5 மில்லியன் மக்களையும் இடம்பெயரச் செய்தது.

## உலகப் பருவநிலைத் தொழில்நுட்ப முதலீட்டின் போக்கு

- 2016 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்கான பருவநிலை தொழில் நுட்ப முதலீட்டின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட 10 முன்னணி நாடுகளில் இந்தியா 9வது இடத்தைப் பெற்றுள்ளது.
- லண்டன் & பார்ட்னர்ஸ் மற்றும் அதன் இணை அமைப்புகளால் வெளியிடப்பட்ட “பாரீஸ் உடன்படிக்கையின் முதல் 5 ஆண்டுகளில்: உலகப் பருவநிலைத் தொழில் நுட்ப முதலீட்டின் போக்கு” என்ற அறிக்கையின் படி இது கூறப்பட்டுள்ளது.
- இந்தியப் பருவநிலைத் தொழில்நுட்ப நிறுவனங்களானது இந்தக் காலகட்டத்தில் துணிகர முதலீட்டு நிதியில் 1 பில்லியன் டாலர்களைப் பெற்றுள்ளன.
- இந்தப் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்திலும் சீனா 2வது இடத்திலும் உள்ளன.

# மாநிலச் செய்திகள்

## மருத்துவக் கல்லூரிகள் – இராஜஸ்தான்

- ராஜஸ்தானில் நிறுவப்பட உள்ள 4 புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அடிக்கல் நாட்டினார்.
- இந்த 4 கல்லூரிகள் பன்ஸ்வாரா, சிரோஹி, ஹனுமன்கர் மற்றும் தௌசா ஆகிய இடங்களில் அமைக்கப்பட உள்ளன.
- மேலு ஜெய்ப்பூரின் சித்தாப்பூரா எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள பெட்ரோலிய வேதிப்பொருள் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினையும் அவர் திறந்து வைத்தார்.

## அலிபாக் வெள்ளை வெங்காயம்



- மகாராஷ்டிராவின் அலிபாக் வெள்ளை வெங்காயத்திற்கு சமீபத்தில் புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.
- இந்த வெங்காயமானது தனித்துவமான இனிப்புச் சுவை, கண்ணீர் வரவழைக்காத காரணி மற்றும் மருத்துவக் குணம் போன்றவற்றைக் கொண்டுள்ளது.

## இலவங்கப்பட்டை சாகுபடி

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் கழகத்தின் இமாலய உயிரி வள தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது இமாச்சலப் பிரதேசத்தில் இலவங்கப்பட்டை சாகுபடியை சோதனை முறையில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இத்துடன், ஒரு முறையான இலவங்கப் பட்டை சாகுபடியைத் தொடங்கிய முதல் இந்திய மாநிலமாக இமாச்சலப் பிரதேசம் மாறியுள்ளது.
- அசல் இலவங்கப் பட்டையானது இலங்கையில் முதன்மையாகப் பயிரிடப்படுகிறது.
- இலவங்கப் பட்டை உற்பத்தியை சிறிய அளவில் செய்யும் நாடுகள்: செசல்ஸ், மடகாஸ்கர் மற்றும் இந்தியா ஆகியவனவாகும்.

## வாடா கோலம் அரிசி

- மகாராஷ்டிராவின் பால்கார் மாவட்டத்தில் உள்ள வாடா எனுமிடத்தில் பரவலாகப் பயிரிடப் படும் ஓர் அரிசி வகைக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

- வாடா கோலம் அரிசியானது சினி (அ) ஜினி அரிசி எனவும் அழைக்கப்படுகிறது.
- இது பால்கார் மாவட்டத்தின் வாடா தாலுக்காவில் வளர்க்கப்படும் வெள்ளை நிறத்திலான ஒரு பாரம்பரிய தானிய வகையாகும்.

## எடையூர் மிளகாய் மற்றும் குட்டியாத்தூர் மாங்காய்



- கேரள மாநிலத்தின் எடையூர் மிளகாய் மற்றும் குட்டியாத்தூர் மாங்காய் ஆகியவற்றிற்குப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- எடையூர் மிளகாய் ஆனது குறைந்தது 150 வருடங்களாக இங்குப் பயிரிடப்படுகிறது.
- குட்டியாத்தூர் மாங்காய் ஒரு பிரபலமான சுவை மிக்க பாரம்பரிய மாங்கனியாகும்.

## கம்பிவட (கயிற்றுவட) சேவைகள் – வாரணாசி

- பொதுப் போக்குவரத்தில் கம்பிவடச் சேவையைப் பயன்படுத்த உள்ள முதல் இந்திய நகரமாக வாரணாசி விரைவில் மாற உள்ளது.
- இந்தக் கம்பிவடப் போக்குவரத்தானது கண்ட் இரயில்வே நிலையம் (வாரணாசி சந்திப்பு) முதல் தேவாலய சதுக்கம் (கோடவுலியா) வரை கட்டமைக்கப்பட உள்ளது.
- போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக வேண்டி இந்த நடவடிக்கை மேற் கொள்ளப் பட உள்ளது.
- பொலிவியா மற்றும் மெக்சிகோ ஆகிய நகரங்களுக்கு அடுத்தபடியாக பொதுப் போக்குவரத்தில் கம்பிவடச் சேவையைக் கொண்ட 3வது உலக நாடாக இந்தியா மாற உள்ளது.

## ஃபிஷ்வாலே செயலி

- அசாம் மாநிலத்தின் மீன்வளம், சுற்றுச்சூழல், வனம் மற்றும் கலால் வரித் துறை அமைச்சர் பரிமல் சுக்லபத்யா 'ஃபிஷ்வாலே' என்ற செயலியை வெளியிட்டார்.
- இது இந்தியாவின் முதலாவது இணையதள மீன் சந்தையாகும்.
- இது அஸ்ஸாம் மாநில மீன்வளத் துறையுடன் இணைந்து அக்வாஃபுளூகுளோபல் அக்வாகல்சர் சொலுயூசன்ஸ் பிரைவேட் லிமிடெட் (Aqua Blue Global Aquaculture Solutions Pvt. Ltd.) என்ற நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.




## கவச குண்டல் திட்டம்

- மகாராஷ்டிரா அரசானது கவச குண்டல் திட்டம் என்ற 7 நாள் அளவிலான சிறப்பு கோவிட்-19 தடுப்பூசி வழங்கல் இயக்கத்தைத் தொடங்கியது.
- ஒவ்வொரு நாளும் 15 லட்சம் மக்களுக்குத் தடுப்பூசி வழங்கும் நோக்கத்தோடு இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டமானது அக்டோபர் 15 ஆம் தேதிக்குள் 100 கோடி பேருக்குத் தடுப்பூசி வழங்க வேண்டும் என்ற மத்திய அரசினுடைய இலக்கின் ஓர் அங்கமாகும்.

## பதுகம்மா பண்டிகை

- தெலங்கானாவில் 9 நாள் அளவிலான மலர் பண்டிகை தொடங்கியது.
- பதுகம்மா பண்டிகையானது துர்கா நவராத்திரியின் போது கொண்டாடப்படுகிறது.
- இந்தப் பண்டிகையானது மஹாலய அமாவாசை தினத்தில் தொடங்கி 9 நாட்கள் வரை நடைபெறுகிறது.
- இது துர்காஷ்டமி நாளில் நிறைவடைகிறது.



## ஸ்வேச்சா திட்டம்

- ஆந்திரப் பிரதேச மாநில முதல்வர் Y.S. ஜகன்மோகன் ரெட்டி 'ஸ்வேச்சா' என்ற திட்டத்தினைத் தொடங்கி வைத்துள்ளார்.
- 'ஸ்வேச்சா' என்பது (சுதந்திரம் என்று பொருள்) பதின்ம வயது சிறுமிகள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு விலை மலிவான ஆரோக்கியம் மற்றும் மாதவிடாய் சார்ந்த சுகாதாரம் ஆகியவற்றைப் பெற உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவிகளுக்கு நல்ல தரமான தயாரிப்பு நிறுவனத்தின் சானிட்டரி நாப்கின்களை மாநில அரசு இலவசமாக வழங்க உள்ளது.

## மின்னணு வாக்குப் பதிவு செயல்முறை – தெலங்கானா

- தெலங்கான மாநில தேர்தல் ஆணையமானது "கைபேசி சார்ந்த மின்னணு வாக்குப் பதிவு முறையின்" சோதனை ஓட்டத்தை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.
- இந்தியாவில் கோவிட்-19 பெருந்தொற்றுக் காலங்களில் தேர்தல்களை நடத்துவதன் அவசியம் காரணமாக இந்த முறையானது உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த முறையானது வெற்றி பெற்றால் வீட்டில் இருந்த படியே திறன்பேசிகளைப் பயன்படுத்தி வாக்களிக்க இயலும்.
- இதன் சோதனை ஓட்டமானது அக்டோபர் 20 அன்று தெலங்கானாவின் கம்மம் மாவட்டத்தில் நடைபெற உள்ளது.
- இது இந்தியாவின் முதலாவது ஸ்மார்ட்போன் அடிப்படையிலான மின்னணு வாக்குப் பதிவு செயல்முறையாக விளங்கும்.




## அதிரப்பள்ளி நீர் மின் திட்டம்




- திருச்சூர் மாவட்டத்தில் உள்ள சாலக்குடி ஆற்றுப் படுகையில் முன்மொழியப்பட்ட 163 மெகா வாட் அதிரப்பள்ளி நீர் மின் திட்டத்தை கேரள அரசு ரத்து செய்துள்ளது.
- தமிழ்நாட்டின் ஆனைமலைப் பகுதியில் உருவாகிற சாலக்குடி ஆறு என்பது பெரியார் ஆற்றின் துணை நதியாகும்.
- சாலக்குடி ஆற்றுப் படுகையில் பல்வேறு நீர் மின் திட்டங்கள் தொடங்கப்பட்டதால் காடர் பழங்குடிச் சமூகத்தினர் தொடர்ந்து இடப்பெயர்வை எதிர்கொண்டனர்.

## நாடு முழுவதும் ஆற்று மீன்கள் வளர்ப்புத் திட்டம்




- இது 'பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY - Pradhan Mantri Matsya Sampada Yojana) என்ற திட்டத்தின் கீழ் ஒரு சிறப்பு நடவடிக்கையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

- ஹைதராபாத்தில் உள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியமானது இதற்கு ஒரு தலைமை அமைப்பாகும்.
- உத்தரப் பிரதேசத்துடன், ஒடிசா, உத்தரகாண்ட், திரிபுரா மற்றும் சத்தீஸ்கர் ஆகிய 4 மாநிலங்களும் இதில் பங்கேற்கின்றன.
- உத்தரப் பிரதேசத்தில் பிரிஜ்காட், டிக்ரி, மீரட், கர்முக்தேஷ்வர் மற்றும் பிஜ்னோர் ஆகிய 3 தளங்களில் 3 லட்சம் என்ற எண்ணிக்கையில் விரலளவு மீன்குஞ்சுகள் விடப் பட்டுள்ளன.
- இது மீன் வளர்ப்பின் ஒரு வடிவமாக இருப்பதோடு அதில் ஒரு மீன் இனத்தின் எண்ணிக்கையானது (சாலமன் போன்றவை) குறிப்பிட்ட இடத்தில் வளர்க்கப் படுகிறது.

## கம்பிவடப் போக்குவரத்துச் சேவைகள் – வாரணாசி

- உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியானது பொதுப் போக்குவரத்தில் கம்பிவடப் போக்குவரத்தினைப் பயன்படுத்திய முதல் இந்திய நகரமாக மாற உள்ளது.
- ஒட்டு மொத்தமாக, பொலிவியா மற்றும் மெக்சிகோ நகரத்தையடுத்து பொதுப் போக்குவரத்தில் கம்பிவடப் போக்குவரத்தினைப் பயன்படுத்திய உலகின் 3வது நகரமாக வாரணாசி திகழும்.
- இதற்கான பணிகளானது பொது-தனியார் மாதிரி முறையில் செயல்படுத்தப்படும்.
- இதற்கான செலவானது 80 : 20 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளிடையேப் பகிரப்படும்.

## வேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ் நிதி வழங்கும் அலகுகள் – உத்தரப் பிரதேசம் முதலிடம்

- பிரதான் மந்திரி வேலை வாய்ப்பு உருவாக்கத் திட்டத்தின் கீழ் நாட்டின் அதிகளவிலான அலகுகளுக்கு உத்தரப் பிரதேசம் நிதி வழங்கியுள்ளது.
- உத்தரப் பிரதேச அரசானது உச்சவரம்பு தொகையாக மொத்தம் ரூ. 123 கோடிக்கும் மேல் நிதி வழங்கியுள்ளது.
- இது பிரதான் மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டத்தின் கீழ், சுமார் 3,588 அலகுகளுக்குப் பல்வேறு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

## இணையதளத்தில் குடும்பஸ்ரீ தயாரிப்புப் பொருட்கள்

- குடும்பஸ்ரீ தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்தவும் விநியோகிக்கவும் வேண்டி ஓர் இணைய தளத்தினைத் தொடங்க கேரள அரசு முடிவு செய்துள்ளது.
- குடும்பஸ்ரீ தயாரிப்புப் பொருள் உட்பட சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவன அலகுகளால் தயாரிக்கப்படும் பொருட்கள் இத்தளத்தில் கிடைக்க பெறும்.
- இத்திட்டமானது மாநில அளவிலான ஆரம்ப மூலதன நிதி உதவித் திட்டத்தின் தொடக்கத்தின் போது அறிவிக்கப் பட்டது.
- இத்திட்டத்தின் கீழ், சுயஉதவிக் குழுக்களுக்கு உதவி வழங்கப்படும்.
- இந்தத் திட்டமானது பிரதான் மந்திரி சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்துதல் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக தொடங்கப் பட்டது.

## பயிர்த் தாளடியின் மூலம் ஆற்றல் (மின்சாரம்) உற்பத்தி

- பஞ்சாப் மாநிலத்தின் ஃபெரோஸ்பூரிலுள்ள சுக்பிர் அக்ரோ எனர்ஜி லிமிடெட் உயிரிப் பொருள் ஆலையானது (Sukhbir Agro Energy Limited biomass power plant) நெல் பயிர்த் தாளடியைக் கொண்டு மின்சாரத்தினை உற்பத்தி செய்கிறது.
- இந்த ஆலையின் இத்தகைய முயற்சியானது விவசாயிகளுக்குச் சாதகமாக கருதப் படுகிறது.
- அந்த ஆலையிடம் பயிர்த் தாளடிகளை விற்கும் விவசாயிகளுக்கு அதற்கானப் பணம் வழங்கப் படும்.

## பாஸ்கரப்தா

- அசாம் அரசின் அலுவல் நாள்காட்டியான சாகா மற்றும் கிரிகோரியன் போன்ற சகாப்தங்களோடு (Saka and Gregorian eras) பாஸ்கரப்தா என்ற சகாப்தமானது சேர்க்கப் பட உள்ளது.
- பாஸ்கரப்தா என்பது ஏழாம் நூற்றாண்டில் அம்மாநிலத்தின் உள்ளூர் அரசர் பொறுப்பேற்ற நாளிலிருந்து கணக்கிடப்படும் ஒரு சகாப்தமாகும்.
- பாஸ்கரப்தா சகாப்தமானது காமரூபா இராஜ்ஜியத்தின் தலைவராக பாஸ்கரவர்மன் முடி சூட்டப்பட்ட போது தொடங்கியது.
- கிரிகோரியன் நாட்காட்டியில் ஒரு நாளானது நள்ளிரவில் தொடங்குவது போலல்லாமல், அசாமிய நாட்காட்டியில் 24 மணி நேரத்தில் ஒரு சூரிய உதயத்தில் தொடங்கி அடுத்த சூரிய உதயத்தில் முடிவடைகிறது.
- பாஸ்கரப்தா மற்றும் கிரிகோரியன் ஆகியவற்றுக்கு இடையேயான இடைவெளி என்பது 593 வருடங்களாகும்.

## ஸ்ரீதன்வந்திரி மரபியல் மருத்துவ விற்பனைக் கூடத் திட்டம்

- சத்தீஸ்கர் மாநில முதல்வர் பூபேஷ் பாகல் காணொளி மூலம் இந்த திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இது மாநிலத்தில் வாழும் பாதிக்கப்பட கூடிய மக்களுக்கு தடையற்ற மருத்துவச் சேவைகளையும் குறைந்த விலையில் மரபியல் மருந்துகளையும் வழங்குவதற்கான ஒரு திட்டமாகும்.
- இத்திட்டமானது அம்மாநிலத்தின் நகர்ப்புற நிர்வாகம் மற்றும் மேம்பாட்டுத் துறை என்பதால் அமல்படுத்தப்படும்.

## ராணி சென்னம்மா ஜெயந்தி

- கர்நாடக மாநிலமானது அக்டோபர் 23 ஆம் தேதி அன்று கிட்டூர் ராணி சென்னம்மா ஜெயந்தியினைக் கொண்டாடியது.
- கிட்டூர் சென்னம்மா, 1778 ஆம் ஆண்டு அக்டோபர் 23 அன்று பிறந்தார்.
- இவர் லிங்காயத் என்ற சமூகத்தினைச் சேர்ந்தவர் ஆவார்.

- இவர் 1824 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக ஓர் ஆயுதம் ஏந்திய ஒரு கிளர்ச்சியை வழி நடத்தினார்.




## கோவா மாநிலத்தின் சமீபத்திய சாதனை

- கோவா மாநிலமானது திறந்தவெளி கழிப்பிடமற்ற மற்றும் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கிய மாநிலம் என்ற நிலையை அடைந்துள்ளது.
- 'ஹர் கர் ஜல் திட்டத்தின்' கீழ் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் வசதி வழங்கிய முதல் மாநிலமாகவும் கோவா மாறியுள்ளது.
- அது மட்டுமின்றி, ஏழை மற்றும் எளிய மக்களுக்கு இலவச ரேஷன் பொருட்களை வழங்குவதற்கான 100% இலக்கினையும் வழங்கியுள்ளது.

## இலவசக் கல்வித் திட்டம்

- ஹரியானா மாநில முதல்வர் மனோகர் லால் கட்டார், இலவசக் கல்வித் திட்டத்தினை அறிவித்தார்.
- மாநிலத்தில் கல்வி நிலையை மேம்படுத்துவதற்காக இத்திட்டமானது அறிவிக்கப் பட்டுள்ளது.
- ஆண்டிற்கு 1.80 லட்சம் ரூபாய்க்கும் குறைவான குடும்ப வருமானம் உடையவர்களுக்காக இத்திட்டமானது அறிவிக்கப் பட்டுள்ளது.
- இந்த அறிவிப்பானது ஹரியானாவின் "சூப்பர் 100 திட்டத்தின்" கீழ் அறிவிக்கப் பட்டது.

## ஃபைசாபாத் இரயில் சந்திப்பு

- உத்தரப் பிரதேச அரசானது ஃபைசாபாத் இரயில் சந்திப்பினை அயோத்யா கண்ட் ரயில்நிலையம் எனப் பெயர் மாற்ற முடிவு செய்துள்ளது.
- 1878 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட ஃபைசாபாத் இரயில் நிலையமானது வடக்கு ரயில்வே மண்டலத்தின் கீழ் இயங்குகிறது.
- பா.ஜ.க அரசானது அலகாபாத் என்ற பெயரை பிரயாக்ராஜ் எனவும் முகல்சாராய் ரயில்வே சந்திப்பினை பண்டிட் தீன்தயாள் உபத்யாய் சந்திப்பு எனவும் மாற்றி உள்ளது.

### வனவிலங்குச் செயல்திட்டம் – மகாராஷ்டிரா

- தனது சொந்த வனவிலங்குச் செயல்திட்டத்தினை (2021-30) வெளியிட்ட இந்தியாவின் முதல் மாநிலமாக மகாராஷ்டிரா மாறியுள்ளது.
- இந்தப் புதிய திட்டமானது அடுத்த 10 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.
- வனவிலங்கு, கடற்கரைச் சூழலமைவுகள், கடல்சார் உயிரிப் பல்லுயிர்ப்பெருக்கம், தாவரங்கள் மற்றும் விலங்குகள் மீது பருவநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்த கவலைகளை இது அடையாளம் காண்கிறது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### 2021 IHA புளூ பிளானட் பரிசு

- சிறந்த நிலையான நீர்மின் நிலைய மேம்பாட்டுத் திட்டத்திற்கான 2021 IHA புளூ பிளானட் பரிசானது இந்தியாவின் 510 MW திறனுடைய தீஸ்தா – V நீர்மின்நிலையத் திட்டத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.
- இந்த நீர்மின்நிலையமானது தேசிய நீர் மின்னாற்றல் கழக நிறுவனத்தினால் இயக்கப் படுகிறது.
- இந்தப் பரிசானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலக நீர் மின்னாற்றல் மாநாட்டில் சர்வதேச நீர் மின்னாற்றல் கூட்டமைப்பினால் வழங்கப் படுகிறது.
- தீஸ்தா – V நீர்மின் நிலையமானது சிக்கிம் மாநிலத்தில் பாயும் தீஸ்தா நதியில் அமைக்கப் பட்டுள்ளது.




### அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான சாந்தி சுவரூப் பட்நாகர் பரிசு – 2021

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் கழகத்தின் 80வது நிறுவன தினத்தன்று இந்தப் பரிசானது அறிவிக்கப் பட்டது.
- ஒவ்வொரு ஆண்டும் உயிரியல், வேதியியல், கணிதம், இயற்பியல், மருத்துவம், பொறியியல் மற்றும் புவி, வளிமண்டலம், பெருங்கடல் மற்றம் பூகோள அறிவியல் போன்ற துறைகளில் சிறப்பானப் பங்காற்றியதற்காக 45 வயதிற்கு உட்பட்ட விஞ்ஞானிகளுக்கு CSIR இந்த விருதினை வழங்கி வருகிறது.

- இந்தப் பரிசானது ரூ.5 லட்சம் ரொக்கப் பரிசினை உள்ளடக்கியதாகும்.





## லெப்டினன்ட் ஜெனரல் குர்பிர்பால் சிங்

- இவர் தேசிய மாணவர் படைப் பயிற்சி பட்டாளத்தின் 34வது தலைமை இயக்குநராக பதவி ஏற்றார்.
- லெப்டினன்ட் ஜெனரல் தருண் குமார் அய்ஸ் என்பவரை அடுத்து இவர் இந்தப் பொறுப்பினை ஏற்றுள்ளார்.
- இவர் 1987 ஆம் ஆண்டில் வான்குடை மிதவைப் படையில் சேர்க்கப் பட்டார்.



## 2021 யிடான் பரிசு

- பேராசிரியர் எரிக் A. ஹனுசெக் மற்றும் டாக்டர் ருக்மினி பானர்ஜி ஆகியோருக்கு 2021 ஆம் ஆண்டிற்கான யிடான் பரிசானது வழங்கப்பட்டுள்ளது.
- இந்தப் பரிசானது உலகின் மிக உயரியக் கல்வி விருதாக கருதப்படுகிறது.
- கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் கல்வி பயில்பவர்களின் திறனை மதிப்பிடுதல் போன்றவற்றிற்காக அவர்கள் ஆற்றிய சிறந்தப் பணிக்காக இந்த விருதானது வழங்கப்பட்டது.



## வாழ்வாதார உரிமைக்கான விருது 2021

- உலகளாவியப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் நபர்களுக்கு இந்த விருது கௌரவமளித்து அவர்களை ஊக்குவிக்கிறது.
- இந்த விருதானது "வனம் மற்றும் சுற்றுச் சூழலுக்கான சட்டப்பூர்வ முன்னெடுப்பு (LIFE)" என்ற டெல்லியைச் சார்ந்த சுற்றுச்சூழல் அமைப்பிற்கு வழங்கப்பட்டது.
- இந்த விருதானது ஸ்வீடனின் மாற்று நோபல் பரிசு எனவும் அழைக்கப்படுகிறது.
- LIFE அமைப்பானது அதன் பாதிக்கப்படக்கூடியச் சமூகத்தினர் தங்களது வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் தூய்மையான சூழலுக்கான உரிமையைக் கோருதல் போன்றவற்றில் அடிமட்ட அளவிலான அணுகுமறைக்காக இந்த விருதினைப் பெற்றுள்ளது.
- இந்த விருதினைப் பெற்ற மற்ற விருதாளர்கள்
    - மார்தே வாண்டோ
    - விளாடிமிர் ஸ்லிவியாக் மற்றும்
    - ஃப்ரெடா ஹுசன்



## கௌசலாச்சார்யா விருதுகள் 2021




- மத்தியக் கல்வித் துறை அமைச்சர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் காணொலி வாயிலாக 2021 ஆம் ஆண்டின் கௌசலாச்சார்யா விருதுகளை வழங்கினார்.
- திறன் சூழலமைப்பிற்கு முன்மாதிரியான பங்களிப்பினை ஆற்றிய 41 திறன் பயிற்சியாளர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.
- இந்த 41 பயிற்சியாளர்கள் பயிற்சித் தலைமை இயக்குநரகம், தொழிற்பயிற்சி, பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா, ஜன் சிக்சன் சன்ஸ்தான் மற்றும் இதரப் பயிற்சித் திட்டங்களில் பணியாற்றுபவராவர் ஆவர்.


## லோகப்பிரியா கோபிநாத் போர்தோலாய் விருது

- 2021 ஆம் ஆண்டிற்கான தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் தேசியப் பங்களிப்பிற்கான லோகப்பிரியா கோபிநாத் போர்தோலாய் விருதானது குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு அவர்களுக்கு வழங்கப்பட்டது.
- கஸ்தூரிபாய் காந்தி தேசிய நினைவு அறக்கட்டளையின் அசாம் கிளை மற்றும் எழுத்தாளர் நிரோட் குமார் பாருஹாவிற்கு ஷில்லாங் பிரிவு பாடகர் குழு (சாய்ர்) என்ற விருதானது வழங்கப்பட்டது.
- இந்த விருதானது அசாம் மாநிலத்தின் மிக உயரிய குடிமை விருதுகளுள் ஒன்றாகும்.
- இதில் ஒரு பாராட்டுப் பத்திரம் மற்றும் ரூ.5 லட்சம் பரிசுத் தொகை ஆகியவை அடங்கும்.
- இந்த விருதானது அசாம் மாநிலத்தின் முதலாவது முதலமைச்சர் லோகப்பிரியா கோபிநாத் போர்தோலாய் அவர்களின் நினைவாக வழங்கப் படுகிறது.



## இயற்பியலுக்கான நோபல் பரிசு – 2021

- ❖ சியுகுரோ மனாபே, கிளாஸ் ஹாசல்மேன் மற்றும் ஜார்ஜியோ பாரிசி ஆகியோருக்கு 2021 ஆம் ஆண்டிற்கான இயற்பியலுக்கான நோபல் பரிசானது வழங்கப்பட்டது.
- ❖ சிக்கலான இயற்பியல் அமைப்புகளைப் புரிந்து கொள்வதற்காக வேண்டி அவர்கள் ஆற்றிய சில அற்புதமான பங்களிப்பிற்காக இவர்களுக்கு இந்த விருதானது வழங்கப் பட்டது.
- ❖ இயற்பியலுக்கான நோபல் பரிசானது சுவீடனின் ஸ்டாக்ஹோம் எனுமிடத்தில் அமைந்த ராயல் ஸ்வீடிஸ் அகாடமியினால் வழங்கப்படுகிறது.
- ❖ புவியின் பருவநிலை குறித்த இயற்பியல் படிம முறையாக்கல், மாறுபாட்டை அளவிடுதல் மற்றும் புவி வெப்பமயமாதலை நம்பத்தகுந்த வகையில் கணித்தல் போன்றவற்றிற்காக சியுகுரோ மனாபே (அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம்) மற்றும் கிளாஸ் ஹாசல்மேன் (ஜெர்மனியின் ஹம்பர்க் நகரில் அமைந்த மேக்ஸ் பிளாங்க் வானியல் கல்வி நிறுவனம்) ஆகியோருக்கு விருது வழங்கப் பட்டுள்ளது.
- ❖ அணுவிலிருந்து கிரக அளவீடுகள் வரை இயற்பியல் அமைப்புகளில் ஏற்படும் சீர்குலைவு மற்றும் ஏற்ற இறக்கங்களைக் கண்டறிந்ததற்காக ஜார்ஜியோ பாரிசி (இத்தாலியின் ரோம் நகரிலுள்ள சாப்பியன்சா பல்கலைக்கழகம்) என்பவருக்கு விருது வழங்கப் பட்டது.





## நாட்டு நலப்பணித் திட்ட விருதுகள் 2019-20

- ❖ இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், 2019-20 ஆம் ஆண்டிற்கான நாட்டு நலப்பணித் திட்ட விருதுகளை வழங்கினார்.
- ❖ இந்த விருதுகள் வழங்கப்படுவதன் முக்கிய நோக்கமானது இந்தப் பணியினை ஆற்றுபவர்களின் தன்னார்வச் சேவையின் சிறப்பான பங்களிப்புகளை அங்கீகரித்து கௌரவம் அளிப்பதே ஆகும்.

- நாட்டு நலப் பணித் திட்ட விருதுகளானது 1993-94 ஆம் ஆண்டில் இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டது.
- நாட்டு நலப்பணித் திட்டத்தின் வெள்ளி விழாவின் போது இந்த விருது நிறுவப்பட்டது.

## இலக்கியத்திற்கான நோபல் பரிசு 2021

- இந்த ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஐக்கியப் பேரரசின் அப்துல்ரசாக் குர்னாஹ் என்பவருக்கு வழங்கப்பட்டது.
- காலனித்துவ விளைவுகளின் சமரசமற்ற, இரக்கமற்ற ஊடுருவல் மற்றும் கலாச்சாரங்களுக்கும் கண்டங்களுக்கும் இடையில் வளைகுடா பகுதியிலுள்ள அகதிகளின் நிலை ஆகியவை குறித்த அவரது படைப்புகளுக்காக வேண்டி இந்த விருதானது அவருக்கு வழங்கப்பட்டது.
- இலக்கியத்திற்கான நோபல் பரிசானது சுவீடனின் ஸ்டாக்ஹோம் என்னுமிடத்தில் அமைந்துள்ள ஸ்வீடீஸ் அகாடமி என்ற நிறுவனத்தால் வழங்கப்படுகிறது.




## டேனியல் கிரேக்

- புகழ்பெற்ற ஜேம்ஸ் பாண்ட் திரைப்பட நடிகரான டேனியல் கிரேக் என்பவருக்கு கலிஃபோர்னியாவின் "Star on the Hollywood walk of fame" என்ற பெருமை (பட்டம்) வழங்கப் பட்டுள்ளது.
- கிரேக் 2006 ஆம் ஆண்டில் "கேசினோ ராயல்" என்ற படத்தில் ஜேம்ஸ் பாண்ட் கதாபாத்திரத்தில் நடிக்க தொடங்கினார்.
- பின்னர் "குவாண்டம் ஆஃப் சோலஸ்" (2008), "ஸ்கைபால்" (2012) மற்றும் "ஸ்பெக்டர்" (2015) போன்ற பிற படங்களிலும் நடித்தார்.
- "நோ டைம் டு டை" என்பது ஜேம்ஸ் பாண்டாக அவர் நடித்த 5வது மற்றும் இறுதிப் படமாகும்.




## 2021 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு




- நார்வே நாட்டின் நோபல் குழுவானது மரியா ரேசா மற்றும் டிமிட்ரி முரட்டோவ் ஆகியோருக்கு அமைதிக்கான நோபல் பரிசினை வழங்க முடிவு செய்துள்ளது.
- ஜனநாயகம் மற்றும் நீடித்த அமைதிக்கான முன்னிலையாக விளங்கும் கருத்து சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான அவர்களின் முயற்சிகளுக்காக இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- பிலிப்பைன்ஸ் நாட்டில் நிலவும் அதிகார துஷ்பிரயோகம், வன்முறையைக் கையாளுதல் மற்றும் அதிகரித்து வரும் சர்வாதிகாரம் போன்றவற்றை வெளிப்படுத்த மரியா ரேசா கருத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்தினார்.
- ரஷ்யாவில் அதிகரித்து வரும் சவால் மிக்க சூழ்நிலைகளிலும் பல தசாப்தங்களாக பேச்சுச் சுதந்திரத்தினை டிமிட்ரி முரட்டோவ் காத்து வருகிறார்.

## ஃபோர்ப்ஸ் இந்தியா பணக்காரர் பட்டியல் 2021

- ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் தலைவர் முகேஷ் அம்பானி இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
- இந்தப் பட்டியலானது இந்தியாவின் 100 பணக்காரர்களைப் பட்டியலிடுகிறது.
- 2008 ஆம் ஆண்டு தொடங்கி தற்போது வரை முகேஷ் அம்பானி தொடர்ந்து 14வது ஆண்டாக இப்பட்டியலில் தனது நிலையைத் தக்க வைத்துள்ளார்.
- அதானி குழுமத் தலைவர் கௌதம் அதானி இப்பட்டியலில் 2வது இடத்தினைப் பெற்றுள்ளார்.
- சிவ் நாடார் இதில் 3வது இடத்தினைப் பெற்றுள்ளார்.




## கர்நாடகா விகாஷ் கிராமினா வங்கி




- அடல் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் குறிப்பிடத்தக்க சேர்க்கைக்காக கர்நாடகா விகாஷ் கிராமினா வங்கி, இரண்டு தேசிய விருதுகளை (APY Big Believers மற்றும் Leadership Capital) பெற்றுள்ளது.
- ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தினால் இந்த விருதுகள் வழங்கப் பட்டன.
- இந்த வங்கியானது கனரா வங்கியிடமிருந்து நிதி உதவி பெறும் வங்கியாகும்.


- மத்திய அரசினால் தொடங்கப்பட்ட மூன்று பாதுகாப்புத் திட்டங்களை (PMJJBY, PMSBY மற்றும் APY) அமல்படுத்துவதில் இந்த வங்கி முக்கியப் பங்காற்றுகிறது.

## ராஜா சாரி




- ராஜா சாரி, சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் செல்ல உள்ள நாசா ஸ்பேஸ் X நிறுவனத்தின் Crew – 3 என்ற திட்டத்தினை வழி நடத்த உள்ள ஓர் இந்திய அமெரிக்க விண்வெளி வீரர் ஆவார்.
- நாசா – ஸ்பேஸ் X நிறுவனத்தின் இந்த 3வது பயணத்தில் ராஜா சாரி, டாம் மார்ஷ்பர்ன் மற்றும் கைலா பேரேன் ஆகிய மூன்று நாசா விண்வெளி வீரர்கள் மற்றும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் ஒரு விண்வெளி வீரரான மத்தியாஸ் மவ்ரெர் ஆகிய நான்கு விண்வெளி வீரர்களை விண்ணிற்கு அனுப்ப உள்ளது.
- Crew - 3 என்ற திட்டமானது விண்வெளிக்கு மனிதர்களை அனுப்புவதற்கான ஸ்பேஸ் X நிறுவனத்தின் 5வது மற்றும் சர்வதேச விண்வெளி நிலையத்தினை நோக்கிய அதன் 4வது பயணத் திட்டமாகும்.

## 2021 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய தலைமைத்துவ மனிதநேய விருதுகள்




- அமெரிக்க-இந்திய வணிகச் சபையானது 2021 ஆம் ஆண்டு உலகளாவிய தலைமைத்துவ மனிதநேய விருதுகளை அக்செஞ்சர், IBM மற்றும் மைக்ரோசாப்ட் ஆகிய நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கு வழங்க உள்ளதாக அறிவித்தது.
- பெருந்தொற்றிற்கு எதிரான போராட்டத்திற்கான உலகளாவிய செயற்குழுவிற்கு வலுவான தலைமைத்துவத்தினையும் பங்களிப்புகளையும் வழங்கியதற்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.
- இந்திய கருதுகோள் உச்சி மாநாட்டின் போது அக்செஞ்சர் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் மற்றும் தலைவரான ஜுலி ஸ்வீட், IBM நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் மற்றும் தலைவரான அர்விந்த் கிருஷ்ணா மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் துணைத் தலைவருமான பிராட் ஸ்மித் ஆகியோருக்கு இந்த மதிப்பு மிக்க விருதுகள் வழங்கப்படும்.

## சத்யஜித் ரே விருது

- பெஜவாடா கோபால் என்ற தெலுங்கு திரைப்படத் தயாரிப்பாளர் பி கோபால் நான்காவது சத்யஜித் ரே விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- கேரளாவைச் சேர்ந்த சத்யஜித் ரே ஃபிலிம் சொசைட்டி அமைப்பால் இந்த விருது நிறுவப் பட்டது.

## வயலார் விருது

- மலையாள எழுத்தாளர் பென்யமின் தனது "மாந்தளிரிலே 20 கம்யூனிஸ்ட் வர்ஷங்கள்" என்ற புத்தகத்திற்காக 45வது வயலார் ராமவர்மா நினைவு இலக்கிய விருதைப் பெற்றுள்ளார்.
- இந்த விருது வயலார் ராமவர்மா நினைவு அறக்கட்டளையால் நிறுவப்பட்டது.




## நடிகர் நெடுமுடி வேணு

- தேசிய விருது பெற்ற நடிகர் நெடுமுடி வேணு சமீபத்தில் காலமானார்.
- இவர் தனது நடிப்பிற்காக 3 தேசியத் திரைப்பட விருதுகளையும் 6 கேரள மாநிலத் திரைப்பட விருதுகளையும் பெற்றுள்ளார்.

- நெடுமுடி வேணு, மலையாளத்தில் காவலம் நாராயணப் பணிக்கரின் நாடகங்களில் ஒரு நாடகக் கலைஞராகத் தனது வாழ்க்கையைத் தொடங்கினார்.
- இவர் 1978 ஆம் ஆண்டில் G. அரவிந்தன் இயக்கிய தம்பு எனும் திரைப்படத்தின் மூலம் அறிமுகமானார்.



## லால்பகதூர் சாஸ்திரி சிறந்த பணிக்கான தேசிய விருது

- குடியரசுத் துணைத் தலைவர் M. வெங்கய்யா நாயுடு அவர்கள், 2வது லால்பகதூர் சாஸ்திரி சிறந்த பணிக்கான தேசிய விருதுகளை வழங்கினார்.
- இந்த விருதானது புகழ் பெற்ற நுரையீரல் மருத்துவரும், அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனத்தின் இயக்குநருமான டாக்டர் ரன்தீப் குலேரியா என்பவருக்கு வழங்கப்பட்டது.
- அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனத்தில் நுரையீரல் மருத்துவத் துறை மற்றும் தூக்கமின்மை கோளாறுகள் போன்றவற்றில் மருத்துவத் துறையை மேம்படுத்துவதற்கான அவரது பணிகள் போன்றவற்றினையும் வெங்கய்யா நாயுடு பாராட்டினார்.



## அருண் குமார் மிஷ்ரா

- EESL என்ற நிறுவனமானது அருண் குமார் மிஷ்ராவினை தனது தலைமை நிர்வாக அதிகாரியாக நியமித்துள்ளது.
- எனர்ஜி எஃபீசியன்சி சர்வீசஸ் லிமிடெட் (EESL - Energy Efficiency Services Limited) நிறுவனமானது அருண் குமார் மிஷ்ராவினை தனது தலைமை நிர்வாக அதிகாரியாக (மாற்றுப் பணியில்) நியமிப்பதாக அறிவித்து உள்ளது.

- EESL நிறுவனமானது ஆற்றல்துறை அமைச்சகத்தின் கீழான பொதுத் துறை நிறுவனங்களின் ஒரு கூட்டு நிறுவனமாகும்.
- இவர் EESL நிறுவனத்தின் நாடு முழுவதிலுமான செயல்பாடுகளுக்கு பொறுப்பு வகிக்க உள்ளார்.



## சஜ்ஜன் ஜிண்டல்



- உலக எஃகுக் கூட்டமைப்பானது சஜ்ஜன் ஜிண்டால் என்பவரை 2021-22 ஆம் ஆண்டிற்கான தனது தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளது.
- சஜ்ஜன் ஜிண்டால் JSW எஃகு நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆவார்.
- உலக எஃகுக் கூட்டமைப்பின் தலைவராக பதவி ஏற்க உள்ள முதல் இந்தியர் சஜ்ஜன் ஜிண்டால் ஆவார்.

## C.K. பிரஹலாத் விருது

- இந்திய அமெரிக்கரும் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலருமான சத்யா நாதெள்ளா 2021 ஆம் ஆண்டிற்கான உலக வணிக நிலைத் தன்மையின் தலைமைத்துவத்திற்கான மதிப்புமிக்க C.K. பிரஹலாத் விருதினைப் பெற்றுள்ளார்.
- நாதெள்ளாவைத் தவிர மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் துணைத் தலைவரான பிராட் ஸ்மித், தலைமை நிதி அலுவலர் எமி ஹூட் மற்றும் தலைமை சுற்றுச்சூழல் அலுவலர் லூகாஸ் ஜோப்பா ஆகியோரும் இந்த விருதினைப் பகிர்ந்து கொண்டனர்.
- இந்த நான்கு மைக்ரோசாப்ட் நிறுவனத் தலைவர்கள், இந்த நிறுவனத்தினை 2030 ஆம் ஆண்டுக்குள் கார்பன் அற்ற ஒரு நிறுவனமாக மாற்றவும், 2050 ஆம் ஆண்டுக்குள் தனது அனைத்து உமிழ்வுகளையும் நீக்கிடவும் வேண்டி அவர்கள் ஆற்றிய ஒரு ஒன்றிணைந்த தலைமைக்காக இந்த விருதினைப் பெற்றுள்ளனர்.



## பிராணி மித்ரா 2021

- S. சின்னி கிருஷ்ணாவிற்கு இந்திய விலங்கு நல வாரியத்தினால் 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பு மிக்க பிராணி மித்ரா விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- இவர் இந்திய புளூகிராஸ் (நீலச் சிலுவை) அமைப்பின் இணை நிறுவனராவார்.
- விலங்குகளுக்காக இவர் ஆற்றிய வாழ்நாள் சேவைக்காக இந்த விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- பிராணி மித்ரா என்பது விலங்கு நலனுக்காக வழங்கப்படும் நாட்டின் ஒரு உயரிய விருதாகும்.

## சைவத் தோல் முன்னெடுப்பு

- பீட்டா இந்தியா அமைப்பானது, மேகாலய மாநிலத்தின் சுற்றுச்சூழல் அமைச்சர் ஜேம்ஸ் P.K. சங்மா என்பவருக்கு முற்போக்கு வணிக கருதுகோள் விருதினை வழங்க முடிவு செய்துள்ளது.
- வடகிழக்கு மாநிலத்தில் சைவத் தோலினை (vegan leather) உற்பத்தி செய்வதற்கான அவரது திட்டத்திற்காக இந்த விருதானது வழங்கப்பட உள்ளது.
- அண்ணாசிப் பழங்களைப் பயன்படுத்தி தோல் பொருட்களை உற்பத்தி செய்ய மேகாலாய அரசு திட்டமிட்டுள்ளதாக சங்மா சமீபத்தில் அறிவித்தார்.

## ஹென்றிட்டா லாக்ஸ்



- உலக சுகாதார அமைப்பின் தலைவர், மறைந்த ஹென்றிட்டா லாக்ஸ் என்பவருக்கு, தலைமை இயக்குநர் விருது வழங்கி கௌரவித்தார்.
- 1950 ஆம் ஆண்டுகளில் ஒரு அமெரிக்கப் பெண்மணியான ஹென்றிட்டாவிற்குத் தெரியாமல் அவருடைய புற்றுநோய் செல்கள் எடுக்கப் பட்டன.
- இந்த செல்கள் கொரோனா வைரஸ் ஆராய்ச்சி உள்ளிட்ட மிகப்பெரிய அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு ஓர் அடித்தளத்தினை வழங்கின.
- இவருடைய பெயரிலிருந்துப் பெறப்பட்ட 'Helo' என்ற ஒரு செல் வரிசையானது மனித பாப்பிலோமா வைரஸ் நோய்க்கான தடுப்பூசியை உருவாக்க உதவியது.

## வில்லியம் ஷட்னர்

- நடிகர் வில்லியம் ஷட்னர் 90 வயதில் விண்வெளிக்குச் சென்ற மிக வயதான நபரானார்.
- இவர் "ஸ்டார் ட்ரெக்" என்ற திரைப்படத்தில் கதாநாயகன் ஜேம்ஸ் டி.கிரிக் என்று பிரபலமாக அறியப் பட்டார்.
- இவர் புளூ ஆரிஜின் நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்ட ராக்கெட்டில் (நியூ செப்பர்டு) அமெரிக்காவின் மேற்கு டெக்சாஸ் பாலைவனத்திலிருந்து ஏவப்பட்ட ஒரு சமீபத்தியப் பயணத்தில் பயணம் மேற்கொண்டார்.



## உலகின் உயரமான பெண்மணி



- துருக்கி நாட்டைச் சேர்ந்த ரூமேசா கெல்கி (Rumeysa Gelgi) உலகின் உயரமான பெண்மணி ஆவார்.
- 24 வயதான இவரின் உயரம் 7 அடி 0.7 அங்குலமாகும்.
- இவரது இந்த நிலைக்கு வீவர் சிண்ட்ரோம் (Weaver syndrome) என்ற குறைபாடே ஒரு காரணமாகும்.

## சுற்றுச்சூழல்சார் ஆஸ்கார் விருதுகள்

- வேளாண் கழிவினை எரிபொருளாக மறுசுழற்சி செய்யும் தக்காசார் புத்தாக்கம் என்ற இந்தியத் திட்டத்திற்கு பிரின்ஸ் வில்லியம்சின் முதலாவது எர்த்சாட் பரிசானது வழங்கப் பட்டுள்ளது.
- இந்தப் பரிசானது சுற்றுச்சூழல்சார் ஆஸ்கார் விருது எனவும் அழைக்கப்படுகிறது.
- பூமியைப் காப்பாற்ற முயற்சிக்கும் தனி நபர்களுக்கு இந்த விருதானது வழங்கப் படுகிறது.
- உலகளவில் பருவநிலை நெருக்கடி அதிகரித்துவரும் நிலையில் புதுமையான உள்நாட்டுத் தீர்வுகளுக்கு உதவி வழங்கவும் அதனை ஊக்குவிப்பதற்காகவும் இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- தக்காசார் புத்தாக்கத் திட்டமானது வித்யூத் மோகன் என்பவரின் தலைமையில் செயல்படுத்தப் படுகிறது.



## தற்காப்புக் கலை கல்விப் பரிசு 2021

- புத்தமதத்தின் த்ருக்பா வழக்கத்தைச் சார்ந்த குங்ஃபூ துறவிகளுக்கு மதிப்பு மிக்க "தற்காப்புக் கலை கல்விப் பரிசானது (2021)" வழங்கப் பட்டது.
- தற்காப்புக் கலைக்கான யுனெஸ்கோவின் சர்வதேச மையத்தினால் இந்தப் பரிசானது அவர்களிடம் வழங்கப்பட்டது.
- இமயமலைப் பகுதிகளில் பாலினச் சமத்துவத்தை நிலைநிறுத்துவதில் குங்ஃபூ துறவிகள் ஆற்றும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சேவைகளையும் அவர்களின் சாதனைகளையும் இந்தப் பரிசு அங்கீகரிக்கிறது.
- தற்காப்புக் கலையின் மூலம் தங்களைத் தற்காத்து கொள்ளவும், தங்கள் சமூகங்களில் தலைமைப் பொறுப்புகளை வகிக்கவும் மற்றும் நம்பிக்கையை வளர்க்கவும் இளம் பெண்களுக்கு த்ருப்கா துறவிகள் வாய்ப்பு அளிக்கின்றனர்.

## புவி காப்பாளர் விருது

- பரம்பிக்குளம் புலிகள் வளங்காப்பு அறக்கட்டளை அமைப்பானது புவி காப்பாளர் என்ற விருதினைப் பெற்றுள்ளது.
- இந்த விருதானது நாட்வெஸ்ட் குழுமத்தினால் நிறுவப்பட்டது.
- பரம்பிக்குளம் புலிகள் வளங்காப்பு அறக்கட்டளையானது வனத்துறையின் கீழ் இயங்கும் ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பாகும்.
- இது பரம்பிக்குளம் புலிகள் காப்பகத்தில் புலிகள் மற்றும் உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கத்தின் வளங்காப்பினை மேற்கொள்கிறது.
- பரம்பிக்குளம் புலிகள் காப்பகமானது கேரளாவின் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதியாகும்.
- இது 1973 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்தச் சரணாலயமானது ஆனைமலைக் குன்றுகள் மற்றும் நெல்லியம்பதி குன்றுகள் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட சுங்கம் குன்றுகளுக்கு மத்தியில் அமைந்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டின் இவ்விருதுக்கான கருத்துருவானது "Biodiversity - a resilient nature is a foundation on which all climate mitigation and adaptation efforts must be raised" என்பதாகும்.

## சத்யஜித் ரே வாழ்நாள் சாதனையாளர் விருது

- திரைப்பட இயக்குநர்களான மார்டின் ஸ்கோசெஸி மற்றும் இஸ்த்வான் சாபோ (Martin Scorsese and Istvan Szabo) ஆகியோருக்கு சத்யஜித் ரே வாழ்நாள் சாதனையாளர் விருதானது வழங்கப்பட உள்ளது.
- 52வது இந்திய சர்வதேசத் திரைப்பட விழாவில் இந்த விருதானது வழங்கப்பட உள்ளது.
- இந்த விழாவானது கோவாவில் நடைபெற உள்ளது.
- மேலும் சர்வதேசத் திரைப்பட விழாவில் பங்கேற்க முக்கிய OTT தளங்களை இந்திய சர்வதேசத் திரைப்பட விழா அமைப்பானது அழைத்துள்ளது இதுவே முதல்முறை ஆகும்.




## தாதா சாகேப் பால்கே விருது

- நடிகர் ரஜினிகாந்திற்கு மதிப்புமிக்க 51வது தாதாசாகேப் விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- 67வது தேசியத் திரைப்பட விருது விழாவில் இந்த விருதானது வழங்கப் பட்டது.
- ஒரு நடிகர், தயாரிப்பாளர் மற்றும் திரைக்கதை எழுத்தாளராக அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக இந்த விருதானது வழங்கப் பட்டது.
- 1969 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த விருதானது இந்திய சினிமாத் துறையில் ஒரு கலைஞனுக்கு வழங்கப்படும் உயரிய கௌரவமாகும்.

## 67வது தேசியத் திரைப்பட விருதுகள் - 2019

- மனோஜ் பாஜ்பாயி, கங்கனா ரணவத் மற்றும் தனுஷ் ஆகியோருக்கு சிறந்த நடிகருக்கான விருதுகள் வழங்கப்பட்டன.
- பிரியதர்ஷன் இயக்கிய "Marakkar : Lion if the Arabian Sea" என்ற மலையாள காவியத் திரைப்படத்திற்கு சிறந்த திரைப்பட விருது வழங்கப்பட்டது.
- சிறந்த இந்தித் திரைப்பட விருதானது மறைந்த சுசாந்த் சிங் ராஜ்புத் நடித்த சிச்சோர் (Chhichhore) திரைப்படத்திற்கு வழங்கப்பட்டது.
- விஜய் சேதுபதி மற்றும் பல்லவி ஜோஷி ஆகியோர் துணை நடிகருக்கான விருதுகளைப் பெற்றனர்.

## 2022 ஜோசப் A. கஷ்மன் விருது

- டாக்டர் ராஜிவ் நிகாம், சிறப்பான ஃபோராமினிபெரல் (Foraminiferal) ஆராய்ச்சிக்காக 2022 ஆம் ஆண்டின் ஜோசப் A. கஷ்மன் என்ற விருதிற்குத் தேர்வாகியுள்ளார்.
- இவர் மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனத்தின் தேசியக் கடலியல் கல்வி நிறுவனத்தின் முன்னாள் தலைமை அறிவியலாளர் ஆவார்.

- டாக்டர் நிகாம், இந்த மதிப்பு மிக்க விருதிற்குத் தேர்வான முதல் இந்தியக் குடிமகன் ஆவார்.
- ஃபோராமினிபெரா (மைக்ரோஃபாசில்) ஆராய்ச்சித் துறையில் இவர் ஆற்றிய சிறப்பான வாழ்நாள் அளவிலான பங்களிப்பிற்காக இந்த விருதிற்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.



## அனிதா ஆனந்த்

- கனட நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது அமைச்சரவையை மாற்றி அமைத்து உள்ளார்.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கனட அரசியல்வாதியான அனிதா ஆனந்த் என்பவரை கனடாவின் புதியப் பாதுகாப்பு அமைச்சராக அவர் நியமித்துள்ளார்.
- அனிதா ஆனந்த் (54 வயது) இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஹர்ஜித் சஜ்ஜனுக்குப் பதிலாகப் பொறுப்பேற்க உள்ளார்.



### ஜெர்மன் புத்தக வர்த்தக அமைப்பின் அமைதிப் பரிசு – 2021

- ஜிம்பாப்வே நாட்டைச் சேர்ந்த நூலாசிரியரும் திரைப்பட இயக்குநருமான சிட்சி டங்கரெம்ப்கா என்பவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- ஜெர்மன் அமைதிப் பரிசினை வென்ற முதல் கருப்பினப் பெண்மணி டங்கரெம்ப்கா ஆவார்.
- இவர் 2021 ஆம் ஆண்டு பெண் பின்டர் பரிசினை (PEN Pinter prize) வென்றுள்ளார்.



## விளையாட்டுச் செய்திகள்

### T20 உலகக் கோப்பை கீதம்

- சர்வதேச கிரிக்கெட் குழுவானது அடுத்து வரவிருக்கும் T20 உலகக் கோப்பைப் போட்டிக்கான அதிகாரப்பூர்வ பாடலை வெளியிட்டுள்ளது.
- இந்திய மட்டைப்பந்து விளையாட்டு ஜாம்பவானான விராட் கோலி மற்றும் மேற்கிந்திய அணித் தலைவர் கீரன் போலார்டு ஆகியோரின் தோற்றப் படங்களின் வெளியீட்டுடன் இப்பாடலானது வெளியிடப் பட்டது.
- பாலிவுட் இசையமைப்பாளர் அதித் திரிவேதி இப்பாடலை இயக்கியுள்ளார்.
- இப்போட்டியானது ஓமன் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் அக்டோபர் 17 அன்று தொடங்கப் பட்டு நவம்பர் 17 அன்று துபாயில் நிறைவடையும்.



## T20 கிரிக்கெட் போட்டியில் 10,000 ரன்கள் குவிப்பு – விராட் கோலி

- T20 கிரிக்கெட் போட்டியில் 10,000 ரன்களை குவித்த முதல் இந்திய கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை விராட் கோலி பெற்றுள்ளார்.
- துபாயில் நடைபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான தனது ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் ஆட்டத்தின் போது இந்தச் சாதனையானது மேற் கொள்ளப் பட்டது.
- மேற்கிந்திய அணியின் கிறிஸ் கெய்லேவிற்குப் பிறகு T20 மற்றும் ஒரு நாள் சர்வதேசப் போட்டி ஆகிய இரண்டிலும் இத்தகையச் சாதனையை எட்டிய 2வது நபரும் இவரே ஆவார்.




## இந்தியாவின் முதல் விளையாட்டுத்துறை நடுவண் தீர்ப்பாயம்

- மத்திய சட்டத் துறை அமைச்சர் கிரண் ரிஜூஜூ, குஜராத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் விளையாட்டுத் துறை நடுவண் தீர்ப்பாயத்தினைத் திறந்து வைத்தார்.
- விளையாட்டுத் துறையில் எழும் பிரச்சினைகளை விரைவாக தீர்ப்பதற்கான ஒரு சுயாதீன அமைப்பாக இது செயல்படும்.
- இந்தத் தீர்ப்பாயமானது SE டிரான்ஸ்டேடியா பிரைவேட் லிமிடெட் என்ற ஒரு அகமதாபாத்தைச் சேர்ந்த நிறுவனத்தினால் முன்மொழியப்பட்டது.




## ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்சிப் போட்டி

- இந்திய ஆடவர் டேபிள் டென்னிஸ் அணியானது ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்சிப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளது.
- அரையிறுதிச் சுற்றில் 0-3 என்ற கோல் கணக்கில் தென்கொரிய அணியுடன் மோதி தோல்வியுற்றதனை அடுத்து இந்திய அணி வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளது.
- காலிறுதி சுற்றில் ஈரான் அணியினை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இந்திய அணி தனது வெற்றியை உறுதி செய்தது.
- இந்த இரு அரையிறுதிப் போட்டியாளர்களும் வெண்கலப் பதக்கத்தினை வென்றனர்.




## ஸ்மிருதி மந்தானா

- ஆஸ்திரேலிய நாட்டில் டெஸ்ட் போட்டிகளில் சதம் அடித்த முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையை ஸ்மிருதி மந்தானா பெற்றுள்ளார்.
- இந்தப் போட்டியானது ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து எனுமிடத்தில் அமைந்த கராரா ஓவல் மைதானத்தில் நடத்தப் பட்டது.
- இப்போட்டியில் இவர் 127 ரன்களைக் குவித்தார்.



## துராந்த் கோப்பை

- FC கோவா அணியானது முகமதியன் ஸ்போர்டிங் என்ற அணியினை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி முதல் முறையாக, துராந்த் கோப்பை கால்பந்துப் போட்டியின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றது.
- இப்போட்டியானது கொல்கத்தாவிலுள்ள விவேகானந்தா யுபா பாரதி கிரி ரங்கன் என்ற மைதானத்தில் நடைபெற்றது.
- இது ஆசியாவின் மிகப் பழமையான கால்பந்துப் போட்டியாகும்.
- இந்தப் போட்டியானது மேற்கு வங்காளத்தில் நடத்தப் பட்டது.



## ஹாக்கி நட்சத்திர விருதுகள் 2020 – 21

- சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் ஹாக்கி நட்சத்திர விருது விழாவில் (2020-21) FIH மகளிர் பிரிவிற்கான ஆண்டின் சிறந்த ஹாக்கி வீராங்கனை என்ற பட்டத்தினை குர்ஜித் கௌர் பெற்றார்.
- ஹர்மன்ப்ரீத் சிங் FIH ஆடவர் பிரிவிற்கான ஆண்டின் சிறந்த ஹாக்கி வீரர் என்ற பட்டத்தைப் பெற்றார்.



## 2024 ஆம் ஆண்டிற்கான ஐரோப்பிய சாம்பியன்சிப் சின்னம்




- 2024 ஐரோப்பிய சாம்பியன்சிப் கால்பந்துப் போட்டிக்கான சின்னத்தினை ஜெர்மனி வெளியிட்டது.
- ஹென்றி டெலவுனே கோப்பையின் வடிவம் (Henri Delaunay Cup) இந்தச் சின்னத்தில் இடம் பெற்றுள்ளது.
- இந்தக் கோப்பையைச் சுற்றியுள்ள 24 துண்டுக் கோடுகளானது, ஜெர்மனியில் நடைபெற உள்ள போட்டிக்குத் தகுதி பெற்ற 24 அணிகளைக் குறிக்கிறது.

## ISSF இளையோர் சாம்பியன்சிப்

- இளம் வயது இந்தியத் துப்பாக்கிச் சுடும் வீரரான ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர் ISSF இளையோர் உலக சாம்பியன்சிப் போட்டியில் ஆடவருக்கான 50 மீ 3 பொசிஷன்ஸ் பிரிவின் இறுதிப் போட்டியில் தங்கம் வென்று உலக சாதனையைப் படைத்தார்.
- பெரு நாட்டில் லிமா என்னுமிடத்தில் இந்த சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் விளையாட்டுக் கூட்டமைப்பு இளையோர் உலக சாம்பியன்சிப் போட்டி நடத்தப் பட்டது.



## FIH நட்சத்திர விருதுகள்




- இந்திய ஹாக்கி அணி வீரர்கள் 2021 ஆம் ஆண்டு FIH நட்சத்திர விருதுகளைப் பெற்று உள்ளனர்.
- விருது பெற்ற அந்த வீரர்கள்
  - ஆண்டின் சிறந்த கோல்கீப்பர் : PR ஸ்ரீஜேஷ் (ஆடவர்) மற்றும் சவிதா புனியா (மகளிர்).
  - ஆண்டின் சிறந்த பிரபல நட்சத்திரம் : விவேக் சாகர் பிரசாத் (ஆடவர்) மற்றும் சர்மிளா தேவி (மகளிர்).
  - ஆண்டின் சிறந்த பயிற்சியாளர் : கிரஹாம் ரீட் (ஆடவர்) மற்றும் ஸ்ஜோர்ட் மரிஜ்னே (மகளிர்).

## ஆடவர் உலகக் குத்துச்சண்டை சாம்பியன்சிப் போட்டி

- ஆசியப் பதக்க வெற்றியாளர்களான சிவா தாபா (63.5கி.கி), தீபக் குமார் (51 கி.கி.) மற்றும் சஞ்சீத் (92 கி.கி) ஆகியோர் ஆடவர் உலக குத்துச்சண்டை சாம்பியன்சிப் போட்டியில் பங்கேற்க உள்ளனர்.
- இந்தப் போட்டியானது செர்பியா நாட்டின் பெல்கிரேடு என்னுமிடத்தில் நடத்தப் பட உள்ளது.
- சிவா தாபா, சஞ்சீத் மற்றும் ரோஹித் ஆகியோர் தேசிய அளவிலான போட்டிகளில் தங்கப் பதக்கத்தினை வென்றதையடுத்து உலக குத்துச்சண்டை சாம்பியன்சிப் போட்டிக்குத் தேர்வாகினர்.

## அன்ஷூ மாலிக்

- இந்திய மல்யுத்த வீராங்கனை அன்ஷூ மாலிக், உலக சாம்பியன்சிப் போட்டியின் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற முதலாவது இந்தியப் பெண் என்ற ஒரு வரலாற்றினைப் படைத்துள்ளார்.
- 2021 ஆம் ஆண்டு உலக மல்யுத்த சாம்பியன்சிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண்மணியும் இவரே ஆவார்.

- இவர் 57 கிலோ கிராம் எடைப்பிரிவிற்கான ஃபிரீஸ்டைல் பௌட் போட்டியில் வெற்றி பெற்றார்.
- அமெரிக்காவின் ஹெலன் லூசி மரௌலிஸ் (Helen Lousie Maroulis) தங்கப் பதக்கத்தினை வென்றார்.




## சுனில் சேத்ரி

- சுனில் சேத்ரி 77வது சர்வதேச கோலை அடித்துப் புகழ்பெற்ற பீலேவின் சாதனையை சமன் செய்துள்ளார்.
- போட்டியின் போது சுனில் சேத்ரி எடுத்த 77வது கோல் ஆனது இந்திய அணி 1 – 0 என்ற கோல் கணக்கில் நேபாள அணியை வீழ்த்த உதவியது.
- இந்த சாதனையானது இந்தியாவிற்காக சேத்ரி விளையாடிய அவரது 123வது ஆட்டத்தில் மேற்கொள்ளப் பட்டது.
- இவர் தற்போது கால்பந்து வீரர்களில் அதிக ஸ்கோர் பெற்றவர்கள் பட்டியலில் ஐக்கிய அரபு அமீரகத்தின் அலி மப்கௌத் என்பவருடன் 3வது இடத்தினைப் பெற்றுள்ளார்.
- இவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ (112 கோல்) மற்றும் லியோனெல் மெசி (79 கோல்) ஆகியோருக்குப் பின் உள்ளார்.



## இபா

- FIFA எனும் உலகக் கால்பந்து அமைப்பானது 2022 ஆம் ஆண்டு U-17 மகளிர் உலகக் கோப்பைப் போட்டிக்கான அதிகாரப் பூர்வ சின்னமாக "இபா" (Ibha) என்பதை வெளியிட்டுள்ளது.
- இபா என்பது பெண்ணின் வலிமையை உணர்த்தும் வகையிலான ஒரு பெண் சிங்கமாகும்.
- இந்தப் போட்டியானது அடுத்த ஆண்டில் அக்டோபர் 11 முதல் 30 வரை இந்தியாவில் நடைபெற உள்ளது.
- இந்த அறிவிப்பானது சர்வதேச பெண் குழந்தை தினத்தோடுப் பொருந்தி வந்தது.
- இந்தியா மற்றும் உலகம் முழுவதும் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளைத் தங்களது திறனை உணரும் வகையில் ஊக்குவிப்பதே இந்தச் சின்னத்தின் நோக்கமாகும்.




## ஜீனியர் உலக சாம்பியன்சிப் – இந்தியத் துப்பாக்கிச் சுடும் வீரர்கள்

- 2021 ஆம் ஆண்டு சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் போட்டி கூட்டமைப்பின் ஜீனியர் உலக சாம்பியன்சிப் ரைபிள்/பிஸ்டல்/சாட்கன் என்ற போட்டியானது பெரு நாட்டின் லைமா எனுமிடத்தில் நடத்தப் பட்டது.
- இதில் இந்திய வீரர்கள் 43 பதக்கங்களுடன் வரலாறு காணாத அளவிலான வெற்றியினைப் பெற்றுப் பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளனர்.
- இதில் 17 தங்கம், 16 வெள்ளி மற்றும் 10 வெண்கலப் பதக்கங்கள் அடங்கும்.
- அமெரிக்க நாடானது 6 தங்கம், 8 வெள்ளி மற்றும் 6 வெண்கலப் பதக்கங்கள் உள்ளிட்ட 21 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் 2வது இடத்தில் உள்ளது.



## எமி ஹண்டர்

- ❖ ஐயர்லாந்து நாட்டைச் சேர்ந்த எமி ஹண்டர் ஆடவர் (அ) மகளிர் கிரிக்கெட் போட்டியின் (121 நாட் அவுட்) ஒரு நாள் போட்டியில் சதம் அடித்த இளம் மட்டைப்பந்து வீரர் ஆவார்.
- ❖ இந்திய நாட்டினைச் சேர்ந்த மித்தாலி ராஜ் வைத்திருந்த ஒரு சாதனையை இவர் முறியடித்தார்.
- ❖ ஜிம்பாப்வே அணிக்கு எதிரான போட்டியில் அவரது 16வது பிறந்த நாளின் போது இவர் இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.




## IPL 2021



- ❖ சென்னை சூப்பர் கிங்ஸ் அணியானது இறுதிப் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வீழ்த்தி 2021 இந்தியப் பீரிமியர் லீக் பட்டத்தை வென்றது.
- ❖ இது 14வது IPL போட்டியாகும்.
- ❖ ஹர்சத் படேல் இறுதிப் போட்டியின் ஆட்டநாயகன் பட்டத்தினைப் பெற்றார்.
- ❖ இது IPL போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பெற்ற 4வது வெற்றியாகும்.
- ❖ சென்னை சூப்பர் கிங்ஸ் அணியானது 2010, 2011 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் IPL கோப்பையை வென்றது.

- ஐபிஎல் பட்டத்தை அதிக எண்ணிக்கையில் (முறை) வென்ற அணியானது மும்பை இந்தியன்ஸ் (5 முறை) அணியாகும்.

## SAFF சாம்பியன்சிப்

- இந்திய அணியானது 2021 SAFF சாம்பியன்சிப் இறுதிப் போட்டியில் (South Asian Football Federation - தெற்காசியக் கால்பந்து கூட்டமைப்பு) 3-0 என்ற கோல் கணக்கில் நேபாள அணியை வீழ்த்தியது.
- இப்போட்டியானது மாலத்தீவின் மாலே நகரிலுள்ள தேசியக் கால்பந்து மைதானத்தில் நடத்தப் பட்டது.
- இது இந்தியத் தேசியக் கால்பந்து ஆடவர் அணி பெற்ற 8வது SAFF சாம்பியன்சிப் பட்டமாகும்.
- இதற்கு முன்பாக 1993, 1997, 1999, 2005, 2009, 2011 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் இந்திய அணி SAFF பட்டத்தை வென்றது.
- சுனில் சேத்ரி, சுரேஷ் சிங் வங்ஜம் மற்றும் சாஹல் அப்துல் சமாத் ஆகியோர், இறுதிப் போட்டியில் இந்திய அணிக்கான கோலை அடித்துத் தந்த வீரர்கள் ஆவர்.
- சுனில் சேத்ரி (அணித் தலைவர்) அதிக கோல் அடித்தவர் (5 கோல்கள்) என்ற பட்டத்தைப் பெற்றார்.
- சுனில் சேத்ரி இப்போட்டியில் தனது 80வது சர்வதேச கோலை அடித்தார்.
- இவர் புகழ்பெற்ற லியோனல் மெசியின் கோல் எண்ணிக்கையுடன் தனது கோல் எண்ணிக்கையினைச் சமன் செய்தார்.
- இவர் தற்போதையக் கால்பந்து வீரர்களில் சர்வதேச அளவில் அதிகளவு கோல்களை அடித்த 2வது விளையாட்டு வீரராக மாறியுள்ளார்.

## குர்டிஸ் கேம்பர்

- ஐயர்லாந்து நாட்டின் வேகப்பந்து வீச்சாளர் குர்டிஸ் கேம்பர் T20I போட்டிகளில் 4 பந்துகளில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய 3வது பந்து வீச்சாளராக ஆகியுள்ளார்.

❖ T20 உலக கோப்பையில் குரூப் A பிரிவுப் போட்டியில் தனது முதல் சுற்று ஆட்டத்தில் நெதர்லாந்து அணியினை அயர்லாந்து அணி வீழ்த்திய போது இந்தச் சாதனை நிகழ்த்தப் பட்டது.




## வாழ்நாள் கௌரவ உறுப்பினர் அந்தஸ்து

❖ இந்தியாவின் ஹர்பஜன் சிங் மற்றும் ஜவகல் ஸ்ரீநாத் ஆகியோர் மற்ற 16 கிரிக்கெட் வீரர்களுடன் இணைந்து மார்லேஃபன் கிரிக்கெட் கிளப்பின் (Marylebone Cricket Club) வாழ்நாள் கௌரவ உறுப்பினர் அந்தஸ்தினைப் பெற்றனர்.

❖ 103 டெஸ்ட் போட்டிகளில் 417 விக்கெட்டுகளை வீழ்த்தி, டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இந்தியாவின் 3வது நபர் ஹர்பஜன் சிங் ஆவார்.

❖ ஸ்ரீநாத், 315 விக்கெட்டுகளை வீழ்த்திய நாட்டின் மிகச்சிறந்த ஒருநாள் போட்டி வீரர் ஆவார்.

❖ சர்வதேசப் போட்டிகளில் 50 ஓவர்களில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய 2வது நபர் என்ற பெருமையுடன் இவர் கிரிக்கெட்டிலிருந்து விலகினார்.



## நாடுகளுக்கிடையேயான சாம்பியன்சிப் போட்டிகள்

- 2022 ஆம் ஆண்டு தெற்காசியக் கூட்டமைப்பின் நாடுகளுக்கிடையேயான (கிராஸ் கன்ட்ரி) சாம்பியன்சிப் போட்டிகளானது நாகாலாந்தின் கொஹிமா நகரில் நடைபெற உள்ளது.
- 56வது தேசிய கிராஸ்கன்ட்ரி சாம்பியன்சிப் போட்டிகளானது தெற்காசிய கூட்டமைப்பு கிராஸ் கன்ட்ரி சாம்பியன்சிப் போட்டிகளுடன் இணைந்து நடத்தப் படும்.
- நாகாலாந்தால் நடத்தப்படும் முதலாவது தேசிய அளவிலான தடகளப் போட்டிகள் இதுவேயாகும்.

## FIFA தரவரிசைகள் 2021

| MEN RK | Team | Total Points | WOMEN RK | Team | Total Points |
|---|---|---|---|---|---|
| 1 | Belgium | 1822.34 | 1 | USA | 2197.29 |
| 2 | Brazil | 1797.67 ▲ | 2 | Germany | 2073.09 |
| 3 | France | 1761.77 ▼ | 3 | France | 2038.68 ▲ |
| 4 | England | 1752.83 | 4 | Netherlands | 2035.49 ▼ |
| 5 | Italy | 1744.67 ▲ | 5 | Sweden | 2010.52 |
| 6 | Argentina | 1714.43 ▲ | 6 | England | 1973.98 |
| 7 | Spain | 1680.44 ▼ | 7 | Brazil | 1971.43 |
| 8 | Portugal | 1661.51 ▼ | 8 | Canada | 1961.9 |
| 9 | Mexico | 1658.29 ▲ | 9 | Australia | 1952.01 |
| 10 | USA | 1647.75 ▲ | 10 | Japan | 1941.74 ▲ |

- 2021 ஆம் ஆண்டு FIFA தரவரிசையில் இந்தியா 106வது இடத்தில் உள்ளது.
- சுனில் சேத்ரி தலைமையிலான இந்திய அணி (டீம் இந்தியா) 2021 ஆம் ஆண்டின் தெற்காசியக் கால்பந்து கூட்டமைப்பின் சாம்பியன்சிப் போட்டியில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இந்தியா 106வது இடத்தைப் பெற்றது.
- FIFA தரவரிசையில் பெல்ஜியம் முதலிடத்தில் உள்ளது.
- பிரேசில் 2வது இடத்தில் உள்ளது, பிரான்சு 3வது இடத்தில் உள்ளது.

## உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மட்டை

- இந்திய அணியின் முன்னாள் தலைவரும் ஹைதராபாத் கிரிக்கெட் சங்கத்தின் தற்போதைய தலைவருமான முஹமது அசாருதின் மிகப்பெரிய கிரிக்கெட் மட்டையைத் திறந்து வைத்தார்.
- இது பெர்னார்டு ரிகார்டு இந்தியா லிமிடெட் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டது.
- பாப்லர் என்ற மரத்தினால் ஆன இந்த மட்டையானது 56.10 அடி உயரமும் 9 டன் எடையும் கொண்டது.
- இந்திய கிரிக்கெட் அணிக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காகவும், துபாயில் டி20 உலகக் கோப்பையை மீண்டும் பெறச் செய்வதற்காகவும் இத்தகைய ஒன்று திறக்கப் பட்டுள்ளது.



## ஃபேபியோ குவார்டராரோ

- பிரான்சின் ஃபேபியோ குவார்டராரோ “2021 மோட்டோ GP உலக சாம்பியனாக” உருவெடுத்துள்ளார்.
- இத்தாலியின் பிரான்செஸ்கோ பாக்னாயா (டுகாட்டி லெனோவா அணி) 2வது இடத்தைப் பெற்றார்.
- ஸ்பெயினின் ஜோன் மிர் (சுசுகி எக்ஸ்டார் எணி) 3வது இடத்தைப் பெற்றார்.
- 22 வயது, 187 தினங்கள் நிரம்பிய ஃபேபியோ குவார்டராரோ பிரீமியர் தர உலகப் பட்டத்தை வென்ற 6வது இளம் வயது ரைடர் ஆவார்.



# முக்கிய தினங்கள்

## சர்வதேச முதியோர் தினம் – 01 அக்டோபர்

- முதியோரைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- சமூகத்திற்கு முதியோர்கள் ஆற்றும் பங்களிப்பினையும் இத்தினம் போற்றுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "அனைத்து வயதினருக்குமான டிஜிட்டல் பங்கீடு" என்பதாகும்.

## சர்வதேச காப்பி தினம் – 01 அக்டோபர்


- இது காப்பியின் (Coffee) பயன்பாட்டினைப் போற்றிக் கொண்டாடுவதற்கான ஒரு தினமாகும்.
- காப்பி தொழில்துறையுடன் தொடர்புடைய தொழிலாளர்கள் மற்றும் மக்களின் கடின உழைப்புகளுக்கும் முயற்சிகளுக்கும் இந்த நாளில் அங்கீகாரம் அளிக்கப் படுகிறது.
- இத்தினமானது முதன் முதலில் 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## உலக சைவ தினம் – 01 அக்டோபர்

- சைவ உணவு முறையினால் விளையும் நெறிமுறை சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் மனிதநேயம் மிக்க நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினமானது உலகளவில் அனுசரிக்கப்படுகிறது.
- அக்டோபர் 01 முதல் 07 வரையிலான முழு வாரமும் சர்வதேச சைவ வாரமாக கடைபிடிக்கப் படுகிறது.

## தேசியத் தன்னார்வ இரத்த தான தினம் – 01 அக்டோபர்

- இத்தினமானது ஒவ்வோர் ஆண்டும் நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினமானது நாட்டில் இரத்த தானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் தன்னார்வ இரத்த தானத்தை ஊக்குவிப்பதற்குமான ஒரு தினமாகும்.
- இந்த வருடத்திற்கான இத்தினத்தின் கருத்துரு, "Give blood and keep the world – beating" (இரத்தத்தைக் கொடுத்து உலகை இயங்கச் செய்யுங்கள்) என்பதாகும்.



## சர்வதேச அகிம்சை தினம் – 02 அக்டோபர்

- மகாத்மா காந்தி அவர்களுடைய பிறந்த நாளன்று இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2007 ஆம் ஆண்டு ஜுன் 15 அன்று இத்தினத்தினை ஏற்றுக் கொண்டது.
- அகிம்சை பற்றி உலகிற்கு எடுத்துரைப்பதற்காக உலகம் முழுவதும் இத்தினம் அனுசரிக்கப் படுகிறது.

## உலகப் பண்ணை விலங்குகள் தினம் – 02 அக்டோபர்

- மனிதர்களுக்கு உணவு வழங்குவதில் பண்ணை விலங்குகள் முக்கியப் பங்கினை வகிக்கின்றன.
- இத்தினமானது இவற்றின் வாழ்வில் சில வகை முன்னேற்றங்களைக் கொண்டு வர முயல்கிறது.

## வனவிலங்குகள் வாரம் 2021 – அக்டோபர் 02 முதல் 08 வரை

- முதலாவது வனவிலங்குள் வாரமானது 1957 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- இந்த ஆண்டின் வனவிலங்குகள் வாரமானது 67வது வனவிலங்குகள் வாரமாகும்.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, "காடுகள் மற்றும் வாழ்வாதாரங்கள் : மக்களையும் புவியினையும் நிலைப்படுத்துதல்" ('Forests and Livelihoods: Sustaining People and Planet') என்பதாகும்.




## உலக விண்வெளி வாரம் – அக்டோபர் 04 முதல் 10 வரை

- இந்தத் தேதிகளானது 1957 ஆம் ஆண்டு அக்டோபர் 04 அன்று ஸ்புட்னிக்-I எனப்படும் முதல் செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்பட்டதை நினைவு கூறுகிறது.
- மனித வாழ்வின் மேம்பாட்டிற்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆற்றியப் பங்கினைக் கொண்டாடும் விதமாக இந்த வாரமானது அனுசரிக்கப்படுகிறது.

- உலக விண்வெளி வாரமானது 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 06 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அறிவிக்கப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Women in Space" (விண்வெளியில் பெண்கள்) என்பதாகும்.

## உலக வாழ்விட தினம் – 04 அக்டோபர்

- ஐக்கிய நாடுகள் சபையானது அக்டோபர் மாதத்தின் முதல் திங்கள்கிழமையை உலக வாழ்விட தினமாக அறிவித்தது.
- 2021 ஆம் ஆண்டில் இத்தினம் அக்டோபர் 04 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "கார்பன் இல்லாத உலகத்திற்காக நகர்ப்புற நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல்" என்பதாகும்.




## உலக விலங்கு தினம் – 04 அக்டோபர்

- இத்தினமானது உலகெங்கிலுமுள்ள விலங்குகளின் நிலையை உயர்த்துதல் மற்றும் அவற்றின் நலத்திற்கான தரநிலைகளை மேம்படுத்த உதவுதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினமானது 1925 ஆம் ஆண்டில் ஹெயின்ரிச் சிம்மர்மேன் என்ற நாய்கள் குறித்து ஆய்வு செய்யும் ஒரு நிபுணரால் முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.

## 2021 ஆம் ஆண்டிற்கான உலக கட்டிடக்கலை தினம் – 04 அக்டோபர்

- இத்தினமானது அக்டோபர் மாதத்தின் முதல் திங்கட்கிழமை அன்று ஐக்கிய நாடுகளின் உலக வாழ்விட தினத்திற்கு இணையாக அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது 1985 ஆம் ஆண்டில் யுனியன் இன்டர்நேஷனல் டெஸ் ஆர்க்கிடெக்ட்ஸ் என்ற அமைப்பினால் உருவாக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "சுகாதாரமான ஒரு உலகிற்கான தூய்மையான சூழல்" என்பதாகும்.

## உலக ஆசிரியர் தினம் – 5 அக்டோபர்

- சர்வதேச ஆசிரியர் தினம் என்று அழைக்கப்படும் உலக ஆசிரியர் தினமானது 1994 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப்படுகிறது.
- உலகில் கல்வியாளர்களைப் பாராட்டுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபாடு செலுத்துவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Teachers at the heart of Education recovery" என்பதாகும்.




## கங்கை ஆற்று ஓங்கில் தினம் – 5 அக்டோபர்

- இந்தியாவில் ஆற்று ஓங்கில்களின் வளங்காப்பு குறித்து ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தச் செய்வதற்கும், அதனை ஊக்குவிப்பதற்கும் வேண்டி இத்தினமானது கடைபிடிக்கப் படுகிறது.
- 2010 ஆம் ஆண்டின் இதே நாளில் தான் கங்கை ஆற்று ஓங்கில்கள் இந்தியாவின் தேசிய நீர்வாழ் விலங்காக அறிவிக்கப்பட்டது.
- இவை 1972 ஆம் ஆண்டின் இந்திய வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் முதல் அட்டவணையில் சேர்க்கப் பட்டுள்ளன.
- இவை IUCN அமைப்பினால் அருகி வரும் இனங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- பீகாரில் விக்ரமசீலா கங்கை ஆற்று ஓங்கில் சரணாலயமானது நிறுவப் பட்டுள்ளது.

## தேசிய ஓய்வூதிய முறை தினம் – 01 அக்டோபர்

- இந்தியா தனது முதலாவது தேசிய ஓய்வூதிய முறை தினத்தை 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 01 அன்று அனுசரித்தது.
- இது ஒரு கவலையற்ற "ஆசாத்" என்ற முறையிலான ஓய்விற்கு வேண்டி ஓய்வூதியம் மற்றும் ஓய்வுத் திட்டமுறையை ஊக்குவிப்பதற்கான ஒரு தினமாகும்.
- இத்தினமானது ஓய்வூதிய நிதி ஒழுங்கமைப்பு மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் ஒரு பிரச்சாரமாகும்.




### மனநலம் குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாரம் - அக்டோபர் 05 முதல் 10 வரை

- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை அமைச்சகமானது "மனநலம் குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாரத்தினை" அனுசரிக்கின்றது.
- இது 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 05 அன்று தொடங்கி அக்டோபர் 10 அன்று நிறைவடைகிறது.
- அக்டோபர் 10 ஆம் தேதியானது உலக மனநல தினமாக குறிப்பிடப்படுகிறது.
- மனநலக் குறைபாட்டுடன் தொடர்புடைய களங்கங்களை உடைப்பதில் மக்களின் பங்களிப்பினை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு இந்தியாவில் "மனநலம் குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாரம்" அனுசரிக்கப்படுகிறது.

### மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு மாதம் 2021 – அக்டோபர் 01 முதல் 31 வரை

- ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்தின் 01 ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை அந்த மாதம் முழுவதும் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக அனுசரிக்கப் படுகிறது.
- இந்த வருடாந்திர சர்வதேச சுகாதாரப் பிரச்சாரமானது இந்த நோய் குறித்த ஒரு விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இந்த நோயினை ஏற்படுத்தும் காரணி, தடுப்பு, கண்டறிதல், சிகிச்சை மற்றும் குணப்படுத்துதல் போன்றவற்றிற்கான ஆய்வுகளுக்கு வேண்டி நிதி திரட்டுவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இளஞ்சிவப்பு நிற நாடா, மார்பக புற்றுநோய் விழிப்புணர்விற்கான ஒரு சர்வதேச அடையாளமாகும்.

### உலக பருத்தி தினம் – 07 அக்டோபர்

- ஓர் இயற்கை இழையாக பருத்தியின் உற்பத்தி பரிமாற்றம், வர்த்தகம் மற்றும் நுகர்வு போன்றவற்றிலிருந்து மக்கள் பெறும் நன்மைகளைக் கொண்டாடும் விதமாக சர்வதேச பருத்தி தினம் கொண்டாடப்படுகிறது.

- உலக பருத்தி தினத்திற்கான முன்னெடுப்பு 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.
- துணை சஹாரா ஆப்பிரிக்காவின் 4 பருத்தி உற்பத்தி நாடுகளான பெனின், புர்கினா ஃபாசா, சாத் மற்றும் மாலி ஆகியவை அக்டோபர் 07 ஆம் தேதியினை உலக பருத்தி தினமாக கொண்டாட ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தன.
- இந்த நாடுகள் காட்டன் ஃபோர் (Cotton Four) என்று அழைக்கப்படுகின்றன.




## உலக நிதியியல் திட்டமிடல் தினம் 2021 – 06 அக்டோபர்

- ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்தின் முதல் புதன்கிழமையன்று உலக நிதியியல் திட்டமிடல் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டு அக்டோபர் 06 அன்று இத்தினம் அனுசரிக்கப்பட்டது.
- நிதியியல் திட்டமிடலின் முக்கியத்துவம் குறித்து ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டி இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- முதலாவது உலக நிதியியல் திட்டமிடல் தினமானது 2017 ஆம் ஆண்டு அக்டோபர் 04 அன்று அனுசரிக்கப்பட்டது.
- நிதியியல் திட்டமிடல் தரநிலைகள் வாரியமானது இத்தினத்தினை அனுசரிக்கிறது.
- ஒவ்வோர் ஆண்டும் நிதியியல் திட்டமிடல் தரநிலைகள் வாரியம் சர்வதேசப் பத்திரங்கள் ஆணைய அமைப்புடன் இணைந்து இத்தினத்தினை அனுசரிக்கின்றது.



## உலக முட்டை தினம் 2021 – 08 அக்டோபர்

- ❖ 1996 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டின் அக்டோபர் மாதத்தின் 2வது வெள்ளிக் கிழமையானது உலகம் முழுவதும் உலக முட்டை தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இந்த ஆண்டு அக்டோபர் 08 அன்று இத்தினம் அனுசரிக்கப்பட்டது.
- ❖ இந்த ஆண்டு அத்தினம் 25வது உலக முட்டை தினத்தைக் குறிக்கிறது.
- ❖ 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Eggs for all : Nature's Perfect Package" என்பதாகும்.

## இந்திய விமானப்படை தினம் – 08 அக்டோபர்

- ❖ ஒவ்வோர் ஆண்டும் இந்திய விமானப் படையினால் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இந்த ஆண்டு இந்திய விமானப்படையின் 89வது நிறைவு ஆண்டாகும்.
- ❖ இந்திய விமானப்படையானது 1932 ஆம் ஆண்டு அக்டோபர் 08 அன்று ராயல் இந்திய விமானப் படையாக பிரிட்டிஷ் அரசால் நிறுவப்பட்டது.
- ❖ இதன் பெயர் 1950 ஆம் ஆண்டில் இந்திய விமானப்படை என மாற்றப்பட்டது.




## விரைவு அதிரடிப் படை நிறுவப் பட்ட தினம் – 08 அக்டோபர்

- ❖ விரைவு அதிரடிப் படையானது 1992 ஆம் ஆண்டில் மத்திய ரிசர்வ் காவல் படையின் ஒரு சிறப்பு படைப் பிரிவாக உருவாக்கப்பட்டது.
- ❖ இது கலகம் மற்றும் கலகம் சார்ந்த சூழ்நிலைகளை அதிரடியாகவும் படைப் பிரிவுகளின் குறைவான பயன்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டி உருவாக்கப் பட்டது.
- ❖ இது சுழிய நேர எதிர்வினைப் படை (Zero - time response Force) என்றும் அழைக்கப் படுகிறது.
- ❖ விரைவு அதிரடிப் படையானது "உணர்திறன் மிக்க காவல் பணியுடன் மனிதத்திற்குச் சேவை செய்தல்" (Serving Humanity with Sensitive Policing) என்ற தனது சொந்த முழக்கத்தின் படி செயல்படுகின்றது.

## உலக புலம்பெயர் பறவைகள் தினம் – 09 அக்டோபர்

- 2006 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ஆண்டிற்கு இருமுறை உலக புலம் பெயர் பறவைகள் தினமான அதிகாரப் பூர்வமாக அனுசரிக்கப்படுகிறது.
- இது முதலில் மே மாதத்தின் 2வது சனிக்கிழமையன்றும், பிறகு இரண்டாவதாக அக்டோபர் மாதத்தின் 2வது சனிக்கிழமையன்றும் கடைபிடிக்கப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டில் மே 08 மற்றும் அக்டோபர் 09 ஆகிய நாட்களில் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஒரு பறவையினைப் போல் – பாடு, பற, உயரு" (Sing, Fly, Soar – Like a Bird) என்பதாகும்.




## உலக அஞ்சல் தினம் – 09 அக்டோபர்

- மக்கள் மற்றும் வணிகத்தில் அன்றாட வாழ்வில் அஞ்சல் துறையின் முக்கியப் பங்கு குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "மீட்சிக்கான புதுமை" (Innovate to recover) என்பதாகும்.

## இந்திய வெளியுறவுப் பணி தினம் – 09 அக்டோபர்



- 1946 ஆம் ஆண்டு அக்டோபர் 09 அன்று அயல்நாட்டில் இந்தியாவில் இராஜதந்திர, தூதரக மற்றும் வணிகப் பிரதிநிதித்துவத்திற்காக இந்திய வெளியுறவுப் பணியானது நிறுவப் பட்டது.
- 2011 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 09 அன்று இந்திய வெளியுறவுப் பணி தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்திய அமைச்சரவையானது இந்திய வெளியுறவுப் பணியினை உருவாக்கிய தினத்தினை நினைவு கூறும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.

## தேசிய அஞ்சல் தினம் – 10 அக்டோபர்

- ஆண்டுதோறும் அக்டோபர் 09 அன்று அனுசரிக்கப்படும் உலக அஞ்சல் தினத்தின் தொடர்ச்சியாக இந்தியாவில் தேசிய அஞ்சல் தினமானது அக்டோபர் 10 அன்று அனுசரிக்கப் படுகிறது.
- இந்திய அஞ்சல் துறையின் பங்கினை நினைவு கூறுவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்துறையானது 1854 ஆம் ஆண்டில் டல்ஹௌசி பிரபுவினால் நிறுவப்பட்டது.
- 6 இலக்க PIN (தனிப்பட்ட அடையாள எண்) அமைப்பானது, 1972 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று மத்திய தகவல்தொடர்புத் துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலாளரான ஸ்ரீராம் பிகாஜி வேலன்கர் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.


## உலக மனநல தினம் – 10 அக்டோபர்




- உலகெங்கிலும் மனநலப் பிரச்சினைகள் குறித்த ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதோடு, மனநலத்திற்கு ஆதரவாக முயற்சிகளைத் திரட்டுவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "சமத்துவமற்ற உலகில் மனநலம்" என்பதாகும்.
- இத்தினமானது முதன்முதலில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் 10 அன்று அனுசரிக்கப் பட்டது.

## மரண தண்டனைக்கு எதிரான உலக தினம் – 10 அக்டோபர்

- இது மரண தண்டனையை ஒழிப்பதற்கும் மரண தண்டனையினால் கைதிகள் எதிர் கொள்ளும் நிலைகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்குமான தினமாகும்.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Women Sentenced to Death : An Invisible Reality" என்பதாகும்.
- இத்தினமானது முதன்முதலில் 2003 ஆம் ஆண்டில் மரண தண்டனைக்கு எதிராக உலக கூட்டணி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டானது 19வது மரண தண்டனைக்கு எதிரான உலக தினத்தை குறிக்கிறது.





## சர்வதேச பெண் குழந்தை தினம் – 11 அக்டோபர்

- சர்வதேச பெண் குழந்தை தினமானது (பெண் குழந்தை தினம் மற்றும் சர்வதேச பெண்கள் தினம் என்றும் அழைக்கப் படுகிறது) 2012 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த சர்வதேச அனுசரிப்பு நாளானது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அறிவிக்கப் பட்டது.
- இது சர்வதேச அளவில் கல்வி, ஊட்டச்சத்து, குழந்தைத் திருமணச் சட்டம் மற்றும் மருத்துவ உரிமைகள் ஆகியவற்றைச் சார்ந்து பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான தினமாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Digital Generation, Our Generation" என்பது ஆகும்.

## 72வது தரைப்படை ராணுவ தினம் – 09 அக்டோபர்

- இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் சி ராஜகோபாலாச்சாரி அவர்கள் 1949 ஆம் ஆண்டு அக்டோபர் 9 அன்று இந்தியத் தரைப்படை ராணுவத்தை முறையாகத் தொடங்கி வைத்தார்.
- தரைப் படை ராணுவம் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் வருகிறது.




## உலக நல்வாழ்வு மற்றும் நோய்த் தடுப்பு நாள் – 09 அக்டோபர்

- இது உலகெங்கிலும் உள்ள நல்வாழ்வு மற்றும் நோய்த் தடுப்பு பராமரிப்பைக் கொண்டாடுவதற்கும் ஆதரிப்பதற்கும் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படும் நாளாகும்.
- இந்த ஆண்டின் கருத்துரு "Leave no-one behind - equity in access to palliative care" என்பதாகும்.




## உலக மூட்டழற்சி தினம் - 12 அக்டோபர்

- இது வாதம் மற்றும் தசைக்கூட்டு நோய்களின் இருப்பு மற்றும் தாக்கம் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதற்காக அனுசரிக்கப்படுகிறது.
- "மூட்டழற்சி" என்பது முதன்மையாக அல்லது துணை நோயாக மூட்டுகளைப் பாதிக்கும் பொதுவான செயலிழப்புக் கோளாறுகளை உள்ளடக்கிய ஒரு சொல் ஆகும்.

- இந்த வருடத்தின் கருத்துரு 'Don't Delay, Connect Today: Time2Work' என்பதாகும்.




## சர்வதேசப் பேரிடர் குறைப்பு தினம் – 13 அக்டோபர்

- இத்தினமானது 1989 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அனுசரிக்கப்படுகிறது.
- உலகளவில் இடர் குறித்த ஒரு விழிப்புணர்வு கலாச்சாரத்தினையும் பேரிடர் குறைப்பினையும் ஊக்குவிப்பதற்காக வேண்டி இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- உலகெங்கிலும் உள்ள மக்கள் மற்றும் சமூகங்கள் பேரழிவுகளுக்கு உட்படுவதிலிருந்து தம்மை எவ்வாறு காத்துக் கொள்கின்றன என்பதையும் அவர்கள் எதிர் கொள்ளும் இடர்களைச் சமாளிப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதையும் இத்தினம் போற்றுகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "வளர்ந்து வரும் நாடுகளின் பேரிடர் அபாயம் மற்றும் பேரிடர் இழப்புகளைக் குறைப்பதற்கான சர்வதேச ஒத்துழைப்பு" என்பதாகும்.



## சர்வதேச மின்னணுக் கழிவு தினம் – 14 அக்டோபர்

- இத்தினமானது 2018 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அனுசரிக்கப்படுகிறது.
- இது மறுபயன்பாடு, மீள்வு மற்றும் மறுசுழற்சி வீதங்களை அதிகரிப்பதற்கான நோக்கத்துடன் உலகெங்கிலுமுள்ள மின்னணுக் கழிவுகளைச் சரியான முறையில் அகற்றுவதை ஊக்குவிப்பதற்கான ஒரு தினமாகும்.
- இந்த ஆண்டின் சர்வதேச மின்னணுக் கழிவு தினமானது மின்னணு தயாரிப்புப் பொருட்களுக்கு மறுசுழற்சி முறையை ஒரு நடைமுறையாக்குவதில் நாம் ஒவ்வொருவரும் கொண்டுள்ள முக்கியப் பங்கின் மீது ஈடுபாடு செலுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Consumer is the Key to circular Economy” என்பதாகும்.
- இத்தினமானது 2018 ஆம் ஆண்டில் WEEE (Waste from Electrical and Electronic Equipment) என்ற மன்றத்தினால் உருவாக்கப்பட்டது.





## உலகப் பார்வை தினம் – 14 அக்டோபர்

- உலகப் பார்வை தினமானது அக்டோபர் மாதத்தின் 2வது வியாழக்கிழமையன்று அனுசரிக்கப்படும் ஒரு வருடாந்திர விழிப்புணர்வு தினமாகும்.
- இந்த ஆண்டு இத்தினமானது அக்டோபர் 14 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- பார்வையின்மை உள்ளிட்ட பார்வைக் குறைபாடுகள் குறித்து உலக கவனத்தை ஈர்ப்பதன் மீது இத்தினம் ஈடுபாடு செலுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்தரு “Love Your Eyes” என்பதாகும்.

## உலகத் தரநிலைகள் தினம் – 14 அக்டோபர்

- உலகத் தரநிலைகள் தினம் (அ) சர்வதேசத் தரநிலைகள் தினமானது ஒவ்வோர் ஆண்டும் உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகின்றது.
- உலக நாடுகளின் நுகர்வோர்கள், ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் தொழில் துறைகளுக்குத் தரநிலைப் படுத்துதலின் முக்கியத்துவத்தைப் பற்றி ஒரு விழிப்பு உணர்வினை ஏற்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு “நிலையான மேம்பாட்டு இலக்குகளுக்கான தரநிலைகள் – சிறந்த உலகிற்கான ஒரு பகிரப்பட்ட குறிக்கோள்” என்பதாகும்.
- முதலாவது உலகத் தரநிலைகள் தினமானது 1970 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.




## சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் – 15 அக்டோபர்

- கிராமப்புற குடும்பங்கள் மற்றும் சமுதாயத்தின் நிலைத்தன்மையை உறுதி செய்தல், கிராமப்புற வாழ்வாதாரம் மற்றும் ஒட்டு மொத்த நலவாழ்வு ஆகியவற்றை மேம்படுத்துதல் போன்றவற்றில் பெண்கள் மற்றும் சிறுமிகள் ஆற்றும் பங்கினை இத்தினம் அங்கீகரிக்கிறது.
- இந்தியாவில், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சகமானது 2016 ஆம் ஆண்டு முதல் இந்த தினத்தினை ராஷ்டிரிய மகிளா கிசான் திவாஸ் தினமாக அனுசரிக்கிறது.
- வேளாண்மையில் மகளிரின் அதிகப் பங்கேற்பினை அதிகரிப்பதே இதன் நோக்கம் ஆகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Rural Women Cultivating good food for all" என்பதாகும்.

## உலக மாணாக்கர் தினம் 2021 – 15 அக்டோபர்

- இந்தியாவின் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் A.P.J. அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாளின் நினைவாக இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் அமைப்பானது கல்வி மற்றும் மாணவர்களுக்காக டாக்டர் கலாம் மேற்கொண்ட அவரது முயற்சிகளை அங்கீகரிக்கும் விதமாக 2010 ஆம் ஆண்டு முதல் இந்த தினத்தினை அனுசரிப்பதாக அறிவித்தது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Learning for people. Planet. Prosperity and peace" என்பதாகும்.



## உலக ஒயிட் கேன் தினம் – 15 அக்டோபர்

- பார்வைக் கோளாறுகளுக்கு எதிராகப் போராடி, இன்னும் வாழ்வில் சாதித்து வரும் மக்களின் சாதனைகளைக் கொண்டாடும் விதமாக இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- ஒயிட் கேன் என்பது உலகெங்கிலும் உள்ள பார்வைக் குறைபாடுள்ள நபர்களின் அடையாளமாக உள்ளது.

## உலக கை கழுவும் தினம் – 15 அக்டோபர்

- மக்களைப் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்வதில் கைகளின் ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் அது குறித்த புரிதலை உருவாக்குவதற்காகவும் இத்தினமானது உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Our Future is at Hand – Let’s More Forward Together” என்பதாகும்.




## உலக உணவு தினம் – 16 அக்டோபர்

- நமது வாழ்நாளிலிருந்துப் பட்டினியினை ஒழிப்பதற்காக வேண்டி உலகம் முழுவதும் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- 1945 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண் அமைப்பு நிறுவப்பட்ட தேதியின் நினைவாகவும் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.

## உலக மயக்க மருந்து தினம் – 16 அக்டோபர்

- இத்தினமானது தேசிய மயக்க மருந்து தினம் அல்லது ஈதர் தினம் என்றும் அழைக்கப் படுகிறது.
- 1846 ஆம் ஆண்டு அக்டோபர் 16 அன்று முதல்முறையாக ஈதர் மயக்க மருந்தின் செயல் விளக்கம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதை நினைவு கூறும் விதமாக இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- மயக்க மருந்தானது சர் வில்லியம் மோர்டன் என்ற அமெரிக்கப் பல்மருத்துவரால் அறிமுகப்படுத்தப் பட்டது.

## சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் – 17 அக்டோபர்

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 1992 ஆம் ஆண்டில் இந்த தினத்தினை அறிவித்தது.
- வறுமையில் வாழும் மக்கள் குறித்த ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Building forward together : Ending persistent poverty, Respecting all people and our planet" (ஒன்றாக முன்னேறுதல் : நீடித்த வறுமையை ஒழித்தல், நமது மக்களையும் கிரகத்தையும் மதித்தல்) என்பதாகும்.




## உலகப் புள்ளி விவரங்கள் தினம் – 20 அக்டோபர்

- அதிகாரப் பூர்வ புள்ளி விவரங்களின் அடிப்படைக் கொள்கைகளின் சாதனைகளைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காக வேண்டி இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்த தினமானது ஐக்கிய நாடுகள் புள்ளி விவர ஆணையத்தின் வழிகாட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப் படும் ஒரு உலகளாவிய ஒத்துழைப்பு முயற்சியாகும்.
- முதலாவது உலகப் புள்ளி விவரங்கள் தினமானது 2010 ஆம் ஆண்டு அக்டோபர் 20 அன்று அனுசரிக்கப் பட்டது.
- 2015 ஆம் ஆண்டில் "Better data, better lives" என்ற கருத்துருவுடன் இத்தினமானது மீண்டும் அனுசரிக்கப் பட்டது.




- 2015 ஆம் ஆண்டில், 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த தினத்தினை அனுசரிக்க முடிவு

செய்யப் பட்டது.

- 2020 ஆம் ஆண்டில் "Connecting the world with data we can trust" என்ற கருத்துருவுடன் 3வது உலகப் புள்ளி விவரங்கள் தினமானது அனுசரிக்கப் பட்டது.

## உலக ஆஸ்டியோபோரோசிஸ் தினம் – 20 அக்டோபர்

- ஆஸ்டியோபோரோசிஸ் மற்றும் வளர்சிதை மாற்ற எலும்புக் குறைபாடு போன்றவற்றின் தடுப்பு, அவற்றைக் கண்டறிதல் மற்றும் அவற்றுக்கான சிகிச்சை போன்றவை குறித்த ஒரு உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதனை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினமானது சர்வதேச ஆஸ்டியோபோரோசிஸ் அறக்கட்டளை அமைப்பினால் அனுசரிக்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Serve Up Bone Strength" என்பதாகும்.

## சர்வதேச சமையல்காரர்கள் தினம் – 20 அக்டோபர்

- இந்த உன்னதமான ஒரு தொழிலைக் கொண்டாடச் செய்வதனையும் அதனைக் கௌரவிக்கச் செய்வதையும், ஆரோக்கியமான உணவை உட்கொள்தல் குறித்து உலக மக்களிடம் தெரியப் படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Healthy Food for the Future" என்பதாகும்.
- இத்தினமானது டாக்டர் பில் கல்லாகர் என்பவரால் தொடங்கப் பட்டது.




## தேசிய ஒற்றுமை தினம் – 20 அக்டோபர்

- ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 20 தேதியன்று இந்தியாவில் தேசிய ஒற்றுமை தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- நமது நாட்டின் பரந்து விரிந்த எல்லைகளைப் பாதுகாக்கும் ஆயுதப்படைகளை கௌரவிப்பதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 1962 ஆம் ஆண்டு அக்டோபர் 20 அன்று சீனா இந்தியாவை தாக்கத் தொடங்கியதை அடுத்து சீன-இந்தியப் போர் தொடங்கியது.




## காவலர் நினைவு தினம் – 21 அக்டோபர்

- ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 21 அன்று இந்தியாவில் தேசிய காவலர் நினைவு தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 1959 ஆம் ஆண்டு அக்டோபர் 21 அன்று சீனாவினால் மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 10 காவலர்களின் தியாகத்திற்கு வேண்டி இந்தத் தினமானது அர்ப்பணிக்கப் படுகிறது.
- 2012 ஆம் ஆண்டு முதல் சாணக்கியபுரி என்னுமிடத்திலுள்ள காவலர் நினைவிடத்தில் தேசிய அளவிலான காவலர் நினைவு தின அணிவகுப்பானது நடத்தப்படுகிறது.



## உலக அயோடின் குறைபாட்டுத் தினம் – 21 அக்டோபர்

- நமது உடலின் தைராய்டு சுரப்பியில் சேமிக்கப்படும் அயோடின் ஓர் அத்தியாவசிய உணவு கனிமமாகும்.
- இது தைராக்சின் ($T_4$) மற்றும் ட்ரையோடோதைரோனைன் ($T_3$) ஆகிய தைராய்டு ஹார்மோன்களின் உற்பத்திக்கு உதவுவதால் இது நம் உடலுக்கு அவசியமான ஒன்றாகும்.

## திக்குதல் குறித்த விழிப்புணர்விற்கான சர்வதேச தினம் – 22 அக்டோபர்

- இத்தினமானது 1998 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் அனுசரிக்கப் படுகிறது.
- திக்குதல் அல்லது தடுமாற்றம் போன்ற பேச்சுக் கோளாறு உள்ள மில்லியன் கணக்கான மக்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் நோக்கிற்காக வேண்டி இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Speak the change you wish to see" என்பது ஆகும்.




## மோல் தினம் – 23 அக்டோபர்

- அனைத்து வேதியியல் ஆர்வலர்கள் மத்தியில் பிரபலமாக உள்ள மோல் தினமானது ஆண்டுதோறும் அனுசரிக்கப் படுகிறது.
- இந்தத் தினமானது அவகாட்ரோ என்ற ஒரு எண்ணினை நினைவு கூறவும் அதனைக் கௌரவிப்பதற்காகவும் வேண்டி அனுசரிக்கப் படுகிறது.
- இந்தத் தினமானது காலை 6 : 02 மணி முதல் மாலை 6 : 02 மணி வரை வேதியியல் அளவீட்டு அலகினை நினைவு கூறும் வகையில் அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது வேதியியல் மற்றும் அதன் கருத்துகளில் மாணாக்கர்களை ஆர்வம் காட்டச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினக் கொண்டாட்டத்திற்கான கருத்துருவானது 'ஒரு மோல்' என்ற ஒரு சின்னத்தின் மூலம் குறிப்பிடப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Dispica mole me" என்பதாகும்.

1 mole = $6.022 \times 10^{23}$

## உலக ஆற்றல் தினம் – 22 அக்டோபர்

- உலக ஆற்றல் தினமானது 2012 ஆம் ஆண்டில் துபாயில் நடைபெற்ற உலக ஆற்றல் மன்றத்தின் போது அப்போதைய ஐக்கிய அரபு அமீரகத்தின் பிரதமர் சேக் முகமது பின் ரஷித் அல் மக்தூம் என்பவரால் தொடங்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- இத்தினமானது நிலையான மற்றும் நீடித்த மேம்பாட்டினை அடைவதில் ஐக்கிய அரபு அமீரகத்தின் பங்களிப்புகளுள் ஒன்றாகும்.
- 2021 ஆம் ஆண்டிற்கான உலக ஆற்றல் தினத்திற்கான மாநாடு உகாண்டாவின் கம்பாலாவில் நடத்தப் பட்டது.




## சர்வதேச பனிச் சிறுத்தை தினம் – 23 அக்டோபர்

- இத்தினம் 2014 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது பிஸ்கெக் பிரகடனத்தின் நிறைவு ஆண்டினைக் குறிக்கிறது.
- பனிச்சிறுத்தையின் வளங்காப்பு மற்றும் பாதுகாப்பு குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் வேண்டி இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2013 ஆம் ஆண்டு அக்டோபர் 23 என்பது 12 நாடுகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் ஒன்று கூடி, பனிச்சிறுத்தைகளின் வளங்காப்பு மீதான பிஸ்கெக் பிரகடனத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒரு தினமாகும்.
- பனிச் சிறுத்தையானது 12 நாடுகளில் காணப்படுகிறது.
- அவையாவன இந்தியா, நேபாளம், பூடான், சீனா, மங்கோலியா, ரஷ்யா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், கிர்கிஸ்தான், கசகஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகியனவாகும்.

## ஐக்கிய நாடுகள் தினம் – அக்டோபர் 24

- இந்த ஆண்டானது இந்த அரசுகளுக்கிடையேயான அமைப்பின் 76வது ஸ்தாபன ஆண்டினைக் குறிக்கிறது.
- இந்த தினமானது 1945 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சாசனம் நடைமுறைக்கு வந்த தினத்தைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் தினக் கொண்டாட்டமானது, "அமைதி மற்றும் செழுமைக்காக மீண்டும் ஒன்றிணைதல்" என்ற கருத்துருவுடன் நடைபெற்றது.
- இதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்புக்கான தென் கொரியக் குடியரசின் நிரந்தரப் பணி அமைப்பானது ஆதரவு வழங்கியது.
- 'ஐக்கிய நாடுகள்' என்ற சொற்கூறானது அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பிராங்க்ளின் டி ரூஸ்வெல்ட் அவர்களால் உருவாக்கப்பட்டது.
- தற்போது இந்த அமைப்பில் 193 உறுப்பினர் நாடுகள் உள்ளன.
- 1953 ஆம் ஆண்டில் ஜவஹர்லால் நேருவின் சகோதரியான விஜய லக்ஷ்மி பண்டிட் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் முதல் பெண் தலைவராக பொறுப்பேற்றார்.

## உலக மேம்பாட்டுத் தகவல் தினம் – அக்டோபர் 24

- 1972 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, மேம்பாட்டுப் பிரச்சினைகள் மீது உலக கவனத்தை ஈர்ப்பதற்காக இத்தினத்தினை நிறுவியது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நிலையான மேம்பாட்டு இலக்கிற்கான நடவடிக்கை" என்பதாகும்.




## உலக போலியோ தினம் – அக்டோபர் 24

- இத்தினமானது ஜோனஸ் சால்க் என்பவரின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் ரோட்டரி இண்டர்நேஷனல் என்ற அமைப்பினால் நிறுவப்பட்டது.
- இவர் போலியோமைலிடிசிற்கு எதிரான தடுப்பூசியை உருவாக்குவதற்கான முதல் குழுவிற்குத் தலைமை தாங்கினார்.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஒரு நாள், ஒரு ஈடுபாடு: போலியோவை ஒழித்தல் – போலியோ இல்லாத உலகம் என்ற எங்களது வாக்குறுதியை நிறைவு செய்தல்" என்பதாகும்.
- போலியோமைலிடிஸ் (Poliomyelitis) என்பது 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளைத் தாக்கும் ஒரு தொற்று நோயாகும்.
- 2014 ஆம் ஆண்டில் இந்தியா போலியோ அற்ற நாடாக அறிவிக்கப்பட்டது.
- இந்த நோயை முழுமையாக (100%) ஒழிக்கும் நோக்கத்துடன் 1995 ஆம் ஆண்டில் "பல்ஸ் போலியோ" என்ற திட்டமானது தொடங்கப்பட்டது.
- வாய்வழியிலான போலியோ தடுப்பு மருந்தினைப் பயன்படுத்தி பல்ஸ் (தொடர்) தடுப்பூசி இயக்கம் 1981 ஆம் ஆண்டில் வேலூரில் நடத்தப்பட்டது.
- போலியோ அல்லாத முதல் இந்திய நகரம் வேலூர் ஆகும்.
- 2011 ஆம் ஆண்டில் மேற்கு வங்காளத்தில் தான் கடைசியாக போலியோ நோய் பதிவானது.
- இந்த போலியோ வைரசின் வலுவான கடைசியான பாதிப்பினை ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இன்னும் எதிர்கொண்டு வருகின்றன.

## சர்வதேச ராஜ்ஜிய உறவு (இராஜதந்திரம்) அதிகாரிகள் தினம் – 24 அக்டோபர்

- பண்டைய காலத்திலிருந்தே உலகை வடிவமைப்பதிலும் நமது புவியைச் சிறந்த இடமாக மாற்றுவதிலும் ராஜ்ஜிய உறவு அதிகாரிகள் ஆற்றி வரும் பங்களிப்பிற்குக் கௌரவமளிக்கும் வகையில் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- பொது மக்களிடையே ராஜ்ஜிய உறவு அதிகாரிகளின் வாழ்க்கை முறை பற்றி நிலவும் கருத்து மற்றும் யதார்த்தம் குறித்த வேறுபாடுகளைப் பூர்த்தி செய்வதையும் இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினமானது முதன்முதலில் 2017 ஆம் ஆண்டில் அக்டோபர் 24 அன்று பிரேசிலியாவில் (பிரேசில் தலைநகரம்) அனுசரிக்கப் பட்டது.
- இத்தினமானது K. அபே எனப்படும் ஒரு இந்தியக் கவிஞர் மற்றும் ராஜ்ஜிய உறவு அதிகாரியினால் முன்மொழியப் பட்டது.

## சர்வதேச கலைஞர்கள் தினம் – 25 அக்டோபர்

- அக்டோபர் 25 அன்று உலகம் முழுவதும் சர்வதேச கலைஞர்கள் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- கலைஞர்களையும் சமூகத்திற்கு அவர்கள் ஆற்றியப் பங்களிப்பினையும் கௌரவிப்பதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- பாப்லோ பிகாசோ அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.

## உலக ஒலி–ஒளிசார் மரபு தினம் – 27 அக்டோபர்

- இத்தினமானது யுனெஸ்கோ மற்றும் ஒலி-ஒளிசார் ஆவணக் காப்பகச் சங்கங்களின் ஒருங்கிணைப்புச் சபை ஆகியவற்றின் ஒரு முக்கிய முயற்சியாகும்.

- இது எதிர்காலச் சந்ததியினருக்காக நமது மரபினைப் பாதுகாத்து வரும் ஒலி-ஒளிசார் மரபு வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்களைக் கௌரவிப்பதற்கான ஒரு தினமாகும்.
- இத்தினமானது பதிவு செய்யப்பட்ட ஒலி மற்றும் ஒலி-ஒளி ஆவணங்களின் முக்கியத்துவம் மற்றும் பாதுகாப்பு குறித்த அபாயங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Your window to the world" என்பதாகும்.




## இந்திய இராணுவத்தின் 75வது காலாட்படை தினம் – 27 அக்டோபர்

- இந்த ஆண்டு நமது தேசம் தனது 75வது காலாட்படை தினத்தைக் கொண்டாடுகிறது.
- காலாட்படை தினமானது சுதந்திர இந்தியாவின் முதல் இராணுவ நிகழ்ச்சியின் நினைவாகக் கொண்டாடப்படுகிறது.
- 1947 ஆம் ஆண்டு அக்டோபர் 27 அன்று இந்திய நாட்டில் பாகிஸ்தான் இராணுவம் மற்றும் லஷ்கர் படையினர் நடத்திய முதல் தாக்குதலுக்கு எதிராக இந்திய ராணுவத்தின் சீக்கியப் படைப் பிரிவின் முதல் படைப்பிரிவு போரிட்டு வெற்றி பெற்றது.
- இந்தப் போர் காஷ்மீர் பள்ளத்தாக்கில் நடைபெற்றது.
- காலாட்படையானது இந்திய இராணுவத்தின் மிகப்பெரிய போர்ப் படையாகும்.
- இந்தப் படையானது "போர்களின் ராணி" என அழைக்கப்படுகிறது.

## ஆயுதக் குறைப்பு வாரம் – அக்டோபர் 24 முதல் 30 வரை

- ஆயுதக் குறைப்பு வாரமானது பல நாடுகளில் ஆயுதக் குறைப்புப் பிரச்சினைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வையும் அது குறித்த புரிதலையும் ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- சமூகத்தில் அமைதியைக் கொண்டு வர ஆயுதங்களின் பயன்பாட்டைக் குறிப்பாக அணு ஆயுதங்களின் பயன்பாட்டைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த வாரமானது அனுசரிக்கப் படுகிறது.




**ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வாரம் – அக்டோபர் 26 முதல் நவம்பர் 01 வரை**

- 2021 ஆம் ஆண்டு ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வாரமானது மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தினால் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- சர்தார் வல்லபாய் படேல் அவர்களுடைய பிறந்தநாள் இடம் பெறும் (அக்டோபர் 31) வாரத்தின் போது இந்த வருடாந்திர அனுசரிப்பு மேற்கொள்ளப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, "சுதந்திர இந்தியா @ 75 : நேர்மையுடன் கூடிய தற்சார்பு" என்பதாகும்.





**சர்வதேச இயங்குபடம் (அனிமேசன்) தினம் – 28 அக்டோபர்**

- அனிமேசன் கலையைக் கொண்டாடவும் அதனைப் படைக்கும் கலைஞர்கள், அறிவியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை அங்கீகரிப்பதற்காகவும் வேண்டி இத்தினமானது ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு 20வது சர்வதேச அனிமேசன் தினமாகும்.
- இத்தினமானது 2002 ஆம் ஆண்டில் சர்வதேச அனிமேசன் திரைப்படச் சங்கத்தினால் உருவாக்கப் பட்டது.

## சர்வதேச இணையதள தினம் – 29 அக்டோபர்

- இத்தினமானது 1969 ஆம் ஆண்டில் ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணினிக்கு அனுப்பப்பட்ட முதல் மின்னணுச் செய்தியின் நினைவாக அனுசரிக்கப்படுகிறது.
- அந்த நாட்களில் இணையதளமானது ARPANET (மேம்பட்ட ஆராய்ச்சித் திட்ட நிறுவனக் கட்டமைப்பு) என அழைக்கப்பட்டது.
- சார்லி க்லைன் என்பவர் 1969 ஆம் ஆண்டு அக்டோபர் 29 அன்று “LO” என்ற முதல் மின்னணுச் செய்தியை அனுப்பினார்.
- இத்தினமானது 2005 ஆம் ஆண்டு அக்டோபர் 05 அன்று முதன்முதலாக அனுசரிக்கப் பட்டது.

## உலக சொரியாசிஸ் (காளாஞ்சகப் படை) தினம் – 29 அக்டோபர்




- இத்தினமானது சர்வதேச சொரியாசிஸ் சங்கங்களின் கூட்டமைப்பினால் அனுசரிக்கப் படுகிறது.
- இது சொரியாசிஸ் நோயினைக் கொண்டுள்ளவர்கள் மற்றும் சொரியாசிஸ் நோயால் ஏற்பட்ட ஒரு முடக்குவாதத்தைக் கொண்டுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கையையும் அதற்கான விழிப்புணர்வு மற்றும் அதிகாரமளிப்பினையும் ஊக்குவிப்பதற்கான ஒரு தினமாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Unity for Action” என்பதாகும்.
- சொரியாசிஸ் என்பது தோல் செல்கள் பத்து மடங்கு வேகமாகப் பெருகக் கூடிய ஒரு வகையான தோல் நோய் ஆகும்.

## உலகப் பக்கவாத தினம் – 29 அக்டோபர்

- இத்தினமானது உலகப் பக்கவாத அமைப்பினால் நிறுவப்பட்டது.
- பக்கவாதம் ஏற்படுவதைத் தடுத்தல் மற்றும் அதற்கான சிகிச்சை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்றவற்றிற்காக இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.

- 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில், பக்கவாதத்தின் அறிகுறிகள் குறித்தும் தரமான பக்கவாத சிகிச்சைகளைச் சரியான நேரத்தில் பெறுவதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஈடுபாடு செலுத்துவதை உலகப் பக்கவாத அமைப்பின் பிரச்சாரமானது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலக ஊடகம் மற்றும் தகவல் குறித்த கல்வியறிவு வாரம் – அக்டோபர் 24 முதல் 31 வரை




- ஐக்கிய நாடுகளின் உலக ஊடகம் மற்றும் தகவல் குறித்த கல்வியறிவு வாரமானது "அனைவருக்குமான ஊடக மற்றும் கல்வியறிவினை" நோக்கிய முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யவும் அதனைக் கொண்டாடவும் வேண்டி ஆண்டுதோறும் அனுசரிக்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டானது 10வது உலக ஊடகம் மற்றும் தகவல் கல்வியறிவு வாரத்தினையும் ஐக்கிய நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது உலக ஊடகம் மற்றும் தகவல் கல்வியறிவு வாரத்தினையும் குறிக்கிறது.
- இது ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்புடன் இணைந்து தென் ஆப்பிரிக்க நாட்டினால் ஏற்பாடு செய்யப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, "பொதுமக்களின் நன்மைக்கான ஊடகம் மற்றும் தகவல் குறித்த கல்வியறிவு" என்பதாகும்.

## உலக சேமிப்பு தினம் – 30 அக்டோபர்

- இது உலக சிக்கன தினம் எனவும் அழைக்கப்படுகிறது.
- உலக மக்களுக்குச் சேமிப்பு பற்றிய ஒரு சிந்தனையை ஊக்குவிப்பதற்காகவும் பொருளாதாரம் மற்றும் ஒரு தனி நபருடன் அது கொண்டுள்ள தொடர்பை தெரிவிப்பதற்காகவும் வேண்டி இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த தினமானது இத்தாலியிலுள்ள மிலன் எனுமிடத்தில் 1934 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது சர்வதேச சேமிப்பு வங்கி மாநாட்டின் போது நிறுவப்பட்டது.


## உலக நகரங்கள் தினம் – 31 அக்டோபர்

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2013 ஆம் ஆண்டில் இத்தினத்தினை அறிவித்தது.
- இத்தினமானது உலக நகரமயமாக்குதலில் சர்வதேசச் சமுதாயங்களின் ஆர்வத்தைப் பெருமளவில் தூண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இது உலகம் முழுவதும் நிலையான நகர மேம்பாட்டினைக் கொண்டு வருவதற்கான பங்களிப்பு மற்றும் நகரமயமாதலின் சவால்களை எதிர்கொள்வதற்கான வாய்ப்பு ஆகியவற்றைப் பெறுவதில் நாடுகளை ஒரு முற்போக்கான ஒத்துழைப்பில் ஈடுபடச் செய்கிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான உலக நகரங்கள் தினத்தின் உலகளாவியக் கருத்துரு, "பருவநிலை நெகிழ்திறனுக்கு ஏற்ப நகரங்களை மாற்றியமைத்தல்" என்பதாகும்.
- இது ஐக்கிய நாடுகளின் மனித வாழ்விடத் திட்டத்தால் (ஐக்கிய நாடுகள் வசிப்பிடம்) அனுசரிக்கப் படுகின்றது.




## தேசிய ஒற்றுமை தினம் – 31 அக்டோபர்


- இத்தினமானது சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் பிறந்த நாள் கொண்டாட்டத்தைக் குறிக்கும் ஒரு தினமாகும்.
- இது ராஷ்டிரிய ஏக்தா திவாஸ் எனவும் அழைக்கப்படுகிறது.
- இத்தினமானது முதன்முதலில் 2014 ஆம் ஆண்டில் சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் தொடங்கப்பட்டது.



# இதரச் செய்திகள்


## My Life in Full – புத்தகம்

- பணிக்குச் செல்லும் பெண்களின் வாழ்வில் ஒரு நிறுவன ஆதரவின் முக்கியத்துவம் பற்றி இந்திரா நூயி அவர்களின் 'My Life in Full : Work, Family and our Future' என்ற புத்தகம் கூறுகிறது.
- இந்தப் புத்தகத்தினை ஹச்செட் இந்தியா என்ற பதிப்பகம் வெளியிட்டது.





## The Fractured Himalaya – புத்தகம்

- "The Fractured Himalaya : How the past Shadows the present in India-China Relations" என்று தலைப்பிடப்பட்ட புத்தகமானது நிருபமா ராவ் என்பவரால் எழுதப்பட்டதாகும்.
- இந்தப் புத்தகமானது இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையேயான சர்ச்சையின் தோற்றமானது அந்த நாடுகளின் இன்றைய முரண்பட்ட உறவுகளை வடிவமைக்கும் வரலாற்றின் ஒரு அங்கமாக இருப்பது பற்றி கூறுகிறது.
- நிருபமா ராவ் ஒரு முன்னாள் வெளியுறவுத் துறை செயலாளர் ஆவார்.




## வோல் சோயின்காவின் புதியப் புத்தகம்




- வோல் சோயின்கா எழுதிய “Chronicles from the land of the happiest people on earth” என்ற தலைப்பிலான நாவலானது (புதினம்) வெளியிடப் பட்டுள்ளது.
- இவர் இலக்கியத்தில் நோபல் பரிசு பெற்ற முதல் ஆப்பிரிக்கக் குடிமகனாவார்.
- இவர் 1973 ஆம் ஆண்டில் “Season of Anomy” என்ற அவரது கடைசிப் புதினத்தை எழுதினார்.

## ஜெய்தீர்த் ராவின் புதிய புத்தகம்




- இந்திய தொழில்முனைவோரும் எழுத்தாளருமான ஜெய்தீர்த் ராவ் மகாத்மா காந்தி பற்றிய ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.

- இவர் ஜெர்ரி ராவ் எனவும் பிரபலமாக அழைக்கப்படுகிறார்.
- இந்தப் புத்தகத்திற்கு "பொருளாதார நிபுணர் காந்தி : மகாத்மாவின் அரசியல் பொருளாதாரத்தின் தோற்றம் மற்றும் தொடர்பு" (Economist Gandhi : The Roots and the Relevance of the Political Economy of the Mahatma") என்று தலைப்பிடப் பட்டுள்ளது.
- ஜெய்தீர்த் ராவ் mPhasis என்ற மென்பொருள் நிறுவனத்தின் நிறுவனரும் முன்னாள் தலைமை நிர்வாக அலுவலரும் ஆவார்.

## மெர்செர் உலக ஓய்வூதியக் குறியீடு – 2021

- மெர்செர் கன்சல்டிங் என்ற ஒரு நிறுவனமானது 13வது மெர்செர் உலக ஓய்வூதியக் குறியீட்டினை (2021) வெளியிட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு மெர்சர் உலக ஓய்வூதியக் குறியீடு ஆய்வில் இடம் பெற்ற 43 நாடுகளில் இந்தியா 40வது இடத்தில் உள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் 39 நாடுகளில் இந்தியா 34வது இடத்தில் இருந்தது.
- ஐஸ்லாந்து இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- இதனைத் தொடர்ந்து நெதர்லாந்து மற்றும் நார்வே ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தியாவின் ஒட்டு மொத்தக் குறியீட்டு அமைப்பின் மதிப்பு 43.3 ஆகும்.
- தாய்லாந்து நாட்டின் ஒட்டு மொத்தக் குறியீட்டு மதிப்பு மிகக் குறைவாக உள்ளது.

## Writing for My Life

- எழுத்தாளர் ரஷ்கின் பாண்ட் குறித்த ஒரு தொகுப்பு நூலான "Writing for My Life" என்ற புத்தகமானது வெளியிடப் பட்டுள்ளது.
- இது ரஷ்கின் பாண்டினுடைய மிகச்சிறந்த கதைகள், கட்டுரைகள், கவிதைகள் மற்றும் நினைவுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- இந்தப் புத்தகமானது "The Best of Rusking Bond" என்ற அவரது முதல் தொகுப்பு நூல் வெளியான 25 ஆண்டுகளுக்குப் பிறகு வெளியிடப் பட்டுள்ளது.

## HOOTE

- சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் "HOOTE" எனப்படும் குரல் மூலம் கருத்துத் தெரிவிக்கக் கூடிய ஒரு சமூக ஊடகச் செயலியை வெளியிட்டுள்ளார்.
- இவரது மகள் சௌந்தர்யா விசாகன், அம்டெக்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் சன்னி போக்லா என்பவருடன் இணைந்து இதனை உருவாக்கியுள்ளார்.
- இந்தத் தளமானது 60 விநாடி அளவிலான குரல் பதிவு வசதி அல்லது பதிவு செய்யப் பட்ட குரலைப் பதிவேற்றம் செய்யும் வசதியை கொண்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★